# முப்பது நாளும் பௌர்ணமி

## கவிஞர் கண்ணதாசன்

கண்ணதாசன் பதிப்பகம்
12, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை – 600 017.
தொலைபேசி : 433 26 82

# கடை திறப்பு

மனித வாழ்க்கையில் ஏற்படும் விரக்தியையும் வேதனையையுமே நான் சுற்றிச் சுற்றி வருகிறேன். திரும்பத் திரும்ப அவற்றையே என் கதைக்குக் களங்களாகக் கொள்கிறேன். பலவகையான சோதனைகளுக்கும் ஆட்பட்ட என்னிடமிருந்து அவைதான் வரும் என்பது எனக்கும் தெரிகிறது. ஆனால், முடிவில் ஒரு நல்ல மார்க்கத்தைக் காட்டுவது என்பதையும்தான் கருத்தாகக் கொண்டுள்ளேன்.

இந்தக் கதையில் வரும் மஞ்சு, என்னைப் போலவே, பல வகையான சோதனைகளைச் சந்திக்கும் ஒருத்தியாக இருக்கிறாள். பல வகையான வாழ்க்கை வாழுகிறாள். அவளது எல்லா வாழ்க்கைக்குமே நியாயம் இருக்கிறது.

ஒருத்தி கெட்டுப் போவதை நியாயப்படுத்த வேண்டும் என்பது என் கொள்கையல்ல. ஆனால், வேறு வழியில்லாத சூழ்நிலையில், கெட்டுப் போவது தவிர்க்க முடியாதது. எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்ற துடிப்புத்தான் எனது கதா பாத்திரங்களின் நோக்கம்.

இப்படியும் ஒருத்தி எங்காவது வாழ்வாளா என்று உங்களுக்குத் தோன்றினால், அப்படி ஒருத்தி இருந்திருக்கிறாள் என்பதனை நான் சாட்சியங்களோடு சொல்லுவேன்.

மற்ற வகையில் இந்தக் கதையைப் பற்றி நான் சொல்ல வேண்டியது ஒன்றும் அதிகமில்லை.

'குமுத'த்தில் வாரா வாரம் எழுதிய தொடர் கதை, மொத்தத்தில் ஒரு புத்தகமாகி விட்டது.

நான் சொல்லச் சொல்ல இதனை எழுதி, முடிவில் தொகுத்துக் கொடுத்த என் தம்பி இராம. கண்ணப்பனுக்கும், 'குமுதம்' ஆசிரியருக்கும் என் நன்றி.

இது என் குழந்தைகளின் சொந்த வெளியீடு.

அன்பன்,

**கண்ணதாசன்**

27637
ЧЧ16894

# 1. மஞ்சுளாவின் சுய சரிதம்

**நா**கரிகத்தின் உச்சாணிக் கொம்பிலே ஏறிக் குதிக்கும் தமிழ்நாட்டுப் பெண்களில் நானும் ஒருத்தி.

நான் பிறந்தது இப்படியா?

இல்லை.

வளர்ந்தது இப்படியா?

இல்லை.

ஆனால் வாழ்வது இப்படித்தான்!

குங்குமப் பொட்டு வைத்து, கொசுவத்தை முன்னால் வைத்து, காஞ்சிவரம் பட்டுடுத்தி, கை நீண்ட ரவிக்கை போடும் குலமகளாகத் தான் நான் வாழ விரும்பினேன்.

ஆனால் உங்கள் சமுதாயம் அப்படிச் சுலபத்தில் அனுமதித்து விடுமா என்ன?

பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கப் போனால், படிக்காதவன் பத்தாயிரம் கேட்கிறான்; பட்டம் பெற்றவன் முப்பதாயிரம் கேட்கிறான்.

வக்கு வகை இல்லாமல், வாழ்க்கைக்கு விதி இல்லாமல், முப்பது நாற்பது வயதுவரை கூட, விதவைகள் போல, கன்னிகளாக வாழும் பெண்களை நான் பார்த்திருக்கிறேன்.

நான் ஏன் அப்படி வாழ வேண்டும்?

எந்தச் சமுதாயத்தில் அச்சம், மடம், நாணம், பண்பாட்டுக்கு மரியாதை இல்லையோ, அந்தச் சமுதாயத்தில் அவற்றைக் கட்டியழுவது முட்டாள் தனமில்லையா?

நான் பெரிய சீர்திருத்த வாதியல்ல; புரட்சிக்காரியும் அல்ல; உலகத்தைப் பார்த்து வெறுத்துப் போனவள்.

அதனால், எப்படியும் வாழலாம் என்ற ஹிப்பியிஸம் கூட நியாயமானதோ என்று சந்தேகப்பட்டவள்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று கர்ஜிக்கிறவர்கள் கூட, தப்பாக வாழ்ந்தால் கேலி செய்வார்கள். ஆனால் அவர்களே தப்பாக வாழ்வார்கள்!

நான் வேடிக்கையான முடிவுகளுக்கெல்லாம் வந்தேன்.

என் கதை விசித்திரமானதுதான்.

வங்காளத்தில் சரத்பாபு உயிரோடிருந்திருந்தால், அவரிடம் போய், என் கதையைச் சொல்லி, ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டிருப்பேன்.

என்னுடைய துரதிருஷ்டம், அவர் வாழும்போது நான் வாழவில்லை.

மயானத்து எலும்புக் கூடுகளெல்லாம் மைதானத்தில் உல்லாசமாக வாழும்போது, நான் ஏன் வாழக் கூடாது என்று எண்ணினேன்.

நான் ஒரு விலை மகளல்ல.

அப்படி ஆகிவிடுவது சுலபம்.

'ஜாலக்காரி, கைகாரி, சரசக்காரி' என்றெல்லாம் பட்டங்கள் பெற்ற சமூகப் பதுமை நான்.

'என்ன இவள் கதையை நடுவில் இருந்து தொடங்குகிறாள்' என்று கருதுகிறீர்களா?

ஈஸ்வரன் வாழ்க்கையின் நடுப்பாகத்தில்தானே எல்லா விதச் சேட்டைகளையும் வைத்தான்!

குழந்தைப் பருவத்திலும், முதுமையிலும் என்ன இருக்கிறது? நடுப்பருவமான இளம் பருவத்தில்தானே எல்லாவித வேடிக்கைகளும் நடக்கின்றன.



அதனால்தான் நடுவில் இருந்து தொடங்கினேன்.

இப்போது ரயிலைப் புறப்படும் இடத்திற்கே திருப்பி விடுவோம். அங்கிருந்தே பயணத்தைத் தொடங்குவோம்.

திருச்சி மாவட்டம் மணமேல்குடியில், 'சோவி சுந்தரம் பிள்ளை' என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

என் அப்பா அவர்தான்.

பார்ப்பதற்குச் சோகை பிடித்தவர் போலிருப்பார். ஆனால் அவர் அந்தக் காலத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர்.

இந்தக் காலத்தில் பி.ஏ. படித்தவனுக்கு என்ன தெரியும்?

அப்பாவுக்கு என்று எழுதச்சொன்னால் 'அப்பாவிக்கு' என்று எழுதுகிறான்.

கிழக்கரை என்று எழுதச் சொன்னால் 'கீரைக் கடை' என்று எழுதுகிறான்.

நல்ல மணமகனாகப் பிடிப்பதற்குத்தானே இப்போதெல்லாம் இளைஞர்கள் படிக்கிறார்கள்?

அந்நாளில் எங்கள் கிராமத்தில் இரண்டு பேர்தான் பி.ஏ. படித்தவர்கள்.

ஒருவர் என் அப்பா. இன்னொருவர் என் சிற்றப்பா.

இருப்பினும் இரண்டு பேரும் பேசிக் கொள்ளும்போது தமிழில்தான் பேசிக் கொள்வார்கள்.

ஊரிலே யாருக்குத் தந்தி வந்தாலும் இந்த இரண்டு பேரிலே ஒருவர்தான் படித்துக் காட்டுவார்கள்.

என் சிற்றப்பா கட்டிக் கொண்ட சித்தி, பொறுமி. அவளுக்கு விவசாயத்தில் அதிக நாட்டம்.

ஒரு தடவை நிலத்தில் நடந்த அறுவடையைப் பார்க்கச் சென்றபோது அவளை ஒருவன் கையைப் பிடித்து இழுத்து விட்டான்.

கேள்விப்பட்ட என் சிற்றப்பா ஓடிப்போய், அவனை அரிவாளால் வெட்டிவிட்டார்.

அவன் இறந்துவிட்டான். என் சிற்றப்பாவுக்கு ஆயுள் தண்டனை.

அது முதல் எங்கள் சித்தி எங்கள் வீட்டிலேயே இருந்தாள்

என் பெற்றோருக்கு நான் ஒரே பெண். வேறு வாரிசுகள் கிடையாது. எனக்கு மூன்று வயதானபோது என் தாயார் இறந்து போனார்களாம். அது முதல் என் சித்திதான் என்னை வளர்த்தார்கள்.

உள்ளதை உள்ளபடி சொல்கிறேன். என் சித்தி எனக்குத் தாயாக இருந்தது போலவே, என் தந்தைக்கு மனைவியாகவும் இருந்தாள்.

'அவரோ மனைவியை இழந்தவர், அவளோ கணவனை இழந்தவள்!' என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.

இந்த விபத்து தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விட்டதாகப் பிற்காலத்தில் என் அப்பா சொன்னார்.

எனக்கு ஏழு வயதானபோது என் சித்தி ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தை என்னைப் போலவே இருந்தது. நான்தான் அதோடு அடிக்கடி விளையாடுவேன்.

"எதிர்காலத்திலும் நீயும், தங்கச்சியும் ஒன்றாக இருக்க வேண்டுமம்மா. வேறு வேறு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் என்ற நினைவே வரக்கூடாது," என்று என் அப்பா அடிக்கடி சொல்வார்.

அப்படி அந்த நஞ்சை எனக்கு ஊட்ட என்னைச் சுற்றிலும் யாருமில்லையே! எனக்கு ஏன் அந்த வஞ்சம் வரப்போகிறது?

பள்ளிக்குச் செல்லும்போது அப்பா காசு கொடுப்பார். படித்து விட்டுத் திரும்பும்போது, அதில் ரொட்டி வாங்கி, நான் தங்கைக்குக் கொண்டு வந்து கொடுப்பேன்.



என் தங்கைக்கு, 'மங்களா' என்று பெயர். ஓசை நயம் கருதியோ என்னவோ, எனக்கு 'மஞ்சுளா' என்றும், தங்கைக்கு 'மங்களா' என்றும், அப்பா பெயரிட்டார்.

எங்கள் குடும்ப வரலாற்றில் என் சிறுமிப் பருவம் ஒன்றும் சாகஸங்கள் நிறைந்ததல்ல. ஆகவே, அதை நான் விவரிக்க விரும்பவில்லை.

அப்பா சித்தியோடு தொடர்பு கொண்ட காலத்தில் மட்டும், ஊரார்களெல்லாம் மோசமாகப் பேசினார்களாம் ; பிறகு எல்லோரும் அடங்கி விட்டார்களாம்.

எல்லாக் கேணியும் பள்ளமாகத்தானே இருக்கிறது? எந்த வீட்டில் என்ன இல்லை?

யார் என்ன பேசினாலும் பேசட்டும் என்று என் அப்பா இருந்து விட்டாராம்.

'தம்பிக்கு மரண தண்டனை கூட இல்லையே? ஆயுள் தண்டனை தானே? என்றைக்காவது ஒரு நாள் விடுதலை பெறத் தானே வேண்டும்? மனைவியை ஒருவன் கை தொட்டு இழுத்ததையே சகிக்காத அவன், இதை எப்படி சகிக்கப் போகிறான், பார்க்கலாம்!' என்று ஊராரெல்லாம் காத்துக் கொண்டிருந்தார்களாம்.

அந்தப் பயம் என் அப்பாவுக்கும் இருந்திருக்கும் போல் இருக்கிறது.

நாளாக நாளாகத்தான் அது எனக்குத் தெரிந்தது.

அப்போது எனக்கு வயது பதினான்கு. நான் புஷ்பவதியாகி விட்டேன்.

எழுபது வருஷங்களுக்கு முன்னால் எல்லாம் பெண்கள் இருபது வயதுக்கு மேல்தான் வயதுக்கு வருவார்களாம்.

நாளுக்கு நாள் எல்லாம்தான் அவசரமாகி விட்டதே!

முன்பெல்லாம், 'கல்யாணம்' என்றால் ஏழு நாள் ; 'கருமாதி' என்றால் பதினாறு நாள். இப்போது ஒரு வேளைச் சாப்பாட்டோடு எல்லாம் முடிந்து விடுகிறதே!

நாகரிகத்தின் பரபரப்பில், நானும் சின்ன வயதிலேயே ருதுவாகி விட்டேன்.

பெண் ருதுவாவது நல்ல விஷயம்தான். ஆனால் ஒன்று, அவள் கட்டியிருக்கும் சேலையில் கறை படியத்தானே செய்யும்.

அந்தக் கறை ஏதேனும் ஒரு விதத்தில் படிய வேண்டும் என்று விதிக்கோட்டில் எழுதி இருந்தது போலிருக்கிறது.

அது வரப்போகும் கதை.

நான் ருதுவானபோது என் சிற்றப்பா விடுதலையாவதற்கு மூன்றே ஆண்டுகள் இருந்தன என்பது எனக்குத் தெரியாது.

பால்காரன் வாடிக்கையைச் சுவரிலே எழுதுவது போல், என் அப்பா மட்டும் மனதுக்குள்ளேயே எழுதிக் கொண்டிருந்திருக்கிறார்.

என் நிலைமை என்ன?

பள்ளிப் பருவத்தில் துள்ளிக் குதித்த மஞ்சுளா அடங்கி விட்டாள். பட்டுப் புடவை கட்டி, பால் வாங்கி வரும் பட்டிக் காட்டுப் பெண்ணாக மாறி விட் ாள்.

ஊரிலே பார்ப்பவர்கள் எல்லாம், "சுந்தரத்துக்கு எல்லாமே அழகாக வாய்க்கிறது," என்று பேசிக் கொண்டார்கள்.

எங்கள் கிராமத்தில் ஒரே ஒரு சினிமாக் கொட்டகை. அதுவும் ஓர் ஓலைக் கொட்டகை. அங்குதான் நானும் சித்தியும் சென்று படம் பார்ப்போம். பக்கத்து ஊர் திருவிழாக்களுக்குப் போனால் போவோம். அதிகமாக என் அப்பா வருவதில்லை.



நகரத்து மனிதர்களுக்குப் பொழுது எப்படிப் போகிறதென்று தெரியாது. கிராமத்திலோ, சூரியன் வானத்தில் ஏறி இறங்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் கிராமத்து மக்கள் அறிவார்கள்.

ஒரு நாள் இரவு என் அப்பா, 'தம்பி, தம்பி!' என்று புலம்பியபோதுதான், நான் ருதுவாகி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதும், மறுநாள் என் சிற்றப்பா விடுதலையாகிறார் என்பதும் எனக்குப் புரிய வந்தன.

## 2. என்ன சொல்லிப் பாடுவேன்!

தப்பு செய்யக் கூடாது; செய்து விட்டால் அதைச் சாதித்து விட வேண்டும்.

மனம் சலனப்பட்டவர்கள் மரியாதையாக இருந்து விட வேண்டியதுதானே?

'என்னடா, அப்பாவைப் பற்றி மகள் இப்படி விமரிசனம் செய்கிறாள்' என்று நீங்கள் கருதுகிறீர்களா? இல்லை. பின்னாளில் எனக்கு வந்த அனுபவத்தைப் பொது நீதியாக்கிச் சொன்னேன்.

கிராமத்துப் பழமொழிகள் எல்லாம் மிகவும் சுவையானவை.

'சும்மா கிடந்த சிட்டுக் குருவிக்குச் சோற்றைப் போடுவானேன்? அது கொண்டையைக் கொண்டையை ஆட்டிக் கொண்டு கொத்த வருவானேன்?' என்பார்கள்.

என் அப்பா சித்தியைக் கைப்பிடிக்கும்போது யோசித்திருக்க வேண்டாமா? 'இன்னொருவன் மனைவியாயிற்றே. அந்த இன்னொருவனும் ரோஷக்காரனாயிற்றே? அண்ணன் தம்பிகளுக்குள் எதற்கு இந்த அசிங்கம்?' என்று விலகி இருக்க வேண்டாமா?

சரி, நடந்தது நடந்து விட்டது; இனி புலம்பி என்ன பயன்? என் அப்பாவை விட அதிகம் புலம்பியவள் சித்தி.

மறுநாள் பொழுது முழுவதும் புலம்பலிலேயே கழிந்தது

எந்த நேரமும் எந்த நிமிஷமும் சித்தப்பா வந்து விடுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

எங்களைவிடக் கிராமத்து மக்கள் அனைவரும் அதிக ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

எங்கள் கிராமத்தில், ஒரு சிறு கடைத்தெரு உண்டு. நான்கு பெட்டிக் கடைகள், இரண்டு பலசரக்குக் கடைகள், ஒரு பிராமணாள் ஹோட்டல், மூன்று சாயாக் கடைகள் - இவை அந்தக் கடைத் தெருவை அலங்கரித்தன.

கடைத்தெருவை ஒட்டிச் சில வீடுகள். அந்த வீடுகளின் சுவரோரங்களில் காய்கறி விற்கும் பெண்கள். இந்தச் சின்னக் கடைத் தெரு காலையில் சுறுசுறுப்பாக இருக்கும். ஊரில் உள்ள எல்லோரும் அங்குதானே காய்கறி வாங்கியாக வேண்டும்? அப்படி வாங்கும் போது சும்மா வாங்க முடியுமா? ஏதாவது பேசியாக வேண்டுமே?

நகரத்தில் விளம்பரம் செய்கிறார்களே, 'நகரெங்கும் ஒரே பேச்சு' என்று. அன்று ஊரெங்கும் ஒரே பேச்சு, என் சிற்றப்பா விடுதலை ஆவது பற்றி!

"அடியம்மா, தெரியுமா சங்கதி? இன்று சுந்தரம் பிள்ளையின் தம்பி மகாலிங்கம் விடுதலையாகி வந்துவிடுகிறானாம். நிச்சயம் ஒரு கொலையோ, இரண்டு கொலையோ நடக்கத்தான் போகிறது!" என்றாளாம் ஒருத்தி.

"இனி எது நடந்தாலென்ன? பத்து வருஷம்தான் கொழுந்தனோடு ஆனந்தமாக வாழ்ந்து விட்டாளே!" என்றாளாம் மற்றொருத்தி.

ஆண்டவன் கடலில் அலையைப் படைத்ததை விட வேகமாகப் பெண்ணுக்கு நாக்கைப் படைத்திருக்கிறான்.

'நான்கு பெண்கள் ஓரிடத்தில் கூடினால், ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும்,' என்று யாரோ சொன்னார்களாம்.

அப்பப்பா! ஊர் பேசிய பேச்சை நாங்கள் கேட்கச் சகிக்காமல், கதவைச் சாத்திக் கொண்டு கிடந்தோம்.



இந்தப் பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் என் சித்தி கடைத்தெருப் பக்கம் கூடப் போனதில்லை. ஒரே ஒரு நாள் போனபோது யாரோ ஒருத்தி காறித் துப்பினாளாம்.

அவளுக்கு எத்தனை புருஷனோ, யார் கண்டது?

அழுது கொண்டிருந்த சித்திக்கு நான்தான் ஆறுதல் சொன்னேன்.

"நீ அழாதே சித்தி. சித்தப்பா வரட்டும்; நானே பேசுகிறேன். எனக்குத்தான் வயது வந்து விட்டதே!" என்றேன்.

"என்னம்மா பேசுவாய்? என்ன பேசுவாய்? பேசக் கூடிய விஷயமா இது? கொஞ்ச நாட்களுக்கு முன்பே நான் செத்திருக்கக் கூடாதா?" என்று என் சித்தி அழுதாள்.

என் தங்கையோ இனந்தெரியாமல் விழித்தாள்.

"அம்மா ஏன் அழறாங்க?" என்று என்னிடம் கேட்டாள்.

"அம்மாவுக்கு உடம்புக்கு முடியவில்லை," என்று ஒரு பொய்யைச் சொன்னேன்.

"டாக்டரிடம் காட்டுவோமா..." என்றாள்.

"நாளைக்குச் சரியாகப் போய்விடும்," என்றேன்.

என் தங்கையைப் பார்த்தபோது எனக்குக் கவலையாகவே இருந்தது.

என் சிற்றப்பாவை இவள் எப்படி அழைப்பாள்?

'முறை தெரியாத கதை' என்று விக்கிரமாதித்தன் கதையில் வருகிறதே, அதைப் போலத்தான் இதுவும்.

'அப்பா' என்பாளா? 'சித்தப்பா' என்பாளா?

ஏதோ ஒரு கெட்ட காரியம் நடந்த வீடுபோல் எங்கள் வீடு காட்சியளித்தது.

தயிர்க்காரி கதவைத் தட்டினால்கூட, அப்பா கட்டிலில் எழுந்து உட்காருவார். நாங்கள் நடுங்குவோம்.

நல்லவேளை, அன்றைய பகல் முழுவதும் என் சிற்றப்பா வரவில்லை.

பகலிலே வந்தால் கூட, பயந்து கொண்டா வரப்போகிறார்?

'ஜெயிலுக்குப் போய் வந்தவன்' என்ற கவலையோடா வரப்போகிறார்?

'மானத்துக்காகப் போராடியவன்' என்ற ஆண்மையோடல்லவா வரப்போகிறார்!

ஊரார்கூட, அவரை வரவேற்க அல்லவா காத்துக் கிடந்தார்கள்.

ஆனாலும் அவர் வரவில்லை.

இரவு மணி எட்டு.

அப்பாவைச் சாப்பிடச் சொன்னேன். "பசி இல்லை!" என்று கூறி விட்டார்.

பால் மட்டும் கொடுத்தேன். சித்தி அதையும் மறுத்து விட்டாள்.

கூடத்து மின்சார விளக்கு அணைக்கப்பட்டது. இரவு விளக்கு எரியத் தொடங்கிற்று.

இரண்டு உள்ளங்களில் பெரிய நெருப்பு எரிந்ததைப் பார்த்த அந்தச் சிறிய நெருப்பு கேலி செய்வது போலிருந்தது.

இந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

திடீரென்று என் சிற்றப்பா வந்து, 'வாடீ.' என்று என் சித்தியை அழைத்தால் அவர்கள் என்ன சொல்லக் கூடும்?

இல்லை, அவர் நேரே தன் அண்ணாவிடம் போய், 'அண்ணா, என் மனைவி சுகமாய் இருக்கிறாளா?' என்று கேட்டால், அவர் என்ன பதில் சொல்லக்கூடும்?



இதுதான் வழி என்று தெரிந்தால் முள்ளிலேயும் நடந்து விட முடியும். எது வழி என்று தெரியாத போது என்ன செய்ய முடியும்?

கதவு தட்டும் சத்தம் கேட்டது. எங்கள் உயிர் ஒரு முறை போயிற்று.

துணிந்து நான்தான் கதவைத் திறந்தேன்.

நல்ல வேளை. எங்கள் இல்லத்துக் கணக்குப் பிள்ளை வந்திருந்தார். ஒப்படைப்பு சம்பந்தமாக ஒரு சிறு தகராறாம்.

'அப்பாடா!' என்று நான் பெருமூச்சு விட்டு, "அப்பாவுக்கு உடம்புக்குச் சுகமில்லை. எதுவாக இருந்தாலும் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம்," என்று அனுப்பி விட்டேன்.

மறுநாள் பொழுதும் வம்பில்லாமல் விடிந்தது.

இரவு முழுக்க அப்பாவுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, அதிகாலையில் எழுந்ததும் என்னைக் கூப்பிட்டு ஒரு விஷயத்தைச் சொன்னார்.

"அம்மா! நாமெல்லாம் இன்றைக்கு எங்காவது வெளியூருக்குப் போய் விடலாம். தம்பி வந்த பிறகு, கணக்குப் பிள்ளையின் மூலம் அதைத் தெரிந்து கொண்டு, நான் மட்டும் வந்து அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறேன். 'என்னைக் கொலை செய்து விடு,' என்று நான் கதறினால், அவன் மனது மாறிவிடும். பிறகு உன் சித்திக்கும் ஆபத்து இருக்காது," என்றார்.

எனக்கும் அது நல்ல யோசனையாகப் பட்டது.

எங்கே போவது?

புதுச்சேரியில் என் அப்பாவின் ஒன்றுவிட்ட தங்கை இருந்தாள். "அங்கே போய்விடலாம்," என்று அப்பா சொன்னார்.

அந்த அத்தை இரண்டு முறை எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். மிகவும் நல்லவர்கள். நாற்பது ஏக்கர் நிலம் அவர்களுக்கு உண்டு. சாப்பாடு போடப் பயப்பட மாட்டார்கள்.

"போய்விடலாம் அப்பா!" என்று நான் சொன்னேன்.

எங்கள் கிராமத்திலிருந்து பஸ் ஏற வேண்டுமென்றால், ஒரு மைல் தூரம் வண்டியில் போக வேண்டும்.

சித்தியும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, சாமான்களையெல்லாம் கட்டி எடுத்துக் கொண்டு, வண்டியில் ஏறினாள்.

வண்டியின் முன்னும் பின்னும் திரை போட்டு விட்டோம்.

பஸ் வரும் ரோடுக்கு வந்த பிற்பாடுதான் எங்களுக்கு உயிரே வந்தது. ஏதோ ஒரு மரண தண்டனையிலிருந்து தப்பி விட்டதைப் போன்ற பிரமை.

அங்கே அரை மணி நேரத்திற்கு ஒரு பஸ்தான் வரும்.

அப்பா எங்கள் வண்டிக்காரன் கையில் ஓர் இருபது ரூபாய் கொடுத்து, "நாங்கள் பஸ் ஏறியதும் நீ வீட்டுக்குப் போய்க் கணக்குப்பிள்ளையிடம் சொல்லி வீட்டைக் கவனித்துக் கொள்ளச் சொல்," என்றார்.

கொஞ்ச நேரம் கழித்து, வண்டிக்காரனைக் கூப்பிட்டு, "கணக்குப்பிள்ளையிடம் எல்லா விஷயமும் சொல்லியிருக்கிறேன், நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்," என்றார்.

அவனும் எல்லா விஷயங்களுக்கும் தலை ஆட்டினான். அவன் என்ன செய்வான் பாவம், சொன்னதைச் செய்வதுதானே அவன் பணி?

தூரத்தில் பஸ் வரும் சப்தம் கேட்டது. பெட்டி படுக்கைகளோடு நாங்கள் தயாரானோம்.

பஸ் வந்து நின்றது. கிராமத்து ஜனங்கள் இரண்டொருவர் இறங்கினார்கள்.

நாங்கள் ஏறப் போனபோது, கொஞ்சம் பொறுக்கச் சொன்னார், கண்டக்டர். அப்படியே நின்றோம். கடைசியாக ஒருவர் இறங்கினார்.



எனக்குச் சரியாக அடையாளம் தெரியவில்லை. என் சித்திக்குத் தலை சுற்றுவது போலிருந்தது.

என் அப்பா நாக்குத் தடுமாறிய நிலையில், "தம்பி!" என்றார்.

வந்தது வேறு யாருமில்லை.

என் சிற்றப்பா!

"என்னண்ணே, எங்கே புறப்பட்டீங்க?" என்று கேட்டார் சிற்றப்பா.

"உன்னை எதிர்பார்த்தோம், நீ வரவில்லை," என்று இழுத்தார் அப்பா.

திடீரென்று சிற்றப்பா தன் மனைவியிடம் போய், "என்ன அகிலா, சுகமாக இருக்கிறாயா, அம்மா?" என்றார்.

பஸ் கண்டக்டர் எங்களைப்பார்த்து, "வருகிறீர்களா இல்லையா?" என்று கேட்டார்.

இல்லை என்று நான் கையசைத்தேன்; பஸ் போய் விட்டது.

சித்திக்கு எப்படி இருக்கும்?

எப்படித்தான் சமாளித்தாளோ?

பெண், சக்தியின் வடிவமல்லவா? அந்தச் சக்தி அவளுக்கு வந்து விட்டது போலிருக்கிறது.

"இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்..?" என்று துணிந்து கேட்டு விட்டாள்.

"ஆளைப் பார்த்தாயா? ஜெயிலில் ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் திருச்சி ஜெயில்தான் ஒரு தனி உலகமாயிற்றே! நாளாக நாளாகச் சாப்பாடு ஏற்பாட்டை நானே செய்து கொண்டேன். வசதி இருந்தது. ஆனால், எப்போதுமே உன் நினைப்புத்தான். உன்னைக் கையைப் பிடித்து இழுத்தவன், கொல்லப் பட்டதிலே எனக்கு நிம்மதி இல்லை. அவன் வம்சத்தையே பூண்டழிக்க வேண்டும் என்று தோன்றிற்று.

அண்ணன் உன்னைப் பார்த்துக் கொள்வார் என்ற தைரியத்தில்தான் நான் நிம்மதியாக இருந்தேன்," என்றார் அவர்.

சித்தி தலை சுற்றிக் கீழே விழாமல் இருந்ததுதான் ஆச்சரியம்.

"யாரம்மா இது?" என்று கேட்டாள், தங்கை.

குழந்தையின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், சித்தி, "வாருங்கள். அப்படி உட்கார்ந்து பேசுவோம்," என்றாள்.

அந்தச் சாலை, மரங்கள் நிறைந்தது. அங்கே படர்ந்து நின்றது ஒரு பெரிய ஆலமரம்.

அப்படிப் படர வேண்டிய குடும்பமல்லவா, எங்கள் குடும்பம்? என்ன ஆகுமோ?

எல்லோரும் போய் அந்த மரத்தடியில் உட்கார்ந்தோம்.

அப்பா பிரமை பிடித்தவர் போலவே இருந்தார்.

"என்னண்ணே, ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். இனி நான் வந்து விட்டேன். உங்களுக்கு எதுக்குக் கவலை?" என்றார் சிற்றப்பா.

திடீரென்று அப்பாவுக்கு உடம்பு முழுக்க வியர்த்தது. மழை மழையாக வியர்வை கொட்டிற்று. நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டார்.

"என்னண்ணே! என்ன? என்ன?" என்று பதறினார், சிற்றப்பா.

"நெஞ்சு வலிக்கிறது," என்றார் அப்பா.

உதவவும் முடியாமல், அழவும் முடியாமல் தவித்தாள் சித்தி.

அப்பா அந்த மரத்தடியிலே படுத்தார்.

"அண்ணா! அண்ணா!" என்று அவரைத் தட்டி எழுப்பினார் சிற்றப்பா.

ஆனால் அவர் எழவே இல்லை.

"அப்பா! அப்பா –!" என்று நான் அழுதேன்.



"அண்ணே! அண்ணே!" என்று சிற்றப்பா அழுதார்.

வந்திருந்த வண்டிக்காரனும் அழுதான்.

ஆனால், சித்தி–?

## 3. அது என்ன படாத இடமோ?

அழ வேண்டிய நேரத்தில் அழ முடியாமல் இருப்பதைப் போன்ற துரதிருஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்?

யாருக்கு அழுவது? எப்படி அழுவது?

புருஷனுக்கு அழுவது ஒரு முறை; கொழுந்தனுக்கு அழுவது ஒரு முறை!

என் சித்தி அப்பொழுது கொழுந்தனுக்காகத்தான் அழுதாள்.

உள்ளுக்குள்ளே குமுறினாளே தவிர, மேலே விழுந்து புரள முடியவில்லை.

அதற்குள் கிராமத்து ஜனங்கள் ஆறேழு பேர் கூடி விட்டார்கள்.

"ஐயோ! பெரிய எஜமானுக்கா இந்தக் கதி?" என்று சில பேர் அங்கலாய்த்தார்கள்.

அவர்களது உதவியோடு அப்பாவின் உடம்பைத் தூக்கி வண்டியில் வைத்தோம்.

நாங்கள் எல்லோரும் வண்டிக்குப் பின்னால் நடந்தே சென்றோம்.

என் தங்கை, "அப்பா! அப்பா!" என்று அழுது கொண்டே வந்தாள்.

அதை எங்கே சிற்றப்பா கவனித்து விடுவாரோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன்.

நீண்ட காலத்துக்குப் பிறகு சந்தித்த அண்ணனை இழந்துவிட்ட துக்கத்தில், அவர் அதைக் கூடக் கவனிக்கவில்லை.

காளிதாசன் வருணனை ஒன்றை நான் படித்திருக்கிறேன். பாம்பின் நிழலில் தேரை போய் நின்றதாம். பாம்பு தேரையைக் கவனிக்கவில்லையாம்!

அப்படியேதான் சிற்றப்பாவும் என் தங்கையைக் கவனிக்கவில்லை.

இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால், என் அப்பாவைப் 'பெரியப்பா' என்று அழைக்கும்படி சிறு வயதிலிருந்தே என் தங்கைக்குக் கற்றுக் கொடுத்திருக்க மாட்டோமா?

வண்டி கிராமத்திற்குள் நுழையும்போது, கிராமத்தில் 'கசமுசா'வென்று பேச்சு ஆரம்பமாகி விட்டது.

வண்டியில் என் அப்பா தூங்குவதாக நினைத்துக் கொண்டு, எல்லோரும் என் சிற்றப்பாவைக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

"சுந்தரம் பிள்ளைக்கு என்ன ஆச்சு?" என்று ஒரு முதியவர் மட்டும் கேட்டார்.

"அண்ணனின் காலம் முடிஞ்சு போச்சு," என்று என் சிற்றப்பா அழுதபோதுதான் எல்லோரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

உயிரோடிருக்கும்போது உதவிக்கு வராவிட்டாலும், செத்த பிறகு கிராமத்து ஜனங்கள் ஒற்றுமையாக வருவார்கள்.

எல்லோரும் உடம்பை இறக்கி, உள்ளே கொண்டு வந்து வைத்தார்கள்.

ஒரு காரியத்துக்கும் வர மாட்டார், எங்களுடைய சிறிய தாத்தா. இதற்கு அவர் வந்து சேர்ந்தார்.

எங்கள் குடும்பங்களில் யாராவது இறந்து போனால் அவர் தான் 'கோடி' அனுப்புவார். அதைக் கையோடு கொண்டு வந்திருந்தார்.



வேறு எதையும் அவர் கேட்டுக் கொள்ளவில்லை.

அப்பாவின் மரணத்தைவிடக் கொடிய துன்பம் ஒன்று வீட்டுக்குள்ளேயே காத்துக் கொண்டிருப்பதைப் போல எனக்குத் தோன்றிற்று.

ஒரு பயங்கரச் சிக்கலல்லவா நேர்ந்திருக்கிறது?

இந்த மரணத்தின் துன்பத்தையும் அது வென்று விடுமோ?

கிராமத்தில் செத்த வீடு என்று பார்க்கிறார்களா, வாழும் வீடு என்று பார்க்கிறார்களா?

ஒவ்வொரு மூலையிலும் நாலைந்து பெண்கள் உட்கார்ந்து கிசுகிசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

பஸ்ஸை விட்டு இறங்கியதுமே, என் அப்பாவைச் சிற்றப்பா அடித்து விட்டாராம்! அந்த அடி தாளாமல் என் அப்பா இறந்து விட்டாராம்! அந்த அடியும் படாத இடத்தில் பட்டு விட்டதாம்.

அது என்ன படாத இடமோ..? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

எந்த ஜனங்களுக்கு வேலை இல்லையோ, அவர்கள் எதையாவது பேசியாக வேண்டும்.

எனக்கிருந்த பயமெல்லாம், சடலத்தைத் தூக்குவதற்கு முன்பாகவே, சிற்றப்பாவின் காதில் யாராவது இந்தச் செய்தியைப் போட்டு விடுவார்களோ என்பதுதான்.

அவ்வளவு நாகரிகம் தெரியாதவர்களா நம் ஊர் மக்கள் - என்றொரு ஆறுதல்.

வெளியூரில் இருந்து வரவேண்டிய சொந்தக்காரர்கள் யாரும் இல்லாததால், இருட்டுவதற்கு முன்பாகவே உடலை எடுத்து விட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையின் ஒரு பகுதி முடிந்து விட்டது.

மக்களுடைய வரலாற்றில் முற்பகுதி தாயும், தந்தையும் தானே?

உள்ளூர் ஜனங்கள் பாதிக்கு மேல் போய் விட்டார்கள். சில பேர் மட்டும் வேடிக்கை பார்க்கத் தங்கியிருந்தார்கள்.

எனக்குக் கோபம் வந்தது.

ஒவ்வொருவராகத் தனியாகப் பார்த்து, "இங்கே இன்று சமையல் இல்லை, போய் வாருங்கள்," என்று கூறி விட்டேன்.

போகும்போது ஒருத்தி முணுமுணுத்துக் கொண்டே போனாள், "அவளுக்கென்னடி ? ஒரு புருஷன் போனால் இன்னொரு புருஷன்! வெள்ளைச் சேலை கட்ட வேண்டிய அவசியமே கிடையாது!" என்று.

அன்றைய இரவுதான் எனக்குப் பயங்கரமான இரவாகத் தோன்றிற்று.

எதைச் சொல்வது ? யார் சொல்வது ? எப்படிச் சொல்வது ?

அகலிகையைப் பார்த்தவுடனேயே முனிவனுக்குத் தெரிந்து விட்டது.

ஆனால், என் சித்தி அகலிகையுமல்ல, என் சிற்றப்பா முனிவருமல்ல.

வீட்டிலே ஊதுவத்தி வாசம், பன்னீர் வாசம்.

நெருங்கிய சொந்தக்காரர்கள் பத்துப்பேர் தங்கியிருந்தார்கள். அவர்களிலே நான்கு பேர் பெண்கள். அவர்களும் எங்கள் வீட்டு விஷயம் தெரிந்தவர்கள்தான்.

'ஊரார் அதைக் கிளறுவதற்கு முன்பாக நாமே அதைச் சொல்லி விடலாம்,' என்ற துணிவு எனக்கு வந்தது.

மூலையில் ஒரு குத்துவிளக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த என் சித்தி, அதைவிட்டு நகரவே இல்லை.

சிற்றப்பா உள்ளறையில் கட்டிலில் படுத்திருந்தார்.



நான் தங்கையைக் கையில் கூட்டிக் கொண்டு, அந்த அறைக்குள் நுழைந்தேன்.

"சிற்றப்பா...!" என்றேன்.

"உம்!" என்றபடி விழித்துப் பார்த்தார்.

அவர் கண்கள் சிவந்திருந்தன.

"அப்பா போனவர் போனவர்தான். இனி திரும்பியா வரப்போகிறார் ? நீங்கள் அழாமலிருங்கள் சிற்றப்பா !" என்றேன்.

அவர் பேசாமல் குமுறிக் குமுறி அழுதார்.

கொஞ்ச நேரம் கழித்து, மீண்டும், "சிற்றப்பா!" என்றேன்.

"என்னம்மா ?" என்றார்.

"நம் வீட்டில் ஒரு காரியம் ஆகிவிட்டது. அதைச் சொன்னால் உங்களுக்கும் ஏதாவது ஆகிவிடாதே?" என்று கேட்டேன்.

"இனி ஆவதற்கு என்னம்மா இருக்கிறது ?" என்றார்.

கதவு நன்றாகச் சாத்தி இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துவிட்டு நான் பயங்கரத் துணிச்சலோடு, "சிற்றப்பா, நீங்கள் இல்லாத சமயத்தில் அப்பாவுக்கும் சித்திக்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்தக் குழந்தை பிறந்தது. உங்களைப் பார்த்ததும் அந்த அதிர்ச்சியில்தான் அப்பா இறந்து போனார்," என்றேன்.

சோர்ந்து கிடந்த அவர் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தார்.

"என்னம்மா... என்னம்மா... சரியாகச் சொல்லு...!" என்றார்.

நான் மீண்டும் ஒரு முறை கண்ணீரோடு அதையே சொன்னேன்.

கட்டிலில் கையை ஊன்றியபடி, கொஞ்ச நேரம் பூமியையே பார்த்தார். "பரவாயில்லேம்மா. பன்னிரண்டு வருஷ காலம் தாங்கிக் கொண்டிருக்க எல்லாப் பெண்களாலும் முடிவதில்லை. நல்ல வேளை ! ஊரிலே எங்காவது போய்ப் பேர் வாங்காமல் வீட்டோடு முடிந்து விட்டதே..." என்றார் அவர்.

நான் பேசாமலேயே நின்றேன்.

கொஞ்ச நேரத்தில் அவராகவே சிரித்தார். "ம்... பரவாயில்லே," என்றார். பிறகு அந்தக் குழந்தையையே உற்றுப் பார்த்தார். 'இங்கே வா,' என்று கூப்பிட்டார்.

என் தங்கை பயந்து போய் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

நான், "போம்மா," என்றேன்.

அவள் மெதுவாக அவரிடம் போனாள்.

குழந்தையைத் தூக்கி மடியிலே உட்கார வைத்துக் கொண்டார் சிற்றப்பா. அதன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

பன்னிரண்டு வருஷகாலப் பிரிவு, அவரை எவ்வளவோ மாற்றி இருக்கிறது என்பது அப்போது எனக்குப் புரிந்தது.

'அதிலும் தவறு செய்த அண்ணனே இறந்து போய் விட்டார். தண்டிக்கப்பட வேண்டியவளோ தாயாகி இருக்கிறாள். இன்னும் ஒரு கொலையும் ஆயுள் தண்டனையுமா? ஊரில் என்ன நடக்கவில்லை?'-இப்படியெல்லாம் அவர் சிந்தித்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த மௌனத்திற்கும், பாசத்திற்கும் என்ன பொருள்?

சாதாரணமாக சினிமா கதை எழுதுகிறவர்கள் இது மாதிரி இடங்களில், 'துரோகி! வஞ்சகி!' என்றல்லவா எழுதுவார்கள்?

"சித்தி சாப்பிட்டுப் பல நாட்களாகி விட்டன!" என்றேன் நான்.

"போய் முதலில் அவளைச் சாப்பிடச் சொல்லு! ஆனது ஆகிவிட்டது. இனி கவலைப்பட்டு என்ன செய்வது?" என்றார்.

எனக்கு முழு நிம்மதியும் வந்துவிட்டது.

இனி யார் எங்கள் குடும்பத்தில் கலகம் மூட்ட முடியும்?

வந்திருந்த உறவினர்கள் மறுநாள் போய்விட்டார்கள்.



சித்தி ஓர் அறையைச் சாத்திக் கொண்டு உள்ளேயே படுத்திருந்தாள்.

சிற்றப்பா கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். சித்தியோடு பேச விரும்புகிறார் என்பது எனக்குப் புரிந்தது.

நான் ஜாடையைப் புரிந்து கொண்டு வெளிவராந்தாவில் ஒரு பத்திரிகையும் கையுமாக வந்து உட்கார்ந்து கொண்டேன்.

மெதுவாகக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. தட்டுவது சிற்றப்பாதான் என்பது எனக்குப் புரிந்தது.

கொஞ்ச நேரத்தில் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. மீண்டும் கதவு தாழிடப்படும் சத்தமும் கேட்டது.

நான் ஒரு பெருமூச்சு விட்டேன்.

'அவர்கள் என்ன பேசுகிறார்கள்' என்பதைக் கவனிக்க நான் விரும்பினேன். ஒட்டுக் கேட்பது நாகரிகமாகாது என்று விட்டு விட்டேன்.

அடுப்பிலே சோறு வேகப்போட்டிருந்தது நினைவுக்கு வந்தது. வேலைக்காரி இருக்கிறாள் என்றாலும் அதைப் பார்ப்பதற்கு நான் எழுந்து சென்றேன்.

என் சிற்றப்பாவும், சித்தியும் இருந்த அறையைக் கடந்துதான் செல்ல வேண்டும். சிற்றப்பா கொஞ்சலாகப் பேசுவது மட்டும் கேட்டது.

சுமார் ஒன்றரை மணிக்கு என் சிற்றப்பா வெளியில் வருவதையும், சித்தி பின்னால் வருவதையும் பார்த்தேன். அப்போதும் பத்திரிகை படிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தேன்.

எப்படியோ எங்கள் குடும்பம் ஒன்றுபட்டு விட்டது என்று கருதி, இருவரையும் சாப்பிட அழைத்தேன்.

என் சித்தியே சிற்றப்பாவுக்குப் பரிமாறினாள்.

அப்போது வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது.

'துக்கம் கேட்க வெளியூரில் இருந்து யாரோ வருகிறார்கள்,' என்றெண்ணி, வெளியிலே எட்டிப் பார்த்தேன்.

என்னுடைய ஒன்று விட்ட அத்தையும், அத்தை மகனும் வண்டியில் இருந்து இறங்கினார்கள்.

அவர்களுக்குச் சொந்த ஊர் மருதூர் என்பது. அது எங்கள் ஊரில் இருந்து பதினாறு கல் தொலைவில் உள்ளது.

நான் அவர்களை வரவேற்று உட்கார வைத்தேன்.

சித்தியும் சிற்றப்பாவும் வந்தார்கள்.

வழக்கம்போல் துக்க விசாரணை நடந்தது.

பிறகு, பேச்சு வேறு பாதைக்குத் திரும்பிற்று.

தங்கள் கார் ரிப்பேருக்குப் போயிருப்பது பற்றியும், தங்கள் நிலத்து விளைச்சல் பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

சிலர் என்ன பேசினாலும், தங்களைப் பற்றியே பேசுவது வழக்கம்.

'அவர்களுக்கு எவ்வளவு இருந்தாலும் நமக்கென்ன!' என்று எனக்குக் கூடக் கொஞ்சம் ஆத்திரமாகத்தான் இருந்தது.

ஆனால் அவர்கள் பீடிகைக்கு என்ன நோக்கம் என்பது கொஞ்ச நேரத்தில் எனக்குப் புரிந்து விட்டது.

"ஏண்டியம்மா! உன் அப்பாவுக்குத்தான் ஆம்பிளைப் பிள்ளை கிடையாதே! எல்லாச் சொத்தும் உனக்குத் தானே?" என்று கேட்டார்கள் அத்தை.

"ஏன், சிற்றப்பா இல்லையா ? சித்தி இல்லையா ? தங்கை இல்லையா ?" என்றேன்.

"இதுதான் உன் தங்கையா...?" என்று, ஒரு மாதிரியாக இழுத்தார்.



"ஆமாம். என் சொந்தத் தங்கை!" என்று அழுத்தமாகச் சொன்னேன். அவளையும் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன்.

"என்னவோம்மா ! ஊரிலே எவ்வளவோ பேர் என்ன வெல்லாமோ பேசினார்கள். நான் அவைகளை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. என்ன இருந்தாலும், ரத்த பந்தம் போய்விடுமா ? என் மகனுக்கு நீதான் வேண்டுமாம், யாரையும் கட்டிக் கொள்ள மாட்டானாம் ! மீனாட்சி அக்கா கல்யாணம் நடந்த வீட்டில் உன்னைப் பார்த்தானாம். என்ன சொக்குப் பொடியோ தெரியவில்லை. 'பேசு பேசு' என்று உயிரை வாங்கினான் !" என்றார்கள் அத்தை.

"ஆமாம், இப்போது கல்யாணம் பேச வருகிறீர்களே, இந்தப் பையனைச் சுவீகாரம் எடுக்கும்போது எங்களைக் கூப்பிட்டீர்களா! சொந்தப் பிள்ளை என்றுதானே சுவீகாரம் எடுத்தீர்கள் ! நாங்கள் சொந்தக்காரர்களாகத் தெரிய வில்லையா ?" என்றாள் சித்தி.

பக்கத்து அறையில் பையனோடு பேசிக் கொண்டிருந்த சிற்றப்பா, திடீரென்று நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்தார்.

என் அத்தையைப் பார்த்து, "என்ன அன்னபூரணி, கல்யாணப் பேச்சா பேசுகிறாய்?" என்றார்.

"ஆமாம், அண்ணா," என்றார்கள் அத்தை.

"அட பாவமே! பிறந்த இடத்தில் இந்தப் பையன் மஞ்சுளாவுக்குச் சகோதரன் முறையாக வேண்டும். அதெப்படி திருமணம் செய்ய முடியும்?" என்றார் சிற்றப்பா.

"என்ன சொல்கிறீர்கள், அண்ணா?" என்று கேட்டார்கள் அத்தை.

"எங்கண்ணனைத்தான் எழுப்பிக் கேட்க வேண்டும்," என்றார் சிற்றப்பா.

# 4. எவ்வளவு அழகாயிருக்கிறாய் நீ !

அண்ணன் கொஞ்சம் விளையாட்டுக்காரர்தான் 'இருந்தாலும் இப்படியுமா நடக்க முடியும் ?' என்று ஆச்சரியப்பட்டார்கள் அத்தை.

"எப்படி நடக்காது? ஏன் நடக்காது? எங்கும் ஏதோ ஒன்று நடந்து கொண்டுதான் இருக்கிறது!" என்று தத்துவம் பேசினார் சித்தப்பா.

என் அத்தை சாப்பிடக்கூட இல்லை. வண்டியைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

எனக்கு ஒன்று புரிந்தது.

என் அப்பா விளையாட்டுக்காரர், தன் மனைவியிடமும் அப்படி நடக்கக் கூடும் என்று ஜெயிலிலேயே சித்தப்பா எதிர்பார்த்திருப்பார் போலிருக்கிறது. இல்லையென்றால் தன் மனைவியைப் பற்றிய செய்தியை அவ்வளவு சாதாரணமாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டாரே? அப்பா இப்படியெல்லாம் நடக்கக் கூடியவர் என்பது எனக்கு முன்னால் தெரியாது.

ஒரு குடும்பப் பெண் தந்தையைப் பற்றிய ரகசியங்களில் எப்படிக் கவனம் செலுத்த முடியும்?

அவர் குடும்பப் பெண்களோடு தொடர்பு கொள்கிறவர் என்ற விஷயம், ஊர் முழுவதற்குமே தெரிந்திருக்கும் போலிருக்கிறது.

அந்த வகையில் என் சித்தப்பா ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியேதான்.

தன் மனைவியைத் தவிர, வேறொருவரை அவர் தொட்டதில்லை. அந்த மாதிரி புகார்கள் எதுவும் என் காதுகளில் விழுவதில்லை.



"ஆனால், அண்ணனோடு வாழ்ந்தவளைத் தம்பி மனைவியாக்கிக் கொண்டான்!" என்று ஊர் பேசத்தான் செய்தது.

"ஊர்ப் பேச்சுக்குப் பயப்பட்டால் ஒரு வாய்ச் சோறு ஒழுங்காகச் சாப்பிட முடியாது." என்றார் சித்தப்பா.

"யார் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். உன்னை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து விட்டு உன் சித்தியைக் கூட்டிக் கொண்டு நான் வடக்கே போய்விடப் போகிறேன். நாம் நன்றாக வாழ வேண்டும். எந்தக் கழுதையைக் கேட்டு நாம் வாழ்க்கையை நடத்த முடியும்?" என்றார் அவர்.

"எனக்கு எதற்குச் சித்தப்பா இப்போது கல்யாணம்?" என்றேன் நான்.

"ஊர் நல்ல ஊராக இல்லை. எதையும் பேசும். பெண்ணுக்கு வயது வந்து விட்டால், மரியாதையாக ஒரு இடத்தில் பிடித்துக் கொடுத்து விட வேண்டும். அதை விட ஒரு தகப்பனோ, சித்தப்பனோ செய்யக்கூடிய கடமை என்ன இருக்கிறது?" என்றார் அவர்.

சித்தி எனக்குத் தலைவாரி விட்டாள். பொட்டு வைத்தாள்.

"அடி. அம்மா ! எவ்வளவு அழகாய் இருக்கிறாய் நீ !" என்றாள்.

பிரிவினை இல்லாமல் ஒன்றாக வாழும் குடும்பத்தை, 'அவிபக்த குடும்பம்' என்கிறார்கள் இந்துக்கள். அப்படி இருப்பதில்தான் எவ்வளவு சந்தோஷம் இருக்கிறது! தெரியுமா?

எல்லோரும் ஒன்றாக ஒரே குடும்பமாக இருப்பதில் உள்ள சந்தோஷம், பிரிவினை செய்வதில் இல்லை.

சில குடும்பங்களுக்குத்தானே அந்த நியாயம் தெரிகிறது?

தாயையும் தகப்பனையும் இழந்து விட்ட எனக்கு, சித்தியும் சித்தப்பாவும் இல்லை என்றால், என்ன பாதுகாப்பு இருக்க முடியும்?

சிற்றப்பா எனக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். முன் கூட்டியே என்னிடம் கேட்டுக் கொண்டார்.

"ஏம்மா! உனக்கு அழகான பையன் வேண்டுமா? பணக்காரப் பையன் வேண்டுமா ? படித்த பையன் வேண்டுமா ?" என்று கேட்டார்.

நான் வெட்கத்தோடு, "என்னை அன்பாக நடத்தக் கூடியவராக இருந்தால் போதும். அழகோ, பணமோ இல்லா விட்டாலும் கவலை இல்லை," என்றேன்.

சிற்றப்பா மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்.

எங்கள் ஜாதியில் மாப்பிள்ளைகள் மிகவும் குறைவு. அதென்னவோ ஆண்டவன் பெண்களாகவே சிருஷ்டித்துத் தள்ளுகிறான்!

கஷ்டப்படுவதற்கே பிறக்கின்றன இந்தப் பெண் ஜன்மங்கள்; தகப்பனுக்கு வசதி இருந்தால் தப்பிப் பிழைக்கின்றன. இல்லையென்றால் செத்துப் பிழைக்கின்றன.

மாப்பிள்ளைகள் குறைவாக இருப்பதால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையும் மிக அதிகமாகி விட்டது.

என் சிற்றப்பா எதற்கும் தயாராக இருந்தார்.

ஆனால், என் துரதிருஷ்டமோ என்னவோ, எனக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டிய ஒரே சிற்றப்பாவுக்கு, 'ஜெயிலுக்குப் போனவர்' என்ற கெட்ட பெயரும் கூடவே இருந்தது.

எங்கள் ஜாதி, ஒரு விசித்திரமான ஜாதி. வசதி இல்லாதவர்கள் ஜெயிலுக்குப் போய் வந்தால், அதை யாரும் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள். வசதியுள்ளவர்கள் போய் வந்தாலோ, அடேயப்பா! ஜாடை பேசித் தீர்த்து விடுவார்கள்.

லால்குடியில் ஒரு மாப்பிள்ளையாம். எங்கள் சொந்தக்காரர் ஒருவர் கடிதம் எழுதி அந்த வீட்டுக்குப் போனார் என் சிற்றப்பா.



பையன் இத்தனைக்கும் சட்டப் படிப்பை எட்டு வருஷம் படித்தவன். அப்படியும் பாஸ் பண்ணவில்லை!

அவனுக்கு என்னைக் கட்டிக் கொள்ள அறுபது பவுன் நகையாம்! வைர நெக்லஸாம்! ஒரு மோட்டார் காராம்! பங்களாவாம்! மாப்பிள்ளைக்குத் தங்கத்தினால் கடிகாரச் சங்கிலியாம்!

"நீங்கள் கேட்பது அதிகம்!" என்று என் சிற்றப்பா சொன்னதற்கு, "உங்கள் குடும்பத்திற்கு என்னென்னவோ கெட்ட பெயர் இருக்கிறது. துணிந்து நாங்கள் வருகிறோம். இதற்கு இது கூட இல்லையென்றால் எப்படி?" என்றார்களாம்.

என் சிற்றப்பாவும் விடாமல் கோபமாக, "உளுந்து வடை என்றால் ஓட்டை இருக்கத்தான் செய்யும்! எந்த வீட்டில் என்ன இல்லை? எங்கள் பெயர் எங்களுடனேயே இருக்கட்டும்!" என்று சொல்லி விட்டு வந்து விட்டார்.

எனக்கே ஆத்திரமாகத்தான் இருந்தது.

"ஜாதி என்ன சிற்றப்பா, ஜாதி! ஜாதியைப் பார்க்கப் போய்த்தானே இவ்வளவு பேசுகிறார்கள்? எந்த ஜாதியாக இருந்தால் என்ன? நல்ல மாப்பிள்ளையாகப் பாருங்கள்," என்றேன்.

அதற்கு என் சிற்றப்பா சொன்ன பதில் புதுமையாக இருந்தது.

"பைத்தியக்காரப் பெண்ணம்மா நீ. ஏதோ நாகரிகத்தில் சீர்திருத்தம் பெருகி ஜாதி விட்டு, ஜாதி பண்ணுகிறார்கள். நம்முடைய பெரியோர்கள் எல்லாம் ஒரு ஜாதி கல்யாணம் என்று வைத்ததிலே அர்த்தம் இருக்கிறது. பெண் போகிற இடத்தில் பழக்க வழக்கம் ஒரே மாதிரி இருக்கும். அதனால் குடும்பம் நடத்துவது சுலபமாக இருக்கும். சமையலில் இருந்து சகலமும் ஒத்து வரும். என்னதான் சண்டை சச்சரவு வந்தாலும் கோர்ட்டுக்குப் போகாது. இனத்தார்கள் பங்காளிகள் வந்து சமரசம் பண்ணி வைப்பார்கள். பல வசதிகளை முன்னிட்டுத்தான் ஜாதிக் கல்யாணம் வைத்தார்களே தவிர, அது ஒன்றும் ஜாதி வெறியல்ல!" என்றார் அவர்.

"படித்த பெண் எந்த ஜாதியிலும் ஒத்திருக்க முடியும். பெண்கள் படிக்காத காலத்தில்தான் அது நியாயம். என்னை எங்கே கொடுத்தாலும் நிம்மதியாக இருப்பேன். பெண்ணுக்கு விலை பேசுகிற கூட்டத்தையே நாம் ஏன் சுற்றிச் சுற்றி வர வேண்டும்?" என்றேன் நான்.

"என்ன செய்வதம்மா! நாலும் இருக்கத்தான் செய்யும். என்றாலும், ஜாதி விட்டு ஜாதி போக எனக்குத் திராணி இல்லை. நானும் படித்தவன்தான். என் பெண்டாட்டியே கூட வேறு ஜாதிக்காரனோடு தொடர்பு வைத்திருந்தால், இந்நேரம் வெட்டிப் போட்டிருப்பேன்," என்றார் சித்தப்பா.

இந்துக்களிலே பழமையாளர்களுக்கு அப்படி ஒரு பிடிவாதம் உண்டு. அவர்கள் மீதும் தவறில்லை; அவர்கள் சொல்வதிலும் நியாயம் உண்டு.

இனம் பாராமல் குலம் பாராமல் பெண்ணெடுத்து, பின்னால் புதிய புதிய திடுக்கிடும் செய்திகளைக் கேள்விப் பட்டால், உயிரே போய்விடும். வாழ்வதா விலக்கிவைப்பதா என்பதே பிரச்சனையாகி விடும். ஜாதிக்குள் திருமணம் என்றால், கூடுமானவரை ரகசிய மாகவே இருக்கும். 'ஏன், வேறு ஜாதியிலும் நன்றாக விசாரித்துச் செய்யலாமே!' என்பீர்கள். பழமையாளர்கள் அதை ஒப்புக் கொள்வதில்லை.

ஜாதிகள் கலந்து போய் விட்டால், பாரம்பரியமான வரைமுறைகளும் அறுந்து போய்விடுகின்றன. வரைமுறைகளோடு பண்பாடும் போய்விடுகின்றது என்பது அவர்களது சித்தாந்தம்.

எனக்கு அலுத்துப்போய் விட்டது.

"எனக்குக் கல்யாணமே வேண்டாம்!" என்று நான் சித்தப்பாவிடம் சொல்லி விட்டேன்.

"சரியம்மா! அப்படித்தான் இருக்கும். பத்துப் புடவை பார்த்து ஒரு புடவை தேர்ந்தெடுக்கிறதில்லையா? ஒரு புடவையும் பிடிக்கலேன்னா, அடுத்த கடை பார்க்கறதில்லையா? அதற்காகப் புடவையே வேண்டாம் என்றா இருந்து விடுகிறோம்! இன்னும் பார்ப்போம்," என்றார்.



எவனாவது தப்பித்தவறி நல்ல மாப்பிள்ளை வந்தால், கிராமத்தில் சில பேர் கெடுத்து விடுவார்கள். அப்படிக் கெடுக்கக் கூடிய ஒருவரை ஒரு நாள் சித்தி எனக்கு மார்க்கெட்டிலே காட்டினாள்.

எனக்குத்தான் களைப்பு வந்ததே தவிர, சித்தப்பா களைக்கவில்லை.

அப்படியும் கூட ஒரு மாப்பிள்ளையோடு மஞ்சத்தில் படுக்க வேண்டும் என்று நான் ஒன்றும் துடிக்கவில்லை.

'செக்ஸ் என்பது குழந்தை பெறுவதற்காகத்தான்' என்று அந்தக் காலத்தில் கருதினேனே தவிர, அதற்குப் பிரமாத முக்கியத்துவம் ஒன்றும் அளிக்கவில்லை. அந்த வயதில் அந்த வைராக்கியம் எனக்கிருந்தது. நாளாக ஆக அந்த வைராக்கியம் மாறும் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

எங்கள் வில் வண்டியில் சக்கரங்கள் தேய்ந்தன. மாடுகள் இளைத்தன. வண்டிக்கார வீராசாமியே பாதி ஆள் ஆகிவிட்டான்.

அலுத்தாரா சித்தப்பா? கடைசியில் தன் படையெடுப்பில் வெற்றி கண்டு விட்டார்.

அரியலூரில் ஒரு மாப்பிள்ளை. அழகான ஆண்பிள்ளை. பி.ஏ. படிப்பிலேயே ரொம்ப முயற்சி செய்து தோற்றவராம். வசதியான குடும்பமாம். ஏராளமான புஞ்செய்க் காடாம். எங்கோ காவிரிப் பாசனத்தில் முப்பது ஏக்கர் நிலம் இருக்கிறதாம், சீர்வரிசை நகையெல்லாம் சேர்த்து ஒன்றரை லட்சம் ரூபாய் ஆகிற மாதிரி திருமணத்தைப் பேசி முடித்து விட்டார் சித்தப்பா.

ஊரில் சிலர் வண்டி கட்டிக் கொண்டு அரியலூர் போனார்கள், கல்யாணத்தைக் கெடுக்க.

"பேசியது பேசியதுதான். நாங்கள் மாறமாட்டோம்!" என்று சொல்லி விட்டார்களாம் மாப்பிள்ளை வீட்டார்.

அந்தக் கிராமத்தில் முதல் நாளே ஆயிரம் பேருக்குச் சாப்பாடு நடந்தது.

அன்று மாப்பிள்ளை அழைப்பு. வாண வேடிக்கை எல்லாம் பிரமாதம்.

அங்கேயும் சிலர் என் சித்தியைப் பார்த்து ஜாடை பேசுவதை விடவில்லை.

என் சித்தி இப்போது ரொம்பத் துணிச்சல்காரி ஆகி விட்டாள்.

## 5. பெண்களே இப்படித்தானோ?

மறுநாள் காலையில் முகூர்த்தம்.

என்னைக் கொண்டு போய் மணவறையில் உட்கார வைத்தார்கள். ஐயர் ஓமம் வளர்த்துக் கொண்டிருந்தார்.

காலை மணி ஒன்பது முதல் பத்து வரை திருமணம்.

"மணி ஒன்பதாகி விட்டது. மாப்பிள்ளை எங்கே? மாப்பிள்ளை எங்கே?" என்று குரல் கேட்டது.

மாப்பிள்ளை வரவில்லை.

முகூர்த்த நேரம் நெருங்கியும் மாப்பிள்ளையைக் காண வில்லையே? எங்களூர் வழக்கப்படி யாராவது கெடுத்து விட்டிருப்பார்களா?'

நான் அப்படித்தான் நினைத்தேன்.

மாப்பிள்ளையும், மாப்பிள்ளை வீட்டாரும் முதல் நாளே வந்து வேறொரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கி இருந்தார்கள். அங்கிருந்து குறிப்பிட்ட நேரத்தில் தாலி கட்டுவதுதான் எங்கள் ஜாதியில் வழக்கம்.



பங்காளிகள் விருந்தாளிகளுக்குள் ஒரே பரபரப்பு. எல்லோரும் ஏதோ கசமுசவென்று பேசிக்கொண்டார்கள்.

நான் மணவறையிலேயே உட்கார்ந்தேன்.

'சரி, கெடுத்துத்தான் விட்டிருக்கிறார்கள்!' என்று எனக்குத் தோன்றிற்று.

சுமார் ஒன்பதரை மணிக்கு மாப்பிள்ளையின் தாய் மாமனும் வேறு சிலரும் வந்து, என் சிற்றப்பாவிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

மணவறையில் உட்கார்ந்திருக்கும் மணமகள் அதை என்னவென்று விசாரிக்க முடியுமா?

என் சித்தி என் காதருகே வந்து அந்த ரகசியத்தைச் சொன்னாள்.

'இன்னும் ஒரு ஐம்பதினாயிரம் ரூபாய் கையிலே கொடுத்தால்தான் தாலி கட்டுவார்கள்!' என்கிறார்களாம்.

'நீங்கள் தாலியைக் கட்டுங்கள் ; எங்கேயாவது சரி பண்ணிக் கொடுத்துவிடுகிறேன்,' என்கிறாராம் சிற்றப்பா.

அப்போதே எல்லாம் சேர்த்து ஒன்றரை லட்சம் ஆகி விட்டது. சிற்றப்பாவின் கையிலும் அதற்கு மேல் ரொக்கம் இல்லை. எதையாவது விற்றால்தான் ஐம்பதினாயிரம் கிடைக்கும். உடனடியாக விற்கப் போனாலோ கால் விலைக்குக் கேட்பார்கள்.

நான் மணமகள் என்பதையும் மறந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கூர்ந்து கேட்டேன்.

குடியிருக்கும் பெரிய வீட்டையே எழுதிக் கொடுத்து விடுவதாக என் சிற்றப்பா சொன்னார்.

"இந்தக் கிராமத்தில் வீட்டை வாங்கி நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்றார் மாப்பிள்ளையின் தாய் மாமன்.

"வேறு என் கையில் ரொக்கம் இல்லையே, என்ன செய்வேன்? என் மனைவியின் நகைகள் எல்லாம் ஒரு முப்பதாயிரம் பெறும். அத்தனையும் வேண்டுமானாலும் கழற்றிக் கொடுக்கச்

சொல்லுகிறேன். பிறகு பணம் கொடுத்து விட்டு வாங்கிக் கொள்கிறேன்," என்றார் என் சிற்றப்பா.

"இதெல்லாம் நடக்கிற காரியமா? நீங்கள் நெனச்சா ரொக்கமாகவே கொடுக்க முடியும்!" என்றார், மப்பிள்ளையின் தாய்மாமன்.

மேளதாளங்கள் நின்று விட்டன. வந்திருந்தவர்களெல்லாம் இந்தப் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

கழுத்தில் கிடந்த மாலையைக் கழற்றிப் போட்டு விட்டு எழுந்தேன். நேரே அவர்கள் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கே போனேன்.

மாப்பிள்ளையினி தாய்மாமனைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது அறிவு இருக்கிறதா? இப்பொழுதே பணம் பணம் என்று பிடுங்குகிறீர்களே? பின்னால் என்னை எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்? மரியாதையாக உங்கள் மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேருங்கள். உங்கள் பையனைக் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை!" என்றேன்.

"அம்மா ! அம்மா !" என்று பதறினார் சிற்றப்பா.

"நீங்கள் சும்மா இருங்கள் சிற்றப்பா. இந்த நாய் இல்லையென்றால் ஊரிலே ஆயிரம் நாய் இருக்கிறது. பணிந்து பணிந்து போனால், பந்தாடி விடுவார்கள்," என்றேன்.

எனக்கு மேல் மூச்சு வாங்கிற்று.

உடனே மாப்பிள்ளையின் மாமா இறங்கி வந்தார்.

"அம்மா, இந்த மாதிரியெல்லாம் பேசலாமா? கல்யாணம்னா நாலும் பேசத்தான் செய்வாங்க. அதுக்காக அறுத்து எறியலாமா? பொண்ணு பொண்ணா இருக்கணும்மா," என்றார்.

"பொண்ணு பொண்ணா இருந்தா நீங்க கொன்று தின்றிடுவீங்க. பணமாம் பணம்?" என்றேன். எனக்கு அழுகை வந்து விட்டது. பேச முடியவில்லை.



என் சித்திக்கும் கோபம் வந்து விட்டது. என் சொந்தக்காரர்களுக்கும் கோபம் வந்து விட்டது.

எல்லோரும் பேசியவுடனே, "நான் போய்ப் பையனோட அப்பா கிட்டே சொல்றேன். அவுங்களாச்சு, நீங்களாச்சு, எனக்கு என்ன வந்தது?" என்று சொல்லிக் கொண்டே தாய் மாமன் எழுந்து போய் விட்டார்.

போனவர் போனவர்தான் ; வரவில்லை. முகூர்த்த நேரம் போய் வெகு நேரமாகிவிட்டது.

மாப்பிள்ளை வீட்டார் புறப்பட்டு அரியலூருக்கே போய் விட்டார்களாம்.

வந்திருந்த விருந்தாளிகள் எல்லாம் விடை பெற்றுக் கொண்டார்களாம்.

"மணவறையில் உட்கார்ந்து எழுந்திரிச்ச பெண்ணை யாரும் கட்டிக்க மாட்டார்களே, அம்மா!" என்று அழுதார் சிற்றப்பா.

"கல்யாணமாகிக் கணவனோடு வாழ்ந்து, கணவனை இழந்த விதவைகளுக்கெல்லாம் திருமணம் நடைபெற வில்லையா? ஓடிப்போனவளுக்கெல்லாம் உயர்ந்த இடம் கிடைக்கவில்லையா? -ஏன் சிற்றப்பா கவலைப்படுகிறீர்கள்? எவளுக்கோ எவனோ எங்கேயோ பிறந்திருப்பான் !" என்றேன் நான் அலட்சியமாக.

அப்படி யெல்லாம் எனக்குப் பேசத் தெரியாது. வந்த ஆத்திரத்தில் அறிவு கூடக் கூர்மையாகி விட்டது.

பிள்ளையைப் பெற்று வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு பட்டத்தையும் வாங்கிக் கொடுத்துவிட்டு, பெரும் பணத்தோடு பெண்ணைத் தேடுகிறார்கள். இவர்கள் சமூகத்தின் நச்சு மரங்கள்.

கல்யாணம் கட்டிக் கொண்டு விட்டால், அதன் பிறகு கூடப் பெண் வீட்டில் வந்து கறக்கிறார்கள்.

இந்து சமூகத்தில் ஒரு பெண்ணைப் பெறுவதைவிட, ஒரு கொடிய குற்றம் வேறு என்ன இருக்கிறது?

நான் நடந்துகொண்ட முறை சரியானது என்று அப்போதும் நினைத்தேன் ; இப்பொழுதும் நினைக்கிறேன்.

திருமண வீடு அலங்கோலமாகக் காட்சியளித்தது.

வேலைக்காரர்கள் பாத்திரம் பண்டங்களைக் கழுவி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள்கூட ஆத்திரமாகத்தான் பேசிக் கொண்டிருந் தார்கள். அதிலிருந்தே என் செய்கைகளுக்கு ஒரு நியாயத்தை நான் தேடிக் கொண்டேன்.

ஊர்க்காரர்களுக்குப் பேசுவதற்கு நல்ல விஷயம் கிடைத்து விட்டது.

'ஊரெங்கும் ஒரே பேச்சு' என்று நோட்டீஸ் அடிக்கிறார்களே, அதேதான் பேச்சு.

இப்போது இதெல்லாம் எங்களுக்கு அலுத்துப்போய் விட்டது.

அதிசயமாக எப்போதாவது யாராவது பேசினால் சங்கடமாக இருக்கும்.

தினசரி ஊர்க்காரர்கள் பிழைப்பே அதுதானே ; கவலைப்பட என்ன இருக்கிறது?

"இனி எங்கே போய் மாப்பிள்ளை பார்ப்பது ?" என்பது சிற்றப்பாவின் கவலை.

"எதற்காக மாப்பிள்ளை பார்க்கவேண்டும் ?" என்பது என் கேள்வி.

"எல்லாக் கழுதையும் ஒரே கழுதையாகத்தான் இருக்கப் போகிறது. என்னை விரும்பி நேசித்து எவனாவது வரட்டும், பார்த்துக் கொள்ளலாம் !" என்று கூறி விட்டேன்.

"சரி, ஆன வழி ஆகட்டும்," என்று சிற்றப்பா கூறி விட்டார்.

அன்று இரவு எங்கள் வீட்டில் சிவன் ராத்திரி.



"மாப்பிள்ளைக்கு என்ன, ஆண் பிள்ளை, எதையும் செய்து விட்டு எப்படியும் வாழலாம். நீ பெண்ணாச்சேம்மா!" என்றார்கள் சித்தி.

"சித்தி, என்னை எங்கேயாவது நாட்டியம் கற்றுக் கொடுக்கிற இடத்திலே ஹாஸ்டல் இருந்தால் சேர்த்து விடுங்கள். அந்தத் துறையிலேயே என் வாழ்க்கையைக் கழித்து விடுகிறேன்," என்றேன் நான்.

"நானும் வரேனக்கா," என்றாள் தங்கை.

"நீ நல்லாப் படிச்சு டாக்டராகணும்மா," என்றேன் நான்.

"ஹாஸ்டல் எதிலேயாவது சேருறதுன்னா பட்டிணத்துக்குத் தான் போகணும்," என்றார்கள் சித்தி.

"பட்டிணமோ, டில்லியோ! எங்கேயாவது என்னைக் கொண்டு போய் விட்டு விடுங்கள். என்னைப்பற்றிக் கவலையே படாதீர்கள். நீங்களும் சிற்றப்பாவும் தங்கையும் காசி ராமேஸ்வர மெல்லாம் போய் வாருங்கள். எவனோ ஒரு பணத்தாசைக்காரனைக் கட்டிக் கொண்டு அடியும் இடியும் படுவதை விட ஆடிப் பிழைப்பதொன்றும் கேவலமானதல்ல!" என்றேன் நான்.

மறுநாள் என் யோசனையைச் சிற்றப்பாவும்கூட ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

"முதலில் நான் பட்டிணத்துக்குப்போய் எங்கே சேர்க்கலாம் என்று பார்த்து வருகிறேன்," என்று புறப்பட்டார்.

ஏழாவது நாள் திரும்பி வந்த சிற்றப்பா, அடையாறிலே ஒரு கலாசாரக் கழகம் இருப்பதாகவும் அங்கே பணம் கட்டி என்னைச் சேர்க்கப் போவதாகவும் கூறினார்.

என்னைக் கொண்டு போய் அங்கே விட்டு விட்டு, அப்படியே காசிக்கு ரயில் ஏறுவதாகத் திட்டம்.

எனக்குத் திருமணத்தைவிட அதிக மகிழ்ச்சி இதில்தான்.

கணவன் என்பவன், தன்னை ஓர் எஜமான் என்று கருதுகிறவரையில், ஒரு பெண் ஏன் திருமணம் செய்து கொள்ள

வேண்டும் ? அவன் வாழ்க்கைக்கு வேறு வழிகளா இல்லை ? 'உடலுறவு ஆசை எழுந்தால்...?' என்று கேட்பார்கள். அதைத் தடுக்க மாத்திரைகளா இல்லை ? இரவிலே அந்தச் சிந்தனை வரும்போது தூக்க மாத்திரையைப் போட்டுக் கொண்டால் போகிறது ! கண நேர இன்பத்துக்காகக் கால காலத்துக்கும் அடிமைச் சேவகம் புரிவதா ? மனைவியையும் தன்னைப் போன்ற ஒரு பிறவிதான் என்று கருதாத கணவனைக் கட்டிக் கொண்டு என்ன சுகம் காணப் போகிறோம் ? இரவிலே ஆடு மாடுகள் மாதிரி அவசரத்தில் அனுபவிப்பதற்குப் பெயரா வாழ்க்கை ? வெறும் பிரமை ! மயக்கம்!

சீதைக்கு ராமன் கிடைத்தது போல், எனக்கு ஒரு மாப்பிள்ளை கிடைத்தால், திருமணம் ; இல்லையேல், நாமே ஒரு கன்னியர் குருகுலம் நடத்துவது என்று முடிவு கட்டி விட்டேன்.

ஆறு கிழக்கு நோக்கித்தான் போகும் என்றால், மேற்கே நோக்கிப் போகிறவள் எதிர் நீச்சல் போட்டுத் தான் ஆக வேண்டும்.

நொண்டி, கூன், குருடாக இருந்தால் யாராவது அடைக்கலம் கொடுத்து அரை வயிறு சோறு போட்டால் போதும் என்று கருதலாம் ! நான் ஒன்றும் அங்கஹீனமானவள் இல்லையே?

ஒன்றும் முடியாவிட்டால் நாலு வீட்டில் பாத்திரம் தேய்த்தாவது வயிற்றைக் கழுவுவேன்!

சுற்றுச் சூழ்நிலைகளைப் பார்த்துப் பார்த்து எரிச்சலடைந்து விட்ட நான், இந்த முடிவுக்குத்தான் வர வேண்டியிருந்தது.

கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு, வீடுவாசல்களை ஒப்படைத்தோம். வண்டிக்காரர்கள், சமையல்காரர்களுக்கெல்லாம் கொஞ்சம் பணம் கொடுத்து எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளச் சொன்னோம்.

சென்னைக்குச் சென்று என் விலாசத்தை எழுதுவதாகவும், நிலத்தில் அறுவடை வரும்போது தனக்குத் தெரிவிக்கும் படியும் கணக்குப் பிள்ளையிடம் சிற்றப்பா சொன்னார்.



ஊரிலே வேறு யாரிடம் நாங்கள் சொல்லிக் கொள்ள வேண்டும்?

வழியில் உள்ள அம்மன் கோவிலில் இரண்டு தேங்காய் உடைத்து, அந்தப் பராசக்தியிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

**செ**ன்னை நகரம். முதன் முதலாக அதை நான் பார்க்கிறேன். பள்ளிக்கூடத்தில் எனக்கு வாத்தியார் சொன்னதாக ஞாபகம். இதற்குச் 'சென்னை' என்ற பெயர் பின்னால் வந்ததாம். 'மயிலை' என்பதுதான் பூர்வீகப் பெயராம்.

திருவல்லிக்கேணியைக் குறிப்பிடும்போது கூட ஆழ்வார்கள், 'மயிலை திருவல்லிக்கேணி' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்களாம்.

அதென்னவோ அந்த ஆராய்ச்சி இப்போது எதற்கு?

அடையாறு தென்னிந்திய கலாசாரக் கழகத்தில் என்னைச் சேர்த்து விட்டார் சிற்றப்பா.

ஹாஸ்டலுக்கு எனக்காக இருபத்து ஐயாயிரம் ரூபாய் கட்டினார். கழக நிர்வாகிகளே திகைத்துப் போனார்கள்.

போகட்டுமே! எவனோ ஒரு கழுதைக்கு ஐம்பதினாயிரம் அறுபதினாயிரம் என்று கொடுத்து, மாலையிட்டு, சமைத்துப் போட்டும், படுக்கையில் விழுந்தும் உதை வாங்குவதைவிட, கலையைக் கற்றுக் கொள்ளத் தொகையைச் செலவழிப்பதில் தவறில்லையே!

சிற்றப்பாவும், சித்தியும், தங்கையும் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு காசிக்கு ரயிலேறி விட்டார்கள்.

**போ**வதற்கு முன்னால் என்னை ஒரு 'பாங்க்'கிற்குக் கூட்டிக் கொண்டுபோய், என்னுடைய நகைகளை எல்லாம் டெபாசிட் செய்து, கல்யாணத்துக்காக வைத்திருந்த பாக்கிப் பணம் முழுவதையும் என் பெயரிலேயே போட்டு விட்டார்கள்.

அவர்களைப் பிரிவது எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் எல்லோருமே வசதியாக இருந்ததால் ஒரு ஆறுதல் இருந்தது.

## 6. வாழ நினைத்தேன், வாழுவேன் !

கலாசாரக் கழகத்தில் எனக்கு ஒரு தனி அறை கொடுத்தார்கள்.

அங்கே ஆண்கள் கிடையாது ; பெண்கள் மட்டுமே.

பெண்களில் பெரும்பாலும் சேலைதான் கட்டியிருந் தார்கள். ஆனால், சிலர் அணிந்திருந்த மேல்நாட்டுப் பாணி ஆடைகளைப் பார்த்தபோது, 'எதிர் காலத்தில் நாமும் இப்படி அணிய வேண்டியிருக்கும்,' என்று எண்ணியதில்லை.

புவனேஸ்வரி, ராணி, கார்த்திகாயினி என்று மூன்று பெண்கள் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அன்று இரவெல்லாம் தூங்கவிடாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'அடேயப்பா ! சென்னை நகரில் ஒவ்வொரு பெண்ணுக்கும் தான் எவ்வளவு வரலாறு இருக்கிறது? உலகமே இப்படித்தான் போலிருக்கிறது !'

பருவம் வந்ததும், பெற்ற தாயின் முதுகைத் தொட்டுக் கொண்டு, தலை குனிந்து நடக்கும் அந்தப் பழைய பாரம்பரியம் குறைந்து கொண்டு வருகிறது.

'நான் எப்படி வாழப் போகிறேனோ, என் தலை எழுத்து என்னவோ?' என்று எண்ணமிட்டேன்.

ஒவ்வொரு பெண்ணும் தங்கள் அறையில் வைத்திருந்த பொருள்களைப் பார்த்தால், 'அப்பப்பா! இந்தக் காம உணர்ச்சி தான் பெண்களை எப்படி ஆட்டிப் படைக்கிறது?' என்று தோன்றிற்று



'காமமும் பசியும் இல்லையென்றால் உலகத்தில் என்ன இருக்கிறது?' என்று யாரோ சொன்னதாக நான் படித்திருக்கிறேன். அதற்காக இப்படிச் செயற்கைச் சாதனங்களிலா திருப்தியடைவது?

நாகரிகத்துக்கு உச்ச வரம்பு இல்லாமற் போனதால் உலகம் எப்படியோ ஆகிவிட்டது.

கோபுரத்துச் சிற்பங்களில் ஆபாசத்தைக் காணும் எழுத்தாளர்கள், 'கோபன்ஹேகன் லீலை'களைப் பற்றிக் கதை எழுதுகிறார்கள்.

உடம்பின் அரிப்பு இப்போது மேலோங்கி நிற்கிறது. 'தான் ஒழுங்காக இருந்தால், தாசி தெருவிலும் குடியிருக்கலாம்!' என்பார்கள். 'நம்மை யார் கெடுத்துவிட முடியும்?' என்றுதான் நானும் எண்ணி இருந்தேன்.

'ஒரு பெண் கெட்டுப் போவதற்குச் சூழ்நிலைதான் காரணம்' என்பது எவ்வளவு பெரிய உண்மை.

சீதையின் தோழியாக என்னைக் கொண்டு போய்ச் சேர்த்திருந்தால், நான் மற்றுமொரு சீதையாகி இருப்பேன்.

கண்ணகியின் வீட்டில் வேலைக்காரியாக இருந்திருந்தால், மற்றுமொரு கண்ணகியாக இருப்பேன்.

ரோஜா ரோஜாதான். ஆனால் அது சாக்கடையில் விழுந் தால், அதற்கொரு வாசம் ; பன்னீரில் விழுந்தால், வேறொரு வாசம்.

இடத்திலும், சூழ்நிலையிலும் குலமும், குணமுமே கெட்டுப் போகின்றன.

அன்று இரவு எனக்கு மோசமான நினைவுகள் எல்லாம் வரத் தொடங்கின.

சாதாரண நேரத்தில் ஒரு ஆடவனைத் திரும்பிக் கூடப் பார்க்காத எனக்கு உடம்பில் ஏதோ புல்லரிப்பு ஏற்பட்டது.

தலையணையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்க வேண்டும் போல் தோன்றிற்று.

உடம்பின் ரத்த அணுக்கள் துரிதமாக இயங்கின.

நான் பார்த்திருந்த பழைய படங்களில் இருந்து சில காட்சிகள் நினைவுக்கு வந்தன.

உதட்டில் ஏதோ ஒரு விறுவிறுப்பு ஏற்பட்டது. நெற்றி வியர்த்தது.

இவையெல்லாம் என்ன மாற்றங்கள்?

ஒரு பெண் பருவம் அடைந்ததாலேயே பக்குவம் அடைவதில்லை. உணர்வுகள் பூரித்து எழும்போதே அவள் பக்குவம் அடைகிறாள்.

கிராமத்திலேயே நான் இருந்திருந்தால், நான் பக்குவமடைய இன்னும் சிறிது காலம் பிடித்திருக்கலாம்.

ஆனால், நான் புகுந்த விடுதியோ, என்னைப் பக்குவப் படுத்திய பின்பே, அறைக்குள் அனுப்பியது.

என் சித்தியின் கதை என் நினைவுக்கு வந்தது.

எங்கள் ஊரில் நடைபெற்ற பல சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

'ஈசுவரா! மோக வயப்பட்டு நான் தவறு செய்யாமல் இருக்க வேண்டுமே!' என்று கூடப் பயந்தேன்.

மறுநாள் காலையில் நாட்டிய வகுப்பிற்கு நான் சென்றேன்.

அன்று பரத நாட்டியம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

அது என்ன பரத நாட்டியமோ?

அதை ஏன் ஒருவரிடம் போய்க் கற்றுக் கொள்ள வேண்டுமோ?

எல்லாரும் ஒரே மாதிரித்தானே ஆடுகிறார்கள்?

நான் வழக்கமான துடுக்கோடு, கலாசாரக் கழக நிர்வாகியிடம் சென்றேன்.



"மேடம், எனக்குப் பரத நாட்டியமெல்லாம் வேண்டாம். ஓரியண்டல் நடனத்திலும் நவீன நடனம் கற்றுக் கொள்ள வேண்டும்!" என்றேன்.

"உன் இஷ்டம்மா. அப்படியே செய்கிறேன்!" என்றார் அவர்கள்.

யாருக்கு எதில் விருப்பமோ, அதில் விட்டுவிட வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

பத்து வயதுப் பையன் ரேடியோவைத்திறந்து ரிப்பேர் பார்க்க ஆரம்பித்தால், அவனை அதே துறையில் பயிற்சி பெற வைக்க வேண்டும்.

கார் ஓட்ட ஆசைப்பட்டால், அதிலேயே விட்டுவிட வேண்டும்.

'இல்லை, என் பிள்ளை டாக்டராகத்தான் வேண்டும்!' என்று பிடிவாதம் பண்ணக் கூடாது.

நாம் டாக்டராக ஆக்க விரும்பும் பிள்ளை நோயாளியாகவும் ஆகலாம்; வக்கீலாக ஆக்க விரும்பும் பிள்ளை குற்றவாளியாகவும் ஆகலாம்.

கிராமத்தில் பரத நாட்டியம் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன எனக்கு, நகரத்து நாட்டியங்களில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

இத்தனைக்கும் நவீன நாட்டியத்தை ஒரு நாட்டியம் என்று சொல்ல முடியாது. அது வெறும் குலுக்கல் சர்க்கஸ். ஆனால், உடம்புக்கு நல்ல தேகாப்பியாசம்.

குனிவது, வளைவது, குலுக்குவது, நெளிப்பது - தாளம் மட்டும் தப்பக்கூடாது! அவ்வளவுதான்!

ஹாங்காங்கிற்குச் சென்றிருந்தாராம் பேராசிரியர் ஒருவர். அவருக்கு நாட்டியம் ஆடவே தெரியாதாம். ஆனால், தாளம் தெரியுமாம். அங்கே ஒரு இரவு விடுதியில் சீனத்துப் பெண்

ணொருத்தியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அவர் ஆடினாராம், ஆடினாராம், ஆடினாராம், அப்படி ஆடினாராம்! அவர் அதைப் பற்றி ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார்.

பரத நாட்டியம் என்றால் பாவம், ராகம், ஜதி, ஸ்வரம் அவ்வளவும் தெரிய வேண்டும். நவீன நடனத்தில் அந்தத் தொல்லை இல்லை. பொய்க்கால் குதிரை மாதிரி ஆடிக் கொண்டே இருக்கலாம். மார்பை அழகாகத் தூக்கிக் காட்டிக் குலுக்கினால் பேர் வாங்கி விடலாம்.

கண் காட்டி, கை காட்டி, காட்டாதனவெல்லாம் காட்டி ஆடுவதே நவீன நடனம்.

எனக்கு அது மிகவும் பிடித்ததற்குக் காரணம், இரண்டு.

ஒன்று, அதைச் சீக்கிரம் கற்றுக் கொண்டு விடலாம். இரண்டு, எல்லாரையும் கவர்ச்சித்து விடலாம்.

அந்த நடனத்துக்குச் சில ஆடைகள் தைக்க வேண்டும் என்றார்கள்.

பாங்கில்தான் பணம் இருந்ததே! மளமளவென்று தைத்து விட்டேன்.

அடேயப்பா! சிக்கென்று உடம்போடு ஒட்டிக் கொண்ட அந்த ஆடையைப் போட்டுப் பார்த்தபோது நானே அசந்து போய்விட்டேன்.

நடனப் பயிற்சி ஆரம்பமாயிற்று. அந்தப் பயிற்சியில் 'தை, தா, தகதிமி' எல்லாம் கிடையாது.

பலவித தாள வாத்தியங்கள் ஒலித்தன. நட்டுவனார் பேய் போல் ஆடினார். நானும் குட்டிப் பிசாசுபோல் ஆடினேன்.

அப்படி ஆடுவதில் ஒரு விதமான செக்ஸ் உணர்வு கூட இருக்கிறது.

திடீரென்று ஒரு தோழி வந்து, "ஒரு மாத்திரை இருக்கிறது. அதைப் போட்டுக் கொண்டு ஆடினால் பரமசுகம்!" என்றாள்.



அதன் பெயர் என்னவோ எல்.எஸ்.டி. மாத்திரையாம். அமெரிக்காவில் இருந்து வருகிறதாம். அதைப் போட்டுக் கொண்டால் உலகமே வானவில் போல் காட்சியளிக்குமாம். உலகத்தைப் பற்றிய கவலையே இருக்காதாம்.

அவள் வருணிக்க வருணிக்க, அதைப் போட்டுக் கொள்ள வேண்டும் போல் எனக்குத் தோன்றி விட்டது.

மறுநாள் மாலையில் நான் நடனப் பயிற்சிக்குப் புறப்பட்ட போது, அவள் அந்த மாத்திரையை என்னிடம் கொண்டு வந்தாள். ஒரு சின்ன மாத்திரை ; அவ்வளவு தான்.

வெகு நேரம் அதைக் கையில் வைத்தே பார்த்துக் கொண்டிருந்தேன்.

'போடலாமா? வேண்டாமா?' என்று உள் மனது ஊசலாடியது.

"போட்டுப் பாரடி, அப்புறம் தெரியும்!" என்று ஊக்கப்படுத்தினாள், ஒருத்தி.

'கப்'பென்று வாயில் போட்டுக் கொண்டு விட்டேன். கொஞ்சம் தண்ணீரைக் குடித்தேன்.

பத்து நிமிஷம்தான் ஆகியிருக்கும். ஏதோ சொர்க்கத்தில் இருப்பது போல் தோன்றிற்று ; பறக்க வேண்டும் போல் ஆசை வந்தது. உலகமே தஞ்சம் என்பதுபோல் தோன்றிற்று. அங்கேயே ஆட ஆரம்பித்தேன்.

அழைத்துக் கொண்டு போய் நட்டுவனார் அறையில் நிறுத்தினார்கள்.

தாள வாத்தியங்களின் ஒலியைக் கேட்டதும், ஆடினேன், ஆடினேன், அப்படி ஆடினேன்.

'இதல்லவா வாழ்க்கை! இப்படியல்லவா வாழ வேண்டும்!' என்று தோன்றிற்று.

தாளம் நின்றாலும் நான் நிற்கவில்லை. தன்னை மறந்த லயத்தில் ஆடிக் கொண்டிருந்தேன்.

வாழ்க்கையில் ஒரு சந்தோஷத்தைக் கண்டால் மனிதர்கள் அதிலுள்ள நன்மை தீமைகளை மறந்து விடுகிறார்கள்.

சந்தோஷம் என்பது வந்து விட்டாலே, எந்த மேதைக்கும் தீமை என்பது புலப்படுவதே இல்லை.

நான் ஆடிக் கொண்டு இருந்தபோது ஓர் ஆடவர் உள்ளே நுழைந்தார்.

## 7. உள்ளே இருக்கிற இதயம்

வந்தவரைக் கண்டதும் நட்டுவனார் உட்பட எல்லாரும் மரியாதை செலுத்தினார்கள்.

எனக்கிருந்த போதையில் நானும் மரியாதை செலுத்தினேன்.

“யார் இது?” என்று என்னைப் பார்த்துக் கேட்டார் அவர்.

என்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னார் நட்டுவனார்.

“ஓ ! ஐ ஸீ!” என்று சொல்லிவிட்டு, அங்கேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார் அவர்.

நட்டுவனார் என்னைப் பார்த்து, “நீ ஆடம்மா,” என்றார்.

நான் துள்ளினேன் ; குதித்தேன் ; துவண்டேன் ; உருண்டேன்.

வந்த ஆடவர் கை தட்டிக்கொண்டே இருந்தார்.

ஒருவேளை அவரும் போதையில் இருந்திருப்பார் போலிருக்கிறது.

எனக்கிருந்த மதி மயக்கத்தில் அவர் அழகாகத்தான் தெரிந்தார்.

‘லைட் ஷூஃபிங்’ ஓடுகள் போல் அலையாகச் சுருண்ட கூந்தல்; சிவந்த முகம். அவ்வளவு தான் எனக்குப் புரிந்தது.



மாத்திரை போட்டு இரண்டு மணி நேரம் ஆகிவிட்டதால், போதை இறங்கத் தொடங்கிற்று. உடம்பு நன்றாக வியர்த்து விட்டது.

என்னுடனிருந்த தோழிப் பெண்களெல்லாம் அந்த ஆடவரோடு கொஞ்சிப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

அந்தப் பழக்கம் எனக்கில்லாததால், அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, என் அறைக்குச் சென்றேன்.

ஆடைகளைக் களைந்து விட்டுப் பெரிய ஷவரின் கீழ் நன்றாகக் குளித்தேன் ; என் போதை முற்றிலும் நன்றாக இறங்கி விட்டது.

கிராமத்து நினைவுகளெல்லாம் வரத் தொடங்கின.

பொட்டும், பூவும், பட்டுச்சேலையும் என்பேனே நான்; அந்த மஞ்சுளாவா நான் ?

அந்த வாழ்க்கை நல்லதா, இந்த வாழ்க்கை நல்லதா?

கிராமத்து வாழ்வில் ஒரு பண்பாடிருந்தது. ஆனால், இந்த மயக்கத்தில்தானே சந்தோஷம் இருக்கிறது.

ஒரு ஆணோ பெண்ணோ எதை அதிகமாக நேசிக்க முடியும் ?

நிம்மதி ! நிம்மதி ! நிம்மதி !

அதில் பாவ புண்ணியத்தை யார் பார்க்கிறார்கள் ?

அது சரி. பாவம் என்ன? புண்ணியம் என்ன?

ஊருக்கு நல்லதையே செய்கிறவர்களை எல்லாம் கடவுள் உயிர் வாங்கி வருகிறான். அயோக்கியர்கள் எல்லாம் ஆனந்தமாக ஊர்வலம் வருகிறார்கள்.

ஒரு லட்சம் பேர் திரண்ட கூட்டம் என்கிறார்கள் ; ஐம்பதினாயிரம் நிதி என்கிறார்கள்.

ஊரை அடித்து உலையிலே போட்டவனுக்கு, மாலை, மரியாதை.

யாரையும் கெடுக்காத நேர்மையாளனுக்கு அகால மரணம்.

கடவுளே நேர்மையை வஞ்சிக்கும்போது, நமக்கென்ன பாவ புண்ணியம் வேண்டிக் கிடக்கிறது?

எல்.எஸ்.டி. மாத்திரையைத் தினமும் போடுவது என்ற முடிவுக்கு நான் வந்து விட்டேன்.

திடீரென்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

யாராக இருக்கும் என்ற குழப்பத்தோடு கதவைத் திறந்தேன்.

அந்த ஆடவர் அங்கே நின்றார்.

அவரைக் கண்டதும் எனக்கு எப்படியோ இருந்தது. ஒரே நாள் அறிமுகம். உடனே வந்து கதவைத் தட்டுகிறார். 'சீச்சி! என்ன இந்த மனிதர்கள்?' என்று நான் எண்ணமிட்டேன்.

மரியாதைக்காக உள்ளே கூட அழைக்காமல், அவரை அங்கேயே நிறுத்தி வைத்து, "என்ன வேண்டும்?" என்று கேட்டு விட்டேன்.

"ஒரு ஐந்து நிமிடம் உன்னோடு நான் பேச வேண்டும். நீ என்னைப் பற்றிப் பயப்பட வேண்டாம். கதவு திறந்தே இருக்கட்டும்!" என்றார்.

"காலையில் பேசிக் கொள்ளலாமே." என்றேன் கனிவோடு.

"ஒரு விஷயம் சொல்லிவிட்டுப் போய் விடுகிறேன்," என்றார்.

உட்காரச் சொன்னேன்.

"இதோ பார், இந்தக் கலாசாரக் கழகத்தில் முக்கியமான நிர்வாகி நான். ஆனால் அடிக்கடி நான் இங்கே வருவதில்லை. என் பெயர் ரங்கநாதன். 'ரங்கப்பா' என்று கூப்பிடுவார்கள். இங்கே உள்ள பெண்களைப் பற்றி உனக்கு எச்சரிக்க வேண்டும். அதற்காகவே வந்தேன். நீ புதியவள். கிராமத்திலிருந்து வருகிறாய். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் உனக்குத் தெரியாது. பெண்கள் மொத்தமாக இருக்குமிடத்தில் இப்படிச் சிலர் இருக்கத்தான் செய்வார்கள் என்பதால், நாங்களும் கண்டு கொள்வதில்லை. இவர்களோடு பழகுவதில் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இங்கிருந்து சில பெண்களையாவது உருப்படியாகத் திருப்பியனுப்பினோம் என்ற மரியாதை எங்களுக்கு வேண்டும். இதைச் சொல்லத்தான் வந்தேன். இனி நீ உன் வேலையைப் பார்க்கலாம்," என்று கூறிவிட்டு என் பதிலை எதிர்பாராமலேயே போய்விட்டார்.



'அட, எப்படிப்பட்டவரைப் பற்றி, எப்படி நினைத்து விட்டோம்!' என்பதை எண்ணியபோது, எனக்கு வெட்கமாக இருந்தது.

'ஒருவனைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே அவன் உயர்ந்தவன் என்று முடிவு கட்டிவிடுவதும் தப்பு. நன்றாகத் தெரிந்து கொண்டவன் மீது சந்தேகப்படுவதும் தப்பு' என்றது திருக்குறள்.

எனக்கு அவரைப் பற்றி முழுக்கத் தெரியாது. ஆனால், அவர் மீது ஒரு நல்லெண்ணம் விழுந்துவிட்டது.

எல்.எஸ்.டி. மாத்திரை போட்டுக் கொண்டதைக் கூடத் 'தவறு' என்று கருதத் தொடங்கினேன்.

'சாப்பிடும் போது பல்லி விழுந்தது' என்பார்களே, அது மாதிரி உள்ளே ஒரு தோழி நுழைந்தாள்.

வரும்போதே அவள் சிரித்துக் கொண்டு வந்தாள். அவள் ஆடை அலங்கோலமாக இருந்தது. கண்கள் சிவந்திருந்தன. 'பெண்ணுக்குத் தாமரைக்கண் இருக்கக் கூடாது' என்பார்கள் ; அவளுக்கு இருந்தது.

"வாழ்க்கை என்னடி வாழ்க்கை? இந்த வாழ்க்கையில் என்ன இருக்கிறது ? எங்கோ பிறந்தோம் ; எங்கேயோ வாழ்கிறோம் ; எங்கேயோ போய்ச் சாகப் போகிறோம் ; இருக்கும்வரை அனுபவித்துப் பார்க்கலாமே!" என்றாள் அவள்.

அவளுக்கு நிறைய அனுபவமிருக்கும் போலிருக்கிறது ; நான் புதியவள். எனக்கொன்றும் தெரியாது. வெளியுலகத்தை நான் முதலாவதாகப் பார்க்கிறேன். ஆனால் அவள் சொன்னதிலிருந்து எனக்கும் அதுதான் தோன்றியது.

ஒருவனைக் கட்டிக்கொண்டு ஒழுங்காக இருக்க விரும்புகிற பெண், வசதியற்றவளாக இருந்து விட்டால், அவள் வாழ்க்கை எவ்வளவு சீரழிந்து விடுகிறது? அப்படியே கட்டிக்கொண்டாலும், தாலியோடல்லவா அவள் தவிக்க வேண்டியிருக்கிறது? அதைவிட நாம் பிறந்ததே இல்லை என்றோ, இறந்துவிட்டோம் என்றோ நினைத்துக் கொண்டால் என்ன?

பலத்தில் 'சனி'யன் குறுக்கிடுவதே 'சபலம்' என்பார்கள். சமபலம் இல்லாத பொருளாதாரத்தில் 'சபலம்' தவிர்க்க முடியாதது. அதிலும் என் வயதில் நெருப்பைக் காட்டினாலும் பனிச்சென்று பற்றிக்கொள்ளும். 'அவ்வளவு நெஞ்சுறுதி இல்லாமலா கிராமத்தில் வளர்ந்தாய்?' என்பீர்கள்.

சுற்றமோ, சொந்தமோ பக்கத்தில் இல்லாத சூழ்நிலையில், பத்து மோசமான பெண்களுக்கிடையில், ஒரு நல்லவள் சிக்கிக்கொண்டால், மென்மையான அவள் இதயம் பலமிழந்து போய்விடும்.

"இன்னொரு மாத்திரை போட்டுக் கொள் !" என்றாள் தோழி.

போதை மருந்தைப் பயன்படுத்தத் தொடங்கினால், அதன் அளவு வளர்ந்து கொண்டு போகுமே தவிர, குறையாதே!

எனக்கும் அந்த மயக்கத்தின் மீது பற்றுதல் வந்தது.

மளமளவென்று தண்ணீரை ஊற்றிக் கொண்டு, ஒரு மாத்திரையைப் போட்டுக் கொண்டு விட்டேன்.

"வாடி, கொஞ்சம் வெளியே போய்விட்டு வருவோம். என் அண்ணன் வந்திருக்கிறார்," என்றாள் அவள்.

"இந்த ராத்திரியிலா..?" என்று நான் கேட்கவில்லை. போதை மயக்கத்தோடு, கடற் காற்றில் வலம் வந்தால், ரொம்ப சுகமாக இருக்குமோ !

நான் புறப்பட்டு விட்டேன்.



அந்த அழகான காரில் டிரைவர் ஆசனத்தில் அவளது அண்ணன் உட்கார்ந்திருந்தார். பின் சீட்டில் மேலும் இரண்டு பெண்கள். ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருந்தது. நானும் ஏறி உட்கார்ந்து கொண்டு சிரித்தேன்.

கலாசாரக் கழகம், பெண்களுக்கு இடம் கொடுத்துச் சாப்பாடு போடும் பொறுப்பைத்தான் ஏற்றிருந்தது. அவர்களது பாதுகாப்புக்கு அது உத்தரவாதம் தரவில்லை. அதனால் எந்தப் பெண்ணும் எப்போதும் வெளியே போகலாம்.

கடற்காற்று மிகவும் இதமாக இருந்தது.

அந்தப் பெண்களின் இடுப்பிலே கைபோட்டு அந்த வாலிபர் விளையாடினார்.

அந்தப் போதையிலும் நான் ஜாக்கிரதையாக இருந்தேன்.

"அது மட்டும் என்னிடம் வேண்டாம்," என்று கூறி விட்டேன்.

"சும்மா, வெறும் விளையாட்டு!" என்றார் அவர், என்னிடம் வந்து.

"எந்த விளையாட்டானாலும் எனக்கு வேண்டாம்!" என்றேன்.

"சும்மா வாடி..." என்று கையைப் பிடித்தார் அவர்.

## 8. நல்ல இடம், நான் தேடிக் கொண்டேன் !

கடற்கரையில் என் கையைப் பிடித்த வாலிபரைத் தடுக்கக் கூடிய சக்தி எனக்கு இல்லாதது போல் தோன்றிற்று.

அந்த நேரத்தில் பின்னாலிருந்து, "ஏய். . ." என்று சத்தம் கேட்டது.

எனக்குப் புத்திமதி சொன்ன வாலிபர் - 'ரங்கநாதன் என்ற ரங்கப்பா'-அங்கே வந்தார்.

அவர் இரவிலே தனியாக அங்கு வந்து படுத்திருப்பாராம். இரவு பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குப் போவாராம். இது பின்னால் அவர் சொன்னது.

அவரைக் கண்டதும் இவர் என் கையை விட்டு விட்டார்.

"இதற்குத்தான் இவர்களோடு சேராதே என்று சொன்னேன். என்னோடு புறப்படு," என்றார் அவர்.

உடம்பில் ரத்தம் நன்றாக இருந்ததால், அந்தப் போதையிலும் எனக்கு நிதானம் இருந்தது.

அவரோடு புறப்பட்டேன்.

தோழிகள் எல்லாம் காட்டுக் கூச்சல் போட்டார்கள். ஆங்கிலத்தில் என்னென்னவோ திட்டினார்கள்.

நான் தள்ளாடியபடி அவர் காரில் ஏறிவிட்டேன்.

என் அறையில் கொண்டு வந்து என்னை இறக்கினார் அவர்.

நான் இப்போது மிகவும் மரியாதையோடு, "உள்ளே வாருங்கள்," என்று அழைத்தேன்.

உள்ளே அவர் வந்ததுதான் தாமதம், விக்கி விக்கி அழ ஆரம்பித்தார்.

"ஏன் அழுகிறீர்கள்?" என்று பரிதாபமாகக் கேட்டேன்.

"என் மனைவியை இந்தப்பாவிகள்தானம்மா கெடுத்து விட்டார்கள்," என்றார் அவர்.

"உங்களுக்கு மனைவி இருக்கிறார்களா?" என்று கேட்டேன் நான்.

"அது ஒரு பெரிய கதை அம்மா!" என்றார் அவர்.

"என்னிடம் சொல்லுங்கள்," என்றேன்.

"இங்கே வேண்டாம். அந்தச் சனியன்கள் வந்தால் உன்னையும், என்னையும் பற்றித் தப்பாக எடை போட்டு விடும். என் வீட்டுக்குப் போகலாம்," என்றார்.



எனக்கு மறுக்கத் தோன்றிற்றா? தடுக்கத் தோன்றிற்றா?

"சரி, போவோம்!" என்றேன்.

இது அவர் வீடு.

கதவைத் தட்டியபோது வேலைக்காரன் தான் திறந்தான்.

உள்ளே நான் தேடித் தேடிப் பார்த்தேன். அவரைத் தவிர அங்கே யாரும் இல்லை.

நான் பயந்து விட்டேன். யாரைத்தான் நம்புவது? "உங்கள் மனைவி மக்கள் யாரும் இங்கே இல்லையா?" என்று கேட்டு விட்டேன்.

"அவர்கள் என்னை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறார்கள்," என்றார் அவர்.

என் அறையில் அவர் சொன்னதற்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தோன்றிற்று.

"ஆயிரம்தான் இருந்தாலும், கணவனை விட்டு, ஒரு பெண் விலகி வாழலாமா? நீங்கள் என்ன செய்தீர்கள்? ஏனிந்தப் பிரிவினை?" என்றேன்.

அவர் ஒன்றும் நம்மிடம் தவறு செய்துவிடமாட்டார் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து பேசத் துவங்கினேன்.

அவர், "அவளுக்கு அது சுபாவம். மனிதன் கட்டக்கூடாத ஒன்றைக் கட்டிக் கொண்டால் படக்கூடாத அவமானங்களைப் பட்டுத்தானே தீரவேண்டும் ! என்னுடைய அந்தஸ்துக்கு நான் பெரிய இடத்திலே பெண்ணெடுத்தேன். பிறந்த இடம் பெரிய இடம் என்றாலும், சிறிய சுபாவங்களும் இருக்கத்தானே செய்கின்றன? என்ன செய்வது?" என்றார்.

"நடத்தைக் கேடா? குணக்கேடா?" என்றேன்.

"இரண்டுமே!" என்றார் அவர்.

என்னை உட்காரச் சொன்னார். எதிரிலிருந்த சோபாவில் அவர் உட்கார்ந்தார். அந்த முறையில் எனக்கு அடுத்த நம்பிக்கை வந்தது.

தெரியாமலா இந்துக்கள் பல விதப் பொருத்தம் பார்க்கிறார்கள்?

என்னென்ன பொருத்தங்கள் பொருந்தி இருந்தாலும் குணம் பொருந்தவில்லை என்றால் வாழ்க்கை நரகமாகி விடாதா?

இரண்டு கரையும் ஒரே உயரத்தில் இருந்தால்தானே நதி வெள்ளம் அதற்குள் ஓடும்?

ஏமாற்றம், தோல்வி, ஏக்கம் - ஒரு மனிதனுக்கு இயற்கை யாக மாரடைப்பு வரவும், செயற்கையான தற்கொலை நினைப்பு வரவும் இவை போதாதா?

அவர் எழுந்து போய் உள் அறையில் விளக்கைப் போட்டார்.

எனக்கு எப்படியோ இருந்தது.

"இங்கே வாம்மா!" என்று என்னையும் கூப்பிட்டார்.

எனக்குப் பகீர் என்றது.

"பயப்படாதே! இந்தப் புகைப்படங்களைப் பார்," என்றார்.

தவறு செய்வதென்றால் இந்த அறையிலேயே செய்யக் கூடாதா? அந்த அறைக்கா அழைக்க வேண்டும்?

நான் நம்பிக்கையோடு உள்ளே போனேன்.

அங்கே அவரும் அவரது மனைவியும் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன.

திருமணப் படம், இருவரும் தனியாக நிற்கும் படம், கடலில் குளிக்கும் காட்சி, கோவிலிலிருந்து வெளிவரும் காட்சி- வகை வகையான படங்கள்.

"இவையெல்லாம் ஒரு கட்டத்து வாழ்க்கை. மறு கட்டத்தில் அவள் மாறிவிட்டாள். என்னுடைய ஆண்மையில் எனக்குச் சந்தேகமில்லை. அவளுக்கும் சந்தேகமில்லை. அவளைத் தொடும்போதெல்லாம் அவளைத் திருப்தி செய்யாமல் நான் தூங்கியதில்லை. ஒரு பெண் கெட்டுப் போவதை இது மட்டுமே



நிறுத்தி விடும் என்பார்கள். ஆனால், இயற்கையிலேயே சலனமும் சபலமும் உடையவர்கள், இவற்றிலெல்லாம் திருப்தி அடைய மாட்டார்கள். அவள் தன் பெற்றோருடன் பம்பாயில் இருக்கிறாள். என் மகளும் அவளோடுதான் இருக்கிறாள். இதற்குமேல் என்னை விளக்கம் கேட்காதே," என்று சொல்லிக் கொண்டே பழைய அறையில் வந்து, தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்தார்.

நான் மீண்டும் எதிரே அமர்ந்தேன்.

"சாப்பிட்டு விட்டாயா?" என்றார்.

"ஆயிற்று," என்றேன்.

"எனக்கொரு உதவி செய்வாயா?" என்றார்.

"என்ன?" என்றேன்.

"நான் எந்தப் பெண்ணையுமே இந்தக் கேள்வி கேட்டதில்லை. அங்கிருக்கும் பெண்கள் எல்லாம் கெட்டுப் போனவர்கள். உன்னுடைய பரிசுத்தத்தை நம்பி உன்னைக் கேட்கிறேன். இந்த வீட்டில் நான் தனியாக இருப்பதனால், எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருக்கிறது. தற்கொலை நினைப்பு அடிக்கடி வருகிறது. எவளாவது இன்னொருத்தியை நான் கட்டிக் கொண்டு விடலாம். ஆனால் அதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. நீ எனக்குத் துணையாக இங்கேயே இருந்து விடு. துணையாகத்தானே தவிர, காதலியாக அல்ல. உனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள், இங்கிருந்து நாட்டியத்திற்குப் போய் வா. எப்போது திருமணம் செய்து கொண்டு போக விரும்புகிறாயோ, அப்போது போய்விடு," என்றார் அவர்.

நானும் யோசித்தேன். அது என் புத்திக்கு ஏதோ ஒரு அதிர்ஷ்டம் போல் தோன்றிற்று. உடனடியாகச் சம்மதிக்காமல், மெது மெதுவாகச் சம்மதித்தேன்.

"ரொம்ப சந்தோஷம்! நீ என்னைக் காப்பாற்றினாய். சரி, நீ போய் அந்த அறையில் தூங்கு. நான் இந்த அறையிலே படுத்துக் கொள்கிறேன்," என்றார்.

நான் அந்த அறையைப் போய்ப் பார்த்தேன். பெரிய ஹோட்டல்களில் உள்ள அறை மாதிரி இருந்தது ; கலாசாரக் கழகத்து அறையைப் போல் சிறிதாக இல்லை.

அப்பாடா, அந்தக் கட்டிலில் படுத்த போது என்ன சுகம்!

நல்ல தூக்கம், நிம்மதியாகத் தூங்கினேன்.

அதிகாலையில் நான் விழித்துப் பார்த்தபோது, அவர் நன்றாகக் குளித்து முழுகி, நடு அறையில் உட்கார்ந்து இருந்தார்.

எவ்வளவு துல்லியமான வாழ்க்கை!

நான் போய் என் பொருள்களை எடுத்து வருவதற்காக, அவர் தன் காரைக் கொடுத்தார்.

கழகத்து அறைக்கு நான் சென்றபோது நான் எதிர் பார்த்தது போலவே ஜாடைப் பேச்சுகளும், கேலிச் சிரிப்புகளும் என்னை வரவேற்றன.

அதில் கவலைப் படவோ, வெட்கப் படவோ ஏதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

நானும் பதிலுக்கு ஒரு சிரிப்புச் சிரித்து விட்டுப் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

'நிம்மதியான இடத்துக்குப் போகிறோம்,' என்ற எண்ணம் எனக்குள் மேலோங்கி நின்றது.

நான் உள்ளே நுழைந்தவுடனேயே, "நாளை முதல் நட்டுவனாரை இங்கே வரச் சொல்லி இருக்கிறேன். நீ இங்கேயே கற்றுக் கொள்ளலாம்," என்றார் அவர்.

"சரி," என்று தலையாட்டினேன்.

அவர் சொல்வதையெல்லாம் ஒப்புக் கொள்ளக் கூடிய சுபாவம் எனக்கு வந்து விட்டது.

சமையல்காரரிடமும் வேலைக்காரப் பெண்ணிடமும் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.



"இந்த மகாலட்சுமிக்குத்தான் இனி இந்த வீடு சொந்தம்," என்றார்.

அவர் என்னைப் பற்றிச் சொன்ன புகழுரைகள் எப்படியோ இருந்தன.

நான் சமையற்கட்டிற்குள் நுழைந்தபோது சமையல்காரனும் வேலைக்காரப் பெண்ணும் தங்கள் எஜமானனைப் பற்றிப் புகழ்ந்தார்கள், புகழ்ந்தார்கள், அப்படிப் புகழ்ந்தார்கள்.

அவர்கள் சுபாவத்துக்கு அம்மா ஒத்து வராமல் போனது பற்றிச் சொல்லி, "நீங்களாவது ஒற்றுமையாக இருங்கள்," என்று எனக்குப் புத்தி போதித்தார்கள்.

எனக்குத் 'திக்'கென்றது.

"நான் அவருடைய மனைவியல்ல. இங்கு வந்து தங்கி இருக்கிறேன் ; அவ்வளவுதான்!" என்றேன்.

அவர்கள், கையைக் கட்டிக் கொண்டு ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

"நீங்கள் மகாலட்சுமி மாதிரின்னு ஐயாவே சொன்னார். ஐயாவை எப்படி நடத்தணுமோ, அப்படி நீங்க நடத்துங்க," என்றார்கள் அவர்கள்.

கிராமத்தில் ஒருவர், என்னைத் திருமணம் செய்து கொள்ள என்னிடமே பணம் கேட்டார். இங்கே ஒருவர் தன் சொத்துக்களையே எனக்குத் தந்து விடுவார் போலிருக்கிறது.

'அவருக்குத்தான் அப்படி என்ன வயதாகி விட்டது? பணம் கொடுத்து ஒரு வாலிபனைக் கட்டிக் கொண்டு, அவனது சிட்டுக் குருவித் தனத்துக்கு இடம் கொடுப்பதை விட, நடுத்தர வயது மனிதர்களைக் கட்டிக் கொண்டால், அவர்கள் அளவற்ற பிரியத்தோடு இருப்பார்கள். கணவனுக்குக் கணவனாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருப்பார்கள். உண்மையில் இவருக்கு இப்படி ஒரு ஆசை இருக்குமா? அவரே சொல்லட்டும் பார்க்கலாம்,' என்று இருந்து விட்டேன்.

அவரோ, பெண்களை விட அதிகக் கூச்சப்பட்டவர் போல், நடந்து கொண்டார். நான் நினைத்ததுபோல் அவருக்குப் போதைப் பழக்கம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

'அம்மா, சாப்பிட்டாயா? அம்மா, குளித்தாயா?' என்றே வினவினார்.

இரவு நேரங்களில், வெகு நேரம் பொழுது போக்கிற்காகப் பேசிக் கொண்டிருந்தாரே தவிர, குறும்புகள் செய்யவில்லை.

அவர் வீட்டுக்கு முன்னாலே அழகான பெரிய புல்வெளி. அதிலேதான் உட்கார்ந்து இருவரும் பேசிக் கொண்டிருப்போம். சமயங்களில் உள்ளே உட்கார்ந்து இசைத் தட்டுகள் போடுவோம்.

பதினாறு மில்லி மீட்டர் புரொஜெக்டர் வைத்திருந்தார். ஒரு சிறு பையன்தான் ஆபரேட்டர். அவர் வைத்திருந்த படங்களெல்லாம் பக்திப் படங்கள் ; சில ஆங்கிலப் படங்களும் இருந்தன. சமயங்களில் அவற்றைப் போட்டுக் காட்டுவார்.

ஒரு பணப் பேயினால் ஒதுக்கப்பட்ட ஒருத்தி, இப்படி ஓர் அதிருஷ்ட தேவதையாக மாறுவாள் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அவரும் திருச்சி மாவட்டம்தானாம். அவர் பிறந்த கிராமத்தைச் சொன்னபோது, அந்தப் பெயரை எங்கேயோ கேட்டது போல் எனக்குத் தோன்றிற்று.

அவர் தன் ஜாதியைச் சொன்னபோது, 'நானும் அதே ஜாதிதான்!' என்று மகிழ்ச்சியோடு கூறினேன்.

தன் குடும்பத்தோடு அவருக்கு நீண்ட நாட்களாகத் தொடர்பில்லையாம். அவருக்குக் கல்யாணம் ஆன பிறகு, அவர் அதிகம் கிராமத்துக்குப் போவதில்லையாம். அவரது மனைவிக்கும், அவரது தம்பி தங்கைகளுக்கும் ஒத்து வருவதில்லையாம்.

"என் தம்பி ஒரு மடையன். ஏதோ ஒரு அழகான பெண்ணைக் கல்யாணம் பேசி முடித்துப் பணத் தகராறினால், கல்யாணத்தன்று கல்யாணத்தையே நிறுத்தி இருக்கிறான். அவள்



அழகானவளாம் ; நல்ல குணம் உள்ளவளாம். நானாக இருந்தால், அந்தப் பணத்தை நானே கொடுத்து, அந்தப் பெண்ணைக் கட்டிக் கொண்டிருப்பேன்!" என்றார், அவர்.

எனக்கு நெஞ்சில் யாரோ அடிப்பது போலிருந்தது.

## 9. அலையில் ஓடும் காகிதம்

**வி**பரீதமான இந்த உலகத்தில் எவ்வளவோ வேடிக்கைகள் நடைபெறுகின்றன.

நன்றாகத் தூங்கித் திடீரென்று விழித்தவனுக்குக் கிழக்கு மேற்காகத் தோன்றுகிறது ; மேற்கு வடக்காகத் தோன்றுகிறது.

நான் எதிர்பாராத ஒரு செய்தியை அவர் வாயால் கேட்டு விட்டேன்.

ஒன்றுமில்லை. மணவறையில் உட்கார்ந்து என்னைக் கண்ணீர் விட வைத்தாரே, கிராமத்து மாப்பிள்ளை, அவர்தான் அவரது உடன் பிறந்த தம்பி என்று புரிந்து கொண்டேன். ஆனாலும், அவர் நீண்ட நாட்களாக இந்த வீட்டுக்கு வருவதில்லை என்பதில் ஒரு திருப்தி.

ஒருவேளை திடீரென்று வந்து விட்டால்?

'நான்தான் அன்று ஆக்ரோஷமாகப் பேசிய மணமகள் என்பது அவருக்குத் தெரியுமா? அவர்தான் என்னைப் பார்க்கவே இல்லையே..'

அது சரி, உறவினர்கள் யாராவது என்னைச் சுட்டிக் காட்டி உண்மையைச் சொல்லி விட்டால்..?

சொன்னால் என்ன? அவரை நம்பியா நாம் இங்கே வந்திருக்கிறோம்? நம்மை அவர் என்ன செய்துவிட முடியும்? -மனப் போராட்டத்தில் இப்படி ஒரு சாந்தி.

அன்றிரவு அவரும் நானும் ஒரு படம் பார்த்தோம்.

இப்போதெல்லாம் சினிமா கதைகள்தான் எப்படி இருக்கின்றன..?

ஓடிப்போனவள் கதை. ஒன்பது பேரைக் காதலிக்கும் கதை - அப்பப்பா! நாங்கள் பார்த்த படத்திலே கணவனை ஓர் அறையில் தூங்க வைத்துவிட்டு, அடுத்த அறையில் இன்னொருவரை எழுப்புகிறாள் ஒரு பெண். என்னதான் இந்தக் கதாசிரியர்கள் ரசனையோ!

உலகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆயிரம் விஷயங்கள் நடக்கலாம். எல்லாமே காட்சிக்கு வர வேண்டியவைதானா?

'பிறந்த போது அப்படித் தானே இருந்தோம்?' என்று ஆடை இல்லாமல் திரிய முடியுமா?

பாதிப் படத்திலேயே, "போதும், நிறுத்துங்கள்!" என்றேன் நான்.

"எனக்கும் தான் பிடிக்கவில்லை!" என்றார் அவர்.

இருவரும் சாப்பாட்டு மேஜையில் வந்து அமர்ந்தோம்.

உள்ளத்தில் உள்ளதை எல்லாம் கொட்டித் தீர்த்து விட வேண்டும் போல் எனக்குத் தோன்றிற்று.

நாளைக்கு அவராகக் கேட்பதற்கு நாம் இடம் வைப்பானேன்?

கிராமத்தில் நடந்த கல்யாண ஏற்பாடு, அதில் ஏற்பட்ட தகராறு ஆகியவற்றைக் கூறி, 'உங்கள் தம்பி பணத்துக்காகத் தூக்கி எறிந்த பெண் நான்தான்!' என்று சொல்ல நினைத்தேன். ஆனால் வார்த்தை வரவில்லை.

அந்த விஷயத்தை இப்போது சொல்லி விடுவதில் என்ன லாபம்?



அவருக்கும், அது தன் தம்பியாகத்தான் இருக்கும் என்பது, அப்போது புரியவில்லை.

"உன்னை ஒருவன் பணத்துக்காக வெறுத்தால் அவனை விட அடிமடையன் உலகத்திலே இருக்க முடியாது!" என்றார்.

"காண முடியாதவர்களையும் காணக் கூடாதவர்களையும் காண்பதுதானே அனுபவம்!" என்றேன் நான்.

"உன்னுடைய அழகுக்கு ராஜாக்களே கிடைப்பார்கள்" என்றார் அவர்.

போதாதா எனக்கு..?

'கிளியோபாத்ராவை சீஸர் மயங்க வைத்தானோ இல்லையோ, ஷேக்ஸ்பியர் மயங்க வைத்து விட்டான்!' என்பார்கள்.

வருணனைகளுக்குத்தான் எவ்வளவு வல்லமை! அவை பெண்களை எவ்வளவு மயங்க வைத்து விடுகின்றன!

'உன் அழகுக்கு ராஜாக்களே கிடைப்பார்கள்!' என்ற வார்த்தை, என்னை ராணியாக்கி மகுடம் சூட்டியது போலவே இருந்தது.

இரவு முழுவதும் அவர் பேசிக் கொண்டிருந்தாலும், பேசிக் கொண்டிருக்க நான் தயாராகி விட்டேன்

அவரும் என்னென்னவோ பேசினார். பாவம். எங்களால் அந்த வேலைக்காரர்கள் இருவரும் தூங்கவில்லை.

ஒரு பெண்ணும் ஆணும் தனியாக வெகு நேரம் பேசத் தொடங்கினால், அது பொது விஷயத்திலிருந்து, சொந்த விஷயத்துக்குத் தாவி - நெருக்கம், மிக நெருக்கம் என்ற நிலைக்கு ஆகி விடாதா?

அவர், 'அம்மாடி' என்று அழைக்கவும், நான், 'ஐயா' என்று அழைக்கவுமாகக் கதை வளர்ந்தது

- "நீ போய்த் தூங்கு" என்றார்.

"உங்களைத் தூங்க வைத்து விட்டுப் போகிறேன்," என்றேன்.

அவருக்கு அதில் ஆசை இருப்பது போல் தோன்றிற்று.

அவருடைய கட்டிலறைக்குச் சென்று சட்டையைக் கழற்றி விட்டுப் படுத்தார்.

'கொஞ்சம் கால் பிடிக்கலாமா?' என்று எனக்குத் தோன்றிற்று.

மெதுவாக அவருடைய காலடியில் உட்கார்ந்து பிடிக்க ஆரம்பித்தேன்.

"வேண்டாம்மா!" என்றார்.

"பரவாயில்லை," என்றேன்.

அவர் அதை ரசித்தபடியே படுத்திருந்தார்.

அவரைத் தூங்க வைக்கப் போய், உண்மையில் அவர் தூக்கத்தைக் கெடுத்து விட்டேன் நான்.

தூக்கம் வராமல் புரண்டார். நான் பெண்ணில்லையா? எனக்கு மட்டும் வயதில்லையா?

காலையே பிடித்துக் கொண்டிருந்தவள், மெது மெதுவாகத் தொடையை அமுக்கினேன் ; பிறகு இடுப்பைப் பிடித்தேன் ; கைகளைப் பிடித்து விட்டேன்.

அவர் தூங்குவது போல் பாசாங்கு செய்தார்.

உள்ளங்கையைப் பிடிக்கும் போது, இருவரது கை விரல்களும் ஒன்றோடொன்று இணைந்தன.

மெதுவாக, "மஞ்சுளா!" என்றார்.

நான், "அத்தான்!" என்றேன்.

எவ்வளவோ பேசுகிறவள் நான் ; உணர்ச்சி வேகத்தில் எங்கேயோ போய்க் கொண்டிருந்தேன்.



நேரம் ஆக ஆக, ஒருக்களித்துப் படுத்திருந்த அவரது கையின் மீது மெதுவாகச் சாய்ந்து விட்டேன்.

என் கழுத்தை அவர் கட்டிப் பிடித்தார் ; எனக்குச் சொர்க்கத்துக்கே போய் விட்டது போல் தோன்றிற்று.

என்னை அவர் முத்தமிட்டார் ; முதல் முத்தத்தில் உடல் புல்லரித்தது.

நானும் ஆட்பட்டேன் ; உடன் பட்டேன் ! அன்று மாலை வரை பக்கத்திலிருந்த தற்காப்பு உணர்வு எப்படித்தான் போயிற்றோ, தெரியவில்லை!

அவருடைய பலமான கரங்களுக்கிடையே, கதகதப்பான ஒரு சுகத்தை நான் பெற்றேன். நான் அவரிடம் எதையும் மறுக்கவில்லை. ஒரு வலிமைமிக்க ஆண்மகனாக அவர் நடந்து கொண்டார்.

என் உடம்பில் நல்ல வலி இருந்தது. அப்போதும் கூட, 'இப்படிப்பட்ட ஒரு ஆண் மகனை விட்டா மனைவி விலகி நிற்கிறாள் !' என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

அந்தக் காதல் மயக்கத்தில், "நீதான் என் மனைவி," என்று சத்தியம் செய்தார்.

அந்த நம்பிக்கை எனக்கே இருந்ததால்தானே உடன்பட்டேன்!

'என்னடி காதல் ! கன்றாவி ! கல்யாணம் ஆகாமல்- தாலி கட்டாமல் இப்படியும் ஒரு வாழ்க்கையா?' என்று சிலர் கேட்கக் கூடும்.

மேடையில்லாத திருமணத்துக்குத்தான் வாய்ப்பிருக்கு மானால், அங்கே ஆடை இல்லாத் திருமணம்தானே நடத்தியாக வேண்டும்!

நான் பச்சையாகச் சொல்கிறேன். 'நான் அவரோடு, தான் வாழப் போகிறேன். இதில் சடங்கு என்ன? சாத்திரம் என்ன ?'

நடுத்தர வயதுக்காரர் என்பதால் அவரிடமும் காதல், பாசம் அனைத்தையும் காண முடிந்தது.

எனக்கு இப்போது எல்லாமே இருக்கிறது. என்ன இல்லை?

எங்கள் சாந்தி முகூர்த்தம், முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக இனிது நிறைவேறியது.

சொந்தக்காரர்கள் வந்தால்தான், தேவர்கள் சாட்சிக்கு வருவார்களா, என்ன?

அன்று நாங்கள் தூங்காமலேயே பொழுது விடிந்தது. காலையில் நான் எழுந்தபோது, வீட்டுக்கு எஜமானியாகவே எழுந்தேன்.

'மாறியது நெஞ்சம், மாற்றியது யாரோ!' என்று பாடிக் கொண்டே குளித்தேன்.

குங்குமப் பொட்டும், கூந்தல் அலங்காரமுமாக ஒரு குடும்ப ஸ்திரீயாக நான் காட்சியளித்தேன்.

இப்போது நான் அவரும் அவருடைய மனைவியும் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை மீண்டும் பார்த்தேன்.

'அடிப்பாவி, இவரைவிடவா ஒரு ஆண்மகன் உனக்குத் தேவை?' என்று என்னையறியாமலேயே கேட்டேன்.

நட்டுவனார் வந்தார். "எனக்கு இனி நாட்டியம் எதற்கு?" என்று அவரிடம் கேட்டேன்.

"சும்மா கற்றுக் கொள்ளம்மா," என்றார்.

ஒப்புக்கு ஆடினேன்.

ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் ; நாலாவது நாள் நாட்டியம் கற்றுக் கொண்டிருக்கும்போது வெளியிலே தபால்காரர் குரல் கொடுத்தார், 'தந்தி' என்று.

போய்த் தந்தியை வாங்கி அவரிடம் கொண்டு வந்து கொடுத்தேன். வாங்கிப் பிரித்துப் பார்த்த அவர் கிழித்துப் போட்டபடியே, "பம்பாயிலிருந்து என் மனைவி வருகிறாளாம்!" என்றார்.

# 10. நிலையில்லாத மனிதர்கள்

நான் என்னையறியாமலேயே, "ஐயையோ!" என்று கூவி விட்டேன்.

"வரட்டுமே? உனக்கென்ன? இவளும் என் மனைவிதான் என்று அவளிடமே சொல்லி விடுகிறேன்," என்றார் ரங்கப்பா.

"எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது," என்றேன்.

"இதில் நீ பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? இது என் வீடு. இந்தச் சொத்துக்கள் எல்லாம் என்னுடையவை ; அவள் ஏதாவது பேசினால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன், பயப்படாதே!" என்றார்.

அன்று, "விமான நிலையத்துக்குக் கார் கொண்டு போக வேண்டுமா?" என்று கேட்டான் டிரைவர்.

"கழுதை டாக்ஸியில் வரட்டும்!" என்றார் அவர்.

அவருக்குத்தான் எவ்வளவு தைரியம் வந்து விட்டது!

அன்று விக்கி விக்கி அழுத அவர் எங்கே? இன்று வீரனாக நிற்கும் இவர் எங்கே?

அவர் சொன்னது போலவே அவர் மனைவி டாக்ஸியில் தான் வந்தார்கள். கூடவே அவரது மகளும் வந்தாள்.

அந்த மகளைப் பார்த்தபோது, 'இருக்கும் வரையில் ஆசையாகத்தான் இருந்திருக்கிறார்கள்!' என்று எனக்குத் தோன்றிற்று.

அந்தப் பெண் நன்றாகவே திருத்தமாக இருந்தாள்.

அவர் மனைவிதான் என்ன, 'பிரா' போட்டு, 'லிப்ஸ்டிக்' போட்டு, பதினாறு வயதுப் பெண்ணைப் போல் காட்சியளித்தாள்.

வந்த மனைவி தன் பாட்டுக்கு வீட்டுக்குள்ளே சென்றாள். இவரோ அவர் பாட்டுக்கு மாடிக்குச் சென்றார்.

என்னைக் காட்டி, 'இவள் யார்?' என்று தன் கணவரிடமல்லவா அந்த அம்மையார் கேட்க வேண்டும்? என்னிடம் கேட்டார்கள், "நீ யார்?" என்று.

நான் என்ன சொல்வேன்? பேசாமல் நின்றேன்.

"பேசாமல் நின்றால், என்ன அர்த்தம் ?– நீ யாரடி ?" என்றார்கள்.

எனக்குக் கொஞ்சம் துணிச்சல் வந்தது. "நானும் அவருடைய மனைவிதான்!" என்றேன்.

"ஓகோ ! வைப்பாட்டியா ? எந்தச் சினிமா கொட்டகையில் பிடித்தது ?" என்றார்கள்.

எனக்குக் கோபம் வந்து விட்டது. நான் கிராமத்து மஞ்சுளாவாகி விட்டேன்.

"நான் உங்களைவிட நல்ல குடும்பத்தில் பிறந்தவள். சினிமா கொட்டகையில் பிடித்தவளல்ல!" என்றேன்.

"கூத்தியாளுக்கு வாய் வேறாடி ?" என்றார்கள்.

"நாவை அடக்கிப் பேசுங்கள்!" என்றேன்.

அவரது மகள் இதில் தலையிடாமல் ஒதுங்கி நின்றாள்.

என் தலைமுடியைப் பிடித்து, "போடி, வெளியே!" என்றார்கள்.

உடனே படபடவென்று மாடியிலிருந்து அவர் இறங்கி வந்தார். பளாரென்று தன் மனைவியின் கன்னத்தில் ஓர் அடி கொடுத்தார்.

முடியைப் பிடித்து, "நீ போடி வெளியே!" என்று தள்ளினார். காலால் எட்டி உதைத்தார். தான் ஒரு கம்பீரமான ஆண்மகன் என்பதைக் காட்டிக் கொண்டார்.

அந்த அம்மையார் வெளியே போய் விழப் போனபோது, வெளியிலிருந்து வந்த ஒருவர் அவரைத் தாங்கிப் பிடித்தார்.



"ஏன் அவங்களை உதைக்கிறீங்க ?–" என்று கேட்டார் வந்தவர்.

"நீ எப்படா வந்தே ?" என்று கேட்டார் ரங்கப்பா.

"நானும் பம்பாயிலிருந்துதான் வருகிறேன். உங்கள் லீலையை எல்லாம் வெளியிலிருந்து பார்த்துக் கொண்டுதானிருந்தேன்!" என்றார் அவர்.

உடனே ரங்கப்பா என்னைப் பார்த்து, "பார்த்தாயா, இவன்தான் என் தம்பி ! அண்ணியோடு பம்பாயில் இருந்தானாம்!" என்றார்.

"ஆமாம். அப்படித்தான் இருப்பான். உனக்கு இன்னொருத்தி தேவைப்படும் போது, எனக்கு இன்னொருவன் தேவைப்படாதோ?" என்றார் அவர் மனைவி.

கணவனிடம் மனைவி பேசுகிற பாஷையா இது?

தரங்கெட்ட, முறைகெட்ட உறவுகள் எவ்வளவு வளர்ந்து விட்டன!

"மரியாதையாக இரண்டு பேரும் வீட்டை விட்டுப் போய் விடுங்கள். இல்லையேல் நான் கொன்று போட்டு விடுவேன்," என்று கத்தினார் என் கணவர்.

"அதுதான் நடக்காது. இந்த வீட்டில் சட்டபூர்வமான பாத்தியதை எனக்கு உண்டு. கோர்ட்டுக்குப் போனாலும் இந்த வீடு என்னைத்தான் சேரும். நமக்கு ஆண் வாரிசு இல்லை என்றால், என் கொழுந்தனைச் சேரும். உன் கூத்தியாள் எத்தனை ஆண் குழந்தைகள் பெற்றாலும் அவளுக்குக் கிடைக்காது," என்று கத்தினார் அவர் மனைவி.

நீங்கள் என்பதில் இருந்து, 'நீ, நான்' என்று இறங்கிவிட்டார் அவர் !

"அம்மா, அப்பா ! இப்படி அசிங்கம் பண்ணாமல் இருக்கக் கூடாதா?" என்றாள், அவர் மகள்.

அவர் பதில் பேசாமல் மாடிக்குப் போய் விட்டார்.

நானும் ஒன்றும் பதில் சொல்லாமல் மாடிக்குப் போய் விட்டேன்.

அதன் பிறகு, மகள் மட்டும் அப்பாவிடம் வந்து பேசினாளே ஒழிய, வேறு யாரும் யாரிடமும் பேசவில்லை.

எனக்கு மிகவும் புதிதான விஷயங்கள் ஒன்றும் அங்கே நடந்து விடவில்லை.

'தம்பியின் மனைவியோடு அண்ணன்' என்பது, நான் பிறந்த வீட்டு விவகாரம். 'அண்ணன் மனைவியோடு தம்பி,' என்பது நான் புகுந்த வீட்டு விவகாரம்.

காமத்துக்குக் கண் மட்டுமா இல்லை? புத்தியும் இல்லை! உறவு இல்லை ; முறை இல்லை ; தரம் இல்லை!

நாங்கள் இருவரும் ஒரே அறையில் தூங்கப் போவதைப் பார்த்துவிட்டு, அவரது மனைவியும் தம்பியும் தனி அறைக்குச் சென்று தாழிட்டுக் கொண்டார்கள்.

'என்னடா, வயது வந்த ஒரு மகள் இருக்கிறாளே, இது நியாயமா?' என்று யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

மறுநாள் அதிகாலையில் நான் எழுந்து குளித்தபோது, அவர் மனைவி இருந்த அறையைப் பார்த்தேன். அது தாழிடப் பட்டே இருந்தது. அது ஒன்றே, அவர் காமலீலையில் ஆசை உள்ளவர் என்பதைக் காட்டப் போதுமானதாக இருந்தது.

காலை ஒன்பது மணிவரை அவர்கள் எழுந்திருக்கவே இல்லை. அவரது மகளும் கதவைத் தட்டவில்லை.

தாயாரின் நடத்தையில், மகளே வெறுப்படைந்திருப்பது போல் எனக்குத் தோன்றிற்று.

நான் அவர்கள் அனைவரது பெயரையும் இதுவரை சொல்ல மறந்து விட்டேன்.



தம்பியின் பெயர், சுவாமிநாதன் ; மனைவியின் பெயர் பாரிஜாதம் ; மகள் பெயர் சுவர்ணமுகி.

நான் சுவர்ணமுகியைப் பார்த்து, "குளித்து விட்டாயா அம்மா ? பலகாரம் சாப்பிடு!" என்றெல்லாம் பரிவோடு விசாரித்தேன்.

அந்த வேலைக்காரர்களும் என்னைப் பற்றிச் சொல்லியிருப்பார்கள் போல் தோன்றியது. அவள் என்னிடம் அன்பாக நடந்து கொண்டாள். என்னைச் 'சித்தி' என்றே அழைத்தாள். என் மேனியெல்லாம் புல்லரித்தது.

'சூரியன் இல்லாத போது, சந்திரன் ; சந்திரன் இல்லாத போது நட்சத்திரம்' என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.

அந்த வீட்டில் சுவர்ணமுகி ஒரு நட்சத்திரம்தான். ஆனால், அதன் வெளிச்சமே எனக்குப் போதுமானது போல் தோன்றிற்று.

நான் அவளுக்குத் தலைவாரி விட்டேன். நல்ல புத்தம் புது மல்லிகைப் பூ எனக்காக வாங்கி வைத்திருந்ததை அவளுக்குச் சூட்டி விட்டேன்.

திடீரென்று, "அந்தத் தேவடியாளிடம் என்னடி அலங்காரம்?" என்று குரல் கேட்டது.

கேட்டது பாரிஜாதம்தான். சுவர்ணமுகி அதற்காகப் பதறிப் போய் எழுந்திருக்கவில்லை; மெதுவாகவே எழுந்தாள்.

நான் தேவடியாளாம்!

'விபசாரியை விபசாரி' என்றால், அவள் சம்சாரியையும் 'விபசாரி' என்பாள் என்பார்கள்.

மாதவியைப் பார்த்துக் கண்ணகி சொல்லாத வார்த்தை! பேசினால் வம்பு வளரும் என்று நான் பேசாமல் இருந்து விட்டேன். அவர்களோடு பேச வேண்டாம் என்பது போல் வேலைக்காரர்களும் ஜாடை காட்டினார்கள்.

மணி ஒன்பது முப்பது ஆகிவிட்டது. அப்பொழுதும் என் கணவர் எழுந்திருக்கவில்லை.

அண்ணன் ஓர் அறையிலும், தம்பி ஓர் அறையிலுமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

'இந்தக் குடும்பமே தூங்கு மூஞ்சிக் குடும்பம்தான்!' என்று நான் சிரித்துக் கொண்டேன்.

வேலைக்காரனிடம் மெதுவாகக் காபிக் கோப்பையை வாங்கிக் கொண்டு, மாடிக்குச் சென்றேன். மயங்கிய நிலையில் படுத்திருந்தார்.

அவர் படுத்திருந்த கோலத்தைப் பார்த்ததும், பயத்தோடும் சந்தேகத்தோடும் தட்டித் தட்டி எழுப்பினேன். 'உம். . . உம். . .' என்றாரே தவிர, எழுந்திருக்கவில்லை.

இரவில் நான்தானே பால் கொடுத்தேன் ; என்ன தூக்க மயக்கம்?

"காப்பி சாப்பிடுங்கள்," என்று அழைத்துப் பார்த்தேன்; பதில் இல்லை.

நான் பயந்து போய் வேலைக்காரர்களை அழைத்தேன்.

சுவர்ணா ஓடி வந்தாள். சுவாமிநாதனோ, பாரிஜாதமோ வீட்டில் அப்படி ஒரு பரபரப்பு ஏற்பட்டதையே கவனிக்கவில்லை. அவர்கள் மிருகங்களாகி விட்டார்கள்.

அவளுக்கென்ன ? சொத்து இருக்கிறது ! இவர் இறந்து போனால் கூட அவள் கவலைப்படப் போவதில்லை. ஆனால் என் நிலைமை அதுவா ?

மாலையிடாமலேயே அவருக்கு நான் மனைவியாகி விட்டேனே, அவருக்கு ஏதேனும் ஆகிவிட்டால் என் கதி?

"உன் அப்பாவுக்குக் குடும்ப டாக்டர் யார்?" என்று கண் கலங்கியபடியே சுவர்ணமுகியைக் கேட்டேன்.

டாக்டர் பெயரையும், டெலிபோன் நம்பரையும் சொன்னாள் அவள்.



டாக்டருக்கு டெலிபோன் செய்தேன்.

டாக்டர் வருவதற்குள் அவர் வாயிலிருந்து நுரை தள்ளிற்று. நான் அழுதே விட்டேன்.

டாக்டர் வந்து சோதித்தார். உள்ளங்கையைப் பார்த்தார் ; இமைகளை நீக்கிக் கண்களைப் பார்த்தார். "உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டும்," என்று ஆம்புலன்சுக்குப் போன் செய்தார்.

நான் குமுறிக் குமுறி அழுதபடி, வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டேன்.

## 11. புதியதான உறவுகள்

அவரை ஆம்புலன்ஸில் ஏற்றப் போகும் போது, எனது சிற்றப்பாவும், சித்தியும், தங்கையும் டாக்ஸியில் எதிரே வந்தார்கள்.

அவர்கள் கலாசாரக் கழகத்துக்குப் போனார்களாம். அங்கே, இந்த விலாசத்தைக் கொடுத்தார்களாம்.

நான், "சிற்றப்பா...!" என்று சொல்லிக் கொண்டே அழுதேன்.

"என்னம்மா? என்னம்மா ? இது யார் வீடு?" என்று கேட்டார்கள்.

"அதெல்லாம் பிறகு சொல்கிறேன்," என்று நானும் ஆம்புலன்ஸில் ஏறிக்கொண்டு, என் கணவரின் காரில் அவர்களைப் பின் தொடரச் சொன்னேன்.

நம் நாட்டில் சிறிய வியாதிகளைக் குணப்படுத்தத்தான் டாக்டர்கள் இல்லையே தவிர, பெரிய பெரிய கேஸ்களுக்கெல்லாம் டாக்டர்கள் இருக்கின்றார்கள்.

ஆஸ்பத்திரியில் அவரைப் படுக்க வைத்தவுடனேயே அவர்கள் சொன்ன வார்த்தையில் என் உடம்பு நடுங்கிற்று.

"இது பாய்ஸன் கேஸ்!" என்றார்கள்.

எனக்கு இருதயமே வெடித்து விடும் போல் இருந்தது.

"யார்? என்ன !" என்று விஷயம் தெரியாமலேயே என் சித்தப்பாவும், சித்தியும் வெளியிலேயே தவித்துக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர்கள் என்னவெல்லாமோ சோதனைகள் செய்தார்கள்.

அந்தப் பாவிகள்- அவரது மனைவியும், தம்பியும்- அப்போது கூட ஆஸ்பத்திரிக்கு வரவில்லை.

சுவர்ணமுகி மட்டும் ஒரு காரில் ஓடோடி வந்தாள்.

பாவி நான் ! அந்தப் பாலை நான் குடித்துப் பார்த்து விட்டாவது அவருக்குக் கொடுத்தேனா? மூன்று மைலுக்கு ஒருதரம் இறைவன் பாதையில் வளைவுகளை ஏற்படுத்தி இருக்கும்போது, என்னால் ஆகக்கூடியதென்ன?

உலகத்தில் எந்தச் சாலைதான் நேராகப் போகிறது? ஆனால் என் வாழ்க்கைச் சாலையில் இருப்பது போன்று துரிதமான திருப்பங்கள் வேறு எந்தச் சாலையிலும் இருக்க முடியாது.

அவருக்கு யார் விஷம் போட்டிருக்கக் கூடும்?

இதில் சந்தேகத்துக்கோ, இரண்டாவது கருத்துக்கோ இடமேது? அவரது மனைவியோ தம்பியோதான் போட்டிருக்க வேண்டும். அவர்களை வீட்டை விட்டுப் போகச் சொன்னதில் அவர்கள் ஆத்திரமுற்றிருக்க வேண்டும்.

கணவனைக் கொலை செய்யும் துணிவு மனைவிக்கு வருமா? அப்படிப்பட்ட மனைவிகள் கிராமங்களில் கூட இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி படிக்கிறோமே?

கணவனைக் கொன்று விட்டு, மாமனாரோடு உறவு கொண்டாளாம் ஒருத்தி. பக்கத்து வீட்டுக்காரனோடு உறவு கொண்டாளாம், இன்னொருத்தி.

நாவலாசிரியர்களின் கற்பனைக்கும் எட்டாத விஷயங்கள், நிஜ வாழ்க்கையில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.



ஆனால், இந்தச் சதியில் வேறொரு ரகசியமும் கலந்திருந்தது. விஷம் குடித்தால் அவரும் இறந்து போவார். நான் கொடுத்தேன் என்று என்னையும் உள்ளே பிடித்துப் போடலாமல்லவா?

சுவர்ணமுகி என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "சித்தி, சித்தி!" என்று அழுதாள்.

மெதுவாக என் சித்தப்பா, டாக்டரின் அனுமதி பெற்று உள்ளே வந்தார். பயத்தோடு என் பக்கத்தில் வந்து, "என்னம்மா, என்ன விஷயம்?" என்றார்.

"சித்தப்பா, நான் இவருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்டு விட்டேன்," என்று ஆரம்பித்து விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். சித்தப்பா திகைத்துப் போனார்.

மெதுவாக டாக்டரிடம் போய், "டாக்டர், அவர் பிழைத்துக் கொள்வாரா?" என்று கேட்டார்.

"இன்னும் ஆறு மணி நேரத்திற்கு ஒன்றும் சொல்வதற்கில்லை," என்றார் டாக்டர்.

இவ்வளவு சிக்கலிலும் பாரிஜாதமும், சுவாமிநாதனும் வரவில்லை.

எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது- 'அவர்கள்தான் விஷம் கொடுத்திருக்கிறார்கள்' என்று.

ஆறு மணி நேரம் நாங்கள் நாமதிக்காமல், ஆண்டவன் நடந்து கொண்டார்.

சரியாக எழுபது நிமிஷங்களில் அவர் கண்களைத் திறந்து பார்த்து, "மஞ்சுளா..." என்றார்.

"அத்தான்!" என்று நான் அழுதேன்.

அவரது உயிர் பிரிந்து விட்டது.

அவர் உயிரோடிருக்கும் போதுதான், அவர் மீது எனக்கு உரிமை இருந்தது. அவர் இறந்த வுடனேயே, அந்தச் சடலத்தின்

மீது சட்ட பூர்வமான பாத்தியதை அவரது முதல் மனைவிக்கு வந்து விட்டது. சடலத்தைத் தொடக்கூட என்னை அனுமதிக்கவில்லை. மாறாக, போலீஸார் என்னைக் கைதும் செய்தார்கள்.

எதை நினைத்து அழுவது என்று எனக்குத் தோன்றவில்லை.

சென்னைச் சிறைச்சாலையின் ஒரு பகுதியிலே என்னை ரிமாண்டில் வைத்தார்கள்.

மயிலாப்பூரில் ஏதோ ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த என் சிற்றப்பா, என்னை ஜாமீனில் எடுக்க வெகுவாக முயற்சித்தார்.

வறட்சியான அந்த விவரங்களை விளக்க நான் விரும்பவில்லை.

'குற்றம்' சாட்டப்பட்டவர்கள் கையும் களவுமாகப் பிடிபட வில்லை என்றும், 'சந்தேகக் கேஸ்' என்று கருத்துத் தெரிவித்தும் ஒரு நீதிபதி என்னை ஜாமீனில் விடுவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளால் நான் அப்படி ஒன்றும் வாழ்க்கையை வெறுத்து விடவில்லை.

ஆனால் துரதிருஷ்டவசமாக நான் பூமாலை போட்டுப் பூஜை செய்ய அவரது புகைப்படம் ஒன்றும் எனக்குக் கிடைக்க வில்லை.

மீண்டும் நான் கலாசாரக் கழகத்துக்குப் போகவில்லை.

என் சிற்றப்பா ஒரு வீடு பிடித்தார். அதில் நாங்கள் குடியேறினோம். வீட்டு வாடகை ஆயிரம் ரூபாய்

வீட்டை எடுக்கும்போது நான் பார்க்கவில்லை. குடியேறும் போதுதான் பார்த்தேன். அது நன்மைக்கோ தீமைக்கோ தெரிய வில்லை; என் கணவரின் பங்களாவுக்குச் சரியாக அடுத்த வீடாகவே அது இருந்தது.

நல்லவேளை, அவரது புகைப்படம் கிடைக்காவிட்டாலும் அவரது வீட்டையாவது பூஜை செய்யலாம் என்று எண்ணிக் கொண்டேன்.



குடிபோன போது பாரிஜாதம் என்னைப் பார்க்கவில்லை.

மறுநாள் நான் மாடியில் நின்று கூந்தலை ஆற்றிக் கொண்டிருந்தபோது, பங்களாவின் புல்வெளியில் நின்று கொண்டிருந்த சுவர்ணமுகி, என்னைப் பார்த்துவிட்டுச் "சித்தி. . ." என்று கத்தினாள்.

அப்படியே ஓடிப்போய் அவளை அணைத்துக் கொள்ள வேண்டும் போல் எனக்குத் தோன்றிற்று.

ஆனால் அந்த உரிமை எனக்கில்லையே.

ஒரு துன்ப நிகழ்ச்சி நடந்த வீடு போல அந்த வீடு காட்சியளிக்கவில்லை.

மாலை நேரங்களில் புல் வெளியில் உட்கார்ந்தபடி, கொழுந்தனும் அண்ணியும் குலாவிக் கொண்டிருந்தார்கள்.

இனி நான் இதில் தலையிட்டால், இன்னும் ஒரு கொலைக் குற்றம் சாட்டினாலும் சாட்டுவார்கள் ; எதற்கு வம்பு என்று பேசாமல் இருந்து விட்டேன்.

இப்போது நான் ஓர் இளம் விதவை. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கட்டுரையில் 'இயற்கையே ஒரு இளம் விதவை' என்று வருணித்திருந்தார்.

நானோ இயற்கையாகவே ஓர் இளம் விதவையாகி விட்டேன்.

நல்ல வேளை, நான் தொடர்ந்து நாட்டியம் கற்றுக் கொண்டது.

ஒரு மாதத்தில் நாட்டியப் பயிற்சியை வீட்டிலேயே முடித்தேன்.

தீபாவளி அன்று, அண்ணாமலை மன்றத்தில் அரங்கேற்றுவதாக ஏற்பாடு.

என் சிற்றப்பா எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

யாருக்கு நாங்கள் சென்னையில் அழைப்பனுப்ப முடியும்? எங்களுக்கு யாரைத் தெரியும்?

கலாசாரக் கழகத்துக்குப் போய், விஐபி லிஸ்ட் ஒன்று வாங்கி வந்தேன். என்னுடைய அழகான புகைப்படத்தோடு நிகழ்ச்சி நிரலையும், அழைப்பிதழையும் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

எனக்கு நவீன நாட்டியம் கற்றுக் கொடுத்த நட்டுவனாரைக் கூட்டிக்கொண்டு, சில பெரிய மனிதர்கள் வீடுகளுக்கு நானும் என் சித்தப்பாவுமே போய் வந்தோம்.

தலைமை வகிப்பதற்கு ஒரு நீதிபதி ஒப்புக் கொண்டார்.

எங்கள் அதிருஷ்டம்தானோ என்னவோ, அரங்கேற்றத் துக்கு நூற்றுக்கு மேற்பட்ட கார்கள் வந்திருந்தன. பெரிய பெரிய பிரமுகர்கள் எல்லாம் வந்திருந்தார்கள்.

சித்தப்பா இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு, கிராமத்துப் பாணியில் அனைவரையும் வரவேற்றார்.

எல்லாரும் நாட்டியத்தை விட, என்னையே அதிகம் ரசிப்பதுபோல் எனக்குத் தோன்றிற்று.

என்னைப் பற்றி நானே சொல்லக்கூடாது. அது முதல் நாள் ஆட்டமாகவே எனக்குத் தோன்றவில்லை.

வந்திருப்பவர்கள் அடிக்கடி கை தட்டினார்கள். நான் கொஞ்சம் செக்ஸியாகத்தான் ஆடினேன்.

இந்தக் காலத்தில் அதுதானே பிடிக்கிறது! பக்திக் கதை என்றாலும், அதிலேயும் செக்ஸ் அல்லவா தேவைப்படுகிறது!

என்னதான் சித்தர்கள் பெண்களை வெறுத்துப் பாடி இருந்தாலும், பெண்களின் அங்கங்களைப் பார்ப்பதற்காகத்தானே கூட்டம் வருகிறது? சினிமாக்காரர்கள் அதைக் காட்டித்தானே சம்பாதிக்கிறார்கள்?

காமம் ஒன்றுக்குத்தானே முப்பதுநாளும் பௌர்ணமி!

நான் ஆடி முடித்து, வீட்டுக்கு வந்தேன்.

எங்களைத் துரத்திக் கொண்டு பின்னாலேயே ஒரு கார் வந்தது.



யாராவது காமுகர்களாக இருக்குமோ என்று முதலில் நான் பயந்து போனேன்.

ஆனால் வீட்டுக்குள் வந்தவர்கள், தாங்கள் படத் தயாரிப்பாளர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

அவர்கள் புதுப்படம் தயாரிக்கிறார்களாம். அதில், நான் கதாநாயகியாக நடிக்கவேண்டுமாம்.

எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனால், என் சித்தப்பாவோ, "சினிமா உலகம் அப்படி இப்படி இருக்கும் ; வேண்டாம்!" என்றார்.

எந்த உலகம், 'அப்படி இப்படி' இல்லை?

என் சித்தி, மெதுவாக அவரை உள்ளே கூப்பிட்டு, "சும்மா ஒப்புக் கொள்ளுங்கள். சினிமாவிலே சம்பாதிப்பது போல் வேறு எதிலே சம்பாதிக்க முடியும்?" என்றார்கள்.

"ஆமாம். தலைக்கு மேலே வெள்ளம் போய் விட்டது. இனி சாணென்ன முழமென்ன?" என்று சித்தப்பா ஒப்புக் கொண்டு விட்டார்.

ஆனால், வந்திருந்தவர்கள் அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார்கள்.

அந்தப் படத்தில் நிர்வாணக் காட்சி ஒன்று வருகிறதாம்.

## 12. மைத்துனர் வருகிறார்

நிர்வாணமாக நடிப்பதில் எனக்குச் சம்மதமில்லை.

கணவன் மட்டுமே காணக்கூடிய அம்சங்களைக் கடைச் சரக்காக்கி விடுவது என்ன கலை? மேலை நாட்டுக்கு அது ஒத்ததாக இருக்கலாம். ஆனால், அந்தக் கணக்கில் கொஞ்சம் கழித்து விட்டுத்தான் கீழை நாடு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நான் ஆடும் நவீன நாட்டியத்தில் மார்பகத்தைக் குலுக்கிக் காட்டும் அம்சமும் உண்டு. ஆனால், அது நம் பரத நாட்டியத்திலும் இருக்கிறதே! காமரசப் பாடல்களுக்குப் பாவம் பிடிப்பது பரத நாட்டியத்திலும் காணப்படுகிறதே!

அதுவே அதிகம் என்று நம்மிலே சிலர் கருதும்போது, முழுக்க முழுக்க நிர்வாணமாக நடிப்பது எப்படி?

ஆனால், வந்த வாய்ப்பைத் தட்டி விடவும் மனமில்லை.

அது சரி, படம் நடந்து கொண்டிருக்கும் போதே, வழக்கு எனக்குப் பாதகமாகி, நான் சிறை செல்ல நேர்ந்தால், என்னை நம்பிப் படம் எடுப்பவர்களின் கதி என்ன?

அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமோ தெரியாதோ என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போது, "அம்மா, உங்கள் மீதுள்ள வழக்கைப் பற்றி மண்டபத்திலேயே பல பேர் பேசிக் கொண்டார்கள். ஆனால், நாங்கள் அது பற்றிக் கவலைப்பட வில்லை. செஷன்ஸ் கோர்ட்டில் தண்டித்தாலும், ஐகோர்ட் அப்பீல் இருக்கிறது. வழக்கு முடிய இரண்டு வருஷங்களுக்கு மேலாகும். ஏன் பயப்படுகிறீர்கள்? கண்கண்ட சாட்சியில்லாத வழக்கு நிற்கும் என்று எங்களுக்குத் தோன்றவில்லை," என்றார் தயாரிப்பாளர்.

அவர் என்னை ஒப்பந்தம் செய்கிறாரோ இல்லையோ, இந்த வார்த்தைகளால் ஆறுதலளித்தார்.

அவரை நம்பி நிர்வாணமாக நடிக்கவும் தயாராய், துணிந்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டேன்.

'பத்து முரடர்கள் என்னை நிர்வாணமாக்கி நடுத் தெருவில் ஓட விட்டால், நான் என்ன செய்யப் போகிறேன்?' அப்படி நினைத்துக் கொண்டு தான் நடிக்க வேண்டும், வேறென்ன செய்வது?

படப்பிடிப்பு ஆரம்பமாயிற்று.

சினிமா உலகத்திற்குள் நான் முதன் முதலாக நுழைகிறேன். விசித்திரமான உலகத்தை அன்றுதான் சந்திக்கிறேன். வெளியிலே



சினிமாக்காரன் என்றால் என்னவெல்லாமோ பேசுகிறார்களே, அதையும் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு.

சினிமாக்காரர்களுக்குப் பெண் கொடுக்க மாட்டார்களாம்; வீடு கொடுக்க மாட்டார்களாம். சினிமாக்காரர்கள் எல்லாருமே நடத்தை கெட்டவர்களாம் - ஊரிலே அவர்களைப் பற்றித்தான் எத்தனை கதைகள்!

நான் நடித்துக் கொண்டிருந்த படத்தின் தலைப்பு, 'ஆயிரம் சொன்னாலும் அவன் உத்தமிதான்' என்பதாகும்.

இது எல்லாப் பெண்களுக்குமே பொருத்தமான தலைப்பு.

"அத்தான்! நீங்கள் என்ன சொன்னாலும் சரி, என் வாழ்க்கையே உங்களிடம்தான் தொடங்கும்; உங்களிடம்தான் முடியும்!" என்பது, நான் பேச வேண்டிய வசனம்.

அதை முதலில் எடுக்கக்கூடாது என்பதற்காகக் கதாநாயகன், "வெற்றி! வெற்றி!" என்று சொல்வதாக ஒரு 'ஷாட்' எடுத்தார்கள்.

முதல் நாள் ஆகையால் எனக்குக் காமிராக் கூச்சம் கொஞ்சம் இருந்தது.

தன் தந்தைக்குப் பயந்த கதாநாயகன், என்னைக் கட்டிப் பிடித்துக் கலங்குகிற காட்சி அது.

அந்தக் கதாநாயகன் என்னைக் கட்டிப் பிடித்த போது, அவருக்கு என்ன உணர்ச்சி இருந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குள் ஏதோ ஒரு சுகம் எழுந்தது.

அவர் மிகப் பிரபலமான கதாநாயகன்; வெகு நாட்களாக அவரை நான் படத்தில் பார்த்திருக்கிறேன். கிராமத்தில் அவருடைய அபிமான ரசிகையாகவும் இருந்திருக்கிறேன்.

எத்தனையோ அழகிகளைக் கட்டிப் பிடித்த கை, என்னையும் கட்டிப் பிடிக்கிறதென்றால், எனக்கு உற்சாகம் இருக்காதா? 'இன்னும் என்னென்ன காட்சிகளெல்லாம் வருமோ' என்று நான் குஷியாக இருந்தேன்.

'சீ ! என்னடி இது? நீ பேசும் தத்துவங்களுக்கும், உனக்கு வரும் ஆசைகளுக்கும் சம்பந்தமே இல்லையே!' என்பீர்கள்.

நான் மிருகம் அல்ல; தேவதையும் அல்ல; சலனத்துக்கும் சபலத்துக்கும் ஆட்பட்டு விடக் கூடிய ஒரு பெண். சந்தர்ப்பங்கள் என்னைப் பந்து விளையாடும்போது, சுகமிருக்குமானால், பலவீனப்பட்ட மனது அவற்றை ஏற்றுக் கொண்டு விடுகிறது.

தர்மங்களையும் அதர்மங்களையும் பாகுபாடு செய்து, எறும்பைக் கூட மிதிக்காமல் நடக்கும் யோகம் எனக்குக் கைகூடவில்லை என்பது உண்மைதான். அதற்காக அவ்வப்போது எனக்குத் தோன்றும் நல்ல விஷயங்களையும் நான் சொல்லாமல் இருக்க வேண்டுமா என்ன?

எட்டு மணிக்குப் பிடிக்காத ஒன்று, ஒன்பது மணிக்குப் பிடித்துப் போகிறது. இதில் குற்றம், ஓடுகிற கடிகாரத்தின் மீதே தவிர, என் மீதல்ல.

நான் என்னவோ கண்ணகியையும், சீதையையும் ஆதர்சமாகக் கொண்டவள்தான். ஆனால் அகலிகைக்கு வாய்த்த சந்தர்ப்பத்தைப் போல, எனக்கும் வாய்க்கும் போது, 'என்றுமில்லாப் பேராசை' கொண்டு விடுகிறேன்.

கணவன் மனைவியைக் கட்டித் தழுவும் பந்தத்தோடு கதாநாயகன் என்னைக் கட்டித் தழுவினார்.

இருபது வருஷங்களுக்கு முந்திய பழைய படங்கள் சிலவற்றை எங்கள் கிராமத்து டூரிங் டாக்கீஸில் பார்த்திருக்கிறேன். அந்தப் படங்களிலெல்லாம் கதாநாயகியைக் கதாநாயகன் கட்டித் தழுவும்போது, தங்கள் மார்பகம் அவன் மீது படாமலிக்கத் தங்கள் இரண்டு கைகளையும் அவன் மார்பு மீது வைத்துக் கொண்டு சாய்வார்கள்.

இந்நாளிலோ, ஆடவன் வெள்ளிக் கம்பி போல் வளைந்தால், பெண் இரும்புக் கம்பி போல் வளைகிறாள்.

அது மாதிரி நானும் செய்தால்தானே முன்னேற முடியும்?



அவர் என்னைக் கட்டி அணைத்தபோது, நானும் நன்றாக அணைத்து, அவர் முதுகைத் தடவினேன்.

அணைப்பது என்பது இப்போதொன்றும் எனக்குப் புதிதல்லவே!

அவர் மிகவும் நல்லவர். நான் புதுமுகம் என்பதால், பல விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

நான் அந்த எட்டு மணி நேரக் கால்ஷீட்டில், மணிக்கு மணி முன்னேறினேன்.

'உயிர் போனாலும் உன்னை நான் கைவிட மாட்டேன்!' என்று கடைசியாக அவர் சொல்லும் கட்டம்; நான் அவர் காலைத் தொட்டு வணங்க, எனக்கு என் கணவர் ஞாபகம் வந்து விட்டது. நான் உருகி அழுது விட்டேன்.

"அற்புதம்!" என்றார் டைரக்டர்.

"சபாஷ்!" என்றார் கதாநாயகன்.

அன்றைய படப்பிடிப்பு முடிந்தது.

'புதுமுகம் கதாநாயகியானால், டைரக்டர், தயாரிப்பாளர்கள் எல்லாம் இரவு நேரங்களில் படை யெடுப்பார்கள் என்று, ஊரெங்கும் வதந்தி உலவுகிறதே. அப்படி ஏதாவது நடைபெறுமோ!' என்று நான் எதிர்பார்த்தேன்.

அன்று இரவு, ஸ்டுடியோவுக்குள் திரியும் நாய்க்குட்டி கூட என் வீட்டுக் கதவைத் தட்டவில்லை.

அயோக்கியர்கள் சினிமா உலகில் மட்டுமே இருப்பது போன்ற ஒரு பிரமையைச் சில அயோக்கியர்களே உண்டாக்கி இருக்கிறார்கள்.

ஆபாசமும், சீர்கேடும் எங்கே இல்லை?

சில பணக்காரக் குடும்பங்களில், பவித்திரமான தாலியே பந்துப் பேரோடு விளையாடுகிறது.

அரசியல்வாதிகள் அந்தரங்கத்தில் மிகக் கேவலமாக இருக்கிறார்கள்.

போலிச் சாமியார்கள் பொழுது பட்டதும் பெண்ணும், போதையும் தேடுகிறார்கள்.

ஆனால், பரிதாபத்துக்குரிய சினிமாக்காரர்கள் மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை, நான் நடிக்கும் படத்தைத் தயாரிக்கும் டைரக்டரையோ, தயாரிப்பாளரையோ நானே விருந்துக்கழைக்கத் தயாராக இருந்தேன். என்னை விருந்தாக்க அல்ல; நல்ல மாமிச விருந்து வைக்க.

ஒரு வார காலம் தொடர்ந்து ஷூட்டிங்.

படிப்படியாக நான் திறமையுள்ளவளாகி விட்டேன்.

நான் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே, புதிய படங்கள் சிலவற்றுக்கு வந்து கேட்டார்கள்.

"நம்முடைய படம் ரிலீஸ் ஆகும்வரை, வெளிப் படங்களுக்கு ஒப்புக் கொள்ள வேண்டாம்!" என்று தயாரிப்பாளர் சொல்லி விட்டார்.

என் படம் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கிற்று. விதம் விதமான போஸ்கள் வெளிவந்தன.

என் கணவரின் மனைவியும், அவரது தம்பியும் அவற்றைப் பார்க்காமல் இருந்திருப்பார்களா?

நான் மாடியில் நின்றபடியே அந்த வீட்டை அலட்சியமாகப் பார்த்தேன்.

ஒரு நாள் சுவர்ணமுகி திடீரென்று ஓடி வந்தாள்.

"சித்தி! சித்தி! உங்கள் போட்டோ ரொம்ப நன்றாக இருந்தது. உங்கள் ஷூட்டிங் ஒருநாள் பார்க்க வேண்டும்!" என்றாள்.

"கூட்டிக் கொண்டு போகிறேன்," என்றேன்.



அன்றிரவு ஒரு அதிசயம் நடந்தது.

நான் ஷூட்டிங் முடிந்து திரும்பியதும், என் கணவரது கார் டிரைவர் அங்கே வந்தான். என்னோடு தனியாகப் பேச வேண்டும் என்றான்.

பேசினேன்.

என்ன விஷயமாம்?

என் கொழுந்தன் சுவாமிநாதன் என்னைத் தனியாகப் பார்க்க வேண்டுமாம்! 'சரிதான், இரண்டாவது அண்ணியையும் பார்த்து விட வேண்டும் போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டேன்.

எனக்குள் ஒரு போராட்டம்.

'வரச் சொல்வதா, வேண்டாமா?'

இப்போதுதான் என் கணவரின் சொத்துக்களை எல்லாம் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டு விட்டாரே. அவரை வளைத்துப் போட்டுக் கொண்டு பாரிஜாதத்துக்கு ஆட்டம் காட்டினால் என்ன?

'சபாஷ்! நீ கதாநாயகியாக நடிக்க வேண்டியவளல்ல, வில்லியாக நடிக்க வேண்டியவள்!' என்கிறீர்களா?

உண்மைதான்.

வந்த டிரைவர் மூலமே அவரை நான் ஆழம் பார்க்க விரும்பினேன்.

"நாளை இரவு வரச் சொல்! வரும்போது அவருடைய சின்ன அண்ணிக்கு இருபதாயிரம் ரூபாய் பணம் கொண்டு வரச் சொல்!" என்றேன்.

அப்படிச் சொன்னால்தானே, அவருடைய ஆசையின் அளவை அறிந்து கொள்ள முடியும்?

'அவர் வர மாட்டார்,' என்று நான் நினைத்தேன். நான் நினைத்தது தவறாகி விட்டது.

இருபதாயிரம் ரூபாய் பணத்தோடு, மறுநாள் இரவே அவர் வந்துவிட்டார்.

எனக்கோ அன்றைக்கு ஷூட்டிங் முடியப் பத்து மணியாகி விட்டது.

## 13. வருவதெல்லாம் தானே வரும் !

**நா**ன் வேகமாகக் காரில் ஏறி வீட்டுக்கு வந்த போது, அவர் ஆடுகின்ற நாற்காலியில் படுத்தபடி ஆடிக்கொண்டு இருந்தார்.

என் சிற்றப்பா அவரைக் காப்பி சாப்பிடச் சொன்ன போது, "இது காப்பி சாப்பிடுகிற நேரமல்ல!" என்று கூறி விட்டார்.

அவருக்கும், எப்படியோ அந்தப் பழக்கம் வந்திருக்கும் போலிருக்கிறது.

நான் உள்ளே நுழைந்தவுடன் சம்பிரதாயத்துக்காக வணக்கம் போடவில்லை. கொழுந்தனுக்கென்ன வணக்கம்? அதுவும் அன்று மட்டும் புருஷனாக வந்திருப்பவருக்கு வணக்கம் எதற்கு?

"வாங்க!" என்று கொஞ்சலாகக் கூறிவிட்டு, "குளித்து வருகிறேன்," என்று உள்ளே போனேன்.

நன்றாக உழைத்த பிறகு, நன்றாகக் குளிப்பதில் உள்ள சுகம், வேறு எதில் இருக்கிறது?

நீண்ட கூந்தலை அப்படியே வாரிவிட்டு, நெற்றிக்குப் பொட்டு வைத்துக் கொண்டு, அழகான சேலையும் ரவிக்கையும் அணிந்து, பரம்பரைத் தொழில்காரிகள் மாதிரித் தயாராகி விட்டேன்.

'வாழ வேண்டும், பிறரை வஞ்சம் தீர்க்க வேண்டும்' என்றெல்லாம் நினைக்கும்போது, வழிகளைப் பற்றி யார் நினைக்கிறார்கள் ?

மெதுவாக அவர் அருகில் வந்து, "மாடிக்குப் போவோம் ; வாருங்கள்," என்று கூப்பிட்டேன்.



அவர் உடனேயே பத்திரிகைக் காகிதத்தில் மடிக்கப்பட்ட இருபதாயிரம் ரூபாய்களை என்னிடம் கொடுத்தார்.

அதைக் கொண்டு போய்ச் சித்தியிடம் கொடுத்து விட்டுத் திரும்பி வந்து, அவரை மாடிக்கு அழைத்துச் சொன்றேன்.

வெட்கப்பட வேண்டிய சில விஷயங்கள், விரக்தியான சூழ்நிலையில், எவ்வளவு சகஜமாக ஆகிவிடுகின்றன!

என் கணவர் உயிரோடிருந்தபோது, இவர் இலட்ச ரூபாய் கொடுப்பதாக இருந்தாலும், நான் சம்மதித்திருப்பேனா?

என்ன செய்வது? கோபுரம் விழுந்து விட்டது. சிலையின் மீது வெய்யிலும் அடிக்கிறது ; மழையும் விழுகிறது.

"நீ வரவர மிகவும் அழகாகிக் கொண்டு வருகிறாய்!" என்றார் அவர்.

'இதுதான் ஆண்கள் பெண்களிடம் ஆரம்பிக்கும் சகஜமான ஆரம்பம்' என்று எனக்குத் தெரியாதா? சிரித்துக் கொண்டேன்.

"என் அண்ணன் நிலைமைதான் இப்படி ஆகிவிட்டது. அதற்கு நீயும் காரணமல்ல ; யாரும் காரணமல்ல. அவர் தான் விரக்தியடைந்து ஏதோ செய்து கொண்டிருக்கிறார். ம்... அதற்காக என்ன? நாம் ஒருவருக்கொருவர் சொந்தமாக இருப்போம்," என்றார் அவர்.

"இந்த உண்மையை நீங்கள் கோர்ட்டிலே வந்து சொல்வீர்களா?" என்றேன்.

"நிச்சயமாகச் சொல்வேன். 'என் அண்ணனுக்குக் கொஞ்ச காலமாக மனநோய் இருந்து வந்தது உண்மை' என்று நான் சொல்லி விட்டால் போதுமே, உடனேயே உன்னை விடுதலை செய்து விடுவார்களே," என்றார் அவர்.

என் மீதுள்ள வழக்கில் அவர் எவ்வளவு தூரம் உதவ முடியும் என்பதை, முன்னால் நான் மறந்து போயிருந்தேன். நல்லவேளையாக மறந்து விடாமல் அவரை வரச் சொன்னோமே என்று எண்ணிக் கொண்டேன்.

"ஆமாம், எடுத்த எடுப்பிலேயே 'மாடிக்குப் போகலாம்,' என்று என்னிடம் சொல்லி விட்டாயே, நான் இதற்குத்தான் வந்திருப்பேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்றார்.

"பிறகென்ன, என்னுடைய நன்மை தீமைகளை விசாரிக்கவா வரப்போகிறீர்கள்? சின்ன அண்ணியின் மீது உள்ள காதலால் தான் வரப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாதா? எனக்கும் இளைய கொழுந்தனோடு பேசிக் கொண்டிருக்க ஆசை இருக்காதா? அதற்காகத்தான் வரச் சொன்னேன்!"

லைசென்ஸ் கிடைத்தவுடனேயே, அவர் சேட்டைகளை ஆரம்பித்தார்.

என் சிற்றப்பாவுக்கு இந்த விஷயம் புதிது. அவரைப் பற்றி எண்ணியபோது எனக்கு வெட்கமாகவும், பயமாகவும் இருந்தது.

ஒரு பெண் இப்படித்தான் வாழ்ந்தாக வேண்டும், நடந்தாக வேண்டும், என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டால், நிம்மதியான வாழ்க்கைக்கு இதுவும் ஒருவழிதான் என்று பலரும் ஒப்புக் கொண்டு விடுகிறார்கள். ஆனால் கிராமத்து மக்கள் பாவம், மௌனமான உணர்ச்சியில் அவஸ்தைப் படுகிறார்கள்.

சரி, சிற்றப்பாவுக்கு நாம் சொல்லிக் கொள்ளலாம் என்று நான் முடிவு கட்டினேன்.

'கற்பு' என்றால், நிரந்தரமான கற்புத்தானே தவிர, வாரத்தில் நான்கு நாள் கற்பு, மூன்று நாள் லீவு என்று ஏதாவது உண்டா?

சித்தி ஒருமுறை கெட்டுத் திரும்பினாள் ; நானும் ஒருவரோடு ஒருமுறை வாழ்ந்தாகி விட்டது ; இன்னொரு வரோடு எப்படியும் வாழத்தான் வேண்டியிருக்கும். இனி இதிலே கணக்கென்ன கணக்கு!

லேசாக இடையிலே மூடிக் கொண்டிருந்த மனத்திரையை நான் அகற்றினேன்.

அதன்மூலம் எனக்குத்தான் எத்தனை வகையான லாபங்கள் வரப்போகின்றன!



வழக்கில் விடுதலைப் பெறப் போகிறேன் ; பணத்துக்குப் பணமும் வரப் போகிறது ; பாரிஜாதத்தை ஆட்டி வைக்கவும் போகிறேன். போதாதா?

அவர் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்துவிட்டார்.

"அவன் தேடுவான், நான் போகிறேன்!" என்றார்.

'அவன்' என்று சொன்னது பெரிய அண்ணியை.

இனி அண்ணி என்ன அண்ணி ! இப்போது மனைவியல்லவா அவருக்கு?

"ஆமாம், வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு, நீங்கள் இருவரும் இப்படி யெல்லாம் வீட்டில் நடக்கலாமா?" என்று கேட்டேன்.

"என்ன வயது வந்த பெண்? அவள் என்ன விஷயம் தெரியாதவளா! உன்னைப்போல் பத்துப் பேர் அவள்!" என்றார் அவர்.

அதற்கு மேல் நான் கேட்க விரும்பவில்லை.

சில மனிதர்கள் தங்கள் மேலுள்ள குற்றங்களை மறைக்கப் பிறர் மீது கலபத்தில் குற்றம்சாட்டி விடுகிறார்கள். அவர் போய் விட்டார். எனக்கு அடித்துப் போட்ட மாதிரித் தூக்கம் வந்தது. தெரியாமலா பாரிஜாதம் கொழுந்தனைப் பிடித்துக் கொண்டாள் என்று தோன்றிற்று.

விவேகசிந்தாமணியில் வரும் பாடல் மாதிரி 'நமக்குச் சுகமும் கிடைக்கிறது' என்று எண்ணியபோது, நான் செய்வது கேவலமாக ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. அதற்காகப் பேரம் பேசிப் படுக்கை விரிக்க நான் தயாராக இல்லை.

நான் நடித்த படம் ரிலீஸ் ஆகிவிட்டால் எவ்வளவோ பேர் என் வீட்டுக் கதவைத் தட்டத்தான் போகிறார்கள்.

பல விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டுதான், 'கிராமத்தில் உங்களுக்காகப் பார்க்கப்பட்ட பெண் நான்தான்!' என்று கொழுந்தனிடம் சொல்லவில்லை. அந்தத் துருப்புச் சீட்டைச் சரியான நேரத்தில் இறக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டேன்.

ஒருவழியாகப் படிப்பிடிப்பு முடியும் கட்டத்தை நெருங்கிற்று.

படத்தைப் பார்த்த பத்திரிகைக்காரர்களெல்லாம், "படம் நூறு நாள் போகும்!" என்று பேசிக் கொண்டார்கள்.

என் சிற்றப்பா அடிக்கடி சொல்வார், "அந்தக் காலங்களில் எல்லாம் ஒவ்வொரு படமும் ஒரு வருஷம் ஒன்றரை வருஷம் என்று ஓடுமாம்." இப்போது பத்துக் காட்சிகள் கொட்டகை நிறைந்தாலே முழுப்பக்க விளம்பரம் கொடுக்கிறார்கள். என் படம் நூறு நாள் ஓடினால் எனக்குப் புதிதாக எவ்வளவோ படங்கள் வராதா? நூறாவது நாள் விழாவில் நான் அழகாகச் சேலை கட்டி அமர்ந்திருக்க மாட்டேனா? மனத்தில் என்னென்னவோ கற்பனைகள்.

படம் வெளியாகும் அன்று என் உயிரே என்னிடத்தில் இல்லை.

முதல் கதை பிரசுரமாவது, முதல் இரவை அனுபவிப்பது எப்படியோ, அப்படியேதான் முதல் படம் ரிலீஸ் ஆவதும்.

என் சிற்றப்பாவும் சித்தியும் படம் ரிலீஸாகும் நான்கு கொட்டகைக்கும் டிக்கெட் எடுத்திருந்தார்கள். ஒவ்வொரு கொட்டகையிலும் எப்படி ரசிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டுமாம். அவ்வளவு ஆசை!

இந்திய மக்களின் ரசனையைப் பற்றி யாரோ எழுதியதாக எனக்கு ஞாபகம்.

ஒரு படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது மதுரையில் ஒரு காட்சிக்குக் கைதட்டு விழுந்தால், படம் ஓடும் நாற்பது ஊர்களிலும், அதே இடத்தில் கைதட்டு விழுமாம். படம் மோசம் என்று ஒரு ஊரிலே சொன்னால் நாற்பது ஊர்களிலும் அதே மாதிரிச் சொல்வார்களாம்.

என்ன ஆசையோ, நான்கு கொட்டகைகளுக்கும் சித்தியும், சிற்றப்பாவும் போனார்கள்.

நடு இரவில் அவர்கள் திரும்பி வந்தபோது, ஏதோ தீபாவளி கொண்டாடுகிறவர்கள் இரவிலே விழித்து எண்ணெய் தேய்த்து முழுகுவது போல் வந்தார்கள்.



என்னுடைய கட்டிலில் சுவாமிநாதன் படுத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

நான் கதவைத் திறந்து, என் தலையெழுத்தை விசாரித்தேன்.

"படம் ரொம்பப் பிரமாதம்!" என்றார் சிற்றப்பா.

ஜனங்கள் எல்லாரும் என்னைப் பற்றியே பேசிக் கொண்டு போனார்களாம்.

அவர்கள் ஒன்று சொன்னால், அன்புக்குரியவர்கள் பத்துச் சொல்ல மாட்டார்களா!

அவர்கள் சொன்னது பொய்யல்ல என்பதை மறுநாள் படத் தயாரிப்பாளரின் டெலிபோன் நிரூபித்தது.

எதிர்காலக் கனவுகள் எல்லாம் எனக்குள் தோன்ற ஆரம்பித்தன.

இந்த நிலையில்தான், சுவர்ணமுகி அவசர அவசரமாக என்னிடம் ஓடி வந்தாள். "சித்தி! எனக்கொரு உதவி செய்வீர்களா?" என்றாள்.

"என்ன?" என்று கேட்டேன்.

அவள் ஒருவனைக் காதலிக்கிறாளாம். அவனுடனேயே போய் வாழ ஆசைப்படுகிறாளாம்! அவளுக்கு என்ன வயசு? அதற்குள் காதலாம்; கன்றாவியாம்!

"யாரைக் காதலிக்கிறாய்?" என்று கேட்டேன்

அவள் சொன்ன பதில் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

## 14. தானாகத் தீருதடா வஞ்சம்

கலாசாரக் கழகத்துப் பெண்களை எல்லாம் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டு போவாரே, அவரைத்தான் சுவர்ணமுகி காதலிக்கிறாளாம்.

“அடிபாவிப் பெண்ணே ! பத்தோடு பதினொன்று ; அத்தோடு இது ஒன்று என்று விளையாடப் பார்க்கும் ஒருவரிடமா, நீ ஆசை வைத்திருக்கிறாய் ?” என்று கேட்டேன்.

“அவர் அப்படி யெல்லாம் இல்லை, சித்தி ! ஏதோ பெண்களிடம் வேடிக்கையாகப் பேசுவாரே தவிர, மோசமாக நடப்பவர் அல்ல.” என்று என்னையே திருத்த முயன்றாள் அவள்.

‘யார் என்ன சொன்னாலும் செல்லாது, அணை போட்டுத் தடுத்தாலும் நில்லாது’ என்று யாரோ பாடியதுபோல், ஆணையும் பெண்ணையும் பைத்தியம் பிடிக்க வைக்கும் காதல் அல்லவா, இது? சொல்லித் தெரிகிற வயசா? பட்டும் கெட்டும் அறிய வேண்டிய பருவம் அல்லவா? அவளைச் சொல்லிக் குற்றமில்லை.

‘தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், மகளைப் படிக்கட்டில் பார்க்க வேண்டாம்,’ என்பார்கள்.

மகளுக்குத் தெரியத் தாய் தவறு செய்தால், அது மகளுக்கு லைசென்ஸ் வழங்கியது போல ஆகி விடுகிறது.

அந்தப் பாவியை அவள் எங்கு சந்தித்தாள் என்ற விவரங்களையெல்லாம் நான் கேட்க விரும்பவில்லை. கலாசாரக் கழகத்தில்தான் சந்தித்திருப்பாள் என்பது தெரியாதா எனக்கு !

என் கணவரின் குடும்பம்தான் எப்படியாகி விட்டது! இல்லை, எப்படிப்பட்ட குடும்பத்தை அவர் கட்டி மேய்த்திருக்கிறார் என்று எண்ணியபோது, எனக்கு அவர் மீது ஓர் அனுதாபம் பிறந்தது.

“அடி அம்மா ! இதில் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நீயே நன்றாக யோசித்து முடிவு செய். நாம் எல்லாருமே கெட்டுப் போய் விட்டால், நம்மிலே தலை தூக்கி நடப்பதற்கு யார் இருக்கப் போகிறார்கள் ? உன் அப்பா வாழ்ந்த வாழ்க்கைக்கு, நீ ஓரிடத்தில் ஒழுங்காக இருந்தால் சரிதான் ! உனக்குப் புத்தி சொல்லக்கூடிய யோக்யதையில் நான் இல்லை ; ஆனால் இந்த விஷயத்தில் அபிப்ராயம் சொல்ல முடியும். அவனை நம்பி நீ உருப்பட முடியாது,” என்று கூறிவிட்டேன்.



சுவர்ணமுகி வருத்தத்தோடு போய் விட்டாள்.

நானும் பேசாமல் இருந்து விட்டேன்.

என் வாழ்க்கையில் விழுந்தகோடுகள் எல்லாம் மாக்கோலங்களாகி விட்டன. தவறான கவடுகளும் இருக்கத்தானே செய்தன? இப்போதுதானே என் ரயில் வண்டி தண்டவாளத்தின் மீது ஏறி நிற்கிறது? இனி அது எந்த வேகத்தில் ஓடப் போகிறதோ? உண்மையில் அது வேகமாகவும் பாதுகாப்பாகவும் ஓடத் தொடங்கி விட்டது.

நாளுக்கு நாள் நான் நடித்த படத்துக்குப் பெரும் வரவேற்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

‘இவரைப் பார்த்தால் புதுமுகமாகத் தெரியவில்லை!’ என்று பத்திரிகைகள் எல்லாம் எழுதின.

இனி வரும் படங்களுக்கெல்லாம் எவ்வளவு ‘ரேட்’ வாங்க வேண்டும் என்று என் சித்தியும், சிற்றப்பாவும் திட்டமிட ஆரம்பித்தார்கள்.

சினிமா உலகில் நுழைந்தவுடனே எல்லாருக்கும் அப்படியொரு சுபாவம் வந்து விடுமோ? அது யாரும் சொல்லிக் கொடுத்து வருவதல்ல. ‘அது வந்தாலும் பரவாயில்லை ; தலைக்கனம் மட்டும் வந்து விடக்கூடாது!’ என்று எனக்குள் நான் பேசிக் கொண்டேன்.

இந்தக் காலத்தில்தான், எந்தத் துறையிலும் திறமை வளர்வதற்கு முன், திமிர் வளர்ந்து விடுகிறதாமே!

நடிக்கத் தெரியாத நடிகரும், எழுதத் தெரியாத எழுத்தாளனும், பாடத் தெரியாத பாடகனும் தலையைத் தூக்கிக் கொண்டலையும் காலமல்லவா இது?

ஒருவரிடம் உண்மையிலேயே திறமை இருக்கிறதா என்பதைச் சோதிக்க வேண்டுமானால், அவரிடம் பணிவிருக்கிறதா என்பதையே முதலில் சோதிக்க வேண்டும்.

உன்னதமான திறமை முதன் முதலில் ஜொலிக்க ஆரம்பிக்கும் இடம் பணிவு. அந்தப் பணிவை எனக்கு அளிக்குமாறு நான் இறைவனிடம் வேண்டிக் கொண்டேன்.

ஆரம்பமாகி விட்டது, என் புகழ் வாழ்க்கை.

படம் வெளியான முப்பதாவது நாள் ஒருகார் வந்து நின்றது. தொடர்ந்து கார்கள் வரத் தொடங்கின.

எல்லாரும் என்னை ஒப்பந்தம் செய்ய வந்ததாகவே சொன்னார்கள்.

ஒருவருக்கு அகந்தையையும் ஆணவத்தையும் உண்டாக்க இது போதாதா?

அப்போதும் பணிவைப் பற்றிய பயத்துடனேயே நான் இருந்தேன்.

இப்போதெல்லாம் எனக்கு ஆலோசகர் சுவாமிநாதன்தான்.

அவர் என்னைப் 'பாப்பா' என்றுதான் கூப்பிடுவார்.

காதலியையோ, மனைவியையோ, 'பாப்பா' என்று கூப்பிடுவது, காதலின் உச்ச கட்டம்.

எனக்குச் சொந்தக்காரர், உரிமையானவர் என்ற முறையில் நான் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் அதன் விளைவு என்னவாயிற்று?

அன்று இரவு...

வழக்கமாக வரும் சுவாமிநாதனை அன்று காணவில்லை.

நான் ஷூட்டிங் முடித்துத் திரும்பியதும், மொட்டை மாடியில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டேன்.

இரவு மணி பதினொன்றாகியும் என் சக்களத்தியின் வீட்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

ஏதோ சத்தம் கேட்டது. சுவாமிநாதன் உரத்த குரலில் சத்தம் போட்டார். அதை விட உரத்த குரலில் பாரிஜாதம் சத்தம் போட்டாள்.

"உனக்குக் கணக்கிருந்தால் அல்லடி எனக்கும் கணக்கிருக்கும்?" என்று சுவாமிநாதன் சொன்னது கேட்டது.

சரிதான், புரிந்து விட்டது. சுவாமிநாதன் என் வீட்டுக்கு வருவது பற்றித்தான் தகராறு போலிருக்கிறது!



"உனக்கு ஊரில் கிடக்கிற கழுதைகளையெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசை," என்றாள் பாரிஜாதம்.

"நீயும் அதில் ஒரு கழுதைதான்," என்றார் சுவாமிநாதன்.

கணவனுக்குத் துரோகம் செய்தாள் பாரிஜாதம். ஆனால் தனக்குத் துரோகம் செய்யக் கூடியவனையே தேர்ந்தெடுத்துக் கொண்டாள். மிகுந்த நம்பிக்கையோடு சொத்துக்களையும் அவன் பெயருக்கு மாற்றினாள். இனி என்ன செய்யப் போகிறாள்?

எதிர் வீட்டில் அடிதடி ஆரம்பமாகி விட்டது. நான் போய் அதைத் தடுக்க முடியுமா?

திடீரென்று கண்ணாடிப் பாத்திரங்கள் உடையும் சத்தம் கேட்டது.

'கொலை செய்தவர்கள் கொல்லப்படுவார்கள்,' என்பதற்கேற்ப, ஏதேனும் நடந்து விடுமோ என்று நான் கவலைப்பட்டேன்.

திடீரென்று வெளிக்கதவு திறந்தது; சுவாமிநாதன் வெளியே வருவது தெரிந்தது.

அவர் வேறு எங்கே வருவார்? என் வீட்டை நோக்கித்தான் வந்தார். நானும் கீழ்ப்பகுதிக்குச் சென்று அவரை வரவேற்றேன்.

"வாடி, மொட்டை மாடிக்குப் போவோம்," என்றார் அவர்.

"எதற்கு?" என்று கேட்டேன்.

"அவள் பார்க்கும்படி விளக்கைப் போட்டுக் கொண்டு நிற்க வேண்டும்," என்றார்.

"ஐயோ, இது ஒரு ஆசையா? போகிறாள், விடுங்கள். நீங்கள் உள்ளே வந்து படுங்கள்," என்றேன்.

"இல்லை, அவளைச் சும்மா விடக் கூடாது. இந்த நாய்க்கு உள்ள உரிமை உனக்கில்லையா? சொல்லப் போனால் அந்த வீட்டிலே உனக்கும் சமபங்கு உண்டு. அதனால்தான் அதை நான் என் பெயரிலேயே வாங்கிக் கொண்டேன். அவளைவிட உன்னிடம் தான் எனக்கு அதிக ஆசை உண்டு. உரிமை உண்டு; இங்கே நான் வரக்கூடாதாம். இந்த நாய் யார் என்னைத் தடுப்பதற்கு? நாளைக்கு

நான் கழுத்தைப் பிடித்துத் தள்ளினால் தெருவிலே போய் அலைய வேண்டும்," என்று ஒரு மூச்சு அளந்தார் அவர்.

அவர் பேசிய விஷயங்கள் எல்லாம் எனக்கு மகிழ்ச்சியையே தந்தன.

நன்மை வந்தாலும், தீமை வந்தாலும் தொடர்ந்து வரும் என்பார்கள். எனக்குப் புகழும் பொருளும் வந்த நேரத்தில், பழி தீர்க்கும் வாய்ப்பும் வந்தது. என் வழக்கும் விடுதலையாகும் ; பாரிஜாதமும் துரத்தப்படுவாள் ; போதாதா எனக்கு?

ஆனாலும் ஒன்று. இந்த மனிதர்கள் குடித்து விட்டால் ஏதேதோ பேசுகிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் பேசுவதை யெல்லாம் அடுத்த நாள் காலையில் மறந்து விடுகிறார்கள்.

சரி சரி, ஏதாவது காரியம் ஆக வேண்டுமென்றால், நாலு கிளாசு ஊற்றிக் கொடுத்து விட்டால் போகிறது!

"வாடி, மொட்டை மாடிக்கு வா," என்று அவசரப் படுத்தினார் அவர்.

'அங்கே போய் விளக்கைப் போடுவது எப்படி? இப்போது தான் ஊராருக்கே என்னைத் தெரியுமே!' என்று, நான் பயந்தேன்.

"கொஞ்ச நேரம்தான், வா," என்றார் ; வேறு வழி இல்லாமல் போனேன்.

மொட்டை மாடிக்குப் போனதும், "ஏ, பாரிஜாதம்...!" என்று கத்தினார்.

கோர்ட்டு டவாலி மாதிரி அவர் இரண்டு மூன்று தரம் சத்தம் போட்டதும், அந்த வீட்டு ஜன்னல் திறந்தது. பாரிஜாதம் எட்டிப் பார்த்தாள்.

சுவாமிநாதன் என் தோள் மீது கை போட்டார்.

பாரிஜாதம் காறித் துப்பி விட்டு, ஜன்னலைச் சாத்தினாள்.

நான் திரும்பிப் பார்த்தேன். பல வீடுகளில் ஜன்னல் கதவுகள் திறந்திருந்தன.

## 15. அவளுக்கொரு காலம்

சென்னை நகரத்தில் இத்தகைய காட்சிகள் அபூர்வமானவையல்ல ; அதிசயமானவையல்ல.

நூற்றுக்கு அறுபது மாடிகளில், ஏதோ ஒரு நீலப்படம் நடந்து கொண்டுதானிருக்கிறது.

ஒருவர் வீட்டில் இன்னொருவன் படுத்திருப்பது, ஒருத்தி அங்குமிங்கும் அலை மோதுவது. இவையெல்லாம் சென்னையில் சர்வ சாதாரணம்.

சென்னையில் என்ன, தமிழகம் முழுவதிலுமே இவை சகஜமாகி வருகின்றன.

தமிழ்த் திரைப் படங்களிலே கூட, ஒருத்தி நான்கு பேரைக் காதலித்தால் தான் படம் நன்றாக ஓடுகிறது.

அடுத்தாற்போல் நான் நடிக்கப் போகும் படத்தின் கதையைப் படத்தின் தயாரிப்பாளர் எனக்குச் சொன்னார். அதிலே நான்கு காதலர்களல்ல ; மூன்று காதலர்கள் வருகிறார்கள்.

காதலித்தவன் ஒருவன், கைப்பிடித்தவன் ஒருவன், உடலுறவில் சுகம் காட்டியவன் ஒருவன் - இப்படிப்பட்ட படங்கள் தானே இப்போது வெற்றிகரமாக ஓடுகின்றன!

காரணம் என்ன? மொத்த சமுதாயத்தின் மனோபாவமே அப்படி ஆகிப்போயிருக்கிறது. தற்காலத்து மனிதர்கள் அலுத்துப் போய்விட்ட சூழ்நிலையில், கற்காலத்தை நோக்கி நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலே, நானும் சுவாமிநாதனும் என்ன செய்து விட்டோம் என்று இத்தனை வீடுகளில் எட்டிப் பார்க்கிறார்கள்!

வேறொன்றுமில்லை ; நான் புகழ் பெற்று விட்டேன்!

புகழ் பெற்ற மனிதர்கள் தவறு செய்தால், அவர்கள் செய்யும் தவறுகளும் புகழ் பெற்று விடுகின்றன.

"சரி, வா, அந்த வீட்டில் உனக்கு உரிமை இல்லையா? நாம் அங்கேயே போய் விடுவோம்," என்று அழைத்தார் சுவாமிநாதன்.

"எதற்கு இந்த வம்பு? ஏன் இந்த வீண் தகராறு? எனக்கு அதற்கு நேரம் ஏது?" மெதுவாக நான் அவரைச் சமாதானப்படுத்தினேன்.

"வாருங்கள். இந்த நேரத்தில் என்னென்னவோ தோன்றும். ஓடிப்போய் அவளைக் கத்தியால் குத்தி விடலாமா என்று கூட நினைவு வரும். நிதானமான நேரத்தில் என்ன காரியம் செய்தாலும் அதை நியாயப்படுத்தி விட முடியும். குடித்திருக்கும்போது என்ன நியாயமான காரியத்தைச் செய்தாலும் அதை நியாயம் என்று உலகம் ஒப்புக் கொள்ளாது. மிக உன்னதமான மனிதனைப் 'பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு போய் விட்டுவிட்டு வாருங்கள். அவன் உண்மையாகச் சொல்லுகிற வார்த்தைகள் அனைத்துமே பைத்தியக்காரனின் வார்த்தைகள் போல் தோன்றும். கொஞ்சம் சாப்பிட்டு விட்டு நீங்கள் படுத்துத் தூங்குங்கள். காலையில் யோசித்தால் உங்களுக்கே வேறு அபிப்பிராயம் தோன்றும்," என்றேன் நான்.

அவர் சிரித்தபடியே, "அடி அம்மா, நீ மட்டும் அரசியலில் ஈடுபட்டிருந்தால், ஒரு மந்திரியாகவே ஆகி இருப்பாய்," என்றார்.

"நல்லவேளை, விசாரணை இல்லாமல் தப்பினேன் நான்!" என்று சிரித்தேன் நான்.

"என்ன சாப்பாடு?" என்று கேட்டார்.

என்ன இல்லை எங்கள் வீட்டில்? நன்றாகச் சாப்பிட்டார்; தூங்கி விட்டார்.

காலையில் எழுந்ததும், "நீ நடிக்கும் படத்தின் ஷூட்டிங்கை இன்றைக்கு நான் பார்க்கப் போகிறேன்," என்றார்.

"ஓ! பாருங்களேன்! இன்றைக்குக் கிளியோபாத்ரா வாக நடிக்கிறேன். ஆண்டனியும் கிளியோபாத்ராவும் சந்திக்கும் கட்டம். முதலில் சீஸர், பிறகு ஆண்டனி என்பது தானே அவர்களது வாழ்க்கை! முதலில் அண்ணன், பிறகு தம்பி என்பதுதானே எனது



வாழ்க்கை! நான் அவள் போன்ற அழகியில்லை என்றாலும், சரித்திரம் ஒன்றாகத்தான் இருக்கிறது!" என்றேன்.

"கிளியோபாத்ரா உன்னை விட அழகு என்று யார் சொன்னது?" என்றார்.

சில மனிதர்களுக்குக் காலையில் எழுந்ததும் காதல் பொங்கிவிடும்.

"சரி போதும், போய்க் குளித்து விட்டுப் பத்து மணிக்கு ஸ்டுடியோவுக்கு வாருங்கள். பாவம் சுவர்ணமுகி ஷூட்டிங் பார்க்க ஆசைப்பட்டாள். பாரிஜாதம் அனுமதித்தால் அவளையும் கூட்டி வாருங்கள்!" என்றேன்.

அந்த அவசரத்தில், சுவர்ணமுகியின் காதலைப் பற்றி நான் அவரிடம் பேச விரும்பவில்லை.

"பாரிஜாதம் என்ன அனுமதிப்பது? அவள் என் மகள். கூட்டிக் கொண்டு வருகிறேன்," என்றார் அவர்.

சில பிரபல நடிகைகள் ஒன்பதுமணி ஷூட்டிங்கிற்குப் பன்னிரண்டு மணிக்குத்தான் வருவார்களாம். எவ்வளவு முன்னேறினாலும் எனக்கு அந்தப் புத்தி மட்டும் வராது. நான் ஒன்பது மணிக்கெல்லாம் செட்டில் இருந்து விடுவேன்.

'ஒரளவோடு பணத்தை வாங்கிக் கொண்டு, கொடுத்த தேதியில் குறித்த நேரத்தில் செட்டில் இருந்தால் சாகிற வரை நடித்துக் கொண்டே இருக்கலாம். இல்லையேல் இளம் பருவத்திலேயே ரிடையராக வேண்டியிருக்கும்!' என்று, என்னிடம் ஒரு கதாசிரியர் ஏற்கனவே சொல்லியிருந்தார்.

ஷூட்டிங் ஆரம்பமாயிற்று.

ஷேக்ஸ்பியரின் வசனங்களுக்கு மெருகேற்றியிருந்தார் தமிழ்க் கதாசிரியர்.

என்னுடைய 'மேக்-அப்'பைக் கண்ணாடியில் பார்த்த போது, நான் போன ஜென்மத்தில் எகிப்திலே பிறந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

சாதாரணமான சுங்கடிப் புடவையிலும், குங்குமப் பொட்டிலும் திருப்தியடைந்து கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு இந்த மாற்றங்கள் மிகவும் சுகமாக இருந்தன.

நான் ஒரு கட்டிலில் படுத்திருக்கிறேன். ஆண்டனி என் மார்பின் மீது சாய்ந்து என்னை ஆரத் தழுவுகிறார்.

"உனக்காக இருபதினாயிரம் சீஸர்களும் நாற்பதினாயிரம் ஆண்டனிகளும் உயிரை விடத் தயாராக இருப்பார்கள்!" என்கிறார். நான் மெய் மறந்து போகிறேன். இது கட்டம்.

தொடை வரையில் என் ஆடை விலகிக் கிடக்க வேண்டும் என்றார் டைரக்டர்.

விலகுகிறதுதான் விலகுகிறது, எது வரையில் விலகினால் என்ன?

நானே சொல்லக்கூடாது. எனது கால்கள் வாழைத் தண்டு போல் பளபளப்பாக இருக்கும்!

அந்தக் கால்களை அப்படியே ஆண்டனி தடவிக் கொண்டு முத்தமிடுவது போல் நடிக்கவேண்டும்.

இந்தப் படத்தில் என்னோடு நடித்தவர் வேறு நடிகர். நடிப்பில் மிகவும் சிறந்தவர் என்று பெயர் வாங்கியவர். ஆனால், கொஞ்சம் தற்பெருமையுடையவர்.

என்னையோ, என்னுடைய அழகையோ அவர் தனிப்பட்ட முறையில் ரசித்ததாகத் தெரியவில்லை.

நான்தான் என்ன, எல்லா நடிகர்களையும் ஒரு கை பார்ப்பது என்றா சினிமாவுக்குள் நுழைந்தேன்?

அவர் அலட்சியப்படுத்தியது போலவே, நானும் அவரை அலட்சியப் படுத்தினேன். ருக்கால்வாசி சினிமா உலகமே அதுதானே!

கட்டித் தழுவும்போது காதலில் உருகுவார்கள். காட்சி முடிந்ததும் நாயும், பூனையும் போல் ஆகிவிடுவார்கள்.



27631
141L896

வீடு திரும்பும்போது சுவர்ணமுகி என்னை வியந்து வியந்து பாராட்டினாள்.

டிரைவர் இருக்கிறாரே என்ற வெட்கம்கூட இல்லாத சுவாமிநாதன், 'நம் கை பட்டால் எல்லாமே மெருகேறி விடும்!' என்றார்.

"பின் ஏன் அம்மாவோடு அப்படிச் சண்டை போடுகிறீர்கள்?" என்று கேட்டாள் சுவர்ணமுகி.

அவள் கேட்க வேண்டிய கேள்வியா இது?

இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் என்னென்ன வகையில், எவ்வளவு தைரியம் வந்துவிடுகிறது.

"சினிமாப் படத்திலே பார். பதினாலு வயதுக் குழந்தைகூட மன்மதக் கலையில் முன்னேறி விடுகிறது. உன் அம்மாவுடைய யோக்கியதைக்குச் சண்டை போடாமல் என்ன செய்வது?" என்று கேட்டார்.

"இதோ பாருங்கள், நீங்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்ளும் பேச்சா இது? கொஞ்சம் பேசாமல் இருங்கள்," என்றேன் நான்.

அன்றிரவு, சுவாமிநாதனை என்னோடு தங்க விடாமல், பாரிஜாதத்தைத் தாஜா பண்ண வைக்கவேண்டும் என்று நான் முடிவு கட்டினேன்.

கிராமத்தில் அவள் பெயரில் நூற்று இருபது ஏக்கர் நிலம் இருக்கிறதே! அதையும் எழுதி வாங்கினால்தானே, அவளை நிர்கதியாக விட முடியும்?

சுவாமிநாதனும் நான் சொன்னதை ஒப்புக் கொண்டார்.

அன்று கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கலாம் என்று நான் எண்ணியபோது, எனக்கு இன்னொரு மாப்பிள்ளை வந்து சேருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

வெள்ளிவிழாக் கொண்டாடிய என் முதற் படத்தின் கதாநாயகன், தள்ளாடியபடியே உள்ளே நுழைந்து விட்டார்.

அவர் அப்படிப்பட்ட சுபாவம் உள்ளவரல்ல என்று என்னிடம் சொல்லியிருந்தார்கள்.

அறிமுகமாகிக் கடந்த பத்து மாத காலங்களில் என்னிடம் முறை தவறிக் கூடப் பேசியறியாதவர் அவர்.

திடீரென்று சுவாமிநாதன் வந்து விட்டால் நம்முடைய வீடே சினிமாப் படம் ஆகிவிடுமோ?

யார் கதாநாயகன், யார் வில்லன் என்று தெரியாமல் போய் விடுமோ?

நான் அவரை வரவேற்றேன். சினிமா நடிகைகள் வழக்கப்படி ஜூஸ் கொடுத்தேன். சாப்பிடச் சொன்னேன்.

"இது என்ன ஜூஸ் சாப்பிடுகிற நேரமா?" என்று கூறி விட்டார்.

"என்ன விஷயம்?" என்று நான் பொதுப்படையாகக் கேட்டேன்.

"வா, மொட்டை மாடிக்குப் போகலாம்," என்றார்.

மற்றவர்களிடம் கேட்பதானால் ஒன்றும் தெரியாதவளைப் போல, 'எதற்கு?' என்று கேட்கலாம். வந்திருப்பவரோ சினிமா உலகில் பழமும் தின்று கொட்டையும் போட்டவராயிற்றே!

மெதுவாகப் போய்ப் புதிதாகத் தைத்திருந்த இரவு நேரக் கவுனை அணிந்து கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றேன். பின்னாலேயே அவர் வந்தார்.

மேலே வந்தவர் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் பளிச்சென்று என்னைக் கட்டிப் பிடித்து அழுத்தமாக ஒரு முத்தம் கொடுத்து விட்டார்.

"ஐயையோ! என்னை விடுங்கள், விடுங்கள்!" என்றேன். விட மறுத்து விட்டார்.

திடீரென்று கீழே, "எங்கே அவன்? எங்கே அவன்?" என்று சத்தமிடுவது போல் கேட்டது.



தடதடவென்று யாரோ மாடிப்படி ஏறும் சத்தம் கேட்டது.

யாரோ ஒரு அம்மையார் பத்ரகாளி போல் உள்ளே நுழைந்தார்கள்.

"தெரியுமே, உன் பொறுக்கித்தனம்!" என்றார், அந்த அம்மையார்.

என்னைத்தான் சொல்கிறாரோ என்று நான் எண்ணிய போது, "நீ ஏண்டி இங்கே வந்தாய்?" என்றார் அவர்.

"அட, வா கழுதை! மானங்கெட்ட கழுதை!" என்றார், அந்த அம்மையார்.

வந்தவர் அவரது மனைவியாம்!

எங்கள் வீட்டு மொட்டை மாடி அல்லோலகல்லோலப் பட்டது.

அப்போது பாரிஜாதத்தின் வீட்டு விளக்குகள் எரிந்தன.

அங்கே பாரிஜாதமும், சுவாமிநாதனும் எங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

## 16. நாலைப் போலச் சேலை

'குதிரையை நீ வேடிக்கை பார்த்தால், அதன் குட்டி உன்னை வேடிக்கை பார்க்கும்!' என்பார்கள்.

ஆனால் இங்கே என் கூட நின்று வேடிக்கை பார்த்தவர் அல்லவா, அங்கே இன்னொருத்தியின் கூட நின்று வேடிக்கை பார்க்கிறார்.

வாய்ப்புகள் இடம் மாறுகின்றன ; வசதிகள் நேரத்திற்கு மாறுகின்றன.

அது போகட்டும், சுவாமிநாதன் இப்போது என்னைப் பற்றி என்ன நினைப்பார்?

சீ ! பெண்ணா இவள்? ஒரு பிரபல நடிகரின் மனைவி, கணவனையே 'நீ', 'நான்' என்று பேசுகிறாள். அவரும் சளைக்காமல், 'நீ அவனோடு போகவில்லையா?' என்கிறார். கணிசமான அளவு குடும்பங்கள் அலங்கோலமாகத்தான் இருக்கின்றன.

சுவாமிநாதன் அங்கிருந்தபடியே, "என்ன ? என்ன?" என்று கை காட்டினார்.

'நாளைக்குச் சொல்கிறேன்,' என்பது போல் நான் கை காட்டினேன்.

அதிக நேரம் பாரிஜாதம் வேடிக்கை பார்க்கும்படி விட்டு விடாமல், விளக்கை அணைத்துக் கொண்டார் சுவாமிநாதன்.

வந்திருந்த பெண்மணி தன் கணவனை மட்டும் ஏசவில்லை. என்னையும் நன்றாகப் பதம் பார்த்துவிட்டாள்.

அவள் சொன்ன வார்த்தைகளுக்கு ஒரு தனி அகராதியே தயாரிக்கலாம் போலிருந்தது.

தன் கணவனைக் கையோடு இழுத்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

குடிகாரர்கள், ஒரு குறிப்பிட்ட நேரம் வரைதான், பலமுள்ளவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். குடி அதிகமானதும் தளர்ச்சியடைந்து விடுகிறார்கள். சொல்லப் போனால் பெண் உறவுக்கே லாயக்கற்றவர்களாகி விடுகிறார்கள்.

அன்று அவர் என்னோடு தங்கியிருந்தாலும், அவர் என்னைத் தொட்டிருக்கப் போவதில்லை. அவருடைய உடல் நிலை அப்போது அப்படி

நல்லவேளை ! எப்படியோ மூன்றாவது நபரும் சுவை பார்த்த கரும்பாக ஆகி விடாமல், நான் தப்பினேன்.

மறுநாள் காலையில் ஏதோ சத்தம் கேட்டது. "மஞ்சுளா! மஞ்சுளா!" என்று யாரோ கூப்பிடுவது போல் கேட்டது.

புல்வெளியில் நின்று அங்குமிங்கும் பார்த்தேன்.



பாரிஜாதத்து வீட்டு மாடியில் நின்று கூப்பிட்டவர், சுவாமிநாதன்தான்.

'என்ன விஷயம்?' என்பது போல் கை காட்டினேன்.

"காலையில் சுவர்ணமுகி வந்தாளா?" என்று கேட்டார்.

எனக்குப் புரிந்து விட்டது.

முதல் நாள் நாங்கள் ஷூட்டிங் முடிந்து திரும்பும்போது கோடம்பாக்கம் ஹைரோடும், உஸ்மான் ரோடும் சந்திக்கும் இடத்தில் சுவர்ணமுகி காதலிக்கும் நபரின் கார் நின்று கொண்டிருந்தது. அவன் ஏதோ ஜாடை காட்டிக் கொண்டே வந்தான். நான் கையைத் தட்டித் தட்டி விட்டேன். சுவாமிநாதன் முன்சீட்டில் இருந்ததால் இவற்றைக் கவனிக்கவில்லை. நிச்சயமாக அவனோடுதான் சுவர்ணமுகி ஓடியிருப்பாள் என்பது எனக்குப் புரிந்தது. இப்போது என்ன செய்வது?

வயசுப் பெண்ணைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, பெற்றவள் லீலை செய்தால், அந்தப் பெண்ணின் ஆசைகள் தினமும் தூண்டப்படுவது இயற்கைதானே!

நான் என் வீட்டுக்கு வரும்படி சுவாமிநாதனுக்குக் கை காட்டினேன்.

ஒரு பக்கத்தில் ஷூட்டிங்கிற்காகக் கார் காத்துக் கொண்டிருந்தது.

சுவாமிநாதன் மளமளவென்று இறங்கி ஓடி வந்தார்.

சுவர்ணமுகி என்னிடம் சொல்லியிருந்த எல்லா விஷயங்களையும் அவரிடம் சொன்னேன்.

"இதை ஏன் முன்கூட்டியே என்னிடம் சொல்லவில்லை?" என்று வருத்தப்பட்டார்.

"அப்படியொன்றும் சீக்கிரமாக நடந்து விடாது என்று நினைத்தேன்," என்றேன்.

என்னிடம் யோசனை கேட்டார்.

"பாருங்கள், அந்த நபரின் விலாசத்தைக் கலாசாரக் கழகத்தில் விசாரித்துத் தெரிந்து கொண்டு விடலாம். ஆனால், இன்றைக்கு நாம் அவளைத் தேடுவோம் என்று தெரிந்து அவன் அவளை அங்கே வைத்திருக்க மாட்டான். மூன்று நாட்கள் சத்தமில்லாமல் விட்டு விட்டுத் தேடினால் சுவர்ணமுகியைப் பிடித்து விடலாம்!" என்றேன்.

"ஐயோ! அதற்குள் அவன் அவளைக் கெடுத்து விடுவானே!" என்றார்.

"ஓகோ! இன்னும் அவன் கற்போடிருப்பதாக உங்களுக்கு எண்ணமோ? சுவர்ணமுகியை அவன் கெடுத்தது பற்றி, உங்கள் அண்ணனே என்னிடம் சொல்லியிருக்கிறார். ஆனால், கதை அதோடு போய்விடும் என்று நினைத்தேன். அவனோடு வாழ்வதற்காகச் சுவர்ணமுகி ஓடுவாள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாமலிருந்தது. சுவர்ணமுகி சொல்லும்போது கூட, நான் அதை நம்பாமல் இருந்தேன். எப்படி எப்படியோ ஆகிவிட்டது," என்றேன் நான்.

"சரி சரி! பிறகு அவளைத் தேடித்தான் என்ன பிரயோசனம்? இனி அவளைக் கொண்டு வந்து வைத்துத்தான் என்ன பயன்? பேசாமல் கை கழுவி விட்டு விடுவோம்!" என்றார் அவர்.

அப்போது எனக்குப் பாரிஜாதத்தின் மேலுள்ள கோபமெல்லாம் போய், இரக்கமே பிறக்கத் தொடங்கிற்று.

ஆண்டவன் லீலையைப் பாருங்களேன்!

ஒருத்தி கணவனுக்குத் துரோகம் செய்கிறாள் என்றால், அவளுக்கு எத்தனை பேர் துரோகம் செய்கிறார்கள்!

'விதைப்பது அறுக்கப்படும்; நீ நினைப்பது போல் உனக்கு வரும்!' என்பது எவ்வளவு பெரிய உண்மை!

அதற்காக சுவர்ணமுகியைத் தேடும் முயற்சியைக் கை விடுவதா? இன்னும் இரண்டு மாதம் கழித்து அவள் வாயும் வயிறுமாக அலைவதைப் பார்த்துக் கொண்டிருப்பதா?

எனக்கு இப்போது கொஞ்சம் ஆள்பலம் கிடைத்திருக்கிறது.



என்னை வைத்துப் படம் எடுப்பவர்களில் கே.ஆர்.பி. என்றொரு தயாரிப்பாளர். அவர் பெரிய 'ரௌடி' என்று பெயர் வாங்கியிருக்கிறாராம். இதுவரைக்கும் நான்கு கொலைகள் செய்திருக்கிறாராம். நான்கிலும் தப்பி விட்டாராம். ஆனால், பார்ப்பதற்குப் பரம சாது. பழனிக்கு மாதம் ஒரு முறை போவார். கட்டுக் கட்டாக விபூதி பூசுவார். காலணா அகலம் குங்குமப் பொட்டு வைப்பார். அவர் ஸ்டுடியோவுக்கு வரும்போதே, பின்னாலே ஏழெட்டு ரௌடிகள் வேனில் வருவார்கள். என்னிடம் அவருக்குப் பாசம் உண்டு. வேறு கெட்ட ஆசை இல்லை. அவரிடம் நான் சொன்னால் போதும். ஆளையே காணாமலடித்து விடுவார்.

அந்த எண்ணம் வந்ததும், அதைச் சுவாமிநாதனிடம் சொன்னேன்.

கையைத் தலையில் வைத்துக் கொண்டு, சோபாவில் உட்கார்ந்திருந்த அவர், "அதையாவது செய்யேன். சுவர்ணமுகி கிடைக்கா விட்டாலும், அவனை நாலு தடவை உதைத்தால் போதும்," என்றார்.

இது என்ன ஆசையோ?

ஒரு ரசிகர் ஒரு கவிஞருக்குக் கடிதம் எழுதியிருந்தாராம். அதில் ஒரு கேள்வி கேட்டிருந்தாராம்.

'ஒருவரைக் கொலை செய்த குற்றத்திற்காக, இன்னொருவருக்கு ஆயுள் தண்டனை தரப்படுகிறது. இவரை ஆயுள் காலம் தண்டிப்பதன் மூலம், பாதிக்கப்பட்ட குடும்பம் அடையப் போகும் பலன் என்ன?" என்பதே அந்தக் கேள்வி.

அந்த நபரை உதைத்து விடுவதாலேயே, நமது பெண் பாதுகாக்கப்பட்டு விடுவாளா? கற்பு திரும்ப வந்துவிடப் போகிறதா? - இது ஒருவகை அரிப்பு. அவ்வளவுதான்.

நான் அவரை நிம்மதியாக்கி வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஷூட்டிங்கிற்குப் புறப்பட்டேன்.

போகும் வழியில் கே. ஆர். பி. வீட்டில் இறங்கினேன்.

கே. ஆர். பி. அப்போதுதான் பலகாரம் சாப்பிட்டு விட்டு, பஸ்ரூட் சம்பந்தமாக வந்தவர்களோடு பேசிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், "என்னம்மா !" என்று விசாரித்தபடி எழுந்து வந்தார்.

அவரிடம் ரகசியமாக விஷயத்தைச் சொன்னேன்.

"நீ பேசாமல் போ ! நாளைக்கு அந்தப் பெண் உன் வீட்டில் இருப்பாள் !" என்றார் அவர்.

"உங்கள் ஆட்கள் போகும் போது என் கொழுந்தனையும் கூட்டிப் போகச் சொல்லுங்கள்!" என்றேன் நான்.

கே. ஆர். பியின் ரௌடி வேலைகள் எப்படி நடக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு ஆசையாக இருந்தது.

அவர் சம்மதித்தார். "ஏன், நீயும் வேண்டுமானாலும் போயேன்," என்றார்.

"ஐயையோ ! வேண்டாம்," என்றேன்.

அவருடைய ஆட்கள் அனைவரையும் போலீஸார் தொட மாட்டார்கள். அவ்வளவு 'கட்டை' போட்டிருக்கிறார் இலாகாவுக்கு.

நான் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன்.

மறுநாள் அதிகாலை ஆறு மணிக்கு, 'ஓ'வென்று அழுதபடி, சுவர்ணமுகி உள்ளே வந்தாள்.

அவள் முடியைப் பிடித்துத் தள்ளியபடி சுவாமிநாதன் வந்தார்.

"காதலாடி காதல்!" என்று கர்ஜித்தார் சுவாமிநாதன்.

ஒத்தாசைக்குப் பத்துப் பேர் இருந்தால், செத்துப் போன குதிரையும் பந்தயத்தில் ஓடுமே!

"உஸ் ! அவளை விடுங்கள். என்ன இது ?" என்று அவரைத் திட்டுவதுபோல் திட்டி, "நீ வாடி கண்ணு! வாம்மா! வாம்மா," என்று சுவர்ணமுகியை அழைத்துக் கொண்டு உள்ளே போனேன்.



"ஏண்டி உனக்கு அறிவிருக்கிறதா? நான் எவ்வளவு சொன்னேன்? கல்யாணம் வேண்டும் போல் தோன்றினால், நமக்கிருக்கிற பணத்துக்கும் பவிசுக்கும் ராஜா மாதிரி மாப்பிள்ளை கிடைக்க மாட்டானா? பைத்தியக்காரி, அந்தக் காலிப் பயலா உனக்கு மாப்பிள்ளை? நாளைக்கு உன்னிடம் ஆசை தீர்ந்து போனால், அடுத்தவளைப் பார்க்கப் போகிறான். அவனை நம்பியா எங்களையெல்லாம் விட்டு ஓடுவது?" என்று கேட்டேன் நான்.

"அவரை நன்றாக அடித்து விட்டார்கள் சித்தி," என்று அவள் அழுதாள்.

"பாரேன். இன்னும் அவன் மீது இரக்கமா? நான் பெண் கிடைத்தால் போதும் என்று சொன்னதால் இத்தோடு விட்டார்கள். இல்லையேல் தலையைக் கிள்ளி எடுத்துத் தனியாகப் பார்சல் செய்து கொண்டு வந்திருப்பார்கள். நீ இன்னும் மைனர்தான். மேஜராக இன்னும் ஆறு மாதம் இருக்கிறது. இவ்வளவு சின்ன வயதில், எவ்வளவு தப்பெல்லாம் செய்திருக்கிறாய் நீ!" என்று நான் பேசிக் கொண்டிருக்கும் போதே, சுவாமிநாதன் உள்ளே நுழைந்து விட்டார்.

"நாளைக்கே இவளை நம்ம வீட்டு டிரைவருக்குக் கட்டி வைக்கப் போகிறேன். நாயை அப்படிச் செய்தால் தான் புத்தி வரும்," என்றார் அவர்.

"நான்தான் பேசிக் கொண்டிருக்கிறேனே, நீங்கள் சும்மா இருங்களேன்!" என்று கூறி, அவரை வெளியே போகச் சொன்னேன்.

"இதிலே சமாதானமே கிடையாது மஞ்சுளா ! என்னென்ன நடந்தது தெரியுமா, ராத்திரி ! இரவு பதினோரு மணிக்குச் சென்றோம். பொழுது விடியும் வரை ஒரு யுத்தமே நடந்து விட்டது அங்கே ! அவனும் பத்து அடியாட்களை வைத்திருக்கிறான். ஆனால், கே. ஆர். பியின் ஆட்கள் பயங்கரமானவர்கள். ஒருவனது காலையே வெட்டி விட்டார்கள். இந்தச் சனியன் அங்கே எப்படி இருந்தது தெரியுமா?" என்று தலையில் அடித்துக் கொண்ட

சுவாமிநாதன், "உன்னிடம் தனியாகப் பேச வேண்டும், வா!" என்று அழைத்தார்.

மெதுவாக நான் எழுந்து அடுத்த அறைக்குச் சென்றேன்.

அவர் என்னிடம் கேட்ட ஒரு கேள்வியில் என் மூச்சே நின்று விடும் போலிருந்தது.

## 17. இடியாப்பத்தின் கதை

முற்றிலும் அது நம்ப முடியாத விஷயமாக எனக்குத் தோன்றிற்று.

அந்த விட புருஷன் பாலசுந்தரத்தின் வீட்டில் என் சித்தியின் படம் இருந்ததாமே! இருக்க முடியாது ; சுவாமிநாதன் எதையோ பார்த்து விட்டுச் சொல்கிறார்!

நான் சுவாமிநாதனை அழுத்தமாகக் கேட்டேன் : "நீங்கள் சரியாகப் பார்த்தீர்களா? நிச்சயமாக அது என் சித்தியின் படம்தானா?" என்று.

"மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். இடுப்பில் குடத்தை வைத்துக் கொண்டு ஒரு குளக்கரையில் 'போஸ்' கொடுக்கிறார் உன் சித்தி. அவர் போட்டோவுக்கே நிற்பது போல் தோன்றிற்று. வலது கையால் சேலையை முழங்கால் வரையிலே தூக்கி இருக்கிறார். இப்போது வேண்டுமானாலும் ஆட்களை அனுப்பி அந்தப் படத்தை எடுத்து வரச் சொல்வேன்," என்றார் சுவாமிநாதன்.

எனக்குத் தலை சுற்றுவது போலிருந்தது.

என் சித்தி எங்கே, அந்தப் பாலசுந்தரம் எங்கே! சென்னையிலே கலாசாரக் கழகத்துக் கன்னிகளை வேட்டையாடுபவன், கிராமத்துக்கு எப்படி வந்திருக்க முடியும்? வந்திருந்தாலும், எனக்குத் தெரியாமல், ஊராருக்குத் தெரியாமல், எப்படிப் படம் எடுத்திருக்க முடியும்?



எதை நம்புவது? எதை நம்ப மறுப்பது?

"சரி, நான் சித்தியிடம் பேசிக் கொள்கிறேன். நீங்கள் சுவர்ணமுகியைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு போங்கள். ஆனால், அங்கே போய் அடிக்காதீர்கள். உதைக்காதீர்கள். அடிக்கடி அடியும், உதையும், திட்டும் வாங்கினால், எந்தக் குழந்தையும் மழுங்கலாகி விடும். பிறகு, எது நடந்தாலென்ன என்ற தைரியம் வந்து விடும். அவளைப் பத்திரமாகக் காப்பாற்ற நீங்கள் விரும்பினால், முதலில் பதமாகப் பேசவேண்டியது அவசியம்," என்றேன்.

"ஆமாம், அந்த நடிகன் ஏன் ராத்திரி வந்திருந்தான்?" என்று திடீரென்று கேட்டார் சுவாமிநாதன்.

"ஐயோ ! அது ஒரு விபத்து ; ஆபத்து. நல்ல வேளையாக அவன் சம்சாரம் வந்து சேர்ந்தாள். எல்லாம் ராத்திரிக்குப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது போங்கள்," என்றேன்.

எனக்கு ஒரே அவசரம். சித்தியைப் பார்த்து இந்தச் சேதியைக் கேட்டு விட வேண்டும் என்ற ஆதங்கம்.

அந்த நேரத்தில் சுவாமிநாதனும், சுவர்ணமுகியும் போனால் போதும் என்றாகி விட்டது.

அவர் சுவர்ணமுகியைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டார்.

நான் மெதுவாகச் சித்தியின் அறைக்குள் நுழைந்தேன்.

சித்தி அப்பொழுதுதான் நன்றாகக் குளித்து விட்டுத் தலை துவட்டிக் கொண்டிருந்தாள்.

'குடும்பப் பெண் விடிகாலையில் தலைமுழுகுகிறாள் என்றால், இரவில் கணவனோடு உறவு கொண்டிருந்தாள் என்பதாகப் பொருள்,' என்று யாரோ எழுதியிருந்ததாக ஞாபகம்.

எப்படியோ, என் சிற்றப்பாவோடு அவள் நன்றாக இருந்தால் சரிதான். ஆனால், இது என்ன, இன்னொரு களங்கம்?

"என்னம்மா, இன்னும் ஷூட்டிங்குக்குக் கிளம்ப வில்லையா?" என்று கேட்டாள் சித்தி.

எங்கள் வீடு மிகப் பெரிய வீடாகையால், கீழ் வீட்டில் நடந்த காரியம் அவளுக்குத் தெரியாது போலிருக்கிறது.

"இன்றைக்கு ஒன்பது மணி ஷூட்டிங்தான், இந்தப் படத்து ஹீரோ பத்தரை மணிக்குத்தான் வருவார். மேக்-அப் போட்டு செட்டில் நுழையப் பன்னிரண்டு மணியாகி விடும். மெதுவாகப் போகலாம்," என்றேன் நான்.

சித்தி டிரெஸ்ஸிங் டேபிளின் முன்னால் அமர்ந்தபடி, "எப்படியோ, உன்னை நம்பித்தான் எல்லாரும் இருக்கிறோம். படிப்பிடிப்பில் விபத்து கிபத்து என்று பத்திரிகையில் வருகிறது. நீ கொஞ்சம் பத்திரமா இரம்மா!" என்றாள்.

"ஹூம்..." என்றபடி, நான் பக்கத்தில் கிடந்த 'மோடா'வில் உட்கார்ந்தேன்.

"என்னடி இது, ஏதாவது ரகசியமா?" என்று கேட்டாள் சித்தி.

"ம்... ரகசியம்தான். என் ரகசியம், தான் பகிரங்கமாகி விட்டதே. இது உன் ரகசியம்!" என்றேன் நான்.

"எனக்கென்னம்மா புது ரகசியம்? இருந்தது ஒரே ரகசியம். உன் அப்பாதான் இறந்து போய்விட்டாரே!" என்றாள் சித்தி.

"அதென்னவோ சித்தி, ஒரு ரகசியம் போனால் மறு ரகசியம் வந்து விடுகிறது. உங்களைப் பற்றிப் புதுக்கதை ஒன்று கேள்விப் பட்டேன்," என்றேன் நான்.

"அதென்னடி புதுக் கதை?" என்றாள் சித்தி.

"இங்கே பாலசுந்தரம் என்று ஒரு அயோக்கியன் இருக்கிறான். அவன் வீட்டில் நீ தண்ணீர்க் குடம் எடுத்துத் தளுக்கி நடப்பது போல் ஒரு படம் இருக்கிறதாமே..?" என்று கேட்டேன் நான்.



சித்தி ஒரு கணம் யோசித்து விட்டு, பிறகு, சாதாரணமாகச் சிரித்தபடி, "ஓ- அதுவா? அவன் எனக்கு ஒன்றுவிட்ட தாய்மாமன் மகன். என்னை விட எட்டு வயது சின்னவன். உன் சிற்றப்பா ஜெயிலுக்குப் போன புதிதில் நான் என் தாய் வீட்டுக்கு கிராமத்திற்குப் போயிருந்தேன் அல்லவா? அப்போது அவனும் பட்டணத் திலிருந்து வந்திருந்தான். கிராமத்துப் பெண்ணைப் படம்பிடிக்க வேண்டும் என்று என்னிடம் கெஞ்சினான். நானே கிராமத்துப் பெண்தானே! தண்ணீர்க் குடத்தோடு போஸ் கொடுத்தேன். ஆமாம், அவன் இங்கே எங்கே இருக்கிறான்? அவனை நீ பார்த்தாயா..?" என்று கேட்டாள் சித்தி.

எந்தக் கதையை நம்புவது? என் சித்தி அப்படி ஒன்றும் பொய் சொல்லக் கூடியவள் அல்ல. இருந்தாலும் ஒரு பெண் இப்படி ஓர் ஆடவனுக்கு போஸ் கொடுக்கலாமா?

இந்தக் காலத்துப் பெண்கள் சகஜமாக இதைச் செய்து விடுகிறார்கள். யார் வந்து படம் எடுத்தாலும் ஒப்புக் கொண்டு விடுகிறார்கள். கிராமத்துப் பண்பாடுகளிலேயே ஊறிப்போன 'பக்கா' கிராமத்துப் பெண்கள் ஒருபோதும் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். படம் எடுப்பவன் விரும்பினால், அதை எப்படியும் பயன்படுத்தலாமே..? இவளுக்கும் எனக்கும் தொடர்பு. அதுதான் இந்த 'போட்டோ' என்று காட்டலாமே? 'அவளே கொடுத்தாள்!' என்று கூடச் சொல்லிக் கொள்ளலாமே?..

இவ்வளவு சொல்கிறேனே, என்னைத்தான் எத்தனை பேர் படம் எடுத்து விட்டார்கள்!

"அந்த போட்டோ அவன் வீட்டில் இருப்பது உனக்கு அசிங்கமாக இல்லையா சித்தி?" என்று கேட்டேன்.

"இதில் என்னடி அசிங்கம்? சொந்தக்காரங்க படத்தை வீட்டில் வைப்பதில்லையா?" என்றாள் சித்தி.

அவள் சொன்னவையெல்லாம் நியாயமானவையாகவும் நம்பும்படியும் இருந்தது.

இருந்தாலும், சுவாமிநாதன் தப்பாக நினைத்துத் தானே என்னிடம் கேட்டார். அதுபோல் எத்தனை பேர் நினைப்பார்களோ?

சரி, இதென்ன பெரிய பிரச்சனை? நானும் சிரித்தபடி, "யாரோ சொன்னார்கள், கேட்டேன், சித்தி. தப்பாக நினைக்காதே! நான் ஷூட்டிங்குக்குப் புறப்படுகிறேன்," என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

நான் சினிமா உலகுக்கு வந்த நேரம், எத்தனையோ புது முகங்கள் சினிமா உலகிற்கு வந்து விட்டன. வந்திருந்த புதுமுகங்கள் எல்லாம் உடம்பில் திரண்டிருந்த அங்கங்களையே வைத்து முன்னுக்கு வரத் துடித்தன. அவர்களில் பலருக்கு என்னிடம் பொறாமை. இத்தனைக்கும் நான் யாரிடமும் எந்த வம்புக்கும் போனதும் கிடையாது. யாரிடமும் பேசியதும் கிடையாது. எனக்குத் தொழில் கிடைத்தால் செய்வேன். இல்லையென்றால் வீட்டில் இருப்பேன்.

அதென்னவோ, தமிழ்நாட்டைப் பிடித்த சாபக்கேடு, ஒருவர் வாழ இன்னொருவர் பொறுப்பதில்லை.

நான் மேக்-அப் அறையில் இருந்து செட்டுக்குள் நுழையும் போது, "கொலையும் பண்ணிட்டு ஹீரோயின் ஆயிட்டா பாரு!" என்றாள் ஒரு துணை நடிகை.

நானென்ன அவளோடு சண்டைக்கா போக முடியும்?

என் மீதுள்ள வழக்கு எனக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது.

அதுவரை இருபத்து மூன்று வாய்தாக்களாகி, சாட்சிகள் விசாரணையும் நடந்திருக்கிறது. நான் குடும்பச் சூழ்நிலையிலும் நடிக்கும் உற்சாகத்திலும் வழக்கை அடிக்கடி மறந்து விடுகிறேன்.

'பிரபலமானவள் மீது வழக்கு' என்பதால், பத்திரிகைகள் அதைப் பிரசுரித்துக் கொண்டே வந்தன. அதை வைத்துத்தான் அந்தத் துணை நடிகையும் என்னைக் 'கொலைகாரி' என்றாள்.



என்ன செய்வது? சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும் என்று செட்டுக்குள் நுழைந்தேன்.

அன்றைக்கு நான் அழுகிற காட்சி ஒன்று படம் ஆக்கப்பட்டது.

நான் 'கிளிசரைன்' இல்லாமலேயே கண்ணீர் விட்டு அழுதேன்.

மறுநாளைக்கு மறுநாள், எதிர் தரப்புச் சாட்சிகளில் பாரிஜாதம், சுவாமிநாதன் ஆகியோரிடம் விசாரணை.

அதுவரையில், ஏனோ வேலைக்காரர்களையே விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

வழக்கு மரபுப்படி ஆரம்பத்திலேயே முக்கிய சாட்சிகளை விசாரிக்கவில்லை.

அதற்குக் காரணம், தாங்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகப் பாரிஜாதமும், சுவாமிநாதனும் டாக்டர் சர்டிபிகேட் கொடுத்துக் கொண்டிருந்ததுதான்.

பாரிஜாதத்துக்கு கோர்ட்டுக்கு வரப் பயம். சுவாமிநாதனுக்கோ விருப்பமில்லை.

அன்றைய இரவு எனக்கு நிம்மதி இல்லாத இரவு.

இரவு பன்னிரண்டு மணி வரை சுவாமிநாதன் என் வீட்டுக்கு வரவில்லை.

யாரோ பேசுவது போல் பாரிஜாதத்துக்கு டெலிபோன் செய்து கேட்ட போது, வக்கீல் வீட்டுக்குப் போயிருப்பதாகப் பதில் வந்தது.

அனுபவிக்க வேண்டிய அளவு அனுபவித்தாகி விட்டது. இனி கொஞ்சம் மாட்டி வைத்தால்தான் நம்மிடம் பயந்து கொண்டு கிடப்பாள் என்று சுவாமிநாதன் எண்ணக் கூடும் அல்லவா?

எனக்கு அந்தச் சந்தேகமும் இருந்தது. ஆனால், அப்படிச் செய்ய மாட்டார் என்ற நம்பிக்கையும் இருந்தது.

நான் நிலை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் டெலிபோன் செய்தேன்.

கடைசியாக டெலிபோன் செய்து, "சுவாமிநாதன் இருக்கிறாரா?" என்று கேட்ட போது, "இதோ இருக்கிறேன்!" என்று சொன்னபடி அவர் உள்ளே நுழைந்தார்.

நான், 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டு, டெலிபோனை டக்கென்று வைத்தேன்.

"எதற்காக இந்தப் பரபரப்பு? நான் இங்கே வராமல் எங்கே போவேன்?" என்றார் அவர்.

"என்னால் சும்மா இருக்க முடிகிறதா? அவர் மீது இல்லாத பிரியத்தை உங்கள் மீது வைத்து விட்டேன். அவரை நான் கொலை செய்து விட்டதாக அநியாய வழக்கு வேறு. நாளை மறுநாள் நீங்கள் சாட்சி சொல்லப் போகிறீர்கள். என்ன சொல்வீர்களோ?" என்றேன் நான்.

"என்ன சொல்வேன்? டாக்டர்கள் அறிக்கையே 'அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை' என்பதுதான். அதைத்தான் நானும் சொல்வேன். இது தற்கொலை ; கொலை என்று முடிவு செய்யச் சாட்சியமே கிடையாது. பாரிஜாதம் என்ன கண்கண்ட சாட்சியா? நீ பயப்படவே தேவையில்லை!" என்றார் அவர்.

"விசாரிக்கும் மாஜிஸ்திரேட் எப்படி?" என்று கேட்டேன்.

"மாஜிஸ்திரேட் எப்படி இருந்தால் என்ன? இது மாதிரிப் பெரிய வழக்குகளில் ஒரு குற்றவாளியைத் தள்ளலாம். அபிப்பிராயம் சொல்லலாம் ; அவ்வளவு தான். ஏதாவதொரு முதற் காரணத்தைக் காட்டி, செஷன்சுக்குக் கமிட் செய்வதுதான் அவர்கள் வேலை. அதைத்தான் இவரும் செய்வார். ஆனால் இவர் எழுதுகிற குறிப்புக்கு செஷன்சிலே ஒரு முக்கியத்துவம் உண்டு. இந்த மாஜிஸ்திரேட் யார் தெரியுமா? அதுதான் பயங்கரம் ! சுவர்ணமுகியைக் கடத்திக் கொண்டு போனானே பாலசுந்தரம். அவனுடைய சொந்தத் தகப்பனார்!" என்றார் சுவாமிநாதன்.

அந்த ஏர்கண்டிஷன் ரூமிலும் எனக்கு வியர்வை கொட்டத் தொடங்கிற்று.

# 18. அடங்கினார் அதிலே

சட்டம் என்னதான் சொல்லட்டும், சட்டத்தை நிர்ணயிப்பவர்கள் நீதிபதிகளே. சட்டத்தின் செக்ஷன்கள் வாயில்லாப் பூச்சிகள். அவை ஒன்றும் மன்னர்களின் கல்வெட்டுகள் அல்ல, ஒரே அர்த்தத்தைக் கொடுப்பதற்கு. எப்படி நீதிபதிகள் விரும்புகிறார்களோ, அப்படி அதை மாற்றிக் கொள்ளலாம்.

என்னதான் சாட்சிகள் சொல்லட்டுமே... 'இந்தச் சாட்சியங்களை நான் நம்பவில்லை' என்று நீதிபதி எழுதி விட்டால், எழுதியதுதான்.

எந்தக் கொலை வழக்கிலும் எதிரியின் உயிர் நீதியின் கையில் இல்லை ; நீதிபதியின் கையில் இருக்கிறது !

ஆம். நீதிக்கு மாறாக நடக்க நீதிபதி விரும்பினால், அவர் கழுத்தைப் பிடிக்கக் கூடிய சக்தி, நீதிக்குக் கிடையாது.

சுவர்ணமுகி விஷயத்தில் தலையிட்டு அடியாட்களை வைத்து அவளை மீட்டது நான் என்பது பாலசுந்தரத்துக்குத் தெரிந்து, அவன் தந்தையிடம் சொல்லி, அவர் என்னைப் பற்றிக் கடுமையாக எழுதி செஷன்ஸுக்கு அனுப்பி விட்டால் நிலைமை என்ன ஆகும்?

பிறகு உயர்நீதிமன்றம் இருக்கிறது என்பது வேறு.

'ஆசை நாயகனைக் கொலை செய்த பிரபல நடிகை மஞ்சுளாவுக்கு ஆயுள் தண்டனை,' என்று பத்திரிகைகளில் செய்தி வருமே!

போகின்ற பக்கமெல்லாம், 'இவள்தான் கொலைகாரி ! இவள்தான் கொலைகாரி!' என்பார்களே !

நான் சுவாமிநாதனிடம் யோசனை கேட்டேன்.

மிகப் பெரிய இடத்தில் இருப்பவர்களெல்லாம் அழகான பெண்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற உலகம்தானே இது. அதிகாரத்தில் பெண்கள் தலையிட்டால், அதிகாரிகள் தம்மை மறந்து கையெழுத்துப் போடுவார்களே!

பல பெரிய மனிதர்கள், அழகான பெண்களைக் கையில் வைத்துக் கொண்டுதானே அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கிறார்கள்!

பெண்களுக்காகக் காரியங்களை முடித்துக் கொடுத்த மந்திரிகள் நம் நாட்டில் இருந்திருக்கிறார்களே!

நாமே போய்ப் பாலசுந்தரத்தைப் பார்த்தால் என்ன என்று யோசித்தேன்.

அதைச் சுவாமிநாதனிடம் சொன்னேன். அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"உனக்கென்ன பைத்தியமா? இந்த மாஜிஸ்திரேட் விரோதமாகப் போனால் போகட்டுமே! நானே சாட்சி சொல்லும் போது இந்த வழக்கு எப்படி நிற்கும்? பாரிஜாதத்தையும் கூழப்பிவிடத்தான் போகிறேன். எந்த மேல் கோர்ட்டிலும் வழக்குத் தள்ளுபடியாகும். நீ ஏன் கவலைப்படுகிறாய் ? இதற்காக ஒரு காமுகனுக்குப் படுக்கை விரிப்பதா?" என்று கூறி விட்டார் அவர்.

மறுநாளெல்லாம் எனக்கு ஷூட்டிங்குக்குப் போக மனமே இல்லை.

'சாட்சிகள் குளறுபடியானால், கீழ்க் கோர்ட்டிலேயே தள்ளுபடியாக வேண்டிய ஒரு வழக்கை, பல கோர்ட்டுகளுக்கு இழுத்துக் கொண்டு போய்ப் பத்திரிகைகளில் சந்தி சிரிக்க வேண்டியிருக்குமே!' என்று நான் கவலைப் பட்டேன்.

இளம் பருவத்து மூளை ஆபத்தான நேரங்களில் சுறுசுறுப்பாக வேலை செய்யுமல்லவா! எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

என் சித்திக்குத்தான் அவர்கள் சொந்தக்காரர்கள் ஆயிற்றே! அதிலும், பாலசுந்தரம் முறைப் பையன். வயது குறைவானால் என்ன? கொஞ்சம் வயது அதிகமான பெண்களைத்தானே இன்றைய இளைஞர்கள் விரும்புகிறார்கள் !

சித்தியிடம் மெதுவாக விஷயத்தைச் சொன்னேன்.



அவள் கொஞ்சம் கூடத் தயக்கமில்லாமல், "நான் போய் வருகிறேன்!" என்றாள்.

அவளுக்கு ஆசை இருக்குமோ என்னமோ, யார் கண்டது?

ஐந்து பேரை மணந்த பாஞ்சாலிக்கு ஆறாவதாகக் கர்ணன் மீதும் ஒரு கண் இருந்ததாக இதிகாசத்தில் ஒரு கட்டம் வருகிறதே!

ஒன்று இரண்டாகி விட்டால், இரண்டு மூன்றாவது ஒன்றும் பெரிய காரியமில்லையே!

அதிலும் என் சித்தி, "உனக்காகத்தான் போகிறேன். இல்லையென்றால் அவன் ஒரு மாதிரி. எந்தப் பெண்ணையும் திடீரென்று கேட்டு விடுவான்! தொட்டு விடுவான்!" என்றாள்.

பிறகு ஏன் உடனடியாக அவள் ஒப்புக் கொண்டாள்?

போகட்டும், இந்த ஆராய்ச்சி எதற்கு?

"சாயங்காலமாகப் போகிறேன். அப்போதுதான் அவன் மயக்கத்தில் இருப்பான். அந்த மாதிரி நேரங்களில் ஆண் பிள்ளைகள் நாம் என்ன சொன்னாலும் ஒப்புக் கொண்டு விடுவார்கள்!" என்றாள் சித்தி.

அந்த மூலத்துக்கு மேலும் நான் விளக்க உரை எழுத விரும்பவில்லை.

மாலையில் சுவாமிநாதன் வரும் முன்னாலேயே கார் கொடுத்து அவளை அனுப்பினேன்.

அன்றைக்கு இரவு பதினோரு மணிவரை சுவாமிநாதன் வரவில்லை.

திடீரென்று எனது காரே உள்ளே நுழைந்தது.

காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு சித்திதான் வருகிறாள் என்ற ஆவலில், கதவைத் திறந்தேன்.

ஆம். சித்திதான் வந்தாள்.

அவள் போகும் போது கட்டியிருந்த புடவை வேறு ; இப்போது கட்டியிருக்கும் புடவை வேறு ; தலை நிறைய மல்லிகைப் பூ, உடம்பிலே வாசனைத் திரவியம் வேறு பூசியிருந்தாள்.

"கேளடி கதையை, அந்தப் பாவிக்கு நானும் வேண்டுமாம் ; நீயும் வேண்டுமாம் ; சுவர்ணமுகியையும் கூட்டிவர வேண்டுமாம் ! என்னைப் பலவந்தப் படுத்தியது போதாதென்று, உங்கள் இருவரையும் அழைத்து வரச் சொல்கிறான். எத்தனை மணி ஆனாலும் கண் விழித்துக் காத்துக் கொண்டிருப்பானாம். இல்லையென்றால் விஷயம் கடுமையாக இருக்குமாம்!" என்றாள் சித்தி.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

ஒரு நியாயமும் இல்லாத இந்தச் சமூகத்தில் சேலை எதற்குக் கட்டுவது?

சித்தியைக் கேட்கட்டும் ; என்னை மட்டும் கேட்கட்டும்; அல்லது சுவர்ணமுகியை மட்டும் கேட்கட்டும். கை கொள்ளாத அளவுக்கா ஒருவனுக்குப் பெண்கள் தேவைப்படுகிறார்கள்?

என்ன செய்வது? திருடர்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டு, கன்னக்கோலுக்கு விளக்கம் கேட்க முடியுமா?

நான் போகத் துணிந்தேன். ஆனால், சுவர்ணமுகியைக் கூப்பிட மறுத்து விட்டேன்.

என் வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்து, அவளுக்கும் களியாட்டங்களில் விருப்பம் வந்து விட்டது போலவே எனக்குத் தோன்றிற்று.

சுவாமிநாதன் வந்தால் இரவு ஷூட்டிங் என்று சொல்லும்படி வேலைக்காரனிடம் சொல்லிவிட்டு நானும் சித்தியும் புறப்பட்டோம்.

பாவம், சிற்றப்பா ! இப்போதெல்லாம் அவர் மழுங்கலாகவே ஆகிவிட்டார். வேளாவேளைக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, ஏதாவது புத்தகத்தை எடுத்துக் கொண்டு தனியறையில் அமர்ந்து விடுவார். என் தங்கையும் அவருடனேயே இருந்து விடுவாள்.



நாங்கள் போகும் போது சிற்றப்பாவிடம்கூடச் சொல்லவில்லை.

பாலசுந்தரத்தின் வீட்டுக்குள் நுழையும் போது, ஒரு தமிழ் மகனின் வீட்டுக்குள் வந்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏதோ உமர்கையாமின் மாளிகைக்குள் வந்திருப்பதாகவே எனக்குத் தோன்றிற்று.

ஹுக்கா புகை வாசனை வருவதுபோல், மதுவாசனை வந்து கொண்டிருந்தது. வீடு முழுக்க விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இரண்டு மூன்று பெண்களின் சிரிப்புச் சத்தமும் கேட்டது. சுவர்களை எல்லாம் நிர்வாண ஓவியங்கள் அலங்கரித்தன.

'செய்யாத குற்றத்தில் இருந்து தப்பிக்க, தேவை இல்லாத பாவத்தைச் செய்ய வேண்டிய சுபாவம் எனக்கு, என் சித்திக்கு என்ன வந்தது? அவளுக்கும் அல்லவா புதிய பாதையைக் காட்டி விட்டோம்,' என்று எண்ணிய போது எனக்குக் கலக்கமாக இருந்தது.

தொடை நனைந்த பிறகு, இடையைப் பற்றிக் கவலைப் பட முடியுமா?

தள்ளாடியபடியே பாலசுந்தரம் வந்தார்.

"ஹலோ ! பிரபல நடிகை ! நீ சாதாரணமாக இருந்த போது கடற்கரையில் டேக்கா கொடுத்தாயே எனக்கு! இன்று விட்டேனா உன்னை?" என்று என் இரண்டு தோளிலும் கை வைத்தார்.

அவர் இருந்த கோலத்தைப் பார்த்து,பேசிய வார்த்தைகளைக் கேட்ட போது, அதை விட ஆயுள் தண்டனையே தேவலை போல் தோன்றிற்று.

கொஞ்சம்கூட ஒரு பெண்ணோடு பேசிப் பழகாமல், எடுத்த எடுப்பிலேயே ஒரு மனிதன் என்னென்ன காரியங்களைத்தான் செய்வது?

இரத்த வெறி, மிருகத்தையும் தாண்டி விடுமா?

நான் அப்போது அங்கேயும் நடிகையாக முடிவு செய்து விட்டேன். அவரிடம் நடிக்க ஆரம்பித்தேன். மெது மெதுவாக ஒதுங்கிப் போக்குக் காட்டினேன். ரொம்ப ஆசைப்பட்டவள் போல், மதுவை அதிகமாக ஊற்றி ஊற்றிக் கொடுத்தேன்.

அவர் ஒரு ஆல்பத்தை எடுத்து என் கையில் கொடுத்தார்.

தள்ளாடியபடியே என் மடியில் விழுந்தார்.

என் சித்தி ரொம்பப் பதவிசாக, அடக்க ஒடுக்கமாக ஒரு பக்கத்து நாற்காலியில் அமர்ந்தாள்.

நான் ஆல்பத்தைப் புரட்டினேன்.

"ஐயோ!" என்றேன், என்னையறியாமல்.

'அட ஆண்டவனே! இனி இந்தப் பெண்ணுக்கு எப்படித் திருமணம் ஆகும்?'

சுவர்ணமுகி அதிலே பல வகையான நிர்வாணப் போஸ்களைக் கொடுத்திருந்தாள்.

## 19. சைத்தான் விடுவானோ!

ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் வெட்கப் படத்தக்கவை என்று கருதப்பட்ட காரியங்கள், இன்று மிகவும் சாதாரணமாகி விட்டன.

ஒருவன் மனைவி இன்னொருவனோடு பழகுவது, இளம் பெண்கள் மார்பகத்தில் ஆடை இல்லாமல் படம் எடுத்துக் கொள்வது, கல்லூரிப் பருவத்திலேயே காதல் நாடகம் ஆடுவது, இவை எல்லாம் சமுதாயம் ஒப்புக் கொண்டு விட்ட நியாயங்கள் ஆகிவிட்டன.

வேதகாலத்தில் இருந்து இன்றுவரை பார்த்தால், ஒவ்வொரு காலத்திலும் சமூகத்தின் கட்டுக்கோப்பு சீர் குலைந்து வந்திருக்கிறதே தவிர, கம்பீரமாக வளர்ச்சி யடையவில்லை.

புராணங்களில் ஓர் அகலிகையைத்தான் பார்க்கிறோம். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விசித்திரமான சம்பிரதாயங்களைப் பார்க்கிறோம். ஆனால் ஒரேயடியாகக் கண்மூடித்தனமாகக் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து விட்ட பெண்களைப் பார்க்கவில்லை.



ஆயிரம் அக்கிரமங்கள் செய்த அரக்கரிடையே கூடப் பெண்கள் உத்தமிகளாக இருந்ததாகத்தான் புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

ஆனால், நம் வயதுக்குள் எவ்வளவோ தெரிந்து கொண்டு விட்டோம்.

'உணர்ச்சிகள் வளர்ச்சி யடையாத வயது பதினாறு,' என்பார்கள். அந்த வயதிலும் ஒரு ஆடவன் முன்னால், ஆடையும் இல்லாமல், கூச்சமும் இல்லாமல் நின்று, படம் எடுத்துக் கொண்டிருக்கிறாளே சுவர்ணமுகி!

'நமது தலையெழுத்து எடுப்பார்க்குப் பிள்ளையாகவும், இழுப்பார்க்குப் பெண்டாட்டியாகவும் மாற வேண்டியதாகி விட்டது. நாம் விரும்பிய வாழ்க்கை வேறு ; ஏற்றுக் கொண்ட வாழ்க்கை வேறு. ஆனால் சுவர்ணமுகி இந்த வாழ்க்கையை விரும்பியே ஏற்றுக் கொண்டிருக்கிறாளே !' என்று எண்ணிய படியே ஆல்பத்தை மூடி வைத்தேன்.

என் சித்தி மட்டும் என்னவோ அந்த வீட்டிலேயே ரொம்ப அனுபவப்பட்டவள்போல் நடந்து கொண்டாள். அங்குமிங்கும் அலை மோதினாள். அலுக்கிக் குலுக்கி நடந்தாள். அவளுக்கு இத்தகைய வாழ்க்கை புதியதாகவும் சுகமாகவும் தோன்றியிருக்கும் போலிருக்கிறது.

வெகு நேரமாக உட்பக்கம் போயிருந்த பாலசுந்தரம் திரும்பி வந்தார். அவர் இப்போது அதிகம் தள்ளாடிக் கொண்டிருந்தார். நான் அவ்வளவல்லவா ஊற்றிக் கொடுத்திருந்தேன், அவர் என்னைத் தொடாமல் இருப்பதற்காக!

ஆனாலும் கூட அவருக்கு இது மிகவும் பழக்கமான விஷயம் போலிருக்கிறது. முன்னைவிட மோசமாகப் பழகத் தொடங்கினார்.

குடி அதிகமானதும், பாஷை கொச்சையாகி விட்டது.

"வாடி கழுதை, தடிக்கழுதை ! இன்னும் சேலை என்னடி சேலை!" என்று, என் கையைப் பிடித்து இழுத்தார்.

நான் ஜாக்கிரதையாகச் சமாளித்தேன்.

அதிகம் குடித்தவர்களிடம் நேரடியாக எதிர்த்துப் பேசினால், கோபம் அதிகமாகும். சாகஸம்தான் அங்கே சரியான மருந்து.

என்னைக் கொண்டு போய் நடு ஹாலில் ஒரு சோபாவில் உட்கார வைத்துப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

"வாடி இங்கே !" என்று, என் சித்தியையும் பிடித்து, இன்னொரு பக்கம் உட்கார வைத்துக் கொண்டார்.

இரண்டு பேர் தோளிலும் கைபோட்டுக் கொண்டார்.

திடீரென்று சினிமா ஷூட்டிங் ஆரம்பமாவது போல் ஒரு பிரமை. பிரகாசமான விளக்குகள் எரிந்தன. ஒரு டேப் ரெக்கார்டர் முடுக்கப்பட்டது. இரண்டு இளம் பெண்கள் அரை குறைக் கோலத்தில் காபரே நடனம் ஆடத் தொடங்கினார்கள்.

அந்தப் பாட்டைக் கேட்கக் கேட்க எனக்கு அருவருப்பாக இருந்தது. அது எவன் எழுதினானோ! இவ்வளவு வாத்தியங்களோடு எங்கே தான் ஒலிப்பதிவு செய்தானோ!

ஆடியவர்கள்தான் என்ன, நடனமா ஆடினார்கள்?

ஆம். வெறும் அங்க சேஷ்டைகளுக்கு சினிமா ஒரு மரியாதையை ஏற்படுத்தி விட்டது.

மணி நான்கு அடித்தது. பாலசுந்தரம் கொட்டாவி விடத் தொடங்கினார்.

அவ்வளவுதான். இயந்திரம் தன் சக்தியை இழந்து விட்டது என்று தீர்மானித்து விட்டேன்.

ஆனால், என்ன மடத்தனம்! எதற்காக நான் வந்தேனோ அந்தக் காரியம் ஆகவில்லை. இனி அவர் படுத்துத் தூங்குவார். நாளை மதியம்தான் எழுவார். மறுபடியும் பேசினால் நாளை மாலையில்தான் பேச வேண்டும். அதற்குள் காலம் கடந்து விடும்.

'ஒரு விலைமகளின் பாணியில் நடந்து கொண்டதுதான் மிச்சம். ஏதோ இறைவன் விட்ட வழி விடட்டும்,' என்று நான் முடிவு கட்டினேன்.

என்னையும் தூக்கம் பிடித்துத் தள்ளிற்று. சித்தி தூக்கத்தையே மறந்திருந்தாள்.



பாலசுந்தரம் சோபாவில் சாய்ந்தபடியே குறட்டை விடத் தொடங்கினார். இனி அடித்தாலும் உதைத்தாலும் இப்போதைக்கு மனிதன் எழப்போவதில்லை.

நானும் சித்தியும் வெளியே வந்து டிரைவரை எழுப்பி வீடு வந்து சேர்ந்தோம்.

அங்கே பாலசுந்தரம் தூங்குவது போலவே, இங்கே சுவாமிநாதன் தூங்கிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், சென்னை நகரத்து வீடுகளை எல்லாம் தட்டிக் கேட்டிருந்தால், எந்தெந்த வீடுகளில் யார் யார் எப்படித் தூங்கிக் கொண்டிருப்பார்களோ, யார் கண்டது.

நல்ல அசதியான நேரத்தில் தான் வசதியான கட்டிலின் சுகம் தெரியும்.

அப்பாடா! நான் எப்படித் தூங்கினேன் என்பது தெரியாது. காலை ஒன்பது மணிக்குத்தான் சித்தி வந்து எங்களிருவரையும் எழுப்பினாள்.

எங்கள் வக்கீல் அதற்குள் இரண்டு மூன்று முறை டெலிபோன் செய்திருக்கிறார்.

நான் சுவாமிநாதனிடம் பயத்தோடு, "பாரிஜாதம் என்ன சொல்லப் போகிறாளோ?" என்று கலங்கினேன்.

"நீ பேசாமலிரு. நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார் அவர்.

மாதத்தில் நான்கு நாட்கள் இதற்காக ஒதுக்க வேண்டியிருக்கிறதே. கூட்டம் வேறு கூடி விடுகிறது. பத்திரிகைக்காரர்களும் பத்திரிகையை இந்தச் செய்தி மூலமே நிரப்புகிறார்கள்.

அரசியலில் ஆளும் கட்சிக்காரராக யார் வந்தாலும் தெரியாமலா எதிர்க்கட்சிக்காரர்களைக் கோர்ட்டுக்கே இழுத்தடிக்கிறார்கள்!

கொத்தடிமை வேலையை விட, மிகக் கொடுமையானது கோர்ட்டுக்கு அலைவது! அதிலும் ஒரு பெண்! பிரபலமானவள்!

உட்காருவதற்கே இடமில்லாத மாஜிஸ்திரேட் கோர்ட்டில், நிற்க வேண்டி வந்தது.

பீடி நாற்றமும், வெற்றிலை வாசமும், மூலைக்கு மூலை காகிதத் துண்டுகளும் - அப்பப்பா!

உயர்நீதி மன்றத்தைப் போல் மாஜிஸ்திரேட் கோர்ட்டு களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளக் கூடாதோ?

நான் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் பாரிஜாதமும் வந்து விட்டாள். அவள் செய்திருந்த அலங்காரங்களைப் பார்த்தால், நான் நடிகையா, அவள் நடிகையா என்பது தெரியாது.

நமது நாட்டில் சினிமாக்காரிகள் எல்லாம் 'சிம்பிளாக' இருக்கிறார்கள். குடும்பப் பெண்கள்தானே அலங்கோலமாக அலங்காரம் செய்து கொள்ளுகிறார்கள்.

வருகிற வழியில் கூடப் பார்த்தேன், யாரோ ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணாம். இமைகளில் கூடப் பச்சையாகச் சித்திரம் எழுதிக்கொண்டிருந்தாள். பெண்கள் காதுக்கும் மூக்குக்கும் தான் நகை போடுவார்கள். கண்ணுக்கும் வாய்க்குமா? - இப்படிச் சில பிரகிருதிகள்.

மணி பதினொன்று அடித்தது.

மாஜிஸ்திரேட் ஆசனத்தில் வந்து அமர்ந்தார்.

எங்கள் வக்கீல் மெதுவாக என்னைப் பக்கத்தில் அழைத்தார். நான் சென்றேன்.

"மாஜிஸ்திரேட் மாறி விட்டார். இன்று விசாரணை நடக்காது!" என்றார் அவர்.

அந்த நேரத்தில் சீக்கிரம் விடைபெற்றால் போதும் என்றுதான் எனக்குத் தோன்றிற்று. அதனால் ஒரு மகிழ்ச்சி.

அதே சமயத்தில் இந்த மாஜிஸ்திரேட் யாரோ எவரோ எப்படி வழக்கை நடத்துவாரோ என்றும் ஒரு நினைவு எழுந்தது.



விடைபெறும் முன்னால், "மாஜிஸ்திரேட்டின் பெயர் என்ன?" என்று கேட்டு வைத்தேன், வக்கீலிடம்.

"பவானி சங்கரன். ரொம்ப ஜாலியான மனிதர். ஆனால் நியாயமாக இருப்பார்," என்றார் வக்கீல்.

நான் புறப்படும்போது திரும்பிப் பார்த்தேன். மிக மிக உற்சாகமாகச் சென்று கொண்டிருந்தாள் பாரிஜாதம்.

வழக்கு வாய்தா போடப்பட்டதில் இவளுக்கென்ன உற்சாகம்?

அதே நேரத்தில் அவளது பக்கத்தில் சென்று கொண்டிருந்த சுவாமிநாதன், கவலையோடு சென்று கொண்டிருந்தார்.

அடிக்கடி வர வேண்டி இருக்கிறதே என்று அவர் கவலைப்பட்டிருப்பார் போலிருக்கிறது.

நான் வீட்டுக்குள் நுழைந்த போது, ஒரு கம்பெனியின் கார் காத்துக் கொண்டிருந்தது.

ஏற்கனவே அந்தக் கம்பெனியின் ஷூட்டிங் முழுக்க முடிந்து விட்டது.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

படத்தைத் தணிக்கை செய்யும் போது நான்கு ஷாட்டை வெட்டி விட்டார்களாம். அதற்காக அவசரமாகச் சில புதிய காட்சிகள் எடுக்க வேண்டுமாம். படம் வெளியாக இன்னும் மூன்றே நாள் இருக்கிறதாம்.

என்னதான் இந்தத் தணிக்கை போர்டோ? ஒரு படத்தில் நிர்வாணக் காட்சியையே விட்டு விடுகிறார்கள். இன்னொரு படத்தில் மேலாடை விலகினால் வெட்டச் சொல்லுகிறார்கள்.

அலுப்போடு, "சரி, வருகிறேன்," என்று சொல்லிப் புறப்பட்டேன்.

ஸ்டுடியோவில் இருக்கவே எனக்கு மனமில்லை.

நீதிக் கூண்டில் நிற்கும் நிம்மதியற்ற நிலையே என் கண் முன்னால் தோன்றிக் கொண்டிருந்தது.

இரவு பதினோரு மணிக்கு நான் வீடு வந்தபோதுதான் சுவாமிநாதனும் வந்தார்.

"ஏன் கோர்ட்டில் இருந்து திரும்பும்போது அவ்வளவு கவலையாக இருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"கவலைப்படாமல் என்ன செய்வது? இப்போது மாஜிஸ்திரேட்டாக வந்திருக்கிறாரே பவானி சங்கர், இவர் வக்கீலாக இருந்தபோது உன் சக்களத்தியின் ஆசை நாயகர் இவர்!" என்றார் அவர்.

## 20. புளியங் கொம்பு

'நீ ஏன் நீதியைப் பற்றிக் கவலைப்படாமல், நீதிபதிகளைப் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்கக் கூடும்.

எந்த நாட்டிலும் நீதி என்று ஒன்று தனியாக இல்லை. நீதிபதியின் மனோபாவமே நீதியாக மாறியிருக்கிறது.

சட்டம் என்பது இரண்டு பக்கமும் கூர்மையாக உள்ள ரேஸர் பிளேடைப் போன்றது. எந்தப் பக்கத்தால் அறுக்க வேண்டும் என்று நீதிபதி விரும்புகிறாரோ, அந்தப் பக்கத்தால் அறுத்து விடலாம்.

ஆகவேதான், நீதிபதியின் தராதரத்தை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

இதைப் பற்றி ஒரு புத்தகத்தில் படித்ததிலிருந்து எனக்கு இதே பைத்தியமாக ஆகிவிட்டது.

புதிய மாஜிஸ்திரேட் பாரிஜாதத்திற்கு வேண்டியவர் என்பதில், சுவாமிநாதனே அதிர்ச்சியடைந்தார் என்றால், நான் கலங்காமல் இருக்க முடியுமா?

இரவு வெகுநேரம் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.



சுவாமிநாதன் மீண்டும் மீண்டும் ஒரே விஷயத்தை வலியுறுத்தினார். ஒரு கொலை வழக்கில் மாஜிஸ்திரேட்டின் கையில் எதுவுமே இல்லை என்பது அது. "இரண்டு வருஷம்வரை தண்டனை விதிக்கக் கூடிய சக்திதான் மாஜிஸ்திரேட்டுக்கு உண்டு. அதற்கு மேற்பட்டு வழக்குகளை அவர் செஷன்சுக்குத்தான் அனுப்பியாக வேண்டும். நீ பேசாமல் இரு," என்று சொல்லி என்னைத் தூங்க வைத்தார்.

அடுத்த வாய்தாவுக்கு இன்னும் ஒரு மாதம் இருந்தது. அதற்கிடையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்குக் கால்ஷீட் வேண்டும் என்று என்னை உயிரை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

சில நடிகைகளைப் போல் நான் கால்ஷீட் விஷயத்தைக் குழப்புவது இல்லை. கொடுத்து விட்டு ரத்து செய்வதில்லை. ஒரே தேதியை இரண்டு பேருக்குக் கொடுப்பதில்லை.

என் சிற்றப்பா கிராமத்தில் வளர்ந்தவரானாலும், நாளாக நாளாக எனது கால்ஷீட் விவகாரத்தைக் கவனிப்பதில் திறமை பெற்று விட்டார். இயற்கையாகவே பொறுப்புள்ள மனிதர்கள் எந்த வேலையையும் சீக்கிரம் பழகிக் கொள்வார்கள்.

என் சிற்றப்பாவைக் கேட்டேன். சில கம்பெனிகளுக்கு ஆறுநாள், ஏழுநாள் என்று தேதி கொடுத்திருப்பதாகவும், ஒரேயடியாக இருபது நாட்கள் வெளியூர் போக முடியாது என்றும் கூறினார்.

கம்பெனிக்காரர்களோ என் காலிலேயே விழுந்துவிடுவார்கள் போலிருந்தது. தடி வட்டி கொடுத்துக் கடன் வாங்கியிருப்பதாகவும், இந்த இருபது நாளில் நாங்கள் படத்தை முடிக்கா விட்டால், மஞ்சள் கடுதாசி கொடுக்க வேண்டும் என்றும் கண்ணீர் வடித்தார்கள்.

எனக்குப் பாவமாகப் போய் விட்டது. இயற்கையிலேயே எனக்கு இரக்கம் அதிகம். 'இரக்கப்பட்ட தாசிக்கு இருக்க இடம் கிடைக்காது' என்பார்கள். 'இரக்கம் என்பது சிறுகச் சிறுகச் செய்து கொள்ளும் தற்கொலை' என்று யாரோ எழுதியதாக ஞாபகம். 'இரக்கம் காட்டுகிறவர்களை ஏமாளிகள்' என்று எண்ணுவதுதானே நம் நாட்டுப் பழக்கம்? எனக்கோ நாம் அழிந்து போனாலும் பரவாயில்லை, மற்றவர்கள் கெட்டுப் போகக் கூடாது என்ற எண்ணம்.

ஏற்கனவே நான் கால்ஷீட் கொடுத்திருந்த கம்பெனிகளுக்கெல்லாம் நானே டெலிபோன் பண்ணிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, வெளிப்புறக் காட்சிக்கு ஒப்புக் கொண்டு விட்டேன். உடனடியாக அவர்கள் ஏற்பாடும் செய்து விட்டார்கள்.

ஊட்டி மலையில் படப்பிடிப்பு.

சுவாமிநாதன் என்னிடம் மெதுவாக, "துணைக்குச் சுவர்ணமுகியைக் கூட்டிக் கொண்டு போ," என்றார்.

அவர் ஏன் சொல்கிறார் என்பது எனக்குப் புரிந்தது.

சுவர்ணமுகி அடிக்கடி டெலிபோன் செய்து ரகசியமாகப் பாலசுந்தரத்தோடு பேசுகிறாளாம். எனக்கும் அவளைக் காப்பாற்ற வேண்டும் போல் தோன்றிற்று.

என்னதான் பாரிஜாதம் எதிரியாக இருந்தாலும், சுவர்ணமுகி வாழ வேண்டிய பச்சைப் பயிர் அல்லவா? அவளையும் கூட்டிக் கொண்டு ஊட்டிக்குப் புறப்பட்டேன்.

நான் அப்பொழுதுதான் இறக்குமதியான 'இம்பாலா' கார் ஒன்று வாங்கியிருந்தேன். பெரிய நடிகை என்றால் 'இம்பாலா' காரும், 'நாய்க்குட்டி'யும் இருந்தாக வேண்டுமே! அதனால்தான் வீடு கூட வாங்காமல் கார் வாங்கினேன்.

இரத்தம் சுறுசுறுப்பாக இருக்கும்போது நீண்ட தூரக் கார் பயணமும் சுகமாகத்தானே இருக்கும்!

நீலமலையின் வளைவுகளிலும் சரிவுகளிலும் கார் ஏறும் பொழுது, எனக்குச் சொர்க்கத்தில் இருப்பது போலிருந்தது.

'மனத்தில் கவலைகள் ஏற்படும் பொழுதெல்லாம் நான் மலை வாசத்தில் அவற்றை மறந்து விடுகிறேன்,' என்று பண்டித ஜவாகர்லால் நேரு அவர்கள் ஒரு முறை சொல்லியிருந்தார்கள். பசுமையும் குளிர் காற்றும் நிறைந்த மலைகள், கவலைகளை மறக்கடிக்கின்றன. காதல் இன்பங்களை விட, அந்தக் குளிர் காற்றில் இன்பம் அதிகமாக இருக்கிறது.

சென்னையில் டீ சாப்பிடுவதற்கும், ஊட்டியிலே சாப்பிடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது.



மனிதன் யோக்கியனாக இருக்க விரும்பினால், அவன் அடிக்கடி சந்திக்க வேண்டிய இடங்கள் இரண்டு. ஒன்று, பசுமையான மலை; இன்னொன்று சுடுகாடு.

நான் நடித்துக் கொண்டிருந்த கம்பெனி, மிகவும் வசதியுள்ள கம்பெனியல்ல. அது தள்ளாடித் தளிர் நடை போட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கஷ்டத்திலும் பாவம், எனக்காக ஒரு பெரிய மாளிகையைத் தனியாக ஏற்பாடு செய்திருந்தார்கள். சமையல் காரரை நானே கூட்டிக் கொண்டு போயிருந்தேன்.

மாளிகையைப் பார்த்ததும், சிற்றப்பாவையும் சித்தியையும் அழைத்து வந்திருக்கலாமே என்று தோன்றிற்று.

என்னிடம் ஏற்கெனவே ஒரு அம்பாஸிடர் கார் இருந்தது. அந்தக் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டு வரும்படி அவர்களுக்குத் தந்தி கொடுத்தேன்.

ஊட்டி காய்கறிகள் உலகப் புகழ் பெற்றவை. நல்ல சமையல், நல்ல சாப்பாடு.

மூன்று நாட்கள் கடுமையான மழை. படப்பிடிப்பு நடக்கவில்லை. கம்பெனிக்காரர்கள் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள்.

நான்காவது நாள் சூரிய பகவான் தலையைக் காட்டினான். சோர்ந்து கிடந்த கம்பெனிக்காரர்கள் சுறுசுறுப்பானார்கள்.

ஊட்டி நகரத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு முன்னாள் சமஸ்தானாதிபதியின் பங்களா. அதையொட்டி அழகான தோட்டம். வலதுபுறம் மலைச் சரிவு. இடது புறம் சிறு சிறு குன்றுகள். படப்பிடிப்புக்குச் சரியான இடம்.

ஊட்டிக்குப் போனால் வேறு என்ன எடுப்பார்கள்? காதல் காட்சி தான்!

அந்தப் படத்தில் நான் ஒரு மலைஜாதிப் பெண். 'நதிக்கு அப்பால்' என்பது படத்தின் தலைப்பு.

மலை ஜாதிப் பெண்ணாகிய நான் ஒரு எஸ்டேட் சொந்தக்காரரின் மகனைக் காதலிக்கிறேன். என்னுடைய ஜாதிக்காரர்களான

தோதவர்கள் அதை எதிர்க்கிறார்கள். நூறு எருமைகள் சீர்கொடுத்து எங்கள் ஜாதி மாப்பிள்ளைக்கே என்னைக் கட்டி வைக்க முயல்கிறார்கள். நானும் எஸ்டேட் சொந்தக்காரர் மகனும் தப்பி ஓடும்போது நூற்றுக் கணக்கான தோதவர்கள் விஷ அம்பை எய்து என்னைக் கொன்று விடுகிறார்கள். இதுதான் கதை.

நாங்கள் பாடும் காதல் டூயெட் ஒன்றையும், நான் ராத்திரியில் அவரைச் சந்திக்க வருவதையும், இருவரும் தப்பி ஓடுவதையும் அந்த மாளிகை ஓரத்தில் படமாக்க வேண்டும்.

அந்தப் படத்தில் என்னோடு நடித்தவர், ஓரிரவு என்னைச் சந்திக்க வந்தாரே, அதே நடிகர்.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, அவர் என்னோடு நடிக்க வரும்போதெல்லாம், அவர் மனைவியும் கூட வந்து விடுவது வழக்கம். ஊட்டிக்கு வராமல் இருப்பாரா?

அவர் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? எனக்கென்ன அந்த நடிகரிடம் காதலா? காதல் காட்சியில் கட்டிப் பிடித்தால், ஷாட் முடிந்ததும், விலகி உட்காரப் போகிறோம்.

முதல் நாள் படப்பிடிப்பு முடிந்தது. மறுநாள் படப்பிடிப்பு ஆரம்பமானபோது, என்னுடைய காரைவிட விலை உயர்ந்த கார் ஒன்று பங்களாவுக்குள் நுழைந்தது.

எல்லாருமே பயபக்தியோடு அந்தக் காரில் இருந்த நபருக்கு வணக்கம் செலுத்தினார்கள். ஏன் இந்தப் பயபக்தி என்ற எண்ணத்தில் நான் அந்த நபரைக் கூர்ந்து கவனித்தேன். அவரும் என்னையே கவனித்தபடி கீழே இறங்கினார். மரியாதைக்காக நான் வணக்கம் சொன்னேன். அவரும் வணக்கம் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார்.

படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து முடிந்தது.

பங்களாவுக்குப் போன அந்தப் பணக்காரர் வெளியே வரவில்லை. தயாரிப்பாளர் மெதுவாக என்னிடம் வந்து, அவர் ஒரு சமஸ்தானத்தின் இளவரசர் என்றும், "இந்தப் பங்களா அவருடையதுதான்!" என்றும், "பங்களாவின் மாடியில்தான் அவர் தங்கப் போகிறார்," என்றும் கூறினார்.



பங்களாவின் கீழ்ப்பகுதியில் நான் தங்கிக் கொண்டிருந்தேன். நாங்கள் இரண்டு பெண்கள் தங்குமிடத்தில் அவர் வந்து தங்குகிறாரே என்று எனக்குச் சங்கடமாக இருந்தது.

என்னை ஏதாவது ஒரு ஹோட்டலுக்கு மாற்றி விடும்படி கம்பெனிக்காரர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். என்னவோ நல்ல நேரத்தில் எல்லாம் நடக்கும் என்பார்களே, அது மாதிரி நான் அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே என் சிற்றப்பாவும், சித்தியும் காரில் அங்கே வந்து விட்டார்கள். "பரவாயில்லை. நான் இங்கேயே தங்கிக் கொள்கிறேன்," என்று சொல்லி விட்டேன்.

அன்று இரவு அந்த மாடியில் டேப் ரெக்கார்டர் பாட்டுச் சத்தம் கேட்டது. சோடா உடைக்கும் சத்தம் கேட்டது. ஆனால், அவர் எந்தச் சத்தமும் போட்டதாகத் தெரியவில்லை. சமஸ்தானத்து இளவரசர்களைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். காமச் சேட்டைகளிலும், விளையாட்டுகளிலும் தலைகீழாக அவர்கள் நடந்து கொள்வார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால், அன்று இரவு நான் கலவரப்படத்தக்க வகையில் எதுவுமில்லை.

ஒரே ஒரு முறை அவரது சமையற்காரன் ஓடிவந்து, "டின்னில் அடைத்த இறைச்சி இருக்கிறதா?" என்று கேட்டான்.

நான், "மீன்தான் இருக்கிறது," என்று சொல்லி எடுத்துக் கொடுத்தேன்.

நான் பயந்ததுபோல் ஒன்றும் நடக்காமல் அன்றைய இரவு கழிந்தது.

மறுநாள் காலையில் நான் மேக்-அப் போட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு வெண்ணுடை தரித்த ஆள் ஓடிவந்து, "இளவரசர் ஒரு ஐந்து நிமிடம் உங்களைப் பார்க்க வேண்டுமாம். வரலாமா என்று கேட்கிறார்," என்றான்.

என்னதான் நான் பெரிய நடிகையாக இருந்தாலும், அவரை வரச் சொல்வதா? 'இல்லை, மேக்-அப் முடிந்ததும் நானே வருகிறேன்,' என்றேன்.

கீழ் மாடியில் இருந்தது போலவே, மாடியிலும் விலையுயர்ந்த சோபாக்கள் போடப்பட்டிருந்தன. அங்கிருந்த சாமான்கள்

எல்லாம் இறக்குமதியான சாமான்கள். மேஜையின் மீது ஏராளமான விமான டிக்கெட்டுகள் கிடந்தன. தங்கமுலாம் பூசப்பட்ட கடிகாரம் டாண் டாண் என்று மணியடித்துக் கொண்டிருந்தது.

ஒரு பத்து நிமிஷம் நான் நடு ஹாலில் உட்கார்ந்திருந்தேன்.

திடீரென்று, "எக்ஸ்க்யூஸ் மி!" என்று குரல் கேட்டு நானும் சித்தியும் எழுந்து நின்றோம்.

"உட்காருங்கள்," என்று சொன்னபடி எங்கள் எதிர் சோபாவில் உட்கார்ந்தார், அவர்.

"நீங்கள் நடித்த படங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். மிகவும் அற்புதமான நடிப்பு. குடும்பப் பெண்ணாக நீங்கள் தோன்றும்போது, அசல் குடும்பப் பெண் கூடக் காலைத் தொட்டுக் கும்பிடுவாள் போலிருக்கிறது. நான் கிட்டத்தட்ட நாற்பது நாடுகளில் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறேன். எங்கேயும் இவ்வளவு நளினமான அழகைப் பார்த்ததில்லை. உங்களோடு நிறையப் பேச வேண்டும். இப்போது உங்களுக்குப் படப்பிடிப்புக்கு நேரமாகி இருக்கும். முடிந்தால் மாலையில் பேசுவோம்," என்றார் அவர்.

நானும் சித்தியும் விடை பெற்றுக்கொண்டு கீழே வந்து விட்டோம்.

தோட்டத்துக்கு வந்ததும், கம்பெனி பங்குதாரர்களில் அனுபவஸ்தரான ஒருவரிடம் நடந்த நிகழ்ச்சியை நான் சொன்னேன்.

அவர் மிகச் சுருக்கமாக, "மிக மிகப் பெரிய இடம்! கிடைத்தால் விட்டுவிடாதே!" என்றார்.

## 21. அவளுக்கும் மாங்கல்யம்

சினிமா நடிகை என்றால் அவளிடம் எதையும் சுலபத்தில் கேட்டு விடலாம். 'எப்பொழுது தனியாக இருப்பாய்?' என்று சில பேர் கேட்பார்கள் ; 'வரலாமா?' என்கிறார்கள் ; 'இரண்டு நாட்கள் பெங்களூருக்குப் போவோமா' என்கிறார்கள். 'உன்னை ஒரு நாளாவது அனுபவிக்க வேண்டும்?' என்று சிலர் பச்சையாகவே பேசுகிறார்கள்.



யாரும் கூச்சப்படத் தேவையில்லாத பிரகிருதி சினிமா நடிகை என்றாகி விட்ட பிறகு, 'பெரிய இடம்! விட்டு விடாதே!' என்று அவர் நேரடியாகச் சொன்னதில் தவறு என்ன?

ஆனால், அவர் சொன்ன விஷயம், கடிகாரத்தில் உள்ள பெண்டுலம் போல, என் உள்ளத்திலும் ஆடிக் கொண்டே இருந்தது.

ஒரு நடிகைக்கு நடிப்புத் தொழில் எவ்வளவு காலம்? அதிகம் போனால் பத்து வருஷம். பிறகு, தாய் வேஷம் போடுகிற வாய்ப்பு உண்டு. அந்தக் குறுகிய காலத்திற்குள் தான் சில நடிகைகள் தலைகால் தெரியாமல் ஆடி விடுகிறார்கள்.

சில நடிகைகள் தன் கூட நடித்த நடிகரையே காதல் செய்து, அதற்குப் பிரமாத விளம்பரம் கொடுத்துக் கல்யாணமும் பண்ணிக் கொண்டு, கடைசியில் கணவனுக்கு ஜீவனாம்சம் கொடுத்து விடுகிறார்கள். அல்லது இரண்டு பேருமே தொழிலை இழந்து விடுகிறார்கள். சில கெட்டிக்கார நடிகைகள்தான் பெரும் பணக்காரர்களைப் பிடித்துக் கொண்டு வசதியாக வாழுகிறார்கள்.

ஒருத்தி பணக்காரனிடம் போய்ச் சேர்ந்து விட்டால் பழைய கதையை யார் கேட்கிறார்கள்? பின்பு ஆயிரம் பேர் 'அம்மா! அம்மா!' என்று வருகிறார்கள். அவளது பெயருடனேயே 'அம்மா' என்ற பெயரையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ திருப்பங்கள், வீழ்ச்சிகள் ; மேடு பள்ளங்கள் ; இப்படி இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற நியதிக்கு யார் கட்டுப்படுகிறார்கள்?

கோபுரத்தில் ஏறிச் சிலர் குதிக்கப் பழகுகிறார்கள் ; குப்பை மேட்டில் ஏறினாலே சிலர் கால் கைகளை உதறுகிறார்கள்.

'எது சுகமோ! அதை நடத்து' என்பதுதானே கெட்டிக்காரர்களின் பல்லவி!

படப்பிடிப்புக்கு காமிரா தயார். நானோ யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

"அம்மா, வரலாம்," என்கிறார் டைரக்டர்.

எனக்குப் பிரக்ஞை வருகிறது. நான் எழுந்து போகிறேன்.

அன்றைய ஷூட்டிங் ஒரு பாட்டு.

'கார் மேகங்கள் வெண் மேகங்களாகலாம் ; வெண் மேகங்கள் கார் மேகங்களாகலாம், கால காலங்களுக்கு உன்னைக் கைவிட மாட்டேன்!' என்பது பாட்டின் கருத்து.

அப்போது என் பிரச்னை வேறு வகையில் ஆகி விட்டது.

கதாநாயகன் நின்ற இடத்தில் இளவரசர் நிற்பது போலிருந்தது.

அதற்குள் இவ்வளவு மயக்கமா? என்ன சபலம் இது?

ஒரு தடவை கரையை மீறிவிட்ட வெள்ளம், பிறகு எந்தக் கரைக்குக் கட்டுப்படப் போகிறது? பாயுமிடமெல்லாம் பாய வேண்டியதுதான்.

அந்தப் பாட்டில் உருக்கமாகவும், உற்சாகமாகவும் நடித்தேன்.

படுக்கையில் மயங்கி விழுந்து விரக தாபத்தால் முனகல் சப்தமிடும் பெண்ணைப் போல, முழு மயக்கத்தில் இருந்தேன்.

"ரொம்பப் பிரமாதம்!" என்றார்கள் டைரக்டரும் தயாரிப்பாளரும்.

மாலையில் நன்றாகக் குளித்தேன். ஒரு முழு சோப் காலியாயிற்று. அது வழக்கத்தை விடக் கொஞ்சம் அதிகம்தான்.

எப்போதும் நான் விரும்புகிறபடி ஒரு குடும்பத்துப் பெண்ணின் சேலையும், ரவிக்கையும் அணிந்து கொண்டேன். தலை நிறைய மல்லிகைப் பூ.

மல்லிகைப் பூ வாசத்துக்கு மயங்காதவர்கள் உண்டா?

சில பெண்களுக்கு இந்த ரகசியம் தெரிவதில்லை. தலையில் கனகாம்பரமும், நீலாம்பரமும் வைத்துக் கொள்கிறார்கள். ஆடுமாடுகளிடம் அவற்றைப் போட்டாலும், அவை அவற்றைத் தின்ன மாட்டாவே?

நான் அழைப்புக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.



சுவர்ணமுகியோ, "என்ன சித்தி இது? ராத்திரியில் எப்போதுமே இவ்வளவு அலங்காரம் செய்து கொள்ள மாட்டாயே! எங்கே போகப் போகிறாய்?" என்றாள்.

"எங்கே போவது? ஊட்டியில் என்ன இருக்கிறது?" என்றேன்.

சித்திதான் அப்போது தேறி விட்டாளே! அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

டேப் ரெக்கார்டரைப் போட்டுக் கொண்டு கட்டிலில் சாய்ந்து கிடந்தேன்.

இளவரசரும் பெரிய ஆள்தான். இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் மெதுவாக ஒரு ஆளை அனுப்பினார். அவனும் கெட்டிக்கார வேலைக்காரன். "ஐயா ஒரு நிமிஷம் பார்க்கலாமா என்று கேட்கிறார்கள்," என்றான்.

"இதோ நானே வருகிறேன்," என்று எழுந்தேன்.

"நானும் வரலாமா சித்தி?" என்றாள், சுவர்ணமுகி.

"சீ! நீ எதற்கடி?" என்றாள் சித்தி.

சிற்றப்பா பரமபத சோபனம் விளையாடிக் கொண்டிருந்தார்!

நான் மாடிக்குப் போன போது என்னைப் போலவே இளவரசரும் அலங்காரம் செய்து கொண்டிருந்தார். அலங்காரத்தின் நோக்கம் என்ன? மற்றவர்களைக் கவர வேண்டும் என்பது தானே?

நான் பவ்யமாக உட்கார்ந்தேன்.

"நீங்கள் மேக்-அப்பில் இருந்ததை விட இப்போது அழகாக இருக்கிறீர்கள்!" என்றார் அவர்.

"என்ன அழகு? என்னைவிட எவ்வளவோ பேரழகிகள் எல்லாம் சினிமாவில் இருக்கிறார்கள்!" என்றேன் நான்.

"எது அதிகமான அழகு என்பதைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். ஏனென்றால், நான் ஒரு கவிஞனும் கூட. செயற்கைச் சாதனங்களால் சிங்காரிக்கப்படும் அழகை விட, இயற்கையான அழகே இன்பகரமான அழகு. ரோஜா புஷ்பத்துக்குப் பட்டுச்

சேலை கட்ட வேண்டுமா? எங்கே அழகு இயற்கையாக இல்லையோ, அங்கே செயற்கை தேவைப்படுகிறது. கார்கால மேகங்கள் ஒன்றோடொன்று மோதிப் பின்னுவதும் கலைவதுமாக இருக்கும்போது புதுப்புது அழகுகள் உற்பத்தியாகின்றன. வானவில்லைப் போல மனிதன் வர்ணம் தீட்டிப் பார்க்கிறான். ஆனால் அந்த இயற்கை அதில் இல்லையே! புருவத்தைச் சிரைத்து விட்டுப் பென்சிலால் மை தீட்டும் கோமாளித்தனம் எனக்குப் பிடிக்காது. கூந்தல் வளர்ச்சி இயற்கையாக இல்லை என்றால், செயற்கையாகக் கொஞ்சம் வைத்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால் அதுவே தாய்லாந்துப் பெண்களைப் போலவும், துருக் மேனியப் பெண்களைப் போலவும் இயற்கையாக இருக்குமானால், எவ்வளவு அற்புதமாக இருக்கும்! இந்தக் கண்டாங்கியும், ரவிக்கையும், குங்குமப் பொட்டும், மல்லிகைப்பூவும் மேல்நாட்டுப் பெண்களையெல்லாம் மயங்க வைத்து விட்டன. நம்முடைய துரதிருஷ்டம்-சினிமா கெடுத்த கேடு, எல்லாம் தெரிகிறமாதிரியும், மார்பு நிமிர்ந்து நிற்பது போலவும் நம்முடைய பெண்கள் ஆடை அணிந்து கொள்கிறார்கள். மார்பு இயற்கையாக எப்படி இருக் கிறதோ, அப்படித்தான் ஆடையும் இருக்க வேண்டும். உலகத்தின் பார்வைக்கு அதை எடுப்பாகக் காட்டுவதும், தனி அறையில் சரிந்து கிடப்பதுமாக இருந்தால் கணவனுக்கு வெறுப்பு வந்து விடும். நான் பச்சையாகவே சொல்கிறேன். இதில் தவறில்லை.

"மயில் தோகை விரிக்காத போது, அந்தத் தோகைகளில் கயிறு கட்டி இழுத்தால் அழகாக இருக்குமா? நானும் பார்க்கிறேன், பத்திரிகைகளில் நீங்கள் ஒருவர்தான் இன்னும் மார்பில் ஆடை யோடு போஸ் கொடுக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கை வரலாறு பற்றி நீங்கள் கொடுத்திருந்த பேட்டியையும் நான் படித்தேன். நியாயமாக நான் இன்றைக்கு ஹாங்காங் போக வேண்டியவன். உங்கள் ஷூட்டிங் என்பதால் அதை ரத்து செய்து விட்டு இங்கே வந்தேன்!" என்றார் அவர்.

அடேயப்பா! அவரது பேச்சிலேதான் எவ்வளவு கவர்ச்சி! யாரும் மயங்கும்படி ஒருவகைப் புகழ்ச்சி. இது புகழ்ச்சி என்று தெரியாதபடி ஒரு வர்ணனை. தர்க்கரீதியாக ஒப்புக் கொள்ளக்



கூடிய வாதம். பேச்சுக்கு இடையிடையே இளம் புன்னகை. பருவ காலமானதால் வசீகரமான முகம். சுருள் சுருளான கேசம். கவித்துவ ஆர்வம். இவர் காமாந்தகாரர் அல்ல என்று எண்ணும்படி ஒரு அடக்கம்-எனக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை. அவர் பேசப் பேசக் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல் தோன்றிற்று.

அபூர்வமாகச் சில மனிதர்கள் பிறக்கிறார்கள். உலகம் அவர்களைப் பற்றித் தவறாகப் பேசத் தொடங்கினாலும், அவர்கள் சரியாகவே இருக்கிறார்கள்.

"நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள்!" என்றேன் நான்.

"முதன் முறையாக உங்களிடம்தான் நீண்ட நேரம் பேசி யிருக்கிறேன். எனக்கு மதுப் பழக்கம் உண்டு என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. அதனால்தான் உங்கள் எதிரிலேயே இதைத் திறந்து வைத்தேன். குடிக்க நினைக்கும் போது நான் தனியாகவே உட்கார்ந்து குடிப்பதுதான் வழக்கம். அதில் தான் புதிய புதிய சிந்தனைகள் எழுகின்றன. கூட்டத்தோடு சேர்ந்து குடித்து விட்டுக் கும்மாளமடிப்பதில் என்ன சுகம்? அதில் எவ்வளவு குடித்தோம் என்பதும் தெரியாது. என்னுடைய கவிதைகள் சிலவற்றைத் தருகிறேன். இன்றிரவு படித்துப்பாருங்கள்!" என்ற அவர், அப்போதுதான் கொஞ்சம் மதுவை ஊற்றப் போனார்.

உடனே நானே முன்வந்து என் கையாலேயே பரிமாறினேன்.

ஒரு அவுன்ஸ் ஊற்றியதும், "போதும்," என்றார்.

சின்ன வயதுக்குள் நானே விரக்தி, வேதனை, இன்பம், துன்பம் அனைத்தையும் சந்தித்து விட்டேன். ஆனால் எந்த விவகாரத்திலும் சிக்கிக் கொள்ளாதவராக அவர் காட்சி அளித்தார்.

மெதுவாக, "உங்கள் மனைவி எல்லாம் எங்கிருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

"மன்னிக்க வேண்டும். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்தியாவில் எந்தப் பெண்ணுடனும் எனக்குத் தொடர்பில்லை. ஆயிரம் இருந்தாலும், நான் அந்தஸ்தை இழக்க மாட்டேன். தென்னைமரம் விழுந்தாலும் ஒரேயடியாக

விழுமே தவிர, மற்ற மரங்களைப் போலத் துண்டு துண்டாக விழாது!" என்றார், அவர்.

நான் பெருமூச்சு விட்டேன். ஏதோ ஒரு ஆதங்கமே என்னுள் எழுந்து விட்டது.

கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தது.

"உங்களுடன் பேசிக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரிவதில்லை!" என்றேன்.

"இருவர் ஜாதகத்திலும் இடமிருக்குமானால் இப்படியே பேசிக் கொண்டிருக்கலாம்," என்றார்.

எனக்கு மெய் சிலிர்த்தது.

ஒன்றும் தெரியாதவளைப் போல், "என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நேரடியாகவே சொல்கிறேன். நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்!" என்றார், அவர்.

என் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை மின்சாரம் பாய்வது போலிருந்தது.

## 22. இனி அவள் மஞ்சுளாம்மா

சில மனிதர்கள் ரகசியச் சுரங்கங்களாக விளங்குகிறார்கள். சிலர் எல்லா விஷயங்களிலும் உளறிக் கொட்டுகிறார்கள். குறிப்பிட்ட சிலர்தான் பேசக்கூடிய விஷயங்களையும் பேசவேண்டிய விஷயங்களையும் பேசுகிறார்கள்.

சுற்றி வளைக்காமல், சுயசரிதம் பாடாமல், கற்ற வித்தை அத்தனையும் கறந்து வைத்துப் பார்க்காமல், எடுத்த எடுப்பிலேயே நறுக்குத் தறித்தாற்போல் கேட்டு விட்டாரே!

அவர் கேட்ட பாணியே, 'உண்டு என்றால் சொல் இல்லையென்றால் பரவாயில்லை!' என்பது போன்றிருந்தது.



அதற்கு மேல் நான் பேசத்தான் என்ன இருக்கிறது?

ஆனாலும் நான் பெண். ஆரம்பத்திலேயே 'சரி சரி' என்று தலையாட்டி விட்டால், 'இப்படிப் பல பேருக்குச் சம்மதித்திருப்பாள் போலிருக்கிறது!' என்று எண்ணி விட மாட்டார்களா?

ஆடவர்களுடைய மனோதர்மமே அதுதானே!

மெதுவாகத் தலையைக் குனிந்தபடி, "சித்தப்பாவைக் கேட்டுச் சொல்கிறேன்," என்றேன்.

"மெதுவாகச் சொல்லலாம் ; அவசரமில்லை. திருமணம் என்பது அவ்வளவு சுலபத்தில் முடிவு செய்யப் படுகிற விஷயமல்ல. நான் பல நாள் யோசித்திருந்தேன். திடீரென்று கேட்டு விட்டேன். நீங்கள் இனிமேல்தான் யோசிக்க வேண்டும். நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். என்னைப் பொறுத்தவரை இதுதான் முடிவு. மஞ்சுளா கிடைக்கா விட்டால் இன்னொருத்தி என்று நான் கணக்குப் போடவில்லை. எதையும் நாடாத என்னுடைய மனத்தில் பல நாட்களாகவே உங்களைப் பற்றியே எண்ணம் உதயமாகிக் கொண்டிருந்தது. ஒரு தடவை சென்னைக்கே வரலாம் என்று கூட யோசித்தேன். ஆனால் ஆடவனாகிய எனக்கும் கூடக் கொஞ்சம் கூச்சமிருந்தது. நன்மைக்கோ தீமைக்கோ தெரியவில்லை. என்னுடைய பங்களாவிலேயே உங்களுடைய ஷூட்டிங் ஏற்பாடு செய்யப்பட்டது. மெதுவாகவே சொல்லுங்கள் ; அவசரமில்லை. நான் வெளிநாடு சென்று திரும்பி வந்த பிறகு கூடச் சொன்னாலும் தவறில்லை," என்றார் அவர்.

"இல்லை. அவ்வளவு நாளாகாது!" என்று என்னையும் அறியாமல் சொல்லி விட்டேன்.

உள்ளுணர்வின் போராட்டம், அந்த நேரத்தில், என்னை வெட்கம் கெட்டவளாக்கி விட்டது.

உண்மையாகவே விரும்புகின்ற ஒன்றின் மீது விருப்பமில்லாதவர்கள் போல் நடிப்பது, மிகச் சிரமம்தான். அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சத்தை முகம் காட்டி விடும்.

பிறகு அவர் சம்பிரதாயத்துக்கு வந்தார். திருமணப் பேச்சை மாற்றி, "ஏதாவது சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை; நீங்கள் சாப்பிடுங்கள். நான் பரிமாறுகிறேன்," என்றேன்.

"பின்னால் நீங்கள் என் மனைவியாக வரப் போகிறீர்களோ இல்லையோ, ஒரு உண்மையை நான் சொல்லிவிட வேண்டும். எப்பொழுதுமே இரவு பன்னிரண்டு மணிக்குத் தான் நான் சாப்பிடுவது வழக்கம். அது தவறு தான். ஆனால் எப்பொழுதும் பன்னிரண்டு மணியாக இருப்பதால், மருத்துவப்படி அது நியாயமாகி விடுகிறது. ஒரு நாள் ஒன்பது மணி, ஒரு நாள் பன்னிரண்டு மணி என்றிருப்பதுதான் தவறு!" என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

"எத்தனை மணியானால் என்ன? நான் இருந்து பரிமாறுகிறேன்," என்றேன் நான்.

அவர், "மிகுந்த மகிழ்ச்சி!" என்றார்.

உள்ளுக்குள்ளேயே எனக்கொரு புளகாங்கிதம். குழப்பமான சூழ்நிலையில் இருந்து ஒரு தெளிந்த நீரோடைக்குப் போகப் போவது போல் எனக்குத் தோன்றிற்று.

சில வருடங்களுக்கு முன் ஒரு தெருக் கூத்திலே எங்கள் ஊரில் நான் கேட்டிருக்கிறேன். 'கமலம்' என்பவர் பாடியிருக்கிறார், சினிமாக்காரர்களைப் பற்றி -

"பவுடர் பூசும் மேக்-அப் மேனுக்குப்
பாதிப் பொண்டாட்டி - அவள்
படம் பிடிக்கிற கேமிரா மேனுக்குப்
பகலில் வைப்பாட்டி!" - என்று.

பொதுவாகச் சினிமாக்காரிகள் எவ்வளவு உத்தமிகளாக இருந்தாலும், வெளியில் அவர்களைப் பற்றி அப்படித்தானே பேசுகிறார்கள்!

'நான் கல்யாணம் ஆன பிறகு சினிமாவில் நடிக்கமாட்டேன்!' என்று சில நடிகைகள் அறிக்கை விடுகிறார்கள். இவர் வேண்டாம் என்று சொன்னால், நான் கூட விட்டு விடலாம் என்று எண்ணத் தலைப்பட்டேன்.



இருவரும் எதிரெதிராகவே உட்கார்ந்திருந்தோம். வெகு நேரம் வரை மௌனம். அடிக்கடி கண்கள் பேசின. சில நேரங்களில் நாணப்பட்டு நிலம் பார்த்தன.

'என்னடி இது அதிசயம்? நீ என்ன புத்தம் புதிய கன்னிப் பெண்ணா? அனுபவப் பட்டவள் தானே? ஏற்கனவே ஒருவருக்கு மனைவியாகவும், அவருடைய தம்பிக்கு வைப்பாட்டியாகவும் இருந்தவள் தானே? உனக்கென்ன நாணம்?' என்கிறீர்களா?

அதுதான் வேடிக்கை. இது ஏழாவது திருமணமானாலும் பெண்ணுக்கு நாணம் வரத்தான் செய்யும்.

ஏன், எந்த விலைமகளும் கூட ஒவ்வொரு புதிய ஆடவனைப் பார்க்கும் போதும் ஒரு நிமிட நேரமாவது நாணமடையத் தானே செய்கிறாள்.

அவர் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தார்.

அந்தத் தாகம் அவருக்குத் தீரவில்லை; இந்தத் தாகம் எனக்குத் தெரியவில்லை.

குடிக்கின்ற ஆடவர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். குடி அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் முன்னால் சொன்னதை மறந்து யாரையும் கைப் பிடிக்கத் தொடங்குவார்கள். ஆனால், இவர் அதிலும் அதிசயமாகத்தான் இருந்தார். எங்கே நாணமில்லாமல் அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்து விடுவேனோ என்று நான்தான் பயந்து கொண்டிருந்தேன்.

இவ்வளவு வெறி என் கணவனிடமோ கொழுந்தனிடமோ வரவில்லையே, ஏன்?

இவருடைய பணம் காரணமா? அழகு காரணமா?

எது காரணமோ?...

மார்கழி மாதம் அதிகாலையில் நல்ல வெந்நீரில் குளிப்பது போன்ற சுகம், என்னுள் எழுந்தது.

அந்த நேரத்தில் என்னுடைய வழக்கைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் அவர் கேட்கத் தொடங்கினார்.

நான் எதை மறைக்க முடியும்? எல்லாம்தான் பத்திரிகையில் வந்திருக்கிறதே!

மளமளவென்று அனைத்தையும் ஒப்பித்தேன்.

"அவ்வளவும் எனக்குத் தெரியும். இதற்கு முன்னால் நீ எப்படி இருந்தாய் என்பது கேள்வியல்ல. என் கைகளை நீ தொட்டு விட்டால், பிறகு வேறு கைகளைத் தொடக் கூடாது. அவ்வளவுதான்!" என்றார்.

"சீச்சீ! அந்தப் பழக்கம் எனக்கில்லை. உங்களைப் போல் நானும் நேரடியாகவே சொல்கிறேன். என் கணவரை நான் உயிராக நேசித்தேன். அவர் இறந்த பிறகுதான் சினிமாக்காரியானேன். இப் போதும் அவருடைய தம்பி தான் என்னோடிருந்து வருகிறார். நான் விலை மகளாக இருந்ததில்லை!" என்றேன்.

"அப்படியே நீ வாழ்ந்திருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. இனி நீ அப்படி வாழக்கூடாது!" என்றார்.

'இனி இனி' என்று அதைத் திருப்பித் திருப்பிச் சொன்னார். அது அவர் தீர்க்கமான முடிவுக்கு வந்திருப்பதைக் காட்டிற்று. நானும் உறுதியான முடிவுக்கு வந்து விட்டேன்.

மணி பன்னிரண்டு அடித்தது.

"நீ போய்ப் படுத்துக் கொள்ளம்மா," என்றார்.

மறுநாள், சித்தியிடம் சொன்னேன் ; சிற்றப்பாவிடம் சொன்னேன்.

"சுவாமிநாதன் விஷயமென்ன?" என்று கேட்டார்கள்.

"அதைக் கவனித்துக் கொள்ளலாம். இவர் கணவராகி விட்டால், என்னை என்ன செய்ய முடியும்?" என்று கேட்டேன்.

நான் சொல்ல வேண்டியதை அவர்கள் கேட்க வேண்டிய நிலையில் தானே சிற்றப்பாவும், சித்தியும் இருந்தார்கள். சம்மதித்து விட்டார்கள்.

அன்று நல்ல மழை. படப்பிடிப்பு இல்லை.

நான் மேலே இருந்து வந்த வேலைக்காரன் ஒருவனிடம், "இளவரசரைப் பார்க்க வேண்டும்," என்றேன்.



அவன் ஓடிப்போய்ச் சொன்னான். அவர் உடனே அழைத்து வரச் சொல்லி அனுப்பினார்.

மெதுவாகப் போனேன். கூச்சத்தோடு நின்றேன். "சிற்றப்பாவும் சித்தியும் சம்மதித்து விட்டார்கள்," என்றேன்.

"நான் யாருக்கும் சொல்ல வேண்டிய நிலையில் இல்லை. காரணம், பெற்றோர் உயிரோடு இல்லை. இப்போது என்ன செய்யலாம்?" என்றார்.

"உங்கள் இஷ்டம்!" என்றேன்.

"திருமணத்தைச் சீக்கிரம் முடிக்கலாமா?" என்றார்.

அதற்கும், "உங்கள் இஷ்டம்!" என்றேன்.

"நன்கு ஏற்பாடு செய்து சென்னையிலேயே பிரமாதமாக நடத்தி விடுவோம். நான் உடனேயே இளைய கோட்டை (அவரது சமஸ்தானம்) சென்று ஏற்பாடுகளையெல்லாம் முடித்துக் கொண்டு, தேதியை நிர்ணயித்துச் சென்னை திரும்புகிறேன்," என்றார்.

நான் மெய்சிலிர்க்கக் கீழே இறங்கி வந்தேன்.

சென்னை திரும்பி விட்டோம்.

இளவரசர் திரும்பும் வரை சுவாமிநாதன் கண்களில் படாமல் இருப்பதற்காக நகரில் பிரபலமான ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் ஒரு 'சூட்'டை நான் வாடகைக்கு எடுத்துக் கொண்டேன்.

என் சித்தியும், சிற்றப்பாவும் அடிக்கடி வீட்டிலிருந்து டெலிபோன் செய்தார்கள்.

சுவாமிநாதன் அடிக்கடி வந்து விசாரித்துக் கொண்டே இருந்தாராம்.

அவரை நான் எப்படியும் சமாளித்து விடுவேன். ஆனால் ஒரே ஒரு விஷயம் தான் என்னைச் சிக்கலில் ஆழ்த்தி விட்டது போல எனக்குத் தோன்றிற்று. அன்று காலைப் பத்திரிகையில் வந்த செய்தியே அது.

"கோடீஸ்வர இளைஞரை மஞ்சுளா மணந்து கொள்ளப் போகிறார். ஊட்டியில் உருவான காதல் திருமணத்தில் முடியப் போகிறது!" என்று அந்தப் பத்திரிகை கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருந்தது.

# 23. ஆடாதோர் யாரே...

பத்திரிகைக்காரர்களுக்கென்ன, ஏதாவது ஒரு செய்தியைப் போட்டு அன்றையப் பத்திரிகையை விற்று விட வேண்டும். யாருடைய வாழ்க்கையை அது எப்படிப் பாதிக்கும் என்று அவர்கள் கவலைப்படவா போகிறார்கள்?

பத்திரிகையிலே செய்தி வந்து விட்டது என்றால், சுவாமி நாதன் எப்படி இருப்பார்? எனக்குக் கூடக் கொஞ்சம் கவலைதான்.

சுகமாக ஒருவரிடம் பழகிவிட்டு, ஒரு காரணமும் இல்லாமல் இன்னொருவரிடம் தாண்டுவது என்பதை எண்ணும்போது, எனக்கே கவலையாகத்தான் இருக்கிறது?-

என்னுடைய எதிர்காலப் பாதுகாப்பு என்று ஒன்றிருக்கிறதே?

'தாசிக்கு உடலம் தளர்ந்த போதென்ன வரும்? வாசற் பெருக்க வரும்' என்பார்கள். எனக்கு வயதாகிவிட்டால் சுவாமி நாதனே எப்படி இருப்பாரோ?

சித்தி டெலிபோன் செய்தாள்.

சுவாமிநாதன் வீட்டிற்கு வந்தாராம். 'அவள் எப்படித் திருமணம் செய்து கொள்வாள்? குறைந்தது ஐந்து வருஷ காலமாவது ஜெயிலில் இருக்க வேண்டி வருமே,' என்கிறாராம்.

நான் எதிர்பார்த்ததுதான். அவரால் செய்ய முடிந்தது அது ஒன்றுதானே!

ஹோட்டல் பையன் சாப்பாடு கொண்டு வந்து வைத்தான். என்னோடு துணைக்கிருந்த ஆயாவைச் சாப்பிடச் சொல்லிவிட்டு, நான் யோசித்துக் கொண்டே படுத்திருந்தேன்.

'சரி சரி, இளவரசருக்கு மேலேயா இவர்! தன்னுடைய செல் வாக்கைக் கொண்டு அவரே சொன்னாரே?'- என்னவெல்லாமோ யோசனை.

ஆள் துணை இல்லாமல் தனக்குத்தானே யோசிக்கும் போது, ஒவ்வொரு சிந்தனையும் பயமாகத்தான் இருக்கும்.



ஒரே குழப்பத்தில் மேக்-அப்பைக்கூட அழிக்காமல் நான் படுத்திருந்தபோது, இளவரசரிடமிருந்து டிரங்க்கால் வந்தது; அது வீட்டுக்குப் போய் அதை அங்கிருந்து இங்கு திருப்பி அனுப்பி இருக்கிறார்கள்.

'இளவரசர் பேசுகிறார்,' என்றவுடனே எனக்கு ஏதோ ஒரு நிம்மதி.

அவர் உடல் நலம் விசாரிக்கிறார். "ஒரு வாரத்தில் வந்து விடு கிறேன்," என்கிறார். நானோ, "நல்லது நல்லது..." என்று சொல்லிக் கொண்டே, என் வழக்கைப் பற்றிச் சொல்லத் துடிக்கிறேன்!

ஆறு நிமிஷ நேரம் அவர் பேசிய பிறகு, என் நிலைமையைச் சொன்னேன்.

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. நான் வந்து கவனித்துக் கொள்கிறேன்," என்றார்.

எனக்குத் தைரியம் வந்து, வெறும் ஆரஞ்சு ஜூஸ் மட்டும் குடித்துவிட்டு, மத்தியான ஷூட்டிங்கிற்குப் புறப்பட்டேன்.

நானோ இளவரசரை மணந்து கொள்ளப் போகிறேன். அன்றைய ஷூட்டிங்கோ ஓர் ஏழை விவசாய இளைஞனை நான் காதலிக்கின்ற காட்சி.

விளக்குகளின் பிரகாசம், ஆட்களின் சத்தம், விசில் சத்தம், ஷூட்டிங் எல்லைக்கப்பால் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்த ஷாட் 'கிரேன் ஷாட்.'

"காமெரா வைக்க ஒரு அரை மணி நேரமாகும். நீங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்," என்றார் டைரக்டர்.

செட்டுக்குக் கொஞ்சம் தள்ளி உட்காருவதற்காக வந்தேன். உடம்பெங்கும் ஓர் அதிர்ச்சி. அங்கே சுவாமிநாதன் உட்கார்ந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும், பார்க்காதது போல அவர் இருந்தார். அந்த நிலையே ஒரு கொலையாளி உட்கார்ந்திருப்பது போல் எனக்குத் தோன்றியது

நானாக எப்படிப் பேச்சுக் கொடுப்பது?

அரை மணி நேரம் மௌன நாடகம். என் மனோ நிலையே முழுக்கக் கெட்டு விட்டது.

அன்றைக்கு என்னால் தயாரிப்பாளர்களுக்கு நிறைய பிலிம் வீணாயிற்று.

ஷூட்டிங் முடிந்தது.

நானும் தலையைக் குனிந்தபடி வெளியே வந்து காரில் ஏறி உட்கார்ந்தேன். பனிச்சென்று கதவைத் திறந்து சுவாமி நாதனும் ஏறி உட்கார்ந்தார்.

'இறங்குங்கள்!' என்று சொல்லும் துணிவு, எனக்கு இல்லாமல் போய் விட்டதே!

காரில்தான் அவர் பேச ஆரம்பித்தார்.

"நீ திருமணம் செய்து கொள்வதென்றால் தாராளமாகச் செய்து கொள்ளலாம். உன்னை நம்பியா நான் இருக்கிறேன்? ஆனால், ஒன்று மட்டும் மறக்காதே. எத்தனை கோர்ட்டுக்குப் போனாலும் நீ தப்பிக்க முடியாது. கடவுள் நல்ல காலத்துக்குத்தான் நான் சாட்சி சொல்வதை ஒத்தி போட்டுக் கொண்டே வந்திருக்கிறார். ஐந்து வருஷமோ, ஏழு வருஷமோ கழித்து நீ வெளியிலே வரும் போது உன் மார்க்கெட் எப்படி இருக்கும், பார்க்கலாம்!" என்று சொல்லி விட்டு, டிரைவரைப் பார்த்து, "நிறுத்தப்பா காரை," என்றார்.

கார் நின்றது. நடுவழியிலேயே இறங்கிக் கொண்டார்.

மீண்டும் மனத்திலே ஒரு படம். இளவரசரின் வாக்குறுதி. இனி எது நடந்தால் என்ன என்ற நிலை.

சிற்றப்பாவிடமோ சித்தியிடமோ நடந்ததைச் சொல்ல வில்லை. அன்று நான் வீட்டிலே நிம்மதியாகப் படுத்துத் தூங்கினேன்.

மறுநாள் காலையில் என் சித்தி சொன்னாள். இரவெல்லாம் மாடியில் நின்று சுவாமிநாதனும் பாரிஜாதமும் எங்கள் வீட்டையே பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்களாம்.



"சிரிக்கட்டும், சிரிக்கட்டும்!" என்று நான் அலட்சியமாகச் சொல்லி விட்டேன்.

எப்படியோ அந்த ஒரு வாரத்தை ஓட்டினேன். தந்தி வந்தது. இளவரசரும் வந்துவிட்டார்.

என்ன பொருத்தம் பாருங்கள். நான் தங்கி இருந்த அதே ஹோட்டலில் அதே 'சூட்'டில் அவர் தங்கியிருந்தார்.

மிகப் பெரிய ஹோட்டல்களில் ஒரு வசதி, எவ்வளவு பெரிய நட்சத்திரங்கள் அங்கே வந்தாலும் கூட்டம் கூடாது; மற்றவர்களைப் போலத்தான் பாவிப்பார்கள்.

அதனால்தானே பம்பாயில் பெரிய நட்சத்திரங்கள் எல்லாம் தங்கள் ரகசிய வாழ்க்கைக்குப் பெரிய நட்சத்திர ஹோட்டல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

இரவு ஷூட்டிங் முடிந்து ஒன்பதரை மணிக்கெல்லாம் அங்கே சென்று விட்டேன்.

'சூட்'டுக்குள் நுழையும் போதே எனக்குப் பிரமை தட்டிற்று.

நான்தான் ஏற்கெனவே கற்பனை செய்திருந்தேனே! ஹாங்காங், நியூயார்க், ஹெலிகாப்டர், படுத்துக் கொண்டிருக்கும் போதே சுற்றிக்கொண்டு வரும் படுக்கை என்றெல்லாம்! அந்தக் கற்பனை பன்மடங்கு பெருகிற்று.

நகைப் பெட்டிகளை அவர் திறந்து காட்டினார்.

ராணிகளுக்காகவே தயாரிக்கும் ஆடைகளைக் காட்டினார்.

எனக்கு என்ன தோன்றிற்றோ...

ஐயய்யோ! நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்?

அவரை அப்படியே கட்டி ஒரு முத்தம் கொடுத்து விட்டேன். அதில் அவரும் மெய்மறந்து போய்விட்டார்.

ஆனால், சினிமாவில் வருவதுபோல் 'இன்னொன்று' என்று கேட்கவில்லை.

அந்தக் குஷியில் மருந்து பாட்டிலைத் திறக்க ஆரம்பித்தார்.

சினிமா உலகத்தில் மதுவை 'மருந்து' என்றுதான் சொல்வார்கள்.

நானே லேசாக ஊற்றிக் கொடுத்தேன்.

"கொஞ்சம் கொஞ்சமாகக் குடியுங்கள். ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருப்போம்," என்றேன்.

பாத்ரூமிற்குப் போய் முகத்தை நன்றாகக் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு வந்தேன். அவர் ஆசைப் பட்டாலும் இணங்கி விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டேன்.

ஆனால் அவரோ பேசினார், சிரித்தார், சாப்பிட்டார். பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு தலையைக் கோதியபடியே தூங்க முயன்று, தூங்கி விட்டார். நான்தான் அதிக வெட்கம் கெட்டவளாக நடந்து கொண்டேன்.

நான் வானத்திலேயே பறந்து கொண்டிருந்தேன்.

ஒருநாள் திருமண அழைப்பிதழைக் காட்டினார். ஓர் இதழ் பன்னிரண்டு ரூபாய் ஆகிறதாம். அதுவே சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்!

இளவரசர் கல்யாணம், கல்யாண மண்டபத்திலா நடக்கும்?

இரண்டு ஏக்கர் பரப்பளவில், சென்னையில் அமையப் பெற்ற அவரது பங்களாவைச் சுற்றிலும் பிரும்மாண்டமான கொட்டகை! அலங்கார வேலைப்பாடுகள்! அதுவே ஒரு புதிய அரண்மனை எழும்பி இருப்பது போன்றிருந்தது.

நகைகள் எல்லாம் என் வீடு வந்து சேர்ந்து விட்டன. அத்தனை நகைகளையும் எனக்குப் போட்டுப் போட்டு அழகு பார்த்தாள் சித்தி.

இப்போது சித்திதான் மகாராணி, சிற்றப்பாதான் மகாராஜா.

"நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு இது கிடைத்திருக்கிற தென்றால், இதைக் கடவுள் அருள் என்று சொல்லாமல், வேறு என்ன சொல்ல முடியும் சித்தி?" என்றேன்.

"போடி போ! ஈரோடு ஜங்ஷனிலும், திருச்செந்தூர் கடைத் தெருவிலும் தெருத் தெருவாக லோந்துபட்டவர்கள், எப்படி எப்படியோ தன்னைப் படம் பிடிக்க வைத்து வாழ்ந்தவர்கள் - இவர்



களுக்கெல்லாம் பெரிய இடம் கிடைக்கும்போது, உனக்குக் கிடைத்ததில் என்ன தப்பு?"

அறுநூறு வருஷ காலமாக, இளைய கோட்டை மகாராணிகள் மட்டுமே அணிந்திருந்த சில நகைகள் அடங்கிய பெட்டியையும் அவர் அனுப்பி இருந்தார்.

எல்லாவற்றையும் போட்டு, பழைய பாணியில் சேலையைக் கட்டி விட்டாள் சித்தி. அந்தக் கோலத்தில் ஒரு புகைப்படம் வேறு எடுத்து விட்டாள்.

கல்யாணத்துக்கு முன்பு ஒரு தடவை அவரோடு பேச வேண்டும் போல் என் மனசு துடித்தது.

ஹோட்டலுக்குச் சென்றேன். வழக்கமான என் விதியும் கூட வந்தது.

என்னிடம் ஒன்றும் பேசாமல், உறவினர்கள் வாங்கிய 'தடை உத்தரவை' மட்டும் என்னிடம் காட்டினார் அவர்.

## 24. உழுகின்ற மாடு ஊருக்குப் போனால்...

**த**ண்டவாளத்தில் படுத்திருப்பது ஆட்டுக் குட்டிதான் என்றாலும், ரயிலை நிறுத்தித்தானே ஆக வேண்டும்.

சொந்தக்காரர்கள் தடை உத்தரவு வாங்கி விட்டால், கோவில் கூடவா இல்லாமற் போய்விட்டது!

எங்கேயும் திருமணம் செய்து கொள்ளலாம். இளவரசர் அதற்கும் தயாராகத்தான் இருந்தார்.

ஆனால் இளைய கோட்டை சமஸ்தானத்தின் சம்பிர தாயப்படியும், வெள்ளைக்கார ஆட்சி ஒப்புக் கொண்டு சட்ட பூர்வமாகச் செய்தபடியும், சமஸ்தானத்தின் இளவரசர்கள் பாரம்பரியத்தை மீறி வேறு மதத்திலோ, ஜாதியிலோ திருமணம் செய்து கொண்டால், சொத்துரிமையை இழக்க வேண்டுமாம். அதைச் சொல்லித்தான் இளவரசர் என்னிடம் வருந்தினார்.

27637

இளவரசரது சொத்தின் மீது எனக்கும் ஆசைதான் என்றாலும், அவரோடு பழகிய பிற்பாடு, அவரே பெரிய சொத்து என்று எனக்குத் தோன்றிற்று.

ஆனால் சொத்து விஷயத்தில் அவர் மிகவும் கவலைப் பட்டார்.

"எப்படியெல்லாமோ உன்னை அலங்கரிக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். சமஸ்தான சம்பிரதாயம் எனக்குத் தெரியும். ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அந்தச் சம்பிரதாயத்தைப் பற்றி யாரும் கவலைப் பட்டது கிடையாது. இப்போது என் சொத்தின் மீது பல பேருக்குக் கண். அவர்களுக்கு நல்ல காரணம் கிடைத்து விட்டது. மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன போகும்? அசையாப் பொருள்கள் போகும். அதாவது, அரண்மனை மாளிகை, நிலபுலன் போகும். நகை, நட்டுகளையும், பிற சொத்துகளையும் நான்தானே வைத்திருக்கிறேன்? நீ எதற்கும் கவலைப்படாதே! இந்த ஓட்டலிலேயே ஆயுள் முழுக்கத் தங்கிக் கொள்வதென்றாலும் நாம் தங்கிக் கொள்ளலாம். அதற்கான பணம் என்னிடம் இருக்கிறது. இப்போது அரண்மனைப் பந்தலில் திருமணம் நடத்த முடியாது. அதற்காக என்ன, ஏதாவது ஒரு கல்யாண மண்டபத்திலே நடத்தி விடுவோம். அழைப்பிதழ் அனுப்பியவர்களுக்கெல்லாம், துணைக் கடிதம் ஒன்று அனுப்ப வேண்டும். அவ்வளவுதான்!" என்[illegible]ர்.

அப்படியே துணைக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அழகானதோர் திருமண மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டது.

என் திருமணம்...

ஒரு சினிமா நடிகையின் திருமணம்.

நாட்டிலே அதற்கு எந்தவித மரியாதையும் இல்லை என்பது உண்மைதான்.

சினிமா நடிகை ஹனிமூனுக்குப் போகிறேன் என்றால், 'ஹனிமூன் ஆஃப்டெர் மெனி மூன்ஸ்!' என்று கேலி செய்வார்கள். இதையெல்லாம் பார்த்தால் வாழ முடியுமா?



'நான் மேஜர்!' என்று சொல்லித் தடை உத்தரவை ரத்து செய்துவிட்டு வந்தார் அவர்.

எட்டாயிரம் ரூபாய் பட்டுச் சேலையில் நான் மின்னினேன். நடிகையல்லவா? பளபளவென்று ஜொலித்தேன்.

திருமணம் நன்றாகவே நடந்து விட்டது.

திருமணத்தில் எனக்கு வேண்டியவர்களும், அவருக்கு வேண்டியவர்களுமாக ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்தார்கள். பெரிய மனிதர்களெல்லாம் அவரோடு வந்து கைகுலுக்கினார்கள்.

அன்று இரவு -

அவரை என் வீட்டிலேயே தங்க வைத்துக் கொண்டேன். அவருக்குத்தானே அன்று சாந்தி முகூர்த்தம். நான் தான் பல தடவை சாந்தியடைந்து விட்டேன்.

விவரம் தெரிந்த இரண்டு பேருக்கு அது இன்ப இரவு. அதை 'முதலிரவு' என்று அழைப்பது பொருந்தாது.

முதல் முதலாக ஒரு தமிழ்ப் பெண்ணைத் தான் தொடுவதாக அவர் கூறினார்.

"போலித்தனமான மேலை நாட்டு நாகரிகத்தில் சிக்காத அழகான குடும்பப்பெண்!" என்று என்னை வர்ணித்தார்.

அந்த வருணனைகள் எனக்குப் புதியவையல்ல. ஆனால், ஒரு புதியவன் வருணனைகள் அவை.

நாங்கள் தூங்கவில்லை.

இரவு மணி பன்னிரண்டு.

அவர் எங்கேயோ டெலிபோன் செய்தார். ஆங்கிலத்தில் பேசினார். "சீக்கிரமாக அனுப்புங்கள்," என்றார். "அரண்மனைக்குக் கொண்டு போக வேண்டாம்," என்றார். "ஓட்டலில் கொண்டு போய் இறக்குங்கள்," என்றார். "யாரும் தொடர்ந்து வருகிறார்களா?" என்று கேட்டார். டெலிபோனை வைத்து விட்டார்.

இரவு இரண்டு மணிக்கு மீண்டும் டெலிபோன் செய்தார்.

'ஏதோ அரண்மனை விவகாரம் போலிருக்கிறது,' என்று நானும் பேசாமல் இருந்து விட்டேன்.

அதிகாலையிலேயே எழுந்து அவர் ஓட்டலுக்குப் போய் விட்டார்.

சித்தியும் சிற்றப்பாவும் நகைகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முதலிரவு முடித்தவர், ஒரு தாசி வீட்டில் இருந்து எழுந்து ஓடுவது போல ஓடியது, எனக்கும் வேதனையாகத் தான் இருந்தது.

காலை பத்து மணிக்குச் சில அதிகாரிகள் என் வீட்டுக்கு வந்தார்கள். இரண்டு லாரிகள் நிறையப் போலீசாரும் வந்தார்கள்.

அவர் எனக்குக் கொடுத்த நகைகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்றார்கள்.

சித்தியும் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டினார்கள்.

எல்லாவற்றுக்கும் அதிகாரிகள் ஒரு பட்டியலைத் தயாரித்தார்கள்.

அதிலே கையெழுத்துப் போட்டு, ஒரு பிரதியை என்னிடம் கொடுத்துவிட்டு, அனைத்தையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

இது நடந்து கொண்டிருக்கும் போது, நான் யாருக்கும் டெலிபோன் செய்யாமலிருக்க, டெலிபோனையும் எடுத்துக் கீழே வைத்து விட்டார்கள்.

அவர்கள் யார்? வருமான வரி அதிகாரிகளா? இல்லை, அவரது சொந்தக்காரர்கள் கொடுத்த புகாரின் பேரில் வந்தவர்களா?

நான் அவர்களை விசாரித்தேன்.

"நாங்கள் மத்திய துப்பறியும் இலாகா!" என்றார்கள்.

அவர்கள் போனதும், ஓட்டலுக்கு நான் டெலிபோன் செய்தேன்.

ஓட்டல் ஆபரேட்டர் எனக்குச் சொன்ன பதில் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

அவரது அறையில் சோதனை நடந்து கொண்டு இருக்கிறதாம். அவரோடு யாரும் பேச முடியாதாம்!



நானே ஓட்டலுக்குப் போகலாமா என்று யோசித்தேன்.

டெலிபோனில் பேச முடியாதென்றால், ஆட்களை எப்படி அனுமதிப்பார்கள்?

எதைப் பார்த்தாலும் மர்மம்.

என் வாழ்க்கையில் நான் எக்ஸ்பிரஸ் ரயிலில்தான் ஏறிப் படுக்கிறேன். கண் விழித்துப் பார்க்கும்போது அது குட்ஸ் வண்டியாக இருக்கிறது.

யாரோ ஒருவர் சொன்னது போல், என் குதிரையை நான் மேற்கு முகமாக நிறுத்துகிறேன். நானோ பின் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கிழக்குப் பக்கமாகப் பார்க்கிறேன். நான் உதயத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். குதிரை அஸ்தமனத்தை நோக்கிப் போய்க் கொண்டே இருக்கிறது.

பக்கத்து மாடியில் சிரிப்புச் சத்தம் கேட்டது.

என்னைப் பார்த்து யார் சிரிக்கப் போகிறார்கள் ! சுவாமிநாதனும், பாரிஜாதமும் தான்.

அந்த ஆணவச் சிரிப்பைப் பற்றி நான் ஏன் கவலைப் பட வேண்டும்?

எத்தனையோ பணக்காரர்கள் வீட்டில் சோதனைகள் நடக்கவில்லையா?

நம்முடைய அரசாங்கங்களில் இருப்பவர்கள், இத்தகைய சோதனைகள் மூலமே, தங்களுடைய நேர்மையை வெளிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

அவர்கள் நூறு வீடுகளில் சோதனை போடுகிறார்கள். அடுத்து வரும் அரசாங்கம் அவர்கள் வீடுகளில் சோதனை போடுகிறது.

இதில் யாரைப் பார்த்து யார் சிரிப்பது?

விஷயம் புரியவில்லையே என்ற கவலைதான் எனக்கு.

அந்தச் சில மணி நேரங்கள் நான் முள்ளின் மேல்தான் நின்றேன்.

பிறகு மறுபடியும் ஓட்டலுக்கு டெலிபோன் செய்தேன்.

அவருடைய அறை பூட்டி இருப்பதாகச் சொன்னார்கள்.

மர்மத்தின் மேல் மர்மம்.

## 25. ஏழாவது பௌர்ணமி

என்னோடு இந்த மர்மத்தைக் கண்டுபிடிப்பதில் ஒத்துழைக்கக் கூடியவர்கள் அவரது அரண்மனை ஊழியர்களே. ஆனால், அவர்களும் இப்போது எப்படி இருப்பார்களோ?

நான் படத்தில் நடிப்பதையும், ஷூட்டிங்குக்குப் போக வேண்டும் என்று நினைப்பதையும் கூட மறந்து விட்டேன்.

நான் தேர்ந்தெடுக்கும் எதுவும் எனக்கு நிம்மதியாக இல்லை.

மரியாதைக்காகச் சினிமாவில் நடித்துக் கொண்டே வந்தவரைக்கும் வாழ்வு என்று வாழ்வதுதான் நியாயமோ என்று கூட எண்ணத் தொடங்கினேன்.

எந்தப் பக்கம் யார் சிரித்தாலும், அது என்னைப் பார்த்துச் சிரிப்பதாகவே தோன்றிற்று.

உலகமே எனக்கு விரோதமாகி விட்டது போல் எனக்கொரு பிரமை.

ஒன்றும் புரியாத போது சிலர் முன்னும் பின்னும் உலாத்துவார்கள். சிலர் படுத்த படுக்கையாகக் கிடப்பார்கள். நானோ ஒரு நாற்காலியில் பதுமை போல் உட்கார்ந்து விட்டேன்.

மாலைவரை அவரைப் பற்றி ஒருவிதத் தகவலும் இல்லை.

எனக்குத்தான் தகவலில்லையே தவிர, பத்திரிகைகளுக்குப் போயிருக்கிறது.

மாலைப் பத்திரிகைகளிலே செய்தி வந்தது.

'எண்பது லட்ச ரூபாய் தங்கம், வைரம் கடத்தல் சம்பந்தமாகப் புது மாப்பிள்ளை இளையகோட்டை ஜமீன்தார் விசாரிக்கப்பட்டார்!' என்று அந்தச் செய்தி சொல்லிற்று.

அப்பாடா! நல்லவேளை! கைது செய்யப்படவில்லை.

நான் மிகுந்த கவலையோடு எல்லாக் கதவுகளையும் சாத்தி விட்டு உட்கார்ந்தேன்.

பத்திரிகையில் என் படத்தையும் போட்டுத் திருமண விவரத்தையும் எழுதியிருந்தார்கள்.



இரவு எட்டு மணிக்குக் கதவு தட்டும் சப்தம் கேட்டது.

அவரே தான் வந்திருந்தார்.

ஆனால், அவர் முகத்தில் நிகழ்ச்சி நடந்ததற்கான அறிகுறி இல்லை. மிகவும் உற்சாகமாக இருந்தார்.

நான்தான் அதிகம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

"நீ உற்சாகமாக இருக்க மாட்டாய். எனக்குத் தெரியும்!" என்றார் அவர்.

"நான் வேறொன்றும் கேட்கவில்லை. பத்திரிகைக்காரர்கள் இப்படிப்போட்டு அசிங்கப்படுத்துகிறார்களே!" என்றேன்.

"அவர்களைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? என் எதிரிகள் கடைசியாகச் செய்யும் முயற்சி இது. எனக்கு அவமானத்தை உண்டாக்கி விட்டால், பழி வாங்கி விடலாம் என்று கருதுகிறார்கள். அது ஒன்றும் என்னிடம் நடக்காது. நான் எந்த விஷயத்திலும் எச்சரிக்கையாக இருப்பேன்!" என்றார்.

இருவரும் மாடிக்குப் போனோம்.

தங்கக் கடத்தலுக்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று அவர் சத்தியம் செய்தார்.

ஆனால், என் மனத்தில் இருந்த மகாராஜா இறங்கி, அந்த இடத்தில், ஓர் ஏழை உட்கார்ந்திருப்பது போல் எனக்குத் தோன்றிற்று.

இனி நான் எப்படிப் பின் வாங்க முடியும்? அவர் சொன்னவற்றை எல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டேன். ஏற்றுக் கொண்டேன்.

"அடுத்த வாரம் ஹாங்காங் போய் விடுவோம்!" என்றார்; சம்மதித்தேன்.

சினிமா உலகில் ஒரு வதந்தி ஆரம்பித்தது.

"இனி மஞ்சுளாவைப் போட்டு யாரும் படம் எடுக்க முடியாது!" என்பதுவே அது.

சினிமாக்காரர்கள் மனோபாவமே அதுதானே!

ஒரு நடிகை கன்னியாக இருக்கும் வரை, அவள் உடம்பில் பங்கிருப்பதாக ஒவ்வொருவரும் நினைப்பார்கள். கல்யாணமாகி விட்டால், எல்லாரும் கைவிட்டு விடுவார்கள்.

எனக்கு ஓர் அசட்டுத் துணிச்சல் வந்தது.

'நடந்தது நடந்து விட்டது. இனி வாழ்ந்தாலும் செத்தாலும் இவருடனேயே நம்முடைய வாழ்வு!' என்று முடிவு கட்டினேன்.

விரக்தியின் உச்சத்தில் தோன்றுகின்ற தெளிவு அது. அந்த முடிவிலேயே அவருடன் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தேன்.

டெலிபோன் செய்து, கம்பெனிக்காரர்களுக்கெல்லாம் "ஒரு மாத காலத்துக்கு ஷூட்டிங் கிடையாது!" என்று கூறி விட்டேன்.

"எடுத்துக் கொண்டு போன நகைகளை எல்லாம் அதிகாரிகள் மரியாதையாகத் திருப்பிக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்!" என்று அவர் கூறிவிட்டாரே!

அந்த நகைகளும் என்னிடமுள்ள பணமும் ஆயுட் காலத்துக்குப் போதுமே! எதற்காகச் சபலமும், சலனமும்?- அப்படி ஒரு மனதைரியம்.

அவர் ஹாங்காங்குக்கு டிக்கெட் எடுத்து விட்டார். சிற்றப்பாவையும், சித்தியையும் பத்திரமாக இருக்கச் சொல்லி விட்டு, நான் அவரோடு புறப்பட்டேன்.

ரவா தோசை மாவு உட்பட எல்லாம் தயார் செய்து வைத்திருந்தேன்.

அவ்வளவையும் ஏற்றிக் கொண்டு விமான நிலையம் போய்ச் சேர்ந்தோம்.

ஆண்டவனே!

அங்கேயும் ஒரு துரதிர்ஷ்டம் காத்திருந்தது.

விமான நிலையத்தின் முக்கியமான அதிகாரி ஒருவர் இளவரசருக்கு மிகவும் வேண்டியவர்.

வெளிநாட்டு விமான சர்வீஸ்களைக் கண்காணிப்பவரும் அவரே.

அவரும் சென்னை நகரத்துப் போலீஸ் அதிகாரி ஒருவரும் இளவரசருக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.



நாங்கள் போய் சேர்ந்ததும், அந்த இருவரும் ரகசியமாக இளவரசரை அழைத்தார்கள்.

இளவரசரின் பாஸ்போர்ட்டைப் பறிமுதல் செய்யும்படி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதாகவும், அந்த உத்தரவைத் தாங்கள் தாமதப்படுத்தி வைத்திருப்பதாகவும், விமானம் புறப்பட்ட பின்பே அந்த உத்தரவு தங்களுக்கு வந்ததுபோல் காட்டிக் கொள்ளப் போவதாகவும். அவர்கள் கூறினார்கள்.

அவர்களுக்கு மனதார நன்றி சொன்னார் இளவரசர்.

"ஆனால், விமானம் புறப்படுவது ஒரு மணி நேரம் தாமதித்தால் ஆபத்து!" என்று ஒரு குண்டைப் போட்டார் அதிகாரி.

அப்படித் தாமதித்தால் அவரை விடப் பெரிய அதிகாரிகள் வந்து விடுவார்களாம்.

எனக்குப் பயமாகப் போய்விட்டது.

இந்திய விமானங்கள் எப்போதும் ஒழுங்கான நேரத்துக்குப் புறப்படுவதில்லையே!

யாரோ ஒருவர் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது.

ஒரு கவிஞர் சிங்கப்பூருக்குப் போயிருந்தாராம். சிங்கப்பூர் விமான நிலையத்துக்குச் சென்று, 'ஏர் இந்தியா விமானம் எப்பொழுது புறப்படும்?' என்று கேட்டாராம். 'எந்த நேரமும் புறப்படலாம்!' என்று பதில் வந்ததாம். அதாவது, ஏர் இந்தியா விமானத்துக்கென்று ஒரு குறிப்பிட்ட நேரம் கிடையாதாம்.

நல்ல வேளையாக நாங்கள் புறப்பட இருந்தது. எம்எஸ்ஏ. அதாவது, மலேஷியா, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்.

குறிப்பிட்ட நேரத்தில் அது புறப்படுவதாக அறிவிக்கப் பட்டது; எனக்கு உயிர் வந்தது.

இருந்தாலும் எங்கள் முதற் பயணமும், கடைசிப் பயணமும் அதுதானே!

இந்தியாவுக்குத் திரும்பி வந்தால், எப்படியும் அவருடைய பாஸ்போர்ட்டைப் பறிமுதல் செய்துவிடப் போகிறார்கள். 'சுற்ற வேண்டிய அளவுக்குச் சுற்றிவிட வேண்டும்!' என்று நான் முடிவு கட்டினேன்.

மனதுக்குள் அந்த அதிகாரிகளுக்கு நன்றி சொன்னபடி விமானத்தில் ஏறினேன்.

விமானம் புறப்பட்டது.

அவர் கூறினார் :

"நாம் பெரும்பாலும் ஹாங்காங்கிலே தங்கி விடுவோம் அல்லது துபாய்க்குப் போய்விடுவோம்," என்று.

எனக்கோ பாதி எடுக்கப்பட்ட, முடிக்கப்பட வேண்டிய படங்கள் இருந்தன.

இருந்தால் என்ன? நமக்குக் கஷ்டம் வரும்போது, பிறரது கஷ்டங்களைப் பார்க்க முடியுமா?

இது கோலாலம்பூர்!

'ஆசியாவின் முந்தானை' என்று வர்ணிக்கத் தக்க மலேஷியாவில், எல்லா நகரங்களுமே அழகானவை என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோலாலம்பூர் அவ்வளவு பிரமாதமான அழகில்லை என்றாலும், இந்திய நகரங்களை விட எடுப்பானது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

பன்னிரண்டு மாதங்களும் ஒரே மாதிரி சீதோஷ்ண முடையது மலேஷியா.

மலாய், இந்தியர், சீனர் மூவரும் ஒரே மாதிரி நடத்தப்படும் இடம், மலேஷியா.

மலேஷிய மக்களின் தலைவர் துங்கு அப்துல் ரகிமானுக்கு, இந்தியா நன்றி செலுத்த வேண்டும்.

"உலகத்திலேயே மிகவும் சந்தோஷமான பிரதம மந்திரி நான்தான்!" என்று அவர் ஒருமுறை சொன்னார்.

இந்தோ-சீனா யுத்தத்தின் போது, எடுத்த எடுப்பிலேயே, இந்தியாவின் நிலையை ஆதரித்த ஒரே ஒரு பிரதம மந்திரி, துங்கு அவர்கள்தான்.

ஆனால் துரதிருஷ்டவசமாக மலேஷியா சமஷ்டியை ஆதரிக்காத பிரதம மந்திரியாக, நமது நேருஜி அவர்கள் இருந்தார்கள். காரணம், இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்ணோவுக்கு அவர் நண்பர் என்பதால்!



அதை விட வேடிக்கை என்னவென்றால், இந்தோ-பாகிஸ்தான் யுத்தத்தின்போது, முதன் முதலில் பாகிஸ்தானை ஆதரித்தவர், டாக்டர் சுகர்ணோ.

இந்த வகையில் நேருஜியின் கொள்கை தோல்வி யடைந்தது என்றே கூற வேண்டும்.

உலகத்திலேயே இன்னும் இந்தியர்களைக் கௌரவிக்கின்ற இடம், மலேஷியாதான்.

அந்த மண்ணை மிதித்ததில் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

கோலாலம்பூர் நகரை நாங்கள் சுற்றிப் பார்த்தோம்.

எங்கள் வருகையைப் பற்றி மலேஷியப் பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரித்திருந்தன.

அதுவே எனக்குப் பயமாக இருந்தது. எங்கே மலேஷியா விலே நம்முடைய பாஸ்போர்ட்டைப் பறித்து விடுவார்களோ என்று.

நல்ல வேளை, அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

தமிழ் மன்னர்கள் வந்திறங்கிய கடாரம், இன்னும் அந்தச் சரித்திரச் சான்று கூறுகிறது. மலேஷியாவிலேயே நெல் விளைகின்ற ஒரே இடம், கடாரம்தான்.

பினாங்கு ஒரு அழகான தீவு.

ஈப்போ நகரம் திட்டமிட்டுக் கட்டப்பட்டதாலே, கண்ணைக் கவரும் வனப்புடையதாகக் காட்சியளித்தது.

ஒரு வார காலம் மலேஷியாவைச் சுற்றினோம்.

நமது நாட்டுச் சாலைகளில் ஒவ்வொரு குழியிலும் ஒரு ஆளைப் போட்டு மூடலாம். ஆனால், மலேஷியச் சாலைகள் டன்லப் மெத்தை மாதிரி இருக்கின்றன.

அங்கிருந்து சிங்கப்பூர் சென்றோம்.

சிங்கப்பூரிலும் அதே பண்பாடு. ஆனால், சிங்கப்பூர்த் தெருக்களெல்லாம் தமிழ் முழக்கம் செய்கின்றன.

அரசாங்கக் குறிப்புகளில் இருந்து, தெருக்கள் வரையிலே எங்கும் தமிழ் மணம்.

வானளாவிய கட்டடங்கள்.

பன்னிரண்டு மாடி ஹோட்டல் ஒன்றிலே நானும் அவரும் தங்கினோம்.

நாங்கள் போவதற்கு முன்பாகவே, எங்களுக்காக ஒரு ரூம் போடப்பட்டிருக்கிறது என்று, ஹோட்டல் மானேஜர் கூறினார்.

அது வாடகை அதிகமான ஒரு சூட். அந்த 'சூட்'டுக்குள்ளே நாங்கள் நுழைந்தபோது, "ஹலோ" என்று குரல் கேட்டது.

## 26. நான் வளர்பிறையா? தேய்பிறையா?

இரண்டு அராபிய வியாபாரிகள் வந்து அவரோடு கை குலுக்கினார்கள்.

அராபியர் என்றால்தான் தெரியுமே. இரண்டு பேரும் ஆஜானுபாகுவாக இருந்தார்கள்.

அராபியர்கள் மட்டும் அந்தப் பழைய பண்பாடுகளை மாற்றுவதில்லை. தலையில் கட்டிய துண்டு முதுகில் தவழ்ந்தது. இளந்தாடி கூர்மையாக நின்றது.

அவருக்கு வேண்டியவர்கள் போலிருக்கிறது என்று நான் கருதினேன். வேறு அதிகம் விசாரிக்கவில்லை.

"இரவில் சந்திப்போம்!" என்றபடி அவர்கள் வெளியேறினார்கள்.

அவர்களிடம் என்னை மனைவி என்றுதான் அறிமுகப் படுத்தினார், அவர்!

அவர்கள் போனதும், "இவர்கள் எனது துபாய் நண்பர்கள். ஒவ்வொருவனும் கோடீஸ்வரன். ஒரு நாட்டுக்கு ஒரு மனைவி என்று வைத்துக் கொள்வார்கள். அவ்வளவு வசதி இருக்கிறது. என்னிடம் அலாதிப் பிரியம். அடிக்கடி அவர்கள் பம்பாய்க்கு வருவார்கள். நானும் பம்பாயில் போய்ச் சந்திப்பேன். பம்பாயில் இது மாதிரிப் பெண்களெல்லாம் அவர்களுக்குக் கிடைக்கும். நான் மட்டும் எதையும் தொடமாட்டேன்!" என்றார் அவர்.



'அவர்களைப் பற்றி இவ்வளவு சிலாகித்துக் கூறுவானேன்?' என்று எனக்குப் புரியவில்லை.

தன் நண்பர்களை இவர் அவ்வளவு உயர்வாக நினைத்தார் போலிருக்கிறது.

இரவு நேரம் வந்தது. எட்டு மணிக்கெல்லாம் பார்ட்டி ஆரம்பமாகி விட்டது.

உலகம் முழுவதிலும் மது ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. மதுபாட்டிலைத் திறந்து வைத்துக்கொண்டு நாலு பேர் உட்கார்ந்து விட்டால், பெரிய வியாபாரங்கள் எல்லாம் அங்கே பேசி முடிக்கப்பட்டு விடுகின்றன.

மதுவிலக்கு என்ற கோமாளி நாடகம் உலகத்திலேயே இந்தியாவில் மட்டும்தான் நடந்து கொண்டிருக்கிறது.

உயர்ந்த ரக மது வகைகளை வைத்துக்கொண்டு, அவரும், அவரது துபாய் நண்பர்களும் எங்கள் அறையிலேயே உட்கார்ந்து விட்டார்கள்.

வழக்கம் போல் நான்தான் பரிமாறினேன்.

அந்த அராபியர்கள் இருவரும் அடிக்கடி என்னைப் பார்த்தபடி, "வெரி நைஸ் கேர்ள் ! வெரி நைஸ் கேர்ள் !" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இவரும் சிரித்தபடியே, அவர்கள் சொல்வதை ரசித்துக் கொண்டிருந்தார்.

எனக்குப் பழக்கமில்லாத சில மாமிச வகைகளை அவர்கள் தின்று தீர்த்தார்கள்.

நான் எதையாவது எடுப்பதற்காக உள்ளறைக்குப் போகும் போதெல்லாம், அவர்கள் என்ன பேசிக் கொள்வார்களோ, எனக்குத் தெரியாது.

சுமார் பதினோரு மணிக்கு அவர்கள் தங்கள் அறைக்குப் போய்விட்டார்கள்.

இளவரசர் என்னைப் பக்கத்தில் உட்காரச் சொன்னார். என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"இதோ பார். இனி நாம் போகுமிடங்களில் எல்லாம் நீ கூச்சமில்லாமல் பழக வேண்டும். அதுதான் நாகரிகம். உனக்கு நவீன ஆடைகள் சிலவற்றை நாளைக்கு வாங்கித் தருகிறேன். மேல்நாட்டு நாகரிகத்தில் யாரும் யாரோடு பழகுவதும் தவறாகக் கருதப்படுவதில்லை. வாழ்க்கை சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களுக்கு முக்கியம். உனக்கும் முக்கியம். கோடி ரூபாய் சொத்துக்கு நீ அதிபதியாகப் போகிறாய். ஆனால் தைரியமாக நீ ஒன்று செய்ய வேண்டும். நான் இங்கேயே இருப்பேன். நீ அவர்கள் அறைக்குச் சென்று வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்," என்றார் அவர்.

எனக்கு ஏழாவது முறையாக உடம்பு வியர்த்தது.

'மிகவும் மோசமான காரியத்தைச் செய்யவேண்டும் என்றால், மிகவும் நல்லபடியாக நடிக்க வேண்டும்!' என்பார்கள்.

இளவரசரும் அப்படித்தானோ?

எனக்குப் பயம் வந்துவிட்டது. காலம் நேரம் தவறாமலும், கன்னியம் சிதறாமலும், கல்யாணத்துக்கு முன் அவர் நடந்து கொண்ட தன்மை என்ன! இவ்வளவு குறுகிய காலத்துக்குள் மாறிவிட்ட தன்மை என்ன!

ஒரு வேளை நடிகைகளின் கணவன்மார் அந்த நடிகைகளை வெளிநாடு கூட்டிச் செல்வது, இத்தகைய நோக்கத்துக்காகவே இருக்குமோ?

என்ன உலகமோ இது?

யாராவது ஒருவரை நம்பலாம் என்றால், அவர்களுக்குள்ளும் ஆயிரம் ரகசியங்கள் அடங்கிக் கிடக்கின்றனவே!

ஒரு வார காலம் மலேசியாவில் இருந்த சுகம், ஒரே நாளில் போய்விட்டது போல் எனக்குத் தோன்றிற்று.

பத்தினியாக வாழ விரும்பும் பெண்ணுக்கு அந்த வாய்ப்பு ஒவ்வொரு தடவையும் அடிபட்டுக் கொண்டே வருகிறது.



குடும்பப் பெண் கோலத்தில் கோலாகலமாக வாழ்பவர்கள் தான், இத்தகைய போக்கில் சந்தோஷப்பட முடியும்.

இதென்ன மரத்துப் போன உடலா?

நான் கொஞ்சம் அவரிடம் அடித்துப் பேசவே ஆரம்பித்தேன்.

"இதோ பாருங்கள், அவர்களைக் கண்டாலே எனக்குப் பயமாக இருக்கிறது. அவர்களுக்குப் போய் என்னைச் சேவை செய்யச் சொல்கிறீர்கள்? நான் ஒரு பெண், அவர்கள் முரட்டுத்தனமாக நடந்து கொண்டால், நான் என்ன செய்ய முடியும்? நான் போக மாட்டேன்!" என்றேன்.

"சீச்சீ ! இதிலொன்றும் தவறே இல்லை. இன்றைய நாகரிகத்தில் மனைவிகளை மாற்றிக் கொள்வதே கூடப் பழக்கமாகி விட்டது! பணம் இருந்தால்தான் உலகம் மதிக்கிறது. அந்தப் பணத்தை எப்படிச் சம்பாதித்தாலும் ஏற்றுக் கொள்கிறது. ஒரு ஏழைப் பெண் கெட்டுப் போனால்தான் அது செய்தி. ஒரு பணக்காரப் பெண் கெட்டுப் போனால், அதன் பெயர் - சமூக வாழ்க்கையில் நாகரிகம். எங்கோ ஒரு ஊரில் இருக்கிறோம். யாரோ இரண்டு பேருக்கு நீ சேவை செய்யப் போகிறாய். திரும்பவும் சென்னையில் போய் இறங்கினால், இப்படி ஒரு காரியம் நடந்ததே ஊருக்குத் தெரியாது. நம்முடைய பணத்துக்கும், நாம் வாங்கிப் போகும் பொருளுக்குமே ஊர் வட்டமிடும்!" என்றார் அவர். அத்தோடு மேலும் சில செய்திகளைச் சொன்னார்.

யாரோ ஒரு நடிகைக்கு அவள் கணவன் வாங்கிக் கொடுத்த விலையுயர்ந்த பொருள்களெல்லாம் இப்படி வந்தவைதானாம்.

என்னை அவர் சமாதானப் படுத்தினார். அந்த அராபியர்களின் அறைக்குப் போகுமாறு வற்புறுத்தினார். வேறு வழியின்றி நானும் சென்றேன்.

அங்கே போகும் முன்பு அலங்காரம் செய்து கொள்ளச் சொன்னார். அப்படியே செய்து கொண்டேன்.

சிங்கப்பூரிலோ, மலேசியாவிலோ, பிற ஆசிய நாடுகளிலோ, இத்தகைய வாழ்க்கைக்குத் தடை ஏதுமில்லை. அதனால் பகிரங்கமாகவே இது நடைபெறுகிறது.

ஒருவன் அறைக்குள் இன்னொருத்தி போகிறாளா என்று, எந்த ஹோட்டலிலும் யாரும் வேடிக்கை பார்ப்பதும் கிடையாது.

நான் அவர்கள் அறைக்குள் சென்றபோது, அவர்கள் இருவரும் நல்ல போதையில் இருந்தார்கள். என்னைக் கண்டவுடன் இருவருமே எழுந்து வரவேற்றார்கள்.

குடித்திருப்பவனது மரியாதை, குடியாமல் இருப்பவனுக்கு வருமா என்ன?

சம்பிரதாயப்படி எனக்குக் கொஞ்சம் ஊற்றிக் கொடுத்தார்கள். நான் கொஞ்சம் ஜூஸுக்கு ஆர்டர் கொடுத்தேன்.

சிங்கப்பூர் ஹோட்டல்களில் இருபத்து நான்கு மணி நேரமும் சர்வீஸ் உண்டு. வகை வகையான உணவுகளுக்கு அவர்கள் ஆர்டர் கொடுத்தார்கள்.

ஒருவர் ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் சாப்பிடுவது? வரட்டும் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

மலேஷியா சிங்கப்பூர் ஹோட்டல்களில், தமிழ்நாடு அசைவ ஹோட்டல்களில் நடப்பது போன்ற ஏமாற்று வேலைகள் நடப்பதில்லை.

எல்லாம் வந்தன. எனக்கோ அவர்களைக் கண்டு பயமாகவே இருந்தது.

சிறிது நேரத்தில் அவர்களது அசுரத்தனமான வேலைகள் ஆரம்பமாகி விட்டன. என்னை நிர்வாணமாக நாட்டியம் ஆடச் சொன்னார்கள். எனக்கு அழுகை அழுகையாக வந்தது.

'இந்த மானம் கெட்ட பிழைப்பை விடச் சென்னையில் மரியாதையாக இருந்திருக்கலாமே!' என்று தோன்றிற்று.

இளவரசரை, 'ஏமாற்றுக்காரர், நயவஞ்சகர், திருடர்!' என்று திட்ட வேண்டும் போல் தோன்றிற்று.

அந்த இருவரும் என்னை மாறி மாறி எட்டிப் பிடித்தார்கள், கட்டிப் பிடித்தார்கள். உடம்பெல்லாம் ஒரே வலி.

அவர்களது முரட்டுப் பிடியிலிருந்து விடுபட்டு ஓடிப் போய்க் கதவைத் திறக்க முற்பட்டேன்.



ஒருவர் ஓடிவந்து என் முடியைப் பிடித்து இழுத்தார். நான் பலங்கொண்ட மட்டும் கத்தினேன்.

என்னை அப்படியே தூக்கி மெத்தையில் போட்டார்கள். பலவந்தம் செய்ய முயன்றார்கள்.

தட தட வென்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

என் மீது ஒரு போர்வையை எடுத்துப் போர்த்தி விட்டு ஒருவர் ஓடிப் போய்க் கதவைத் திறந்தார்.

அங்கே இளவரசர் நல்ல போதையில் தள்ளாடியபடியே நின்று கொண்டிருந்தார்.

என் சத்தத்தைக் கேட்டுத்தான் வந்தாரா, தன்னிச்சையாகத்தான் வந்தாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

"என்னை மன்னியுங்கள், நான் அவளை அழைத்துச் செல்கிறேன்," என்றார்.

அடேயப்பா, அவருக்குக் கூட ரோஷம் வந்து விட்டதே!

அவர்கள் இளவரசரை வாயில் வந்தபடி திட்டினார்கள்.

தங்களிடம் அவர் வாங்கிய ஏராளமான தங்கத்துக்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை என்றும், சிங்கப்பூரிலேயே அவரைச் சமாதி வைத்து விடுவதாகவும் பயமுறுத்தினார்கள்.

"உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்!" என்று கூறி விட்டு, என்னைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியேறினார் இளவரசர்.

எங்கள் அறைக்குச் சென்றதும், நான் அவர் காலில் விழுந்து அழுதேன்.

"நல்ல வாழ்க்கைக்கு நீங்கள் உத்தரவாதம் என்றுதான் நடிப்புத் தொழிலையே விட்டுவிடலாம் என்று முடிவு செய்தேன். இந்தப் பணம் என்ன பணம்! இந்த வாழ்க்கை என்ன வாழ்க்கை! எனக்குப் பயமாக இருக்கிறது. நாம் திரும்பிப் போய் விடுவோம். நீங்கள் வீட்டில் வந்து இருங்கள். நான் நடித்துச் சம்பாதித்துப்

போடுகிறேன். இனி எனக்குப் பெரும் பணத்தில் ஆசையில்லை. நீங்கள் இருந்தால் போதும்!" என்றேன் நான்.

அவர் ஒரு விஸ்கி பாட்டிலைக் கீழே தூக்கிப் போட்டு உடைத்தார்.

## 27. ஏழாம் இடத்தில் சனி

"**சீ!** எவ்வளவு இனந் தெரியாமல் நடந்து கொண்டேன்? சாதாரண எடுபிடிப் பெண்களை அனுப்பி அனுப்பிப் பழகிய நான் உன்னையுமல்லவா அனுப்பி விட்டேன்! இனிச் செத்தாலும் இந்த விஸ்கியைத் தொட மாட்டேன். யாரும் உன்னைத் தொடவும் அனுமதிக்க மாட்டேன்!" என்று கட்டிப் பிடித்துக் கொண்டார் அவர்.

அப்போது அவரது அன்பு அளவு கடந்த நிலையில் இருந்தது.

அவர் என்னை ஏமாற்றவில்லை என்பதும், சில ஆசைகளாலும், நிதானமின்மையாலும், அந்தத் தவறைச் செய்து விட்டார் என்பதும் எனக்குப் புரிந்தது.

என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டே தூங்கினார்.

நல்ல தூக்கம். அந்தத் தூக்கத்தில் எனக்கு ஒரு கெட்ட கனவு.

நான் ஒரு ஸ்டுடியோவுக்குள் நுழைகிறேன். யார் யாரோ படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் கையைக் கட்டிக் கொண்டு ஷூட்டிங் பார்க்கிறேன். மெதுவாக அங்கிருந்த ஒருவரிடம் போய், எனக்கு ஒரு சான்ஸ் கொடுக்கும்படி கேட்கிறேன். என் சிற்றப்பாவும் சித்தியும் பரிதாபகரமாகக் கிழிந்த உடையில் ஒரு மூலையில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து நான் அழுகிறேன், அழுகிறேன், அழுகிறேன்.

இந்த இடத்தில் நான் உண்மையாகவே அழுதிருக்கிறேன். இளவரசர் என்னைத் தட்டி எழுப்பி, "மஞ்சுளா! மஞ்சுளா! ஏன் அழுகிறாய்?" என்றார்.



நான் கண்ணை விழித்தேன்.

நான் சிங்கப்பூரில் இருக்கிறேன் என்பதைத் தீர்மானிக்கவே சில விநாடிகள் பிடித்தன. சென்னையில் இருப்பது போலவே ஒரு பிரமை. கண்ணை விழித்ததும் சித்தி எங்கே, சிற்றப்பா எங்கே என்று தேடினேன்.

நேரம் ஆக ஆகத்தான் சூழ்நிலை எனக்குப் புரிந்தது.

"ஏதாவது கனவு கண்டாயா?" என்று அவர் கேட்டார்.

நான் கண்ட கனவை அவருக்குச் சொன்னேன்.

"சீ! பைத்தியமே! அப்படியே உனக்கு மார்க்கெட் போய் விட்டாலும், நான் கூலி வேலை செய்தாவது உன்னைக் காப்பாற்றுகிறேன்!" என்றார் அவர்.

நான் திரும்பவும் படுத்தேன்.

அவர் சொன்ன வார்த்தையில் இருந்து ஒன்று எனக்குப் புரிந்தது. பொருளாதாரத்தில் அவர் ஒன்றும் மிக மேன்மையான நிலையில் இல்லை என்பதும், ஏறக்குறைய என் நிலையும் அதுதான் என்பதும் எனக்குத் தெளிவாக விளங்கின.

அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட நகைகள் திரும்பி வந்தால், அவை சொத்தாக இருக்கும். ஏற்கெனவே நான் சம்பாதித்த பொருள்களோடு இவையும் சேர்ந்தால் ஆயுள் காலத்துக்குக் கஞ்சி குடிக்கலாம்.

என் ஆசைக் கனவுகளுக்கு ஒரு வரையறையை அன்றிரவே நான் ஏற்படுத்திக் கொண்டேன்.

பொழுது விடிந்தது.

காப்பி கொண்டுவந்த ஹோட்டல் பையன் சொன்னான், "ராத்திரி உங்கள் சத்தம் கேட்டு நாங்களெல்லாம் ஓடி வந்தோம். பிறகு கலாட்டா வேண்டாம் என்று திரும்பி விட்டோம். அந்த அராபியர்கள் இருவரும் இரவு நான்கு மணிக்கே ஹோட்டலை விட்டுப் போய் விட்டார்கள்," என்று.

எனக்கோர் ஆறுதல்.

சிங்கப்பூரில் இருக்கவே பிடிக்கவில்லை. சிற்றப்பாவையும் சித்தியையும் பார்க்கவேண்டும் போல் மனம் துடித்தது.

அவருக்கோ சென்னைக்கு வருவதற்குக் கொஞ்சம் பயமாக இருந்திருக்கும் போலிருக்கிறது.

நான் ஆறுதல் சொல்லி டிக்கெட் புக் பண்ணி விட்டேன்.

சென்னையில் அவரைக் கைது செய்வார்கள் என்று எனக்குத் தெரியுமா, என்ன?

நாங்கள் சென்னை வந்து இறங்கிய போது எங்களுக்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது. 'எங்களுக்கு' என்று சொல்வது பொருந்தாது. அவர் அதை எப்போதோ எதிர்பார்த்தது போலக் காட்சியளித்தார். காலங்கடந்து அது நடந்ததில் தான் அவர் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

விமானத்திலிருந்து இறங்கி நிலையத்திற்குள் நுழைந்தவுடனேயே, சில பெரிய போலீஸ் அதிகாரிகள் அவரருகே வந்து, அவரைக் கைது செய்திருப்பதாகச் சொன்னார்கள்.

"ஆல் ரைட்," என்ற ஒரே வார்த்தையில் அவர் அதை ஏற்றுக் கொண்டு விட்டார்.

எனக்கு அழுகை வந்து விட்டது.

இன்னும் கொஞ்ச நாள் வெளிநாட்டில் இருந்திருக்கலாமே என்று தோன்றிற்று.

அங்கே எதையோ நினைத்துக் கொண்டு திரும்பி வர, இங்கே இப்படியாகி விட்டது.

ஒரு இமயமலையையும், ஒரு கருங்கடலையும் மாறி மாறிச் சந்தித்தும், அதிர்ச்சிக்குள்ளாவதை என்னால் நிறுத்த முடியவில்லை.

பெண்மையின் உடம்பு மென்மையானது ; உள்ளம் பலவீனமானது.

விமான நிலையத்திற்கு வந்திருந்த சிற்றப்பாவையும், சித்தியையும் கட்டிக் கொண்டு அழுதேன்.



சில நாட்களிலேயே திரும்ப வந்து விடுவதாக அவர் எனக்கு ஆறுதல் கூறி, போலீஸாரோடு புறப்பட்டுச் சென்று விட்டார். ஏதோ வெளியூருக்குப் போவது போலவே, அவர் என்னிடம் சொல்லிக் கொண்டு போனார்.

வெளியில் வந்து காரில் ஏறப் போகும் போதுதான் பார்த்தேன் சுவாமிநாதன் நகத்தைக் கடித்தபடி ஒரு பக்கத்தில் நின்று சிரித்துக் கொண்டிருந்தார்.

மனக் கோட்டைகள் தூளாகி விட்டன போலவும் பயனில்லாமலேயே சிலரை விரோதித்துக் கொண்டு விட்டது போலவும், எனக்குத் தோன்றிற்று.

நாம் விரும்பா விட்டாலும், நமக்குச் சில எதிரிகள் தோன்றுவதைத் தடுக்க முடிவதில்லை.

மீண்டும் இரண்டு நாட்கள் பயங்கர இருள், கவலை.

ஆறுதல் சொல்லச் சில நாட்களும், அனுபவிக்கச் சில நாட்களும் என்று ஒதுக்கிக் கொண்டு என்னோடு வாழ வந்து விட்ட சிற்றப்பாவும், சித்தியும் தங்கள் கடமைகளைச் செய்தார்கள்.

இரண்டு நாளில் மீண்டும் நான் சகஜ நிலைக்குத் திரும்பி, நின்று போயிருந்த படங்களை முடித்துக் கொடுக்கத் துவங்கினேன்.

என் கணவர் கைதானதும் பத்திரிகையில் வந்துவிட்டதல்லவா?

அடிக்கடி என் பெயர் பத்திரிகைகளில் அடிபடுவது பற்றி ஸ்டுடியோ வட்டாரம் என்னை ஏளனமாகப் பேசிற்று.

"பெரிய இளவரசரைக் கட்டிக் கொண்டாயல்லவா? அனுபவி!" என்று என்னிடமே சிலர் சொன்னார்கள்.

யாருக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்?

வாழ்க்கை பலவீனப்படும் போது, வாய் அடைத்துப் போகிறதே!

இளவரசரைக் கைது செய்ததும், ஜாமீனில் வெளியே வர முடியாத சட்டத்தின்படியாம். எப்போது வெளியே வருவார் என்று தேதியும் சொல்ல முடியாதாம்.

நான் மட்டும் வாரம் ஒரு முறை போய் அவரைப் பார்த்து அழுதுவிட்டு வந்தேன்.

எனக்குத் தெரிந்த ஒரு நடிகையின் கணவர், தங்கக் கடத்தலிலேயே சம்பாதித்தவர். இப்போது அவர் எல்லா வகையான தொழிலும் நடத்துகிறார். ஆனால் அவரைப் போலீசார் நெருங்கக் காணோம். வெறும் தடயங்களை நம்பியே இளவரசரைப் போலீஸார் கைது செய்து விட்டார்கள்.

## 28. ஒரு மரக்கட்டையின் முகாரி

**மா**தங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

இடையில் ஒருநாள் சித்தி சொன்னாள், "தெரியுமா சங்கதி, அந்த சுவர்ணமுகி பாலசுந்தரத்துடனே ஓடி விட்டாளாம்," என்று.

நான் அக்கறை காட்டவில்லை. சனியன் தொலையட்டும் என்று கூறி விட்டு விட்டேன்.

ஆனால், என் வழக்கில் சுவாமிநாதனும், பாரிஜாதமும் காட்டிய அக்கறை மட்டும் குறையவே இல்லை.

வழக்கிலும் எல்லாரும் எனக்கு எதிராக இருந்தார்கள். தொழிலிலும் எதிராக மாறி விட்டார்கள். புதிய படங்கள் ஏதும் எனக்கு வரவில்லை.

திரைவானில் தினசரி ஒரு புதுமுகம் மின்னத் தொடங்கிற்று.

சினிமாக்காரர்கள் வெறுக்கத் தொடங்கினால், குமரியைக் கூடக் கிழவி என்று கூறி ஒதுக்கி விடுவார்கள்.

எல்லாரும் என்னை ஒதுக்கத் தொடங்கினார்கள்.

சில நடிகைகளைப் போலப் பழைய தயாரிப்பாளர்களுக்கெல்லாம் டெலிபோன் போட்டு, முப்பது நாளில் முடிக்கிறேன், நாற்பது நாளில் முடிக்கிறேன் என்று சொல்லவும், எனக்கு வெட்கமாக இருந்தது.

இளவரசர் கொடுத்த நகைகளையும் போலீஸார் கொண்டு போய் விட்டார்கள். ரிசர்வில் நின்ற நிதியும் தீர்ந்து கொண்டு வந்தது.



'ஆகும்போது அத்தனையும் ஆகும், போகும்போது அத்தனையும் போகும்!' என்பார்கள்.

எனக்கும் ஆகும் சீஸன் முடிந்து, போகும் சீஸன் ஆரம்பமாகி விட்டது போல் தோன்றிற்று.

ஒரு தடவை வெளிநாடு சென்று திரும்பினால், மார்க்கெட் போய்விடும் என்று பயந்து, சில நடிக நடிகைகள் கடல் கடந்து பயணம் போவதே இல்லை.

அது கூடச் சரிதானோ என்று எனக்குப்பட்டது.

இந்த நிலையில், என் வழக்கில் தீர்ப்புக் கூறும் நாள் நெருங்கி விட்டது.

பலிபீடத்துக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக் குட்டியைப் போல் நான் நடுங்கிய நிலையில் நின்றேன்.

விவரம் தெரிந்த, செல்வாக்குள்ள ஓர் ஆடவனின் துணை இல்லாததால், என்ன செய்வது என்று புரியாமலும் மயங்கினேன்.

ஆண்டவனே, வாழ்க்கை உயரக் கூடாது! உயர்ந்தால் தாழக் கூடாது!

தீர்ப்புக்கு முதல்நாள் இரவு நான் துப்புரவாகத் தூங்கவில்லை. என்னென்னவோ யோசித்தேன். இறுதியில் எப்படியாவது என்னைக் காப்பாற்றிக் கொள்வது என்று முடிவு கட்டினேன்.

வாழ்க்கையில் எல்லா ஆடைகளும் போய்விட்டன. உள் பாவாடைதான் பாக்கி. அதுவும் போய்விட்டால் தான் என்ன..?

நல்ல பெயரே என் தலையெழுத்தில் இல்லாதபோது, நாறிப் போனவளாக மாண்டு போகிறேனே!

பொழுது விடிந்தது.

தீர்ப்பை எதிர்பார்த்து நான் நீதிமன்றத்துக்குச் சென்றேன்.

செய்தது குற்றமா, இல்லையா? அதை நான் தான் செய்தேனா இல்லையா? உண்மை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். சட்டம் எப்படி நினைக்கிறதோ, அப்படித்தானே முடிவும் இருக்கும்?

எனக்கு ஏழு வருஷ காலம் தண்டனை அளிக்கப்பட்டது.

கண்கண்ட சாட்சியம் இருந்தால், ஆயுள் தண்டனை கூடத் தரப்பட்டிருக்கலாம்.

பாரிஜாதம், சுவாமிநாதனால் எனக்குக் கொடுக்கப்பட்ட பரிசு இது.

'செய்யாத குற்றத்திற்கு ஜன்ம தண்டனை' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா அவர்களுடைய கதை ஒன்றை நான் படித்திருக்கிறேன்.

ஏதோ நீதிபதி கருணைகாட்டி எனக்கு ஜன்ம தண்டனை விதிக்காமல், ஏழு வருஷத் தண்டனை அளித்தார்.

சட்டப்படி முதல் அப்பீல் செய்ய உரிமை இருந்ததால், அங்கேயே நான் ஜாமீனில் எடுக்கப்பட்டேன்.

நீதிமன்றத்திலிருந்து வெளியே வரும்போது, எதிர் காலம் என்னும் இருண்ட மண்டபத்திற்குள் நுழைவது போலத்தான் எனக்குத் தோன்றிற்று.

'கடவுள் கடவுள்' என்கிறார்கள். 'நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும்' என்கிறார்கள். 'காத்திருந்தாவது தெய்வம் கருணை காட்டும்! என்கிறார்கள்.

என்னுடைய தராசிலே தெய்வம் பரிசையும், தண்டனை யையும் மாறி மாறிப் போட்டது.

நான் ஜீவாத்மாவுமல்ல, மகாத்மாவும் அல்ல ; ஒரு பாவாத்மா. இல்லை என்றால் பரமாத்மா என்னை இப்படிப் பரிதாபமாகச் சோதிப்பானா?

எந்தக் கைகள் அள்ளி அள்ளிக் கொடுத்தனவோ, அந்தக் கைகளை முறிப்பதும் - எந்தக் கால்கள் கோவில் பிராகாரத்தைத் தினமும் சுற்றி வந்தனவோ, அந்தக் கால்களை ஒடிப்பதும்தான் பரமாத்மாவின் பணி என்றால், என்னுடைய தெய்வ நம்பிக்கை வெறும் காலக் கேடு.



கோவிலுக்குப் போன நேரத்தில் இரண்டு சினிமாவுக்குப் போயிருந்தால், நடிப்பில் ஏதாவது புதியதாகக் கற்றுக்கொண்டிருக்கலாம்.

அதிர்ஷ்டம் கெட்டவள், மானம் கெட்டவள், கொலைகாரி, பழிகாரி - எத்தனை பட்டப் பெயர்கள் எனக்கு!

படித்துப் பட்டம் பெறாமல், கௌரவமாக டாக்டர் பட்டம் வாங்குகிறார்களே சிலர், அதைவிடச் சுலபமாக அல்லவா இந்தப் பட்டங்களை நான் பெற்றிருக்கிறேன் !

எனது வானத்தில் தேய்பிறை ஆரம்பமாகி விட்டது.

வெண்ணிலாவைப் போலவே, வளர்வதும் தேய்வதுமாக இருந்த நான், இப்பொழுது நிரந்தரமாகத் தேயப் போவதுபோல எனக்குள் தோன்றிற்று.

நான் நினைத்ததில் தவறில்லை. சினிமா உலகம் என்னை அடியோடு நிராகரித்து விட்டது.

'வரட்டும் வரட்டும், அவள் என் காலில்தானே வந்து விழ வேண்டும்?' என்று சுவாமிநாதன் கறுவிக் கொண்டு இருந்தார்.

என்ன துரதிருஷ்டம், பாருங்கள் ! எவ்வளவு வேகமாகச் சம்பாதித்த பொருள்களை விற்க வேண்டி வந்தது.

'நான்கு பக்கமும் வேடர் சுற்றிட நடுவில் சிக்கிய மான் போல்' என்றபடி, நான் பயந்து கொண்டே வாழ்ந்திருந்தேன்.

இரவிலே விளக்கை அணைத்து விட்டு மொட்டை மாடியில் அமர்ந்திருப்பேன். பட்டுப் போன என் காலங்களை எண்ணிக் கண்ணீர் வடிப்பேன். என்னைத் தொட்ட கரங்களெல்லாம் விட்டுப் போனதை எண்ணித் துடிப்பேன் ; துவளுவேன். ஆறுதலுக்கு இப்போது சிற்றப்பாவையும், சித்தியையும் தவிர வேறு யாருமில்லை.

ஒரு நாள் மாலை, விளக்கு வைத்த பிறகு, திடீரென்று சுவர்ணமுகி வந்தாள்.

"சித்தி!" என்ற குரல் கேட்டு, நான் திரும்பிப் பார்த்தேன்.

ஏதோ அவளாவது நமக்கு அடைக்கலம் தர மாட்டாளா என்ற ஆதங்கம் எனக்குள் ஏற்பட்டது.

நான் அவளைக் காப்பாற்ற நினைத்ததுபோக, அவள் என்னைக் காப்பாற்றக் கூடிய நிலையில் அல்லவா இப்போது இருக்கிறாள்.

கை நிறைய வளையல், கழுத்திலே வைர மாலை, பாலசுந்தரம் அவளை ஏமாற்றவில்லை என்பது புரிந்தது.

"எதற்காகச் சித்தி கவலைப்படுகிறாய்? எங்கள் வீட்டுக்கு வந்துவிடு! மகாராணி மாதிரி வைத்துக் கொள்கிறேன்!" என்றாள்.

எனக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

வண்டி ஓடத்தில் ஏறவில்லை. ஓடம் வண்டியில் ஏறுகிறது.

நாம் நன்றாக இருக்கும்போது எல்லாரையும் நன்றாக நடத்த வேண்டும். காரணம், என்றாவது யாருடைய படிக்கட்டிலாவது நாம் நிற்க வேண்டிவரும்.

சினிமா உலகில்தான் பார்த்திருக்கிறேனே, வேலைக்காரர்கள் திடீர்ப் பணக்காரர்கள் ஆவதை!

'எந்த வீட்டுக்குப் போகக் கூடாது!' என்று சுவர்ணமுகியை நான் எச்சரிப்பேனோ, அந்த வீட்டுக்கே என்னை அழைத்துப் போக அவள் வந்திருக்கிறாள்.

என்னை மார்பில் சாய்த்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள் அவள்.

ஆறுதல் சொல்வதற்கு வயது ஏது?

இப்போது யார் கூப்பிட்டாலும் போகக் கூடிய நிலைமைக்கல்லவா நான் வந்து விட்டேன்?

சுவர்ணமுகி மிகவும் வற்புறுத்தினாள். நானும் போய்ப் பார்க்கலாமே என்று புறப்பட்டேன்.

பாலசுந்தரம் பழைய பாலசுந்தரமாக இல்லை. நான் நடிப்பதை விட்டதைப் போல, அவர் குடிப்பதை விட்டிருந்தார். என்னிடம் அன்பாகப் பேசினார். நிர்வாணப் படங்கள் இருந்த இடங்களில் எல்லாம் சுவாமி படங்களை வைத்திருந்தார்.

அனுபவித்து முடிந்த நிலையிலும் ஒரு மனிதன் போகக் கூடிய இடம் அதுதானே!



என்னிடம் இருபதினாயிரம் ரூபாய்களை எடுத்துக் கொடுத்தார். இளவரசரை வெளியே கொண்டுவரத் தான் முயற்சிப்பதாகக் கூறினார்.

உணர்ச்சியற்ற மரக்கட்டைபோல், எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, அதை நான் வாங்கிக் கொண்டேன்.

எனக்கே சிரிப்பும் வந்தது.

'ஒரு பரிசு, ஒரு தண்டனை' என்றேனல்லவா? இதோ, மீண்டும் ஒரு பரிசுக் கட்டம். அடுத்த தண்டனை என்னவோ?

நான் வீட்டுக்குச் சென்றபோதே அந்தத் தண்டனை காத்துக் கிடந்தது.

அங்கே கியாஸ் அடுப்பு வெடித்து என் சித்தி சாகக் கிடந்தாள்.

எவள் மட்டும் எனக்கு அன்று முதல் இன்றுவரை துணையாக இருந்து வந்தாளோ, அவள் விடைபெறும் தறுவாயில் இருந்தாள்.

என் சிற்றப்பா அருகே உட்கார்ந்து கதறிக் கொண்டிருந்தார்.

என் கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது. அழுவதற்குக் கூட எனக்குச் சக்தி இல்லாமல் போய்விட்டது. சுவாமி படங்களைப் போட்டு நான் உடைத்தேன்.

## 29. சக்கரம் சுற்றுகிறது

அடிக்கடி அரவணைத்துக் கொள்ளும் என் தங்கையைக் கொஞ்ச நாட்களாக நான் மறந்திருந்தேன். இப்பொழுது அரவணைத்து ஆறுதல் சொன்னேன்.

"எனக்காக இருந்தவள் போய் விட்டாள். இனி உனக்காக நான் இருக்கிறேன்," என்றேன்.

விவரம் புரிந்த என் தங்கை விம்மிக் கொண்டிருந்தாள்.

மரணம் வரும் என்று முன் கூட்டியே தெரிந்திருந்தால், அந்த இடைக் காலத்தில் ஆறுதலடைய முடியும். இப்படிப் பட்ட மரணத்துக்கு எப்போது ஆறுதல்?

எனது துன்ப நாடகத்தில் பல கட்டங்களைத் தாண்டி, ஒரு பரிதாப மரணத்தையும் சந்தித்துவிட்டேன்.

அன்று இரவெல்லாம் எனக்கு ஒரே சிந்தனை.

என் தங்கையும் சிற்றப்பாவும் மட்டும் இல்லாமலிருந்தால், நான் சிந்தித்திருக்கவே மாட்டேன்.

இவ்வளவு பட்டுக் கெட்டுப் பரிதவித்துவிட்ட பெண்ணுக்கு, மரணத்தை விடச் சுகமான இடம் எது? இந்த பந்தங்களல்லவா என்னைச் சிக்கலில் மாட்டியிருக்கின்றன.

நடுக்கடலில் தத்தளித்தபடி, கிழக்கு எது மேற்கு எது என்று தவிப்பதைவிட, அடிக்கடலுக்கே போய் விட்டால், அது நான்கு திசைகளும் சங்கமிக்கும் இடமல்லவா?

மரணத்தைப் பற்றி நான் அதிகம் சிந்தித்தேன்.

முழுக்க முழுக்கக் குறுக்கே நின்ற தடைச் சுவர்கள் என் தங்கையும் சிற்றப்பாவும் மட்டுமே.

ஒழுங்காக உண்டேனா, உறங்கினேனா? மரம் நடமாடுவது போலவே நடமாடிக் கொண்டிருந்தேன்.

இந்த நிலையில் நான் கடைசியாக நடித்த படம் ஒன்று பிரமாதமாக ஓடுவதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

மரண தண்டனைக்குப் பிறகு இது ஒரு புதுப் பரிசா?

நான் இதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை. ஆனால், காலம் மீண்டும் என் வீட்டுக் கதவுகளைத் தட்ட ஆரம்பித்தது.

ஆமாம். ஒருநாள் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

காலம்தான் தட்டுகிறது என்று திறந்து பார்த்தேன்– அங்கே இளவரசர் நின்று கொண்டிருந்தார்.



ஒரு வீட்டில் ஒரு விபத்தோ மரணமோ சம்பவித்துவிட்டால், அதைத் தொடர்ந்து, அந்த வீட்டில் ஒரு பெரிய நன்மை நடக்கும் என்பார்கள்.

தெய்வத்தின் சக்கரத்தில் துன்பம், துன்பமாகவே இருக்காதாம்; தொடர்ந்து இன்பம் வருமாம்.

வள்ளுவன் கூடச் சொன்னானே, 'அடுத்து வருவது அப்படி இருக்காது' என்று.

நான்தான் முட்டாள். அவசரப்பட்டுச் சுவாமி படங்களைப் போட்டு உடைத்தேனே!

கஷ்டங்களையும் சோதனைகளையும் மிகப் பெரிய அறிவாளிகளே தாங்கிக் கொள்ள முடியாதபோது, இயற்கையிலேயே ஒரு மென்மையான பெண்ணால் எப்படி முடியும்?

தத்துவ ஞானம் பேசுகிறவர்கள் - 'தைரியமாக இரு!' என்று பிறருக்குப் புத்தி சொல்கிறவர்கள் - இவர்களே ஒரு கட்டத்தில் தலையில் கை வைத்தபடி, 'ஓ..!' என்று அலறுகிறார்கள். 'ஐயோ! தாங்க முடியவில்லையே!' என்கிறார்கள். 'நாசமாய்ப் போன கடவுளே!' என்று சாபமிடுகிறார்கள்.

ஒரு போதகாசிரியனின் நிலைமையே இப்படியென்றால், ஒரு பூவினும் மெல்லிய பூவையின் நிலை எப்படி?

அதனால்தான் ஆத்திரம் தாங்காமல் சுவாமி படங்களை உடைத்து விட்டேன்.

படங்கள்தானே அவை! வேறு வாங்கிக் கொள்ளலாம்.

சித்திக்கு நாங்கள் பால் வார்த்தோம். இப்போது என் இதயத்தில் பால் வார்க்க இளவரசர் வந்து விட்டார்.

கெட்ட நிலையில் எட்டியதெல்லாம் பிடிக்கத் தோன்றும்.

நல்லவேளை, என் வாழ்க்கையில் எவரிடம் போவது என்று தடுமாறுகின்ற நேரத்தில், இளவரசர் வந்து விட்டார்.

அவரொன்றும் சிறைச்சாலையில் இருந்தவரைப் போலக் காட்சியளிக்கவில்லை. எங்கேயோ வேறொரு சமஸ்தானத்துக்கு விருந்தாளியாகப் போய் வந்தவரைப் போலக் காட்சியளித்தார்.

வந்த வேகத்திலேயே என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்.

அலங்கோலமான ஒரு வீடு ; ஆள் அரவமில்லாத வெட்ட வெளிப் பொட்டல் போன்ற தோற்றம் ; ஆங்காங்கே சிதறிக் கிடந்த சாமான்கள் ; சோபாவைத் துடைப்பதற்கும் நாதியற்ற நிலை ; ஓடாத கடிகாரம், பாடாத ரேடியோ - மனிதர்கள் தாழ்ந்தால் சூழ்நிலையும் தாழ்ந்து போகிறதே !

எல்லாவற்றையும் கவனித்தார் இளவரசர். 'என்ன ஏது?' என்று கேட்டுக் கொண்டாரா? எடுத்த எடுப்பிலேயே, "உனக்கென்ன கவலை? மகுடத்தைக் கழற்றி வைத்து விட்டாலும் மகாராணி மகாராணி தான்!" என்றார்.

ஆறுதல்கள் - அது சரியான நேரத்தில் கிடைத்து விட்டால் மனிதர்கள் குழந்தையாகி விடுகிறார்கள்.

எனக்கு உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரையில் உணர்ச்சி ஏறிக் குபுகுபுவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது.

"சீ, பைத்தியமே ! எவ்வளவு சோதனைகளை நான் தாங்கிக் கொண்டிருக்கிறேன் ! ஒரு சொட்டுக் கண்ணீராவது விட்டிருப் பேனா? அழுவதால் ஒரு பிரச்சனை தீர்ந்து விடுமென்றால், ஆயுள் முழுக்க அழுதுகொண்டே இருக்கலாம். ஆனால் கண்ணீர் எதற்கும் பரிகாரமாவதில்லையே !" என்றார் அவர்.

"நான் அழவில்லை. ஏதோ உணர்ச்சி..." என்று இழுத்தேன்.

"ஓ ! ஆனந்தக் கண்ணீரா? வாடி கண்ணு, வா! சித்தி எங்கே?" என்று கேட்டார்.

நான் உணர்ச்சி வசப்படாமல் நடந்ததைச் சொன்னேன்.

அவருடைய கண்களிலிருந்தும் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது.

எவர், 'தான் அழுததே இல்லை !' என்றாரோ, அவர் என் சித்தியின் மறைவுக்காக அழுகிறாரே !



பிறப்பு எங்கே நிகழ்ந்தால் என்ன? பந்தம் ஒன்றாகி விட்டால், உள்ளமும் கண்களும் தாமாகவே இயங்குகின்றன.

"நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை..." என்றார்.

மரணத்தின் தேதியை மனிதர்கள் அறிந்து கொண்டு, அதை எதிர்பார்க்க முடியுமென்றால், வாழ்க்கையே நரகமாகி விடாதா?

திடீரென்று மரணம் நிகழ்ந்ததால் திடீரென்று ஓர் அதிர்ச்சி! திடீரென்று ஓர் ஆறுதல் !

அவர் என்னை விட்டு விட்டுச் சிற்றப்பாவிடம் ஓடினார்.

சிற்றப்பாவோ தன் மனைவி இறந்த நாளிலிருந்து, பாயும் நோயுமாகப் பள்ளி கொண்டு கிடந்தார்.

"அப்பா, நீயாவது வந்தாயே ! எங்கே இந்தப் பொண்ணு ரெண்டையும் அநாதையா விட்டு விட்டுப் போகிறோமோ என்று நான் கலங்கிக்கொண்டே இருந்தேன். நான் கண்ணை மூடுவதற்கு முன்னால் கடவுள் ஒரு நிம்மதியைக் கொடுத்து விட்டார்," என்றார் சிற்றப்பா.

அவருக்குக் கால் அமுக்கிக் கொண்டிருந்த என் தங்கை ஓயாமல் அழுது கொண்டிருந்தாள்.

"ஏம்மா அழறே ! அக்காவும் மாமாவும் ஒன்னை நல்லா கவனிச்சுக்குவாங்க," என்று மேல் மூச்சு வாங்கக் கூறினார் என் சிற்றப்பா.

"மாமா, பெரிய ஆஸ்பத்திரியில் உங்களைச் சேர்த்து, பெரிய டாக்டர்களைப் பார்க்க வைத்து, உங்களை நான் பிழைக்க வைத்து விடுவேன். நீங்கள் எப்பொழுதும் எங்களுடனேயே இருப்பீர்கள்," என்றார் இளவரசர்.

"என்னவோ ஐயா, எல்லாம் ஆண்டவன் விட்ட வழி!" என்றார் சிற்றப்பா.

இளவரசர் என்னையும் தங்கையையும் மாடி அறைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

"இதோ பார், என் மீது உள்ள குற்றச்சாட்டு எதையும் எவனும் நிரூபிக்க முடியாது. நான் பத்து லட்ச ரூபாய் ஒரு இடத்தில்

ரொக்கம் வைத்திருக்கிறேன். அது கணக்கில் வராத பணம். நீ ஏற்கனவே வருமான வரி கட்டுகிறவள்தானே. அந்தப் பணத்தை உன் பெயரில் பாங்கில் போடுகிறேன். நாமே சொந்தமாகப் படம் எடுப்போம். நான் ஜெயிலில் இருக்கும்போது வார்டர் வந்து சொன்னான், நீ நடித்த படம் பிரமாதமாக ஓடுவதாக. எந்த நாயையும் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். தைரியமாக இரு. சிங்கப்பூரில் அந்த ஒரு இரவில் நடந்த நிகழ்ச்சிதான் என் மனத்தில் ஆறாத புண்ணாக இருக்கிறது. அதைத் தவிர உன்னை நான் எப்படி நேசிக்கிறேன் தெரியுமா? என்னைப் பற்றித் துப்பறிகிறவன் எல்லாம் ஓய்ந்து போய் விட்டான். ஒரு தடயமும் அவனுக்குக் கிடைக்காது. அது மாதிரி சில கெட்டிக்காரர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் அப்பன். உன் வாழ்க்கையில் என்னென்னவோ நடந்து விட்டன. எல்லா வற்றையும் மறந்து விடுவோம். நாம் வாழ வேண்டும் ; நன்றாக வாழ வேண்டும். எத்தனையோ கழுதைகள் உலகத்தில் எப்படியெல்லாமோ வாழ்கின்றன. நாம் புதிதாக வாழத் துவங்குவோம்!" என்றார் அவர்.

அவர் சொன்ன மொழிகள் எனக்குச் சங்கீதமாக ஒலித்தன.

வெந்நீரில் விழப்போன பல்லியைக் கையிலே தாங்கிக் கொண்ட ஞானியைப் போல், என்னைத் தாங்கிப் பிடிக்க வந்த தயாபரனாக அவர் காட்சியளித்தார்.

'தர்மம் வெல்லும்!' என்பது உறுதிதான் என்று எனக்குத் தோன்றிற்று.

என் பேதைமையை எண்ணி எனக்குச் சிரிப்பு வந்தது.

மனம் பலவீனம் அடைந்த போது தத்துவஞானமே பொய் என்றேன். அது பலம் பெற்றபோது எல்லாமே உண்மை என்கிறேன்.

பகவான் கீதையிலே சொன்னானாமே, அந்தச் சமநோக்கு எனக்கு வரவில்லை என்பது உண்மைதான்.

தங்கையைப் போய் ஹார்லிக்ஸ் கொண்டு வரச் சொன்னேன்.

"இல்லை, இப்போது எதற்கு?" என்றார் அவர்.

"பரவாயில்லை, கொண்டு வரட்டும்," என்றேன்.



அவள் வெளியேறினாள் ; நான் கதவை அடைத்தேன்.

"ஓ!- இதற்குத்தானா_?" என்றார் அவர்.

"எவ்வளவு நாட்களாகி விட்டன!" என்று அவர் மார்பிலே சாய்ந்தேன்.

என் கூந்தலை அவர் கோதிக் கொடுத்தார்.

எல்லாராலும் கைவிடப்பட்ட இருவர் நான்கு சுவர்களுக்கு நடுவே அன்பிலேயும் ஆறுதலிலேயும் மிதந்தோம்.

அப்போது நான் ஓர் உண்மையான சுகத்தை அனுபவித்தேன்.

கணவன் மனைவிக்கிடையே சிறு கோபத்திற்குப் பிறகு, பெரும் சந்தோஷம் வரும் என்பார்கள். எங்களுக்கிடையே பல துன்பங்களுக்குப் பிறகு, ஒரு சுகம் வடிவெடுத்தது.

'அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும்' என்று திட்டம் போடத் துவங்கினோம்.

"உனக்குப் பொருத்தமான கதையாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்," என்றார் அவர்.

தமிழில் நல்ல கதைகள் வெளிவரத்தான் செய்கின்றன. ஆனால் சரத்சந்திரரையும், பங்கிம் சந்திரரையும் போல, உயிருள்ள பாத்திரங்களை அதிகம் பேர் உண்டாக்கவில்லை.

அவரும் நிறையப் படித்திருப்பார் போலிருக்கிறது. சரத்பாபுவின் கதைகள் பலவற்றை அவர் எனக்குச் சொன்னார். அதில் ஒரு கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

பிறகு நடிகர் யார், டைரக்டர் யார் என்பதை எல்லாம் விவாதித்தோம். பேசினோம், பேசினோம், பேசிக் கொண்டே இருந்தோம்.

தங்கை ஹார்லிக்ஸைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போய்விட்டாள்.

அதை யார் குடித்தார்கள்?

வழக்கமாக அவர் எதைச் சாப்பிடுவாரோ, அதைக் கொஞ்சம் ஊற்றிக் கொடுத்தேன்.

என்னை மடியில் போட்டுக் கொண்டு, அவர் அதை அருந்தினார்.

வழக்கம் போலவே அவர் என்னை வருணித்தார். அப்போதைய வர்ணனைகளுக்கெல்லாம் நான் புது அர்த்தத்தைக் கண்டுபிடித்தேன்.

புதுவாழ்வு, மறுவாழ்வு, புனர்ஜன்மம். நான் மயக்கத்தில் மிதந்தேன்.

அன்று நான் அசல் தாசியைப் போலவே நடந்து கொண்டேன்.

மஞ்சத்தில் மனைவி தாசியைப் போல்தானே நடக்க வேண்டும்.

நான் மேலாடை இல்லாமல் இருந்தேன்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

## 30. மாறுவதன் பெயரே காலம்

**நா**ன் அவசர அவசரமாக மேலாடையை அணிந்து கொண்டு, கதவைப் போய்த் திறந்தேன்.

அங்கே தான் எதிர்பாராத அழைப்பு ஒன்று எனக்காகக் காத்திருந்தது.

ஜோசியர்கள் சொல்லுவார்கள், 'சனி பகவான் முதலாவது ஒரு சுற்று வருவான், இரண்டாவது ஒரு சுற்று வருவான்,' என்று. சனி வரும்போது சுக்கிரன் வர மாட்டானா?

எதிலேயோ படித்திருக்கிறேன், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மூன்று கட்டங்கள் உண்டாம்.

முதற் கட்டத்தில் உச்சத்திற்குப் போவார்களாம். அடுத்தது ஒரு பெரிய வீழ்ச்சி வருமாம். பிறகு இரண்டாவது கட்டத்தில் பகவான் கை கொடுப்பாராம். அது ஏற வேண்டிய அளவுக்கு ஏறி மெதுமெதுவாக இறங்குமாம். அதில் புத்தியோடு சேமித்து வைத்துக் கொண்டு விடுவார்களாம். மூன்றாவது கட்டம் சகடம் போல் போகுமாம்.



என் வாழ்க்கையில் இரண்டாவது கட்டம் துவங்கி விட்ட அறிகுறி எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

ஆம், என்னை ஒப்பந்தம் செய்ய ஒருவர் வந்திருந்தார்.

வெறிச்சோடிப் போன வீட்டில் அந்தப் புது விளக்குப் பிரகாசமாகத்தான் தெரிந்தது.

அதிலும் இரண்டாவது விளக்கல்லவா? முதல் விளக்கை இளவரசர் ஏற்றி விட்டாரே!

"இருங்கள், என் கணவரைக் கேட்டுச் சொல்கிறேன்," என்றேன்,

அந்த வார்த்தையை நான் உச்சரிக்கும்போது, சீதையாக நளாயினியாக எனக்குள்ளேயே தோற்றமளித்தேன்.

என்னதான் நாற்றமெடுத்த நதியானாலும் கங்கையிலே கலந்து விட்டால் புனிதமாகி விடுகிறதல்லவா?

இளவரசரைக் கேட்டேன். "ஒப்புக்கொள், ஒப்புக்கொள்," என்றார்.

வந்திருந்த தயாரிப்பாளர் மிகவும் நொந்து போனவர். பல நடிகைகளைப் போட்டுப் படம் எடுத்து, அவர்கள் கால்ஷீட் கொடுக்காமல் தான் பட்ட அவதியை விவரித்தார்.

எனக்கு வேறு வேலை இல்லை என்பதால்தான் ஒப்பந்தம் செய்கிறாராம். இனி புதிய படங்களுக்கு ஒப்பந்தம் வந்தாலும் தன் படத்துக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

படத்தின் கதையை அவர் சொன்ன போது, அது மிகவும் எனக்குப் பிடித்தது.

நானும் ஓரளவு நடுத்தர வயதை எட்டிக் கொண்டிருந்ததால், அந்தப் பாத்திரம் எனக்குப் பொருத்தமாகத் தோன்றிற்று.

கதை வேறொன்றுமில்லை. கே.எம். முன்ஷியின் மிருணாளவதிதான். அதற்கும் மூலம் போஜராஜன் கதையாம்!

கதையில் மிருணாளவதி நடுத்தர வயது கொண்ட ஒரு யோகினி. ஆடவர்களையும் காதலையும் வெறுத்தவள். காதலைப் பற்றிப் பாடும் கவிஞர்களை எல்லாம் சிறைச் சாலையில் போடச் சொல்கிறாள். ஒரே யோகம், தவம், ஞானம் என்று வாழ்கிறாள். அவளுக்கு ஒரு தம்பி. அக்காளுக்கேற்ற தம்பிதான். அவன்தான் அரசாங்கத்தைக் கவனிக்கிறான். அடுத்த நாட்டு மன்னன் ஒருவன், பிருத்விவல்லபன் என்பவன். தன் படைகளை அனுப்பி அவனைக் கைது செய்து வரச் செய்கிறாள், மிருணாளவதி. கைதியாக வந்தவனின் வீரத்தையும் சாகஸத்தையும் கண்டு படிப்படியாகக் காதல் வலையில் விழுகிறாள். எந்தப் பிருத்வி வல்லபனை அவள் அவமானப்படுத்த விரும்பினாளோ, அவன் அவமானப்பட்டபோது அவனுக்காக அழுத ஆன்மா மிருணாளவதியின் ஆன்மா.

இதுதான் கதை.

கதை வரையப்பட்டிருந்த பாணி எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இப்பொழுதெல்லாம் வசனம் என்ற பெயரில் சீனப் பட்டாசு வெடிக்கிறார்களே, அப்படி இல்லாமல், தத்துவ ரீதியில் எழுதி இருந்தார் வசனகர்த்தா.

அந்தக் கதையைப் பற்றி நான் இளவரசரிடம் சொன்னேனோ இல்லையோ, அவர் என்னை 'மிருணாளவதி' என்றே அழைக்க ஆரம்பித்து விட்டார்.

என்னுடைய இரண்டாவது கட்டத்தை நான் தெய்வ பக்தியோடு கொண்டாட விரும்பினேன்.

காக்க வைத்தாவது என்னைக் காப்பாற்றி விட்ட தெய்வத்துக்கு நன்றி சொல்ல வேண்டாமா?

அது ஆவணி. மாதம் மறுநாளைக்கு மறுநாள், கிருஷ்ண ஜெயந்தி.

பகவான் கிருஷ்ணன் ஒரு கண்டிப்பான கடவுள். அவனை வணங்குகிற நேரத்தில் வேறு வணக்கங்களை ஏற்றுக் கொண்டால், அவன் சோதித்துக் காட்டி விடுவான்.



ஆகவே, கிருஷ்ணஜெயந்தியை மட்டும் கொண்டாடுவது என்று முடிவு செய்தோம்.

நானும் இளவரசரும் கிருஷ்ணன் சிலை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றோம்.

காதி கிராமோத்யோக் பவனில்தான் அற்புதமான கிருஷ்ணன் சிலைகள் கிடைக்கின்றன.

புல்லாங்குழல் ஊதும் கிருஷ்ணன் சிலையை வைக்கக் கூடாதாம். அது என்னவோ சம்பிரதாயமாம்.

ஆகவே, இடுப்பில் கை வைத்த கிருஷ்ணன் சிலை வாங்கினோம். முகம் ராஜகளையோடியிருந்தது. அதற்கென்று வெள்ளி மண்டபம். வெள்ளிக் குத்துவிளக்கு அனைத்தும் வாங்கினோம். அரை மூட்டை பொரியும் அவலும் சர்க்கரையும் வாங்கினோம். எங்களுக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் சொன்னோம்.

நான் போய்ச் சுவர்ணமுகிக்கும் பாலசுந்தரத்திற்கும் சொல்லி விட்டு வந்தேன்.

பாரிஜாதம் அவளை ஒதுக்கலாம்; நான் ஒதுக்க முடியுமா?

அன்று வீடு கொள்ளாத கூட்டம்.

இளவரசர் கம்பீரமாகவே இருந்தார். அவர் ஒன்றும் குற்றவாளியைப் போல் நடுங்கிக் கொண்டிருக்கவில்லை.

அது எனக்குப் பெருமையாகவும், தைரியமாகவும் இருந்தது.

கிருஷ்ணன் மீது சில வடமொழி சுலோகங்களை இளவரசர் பாடினார்.

அன்று ஏராளமான தயாரிப்பாளர்கள், எல்லாருமே ஆளுக்கொரு கவரைக் கொடுத்து, "அட்வான்ஸ்" என்றார்கள்.

"எல்லாரிடமும் வாங்கி விடாதே!" என்று எச்சரித்தார் இளவரசர்.

'வந்த சீஸனை விடக் கூடாது!' என்று சிலவற்றை மட்டும் நான் வாங்கிக் கொண்டேன்.

'இரவு மொட்டை மாடியில் விருந்து!' என்று பலபேருக்குச் சொல்லியனுப்பினேன்.

இரவு மொட்டை மாடியில் நாங்களடித்த கும்மாளத்தைச் சுவாமிநாதனும், பாரிஜாதமும் வயிற்றெரிச்சலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த அசைவ ஓட்டல்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களில் பெரும்பாலோர் திருடர்கள். ஏழு ரூபாய்க்குக் கோழி வாங்கி எழுபது ரூபாய்க்கு விற்கிறார்கள். அதனால், அந்த ஒரு விருந்தில் மட்டும் எங்களுக்கு ஒன்பதினாயிரம் ரூபாய் செலவு!

இனிச் செலவைப் பற்றி என்ன கவலை? நேரம் சரியாக வாய்த்து விட்டால், காசியில் ஓடும் கங்கா நதி கூட நம் வீட்டுப் பக்கம் வந்து போகும்.

இளவரசர் வந்து விட்டார்; புதுப்படங்கள் வந்து விட்டன. சுக்கிர தசைதானே ஆரம்பம்!

அடேயப்பா! கொஞ்சகாலம் கஷ்டப்பட்டு விட்டு சுகத்தை அனுபவிக்கிறபோது, அது எவ்வளவு சுகமாக இருக்கிறது! 'நிழல் அருமை வெயிலிலே' என்று தெரியாமலா சொன்னார்கள்.

அந்த இரவில், ஒரு பூரணச் சந்திர வடிவத்தில் ஒரு விளக்கை எங்கள் மொட்டை மாடியில் ஏற்றி வைத்தார் இளவரசர்.

இரவு மணி ஒன்று.

ஏறக்குறைய வந்திருந்த எல்லாருமே உளறிக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொருவரையும் தூக்கிக் கொண்டு காரில் போடுவது பெரும் பாடாகப் போய் விட்டது.

எங்கள் கட்டிலில் நான் மல்லிகைப்பூ தூவி வைத்திருந்தேன். இரண்டு மணிக்கு நாங்கள் அதிலே போய்ப் படுத்த போது, அந்த அலுப்புக்கிடையிலேயும் ஓர் ஆனந்தம் நிலவியது.

இளவரசர் தடுமாறித் தடுமாறிப் பேசினார். அவரைப் பேச விடாமல், அவரது உதடுகளை என் உதடுகளால் மூடிக் கொண்டேன்.



அவர் உடம்பு தள்ளாடியது. அதைத் தள்ளாட விடாமல் நான் கட்டிப் பிடித்துக் கொண்டேன்.

சொர்க்கத்தில் நாங்கள் மிதந்தோம்.

"இறைவா! எப்போதும் நாங்கள் இப்படியே இருக்க வேண்டும்!" என்று நான் வேண்டிக் கொண்டேன்.

மறுநாள் எவ்வளவு நேரம் தூங்கி இருப்போமோ, எங்களுக்கே தெரியாது. கண் விழித்துப் பார்த்த போது மணி ஒன்பது.

நான் ஓடிப்போய்க் காப்பி கொண்டு வந்தேன்.

அவரை எழுப்பிக் கொடுத்தேன்; குடித்தார். பிறகு அவரைக் குளிக்க வைத்தேன்.

சாப்பிட்டுவிட்டு மீண்டும் படுத்தார்.

மணி பன்னிரண்டு அடித்தது.

கீழே பாரிஜாதம் வந்திருப்பதாக என் தங்கை ஓடி வந்து சொன்னாள்.

அவள் ஏன் வர வேண்டும்?

நான் திகைப்போடு கீழே சென்றேன்.

நான் சென்றது தான் தாமதம். பாரிஜாதம் என் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

## 31. சந்திரன் அஸ்தமிக்காத இரவுகள்

ஏழரை நாட்டுச் சனியன் பிடித்து ஆட்ட ஆரம்பித்ததும், எல்லாப் படிக்கட்டுகளிலும் நாம் ஏற வேண்டியிருக்கும். சுக்ரதசை அடிக்க ஆரம்பித்தால், வராத மனிதர்கள் எல்லாம் நம் வாசலுக்கு வருவார்கள்.

எவ்வளவுதான் முயற்சி செய்யுங்களேன். எந்தெந்தக் காலங்களில் என்னென்ன நடக்க வேண்டும் என்று இறைவன்

எழுதியிருக்கிறானோ, அவைதான் நடக்குமே தவிர, உங்கள் முயற்சி முழு வெற்றியடையாது.

பாரிஜாதம் என் வீட்டுப் படிக்கட்டுக்கு வர வேண்டும் என்று இறைவன் எழுதியிருக்கிறான்.

எங்களைப் பார்த்து வயிற்றெரிச்சல் பட்டுப் பன்னிரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை! அதற்குள் ஏன் வந்தாள்?

"வாங்க அக்கா, உட்காருங்கள்!" என்று மரியாதையாகச் சொன்னேன்.

எப்படியோ ஒரு காலத்தில் சக்களத்தியாக இருந்தவள் அல்லவா? அவள் விக்கி விக்கி அழுதாள்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

அவள் தன் கணவரை விட்டுப் பிரிந்திருந்த காலத்தில், ஏராளமான இடத்தில் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கி இருந்தாராம் அவர். அதன் விளைவாக வீடு, வாசல், தோட்டம் துரவு எல்லாமே ஜப்தியாகக் கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறதாம். இந்த நேரத்தில் நான் தான் எப்படியாவது உதவ வேண்டுமாம்.

நேரம் நேரம் என்றேனே, நேரத்தைப் பாருங்கள்.

என் தராசு நல்ல எடையைக் காட்டும்போது, அவள் தராசு வெறும் தராசாகிக் கொண்டிருக்கிறது.

பட்டணத்தில் பங்களாக்களைக் கண்டு யாரும் மயங்கிவிடக் கூடாது. பத்து லட்ச ரூபாய்க் கடனை வைத்துக் கொண்டு ஐந்து லட்ச ரூபாய் மாளிகையில் சிலபேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனது முன்னாள் கணவர் மிகவும் நல்லவர். அவர் எனக்கொன்றும் சொத்து வைக்காவிட்டாலும், பாரிஜாதத்திற்காவது வைத்திருக்கிறாரே என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பாவம்! யார் யாருக்கோ ஜாமீன் கையெழுத்துப் போட்டு எல்லாரையும் நடுக்கடலில் விட்டு விட்டுப் போயிருக்கிறார்.



அப்போதுதான் எனக்குப் புரிந்தது. முதல் நாள் இரவு கூடப் பாரிஜாதம், ஆதங்கத்தோடுதான் எங்களைப் பார்த்திருக்கிறாளே தவிர, ஆத்திரத்தோடோ வயிற்றெரிச்சலோடோ பார்க்கவில்லை என்பது.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

"குடியிருக்கிற வீடாவது தங்கும்படி உதவ வேண்டும்!" என்றாள் அவள்.

அப்போது இளவரசர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

"இவர்கள் பக்கத்து வீடு, பாரிஜாதம்!" என்று அறிமுகப் படுத்தி வைத்தேன்.

வேறென்ன சொல்வது? 'என் முன்னாள் கணவரின் முதல் மனைவி' என்றா அறிமுகப்படுத்தி வைக்க முடியும்?

இருவரும் பரஸ்பரம் வணக்கம் தெரிவித்துக் கொண்டார்கள்.

பிறகு நான் பாரிஜாதத்திடம், "நான் என் கணவரிடம் தனியாகப் பேசி, இரண்டு நாட்களுக்குள் ஏற்பாடு செய்கிறேன்!" என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

விநாடிக்கு விநாடி நல்ல நல்ல சேதிகளே வந்து கொண்டிருந்தன.

அன்றைக்கே வருமானவரி இலாகாவிலிருந்து ஒரு கடிதம் வந்தது.

என் வீட்டிலிருந்து கைப்பற்றிக் கொண்டு போன நகைகளுக்கு ஒரு டெக்லரேஷன் கொடுத்துவிட்டு, வந்து பெற்றுக் கொண்டு போகும்படி அதில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அன்று மாலையிலேயே கலாசாரக் கழகத்திலிருந்து அதன் நிர்வாகிகள் என்னைப் பார்க்க வந்தார்கள்.

என் சித்தியின் பெயரால் அவர்களுக்கு நான் ஒரு கட்டடம் கட்டித் தர வேண்டுமாம்.

"ஓ! தாராளமாகச் செய்யலாமே!" என்றார் இளவரசர்.

இந்தக் காலத்தில் கல்லூரி தான் கட்டக் கூடாது. பாக்கி எது வேண்டுமானாலும் கட்டலாமே!

கல்லூரி கட்டினால்தான், ஸ்தாபகரையே மாணவர்கள் கல்லால் அடிப்பார்கள். ஆஸ்பத்திரி கட்டினால் நோயாளிகள் வேலை நிறுத்தம் செய்யப் போவதில்லையே!

ஒரு பிரார்த்தனை மண்டபம் கட்டித் தருவதாக வாக்குறுதியளித்து, அவர்களையும் அனுப்பி வைத்தேன்.

அடுத்த நிகழ்ச்சிதான் ஒரு துயரமான நிகழ்ச்சி.

நான் நடித்த படத்தில் என்னோடு நடித்த ஒரு பெண். சொந்தப் பெயர் சிவகாமசுந்தரி. சினிமாவுக்கென்று ஜெயரேகா என்று மாற்றி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் தன் குழுவோடு மலேஷியா சென்றிருந்தபோது அங்கே ஒரு பெரிய வியாபாரியைச் சந்தித்தாள். அவர் இவள் மேல் உயிரையே வைத்திருப்பதாக நடித்தார். கடைசியில் ஒரு நாள் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குத் திருமணமும் செய்து கொண்டார். சிங்கப்பூருக்கும் அழைத்துக் கொண்டு போய்விட்டார். அதுவரையில் எனக்குத் தெரியும்.

இப்போது ஜெயரேகா சொன்ன கதையிலிருந்து அந்த வியாபாரி மிகவும் நொடித்துப் போய் விட்டது தெரிய வந்தது. அவளது நகைகள் முழுவதையும் வாங்கி விற்று விட்டாராம். ஒரு கைக்குழந்தையோடு தமிழ்நாட்டுக்கு அனுப்பி விட்டாராம்.

என்ன துரதிருஷ்டம், பாருங்கள்!

அந்தப் பெண்ணுக்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் கொடுத்து நான் அனுப்பி வைத்தேன்.

அந்தப் பைத்தியக்காரி என் காலைத் தொட்டுக் கும்பிட்டாள். நான் பளிச்சென்று, "என் கால்கள் அவ்வளவு புனிதமானவை அல்ல!" என்றேன்.

"வயலுக்குப் பாய்வதால், ஏரித் தண்ணீர் கங்கா தீர்த்தத்தை விடப் புனிதமானது!" என்றாள் அவள்.



ஆரோக்கியமானதொரு ஆணும் பெண்ணும் பூரண நிலவொளியில் அனுபவிக்கும் மகிழ்ச்சியில், சுற்றுச் சூழ் நிலைகள் மறந்து போய் விடுகின்றன. இதைத்தான் 'மெய்மறந்த நிலை' என்கிறார்கள், ஞானிகள். இந்த ஆனந்தம் ஒரு வகை யோகம். தவ முனிவர்களின் ஏகோபித்த மனோ நிலையில் நாங்கள் இருந்தோம்.

ஈஸ்வரா, எங்கள் வாழ்வின் இருண்ட காலங்கள் முடிந்து விட்டன. நிலவின் மறுபக்கத்தில் இருந்து, முன் பக்கத்துக்கு வந்து விட்டோம். எங்கள் பௌர்ணமிக்கு இனித் தேய்பிறை இல்லை. இரண்டும் எனக்குப் புரிந்தது. வந்திருப்பதைக் காப்பாற்றிக் கொள்ளும் அனுபவ நிலையும் இருந்தது.

புதிய படங்கள், புதிய உறவுகள், புதிய நண்பர்கள்.

இதன் பேரே காலம்.

முன்பு மலை இருந்த இடத்தில் இப்போது கடல் இருக்கிறதாமே! கடல் இருந்த இடத்தில் மலை இருக்கிறதாமே!

எங்கள் ஏணி உறுதியாகி விட்டது.

சரித்திரத்திலும் புராணத்திலும் இதே நீதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் இந்த நியதி எந்தக் காலத்திலும் தோற்றதில்லை.

கஷ்டப் பட்டவர்கள், கஷ்டப் பட்டுக் கொண்டே இருந்தால், கடவுளின் இயக்கம் இல்லை.

இரவிலே படுத்தவன் காலையிலே எழுந்திருப்பது போல, துன்பங்களால் சோதிக்கப்பட்டவர்கள், ஒரு கட்டத்தில் சந்தோஷத் தேன் குடத்தில் தள்ளப்படுகிறார்கள்.

கடவுள் நம்மை வெள்ளத்தில் தூக்கிப் போடுவது குளிப்பதற்கும், நீந்தப் பழகுவதற்குமல்லாமல் வேறில்லை.

கஷ்ட காலத்தில் முப்பது நாளும் அமாவாசை ; நல்ல காலத்தில் முப்பது நாளும் பௌர்ணமி.

இதோ, எங்கள் ராசிச் சக்கரம் நல்ல கட்டத்துக்கு வந்து விட்டது.

இதோ, மறுபடியும் இரவு வந்திருக்கிறது ; நிலவு வந்திருக்கிறது.

நான் கதவைச் சாத்திக் கொள்கிறேன் ; கணவரோடு ஐக்கியமாகிறேன்.

அடுத்த ஆண்டு நீங்கள் என்னைச் சந்திக்கும்போது ஒரு ஆண் குழந்தைக்கோ, பெண் குழந்தைக்கோ, நான் தாயாக இருக்கலாம். ஒருவேளை அது இரட்டைக் குழந்தையாகவும் இருக்கலாம்.

❑❑❑

27637
L416894
சென்னை-